# குடித்தொகையியல்

## கோட்பாடுகளும் பிரயோகங்களும்

பேராசிரியர் கா. குகபாலன்

sivanayani - S

# குடித்தொகையியல்

## கோட்பாடுகளும் பிரயோகங்களும்

பேராசிரியர் கா.குகபாலன்,

தலைவர், புவியியற்றுறை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்

2005

| | | |
|---|---|---|
| Title | : | Population: Theories and Application |
| Author | : | Professor.Dr.Karthigesu.Kugabalan<br>B.A.Hons.(Cey) M.A, Ph.D (Jaf)<br>Post M.A Diploma in Population Studies (Madr) |
| Edition | : | Second Revised Edition-January 2005 |
| Copy Right | : | To the Author |
| Printing | : | Harikanan Printers, 424, K.K.S Road, Jaffna. |
| Page | : | 220 |
| Price | : | 250/- |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | குடித்தொகையியல் : கோட்பாடுகளும் பிரயோகங்களும் |
| ஆசிரியர் | : | பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன் |
| முகவரி | : | புவியியற்துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,<br>யாழ்ப்பாணம், இலங்கை |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். |
| பக்கம் | : | 220 |
| விலை | : | 250/– |

உ
சிவமயம்

S. Sivarajan

28, Kumarasami Road
Kondavil
Jaffna

## உள்ளடக்கம்

முன்னுரை

1. குடித்தொகைக் கல்வியின் விருத்தி 01

2. குடித்தொகைக் கோட்பாடுகள் 14

3. குடித்தொகையியலிற் தரவுகளின் முக்கியத்துவம் 49

4. இறப்புக்கள் 81

5. கருவளம் 120

6. இடப்பெயர்வு 157

உசாத்துணை நூல்கள் 200

கலைச்சொற்கள் 207

# முன்னுரை

குடித்தொகையியல் என்பது மக்களைப்பற்றி விஞ்ஞான பூர்வமாக விளக்கிச் செல்வதாகும். இவ்வியல் குடித்தொகை வேறுபாடு, குடித்தொகைக் கூட்டு, குடித்தொகை இயக்கம் என்ற மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கி யது. சுருங்கக்கூறின் மக்கள் தம் வாழ்விற் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளால் மேற்குறித்த மூன்று பெரும் பிரிவுகளும் எவ்வாறு மாற்றம் பெறுகின்றன என்பதை விளக்கிச் செல்கின்றன எனலாம்.

இன்றைய நிலையில் சர்வதேச ரீதியாக அரசுகளினாலும் அரச சார்பற்றநிறுவனங்களினாலும் குடித்தொகைக் கல்வியானது வளர்த்தெடுக்கப் பட்டு வருவதுடன் பெரும்பாலான பல்கலைக் கழகங்களிற் தனித்துறையாகவும், வேறுதுறைகளுடன் இணைக்கப்பட்டும் மாணவர்களுக்குப் போதிக்கப்படுவது மட்டுமல்லாது ஆய்வுப்புலத்தை ஆழ அகலமாக்கி வருகின்றனர். இக்கற்கை நெறியானது குறிப்பிட்ட ஒரு துறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பல துறை களையும் உள்வாங்கியும் அவ்வத்துறைகளுக்குள் உள் நுழைந்தும் ஆய்வுப் பரப்பினை விரிவுபடுத்தி வருகின்றது.

விருத்தி பெற்ற நாடுகளில் இக்கல்வித்துறை விருத்தி பெற்றுள்ள அதேவேளை வளர்முக நாடுகளில் ஆரம்பக் கட்டத்திலேயே காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில், குடித்தொகை சம்பந்தமான ஆய்வுகளும் வெளியீடு களும் மிகக்குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. குறிப்பாகத் தமிழில் ஒரு சில வெளியீடுகளே வெளி வந்துள்ளன. எனவே கடந்த மூன்று தசாப்தங்களாக இக்கல்வியினைப் பல்கலைக்கழகங்களில் புகட்டியவன் என்ற ரீதியில் இந் நூலினை 1995ஆம் ஆண்டு வெளியிட்டேன். மாணவர்கள், ஆர்வலர்கள் மத்தி யில் இந்நூலிற்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் விளைவாக குறிப்பிட்ட சில உட்சேர்க்கைகளுடன் மீண்டும் வெளியிட வேண்டியதன் அவசியம் உணரப் பட்டதன் விளைவாக இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளிவருகின்றது. அத்து டன் "குடித்தொகை அபிவிருத்தி" (Population Development) என்ற மற்றொரு நூலினை மிகவிரைவில் வெளியிடவுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள் கின்றேன்.

இந்நூலின் முதற்பதிப்பினை வெளியிட்ட போது வாழ்த்துரைகளை வழங்கிக் கௌரவித்த முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர்.க.குணரத்தினம், பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் அணிந்துரையை வழங் கிய முன்னாள் கலைப்பீடாதிபதியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வருமான பேராசிரியர்.நா.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் அறிமுக வுரையை வழங்கிய முன்னாள் கலைப்பீடாதிபதி அமரர் பேராசிரியர்.செ.பாலச்

சந்திரன் அவர்களுக்கும் எனது நன்றியினை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இந்நூலில் என்னை அறிமுகப்படுத்திய யாழ்பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர்.இரா.சிவச்சந்திரன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூல் வெளியிடுவதற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய புவியியற்றுறையைச் சேர்ந்த கல்விசார், கல்விசாரா நண்பர்களை என்னால் மறக்கமுடியாது. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினை குடித்தொகைக்கல்விப்புலம் விரும்பியேற்கும் என நம்புகின்றேன்.

பேராசிரியர்.கா.குகபாலன்

புவியியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
ஜனவரி 2005

உ
திரை

# 1

# குடித்தொகைக் கல்வியின் விருத்தி

## 1.0 முன்னுரை

உலக வளங்களை இயற்கை வளம், மனித வளம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மனிதவளம் பற்றிய அறிவுஞ் சிந்தனையும் மனிதன் நாகரிக வளர்ச்சியடைந்த காலப்பகுதியில் விருத்தி பெறாத போதிலும் அவன் தன்னையுந் தனது சமூகத்தையும் பற்றிச் சிந்தித்தவனாகவே காணப்படுகின் றான். கிரேக்க, ரோமர் காலங்களில் வாழ்ந்து வந்த அறிஞர் குறிப்பாகப் புவியி யல். சமூகவியல் சம்பந்தமான கருத்துக்களை வெளிக்கொணர்ந்தனர். அவர் கள் தாம் அறிந்தி ருந்த பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை, அவர்களின் சமூக, பண்பாட்டு நிலைமைகள் ஆகியவற்றைப்பற்றித் தெரிந்திருந் தாலுங் குடித்தொகைப்பண்புகள், குடித்தொகைக்கூட்டுக்கள், குடித்தொகை இயக்கங்கள் என்பன தனிப்பிரிவுக்குரியதாகவும் அவற்றை மையமாக வைத்து ஏனைய துறைகள் வளர்கின்றன என்பதையுந் தெரிவிக்கத் தவறியுள்ளனர். 17ஆம் நூற்றாண் டின் மத்திய காலப்பகுதிகளிலேயே இங்கிலாந்தில் குடித் தொகைக் கல்வி சம்பந்தமான விதிமுறைப்பயிற்சி (Discipline) ஏற்படுத்தப்பட் டது எனலாம். இக்கல்வியின் அபிவிருத்தியானது இங்கிலாந்தினைத் தொடர்ந்து பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் ஏனைய துறைகளுடன் இணைந் தும் தனித்தும் வளரும் வாய்ப்பு ஏற்பட்டது. அக்காலப் பகுதிகளிற் சமூகத்தின் சில விசேட பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு அவை ஏன் ஏற்படுகின்றன என்பதிலும் குடித்தொகையின் அளவு, பண்புகள் என்பன எவ்வகையில் இதற்குத் துணை போகின்றன என்பதிலுங் கவனம் செலுத்தி வரவே குடித்தொகைக் கல்வியும் படிப்படியாகத் தமது பங்களிப்பினை விரிவுபடுத்திக் கொண்டது.

குடித்தொகைக் கல்வியின் தந்தையான ஜோன் கிராண்ட் (John Graunt) என்பவர் தமது அனுபவத்தினை அடித்தளமாகக் கொண்டு ஆய்வு செய்தவர். இவர் Natural and Political Observations made upon the Bills of Mortality

என்ற துண்டுப்பிரசுரம் வாயிலாக லண்டன் மாநகரில் இறப்புக்கள் பற்றிய விபரங்களை 1622ஆம் ஆண்டு வெளியிட்டார். இது குடித்தொகைக் கல்வி வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்தது. இவரது அவதானிப்பானது பிரதான மாக இறப்புக்கள் பற்றிய அளவு ரீதியிலான பகுப்பாய்வாக (Quantitative Analysis) இருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய சகல விபரங்களையும் வெளியிட்டார் எனலாம். இவர் தமது ஆய்வுக்கான தரவுகளை லண்டன் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்து பெற்றுக் கொண்டார். 1603ஆம் ஆண்டிலிருந்து கோவிற்பற்று எழுத்தர்களினாற் (Parish Clerk) பெறப்பட்டுப் பாதுகாக்கப்பட்டி ருந்த தரவுகளைப் பெற்று 1604-1661ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலப் பகுதிகளுக்குரிய அறிக்கையினை வெளியிட்டார். குடித்தொகைக்கல்வியில் இது ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வு அறிக்கையானபடியால் இன்றுவரை பேணிப் பாதுகாக்கபடுவது மட்டுமல்லாது இக்கல்வியின் ஆரம்ப அறிக்கை என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

இறப்புக்கள் சம்பந்தமான தரவுகளிற் காணப்படும் குறைபாடுகள், நம்பகத் தன்மையின்மை போன்றவற்றைப் பின்வந்தோர் செம்மைப்படுத்தி வெளியிடு வதற்கு இவ்வாய்வு பெரிதும் உதவியது. ஜோன் கிராண்ட் வாழ்ந்த காலத்தில் குடித்தொகைக் கல்வி வளர்ச்சியிற் சில ஆய்வாளர்கள் ஆர்வம் காட்டியி ருந்தனர். வில்லியம் பெற்றி William Petty (1633-1687) என்பவர் கிராண்டின் ஆய்வுக்கு ஆர்வமூட்டினார். இவரது Political Arithmetic என்ற நூல் இக் கல்விக்குப் பெரிதும் உதவியதுடன் கிராண்டுடன் இணைந்து ஆயுள் அட்ட வணை ஒன்றையுந் தயார் செய்திருந்தார்.

ஆங்கில வான சாஸ்திரியாளரான எட்மண்ட் ஹலி (Edmond Halley 1665-1742) என்பவர் கிராண்டின் அவதானிப்புக்களைப் பற்றி விரிவான கட்டுரை ஒன்றை எழுதியதுடன் பிறப்பு, இறப்புக்கள் ஆகியவற்றின் தரவுகளை அடிப் படையாகக் கொண்டு ஆயுள் அட்டவணையை வெளியிட்டார். இங்கிலாந்தில் வாழ்ந்த மற்றொரு அறிஞரான கிரகரி கிங் (Gregory King 1648-1712) இங்கிலாந்தினதும் வேல்ஸினதும் குடித்தொகை மதிப்பீட்டினையும் அளவி னையும் நோமன் படையெடுப்புக் காலத்திற்கும் இங்கிலாந்து, வேல்ஸ் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது குடிக்கணிப்புக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளுக்கு மேற்கொண்டிருந்தார்.

இங்கிலாந்தில் மட்டுமல்லாது ஜேர்மனி, நெதர்லாந்து, சுவீடன் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிற் குடித்தொகைக் கல்விவளர்ச்சிக்கான அத்திவாரம் இக்காலப்பகுதிகளில் இடப்பட்டது. ஜோகான் பீற்றர் சஸ்மில்ச் (Johann Peter Sussmilch) என்பவர் 1200 பக்கங்களையும் 68 பின்னிணைப்புக்கள், அட்ட வணைகளையும் உள்ளடக்கிய குடித்தொகை சம்பந்தமான புத்தகம் ஒன்றை வெளியிட்டார். இவர் தமது ஆய்வுக்குத் துணையாக சுவீடன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் குடித்தொகைத் தரவுகளைப் பயன்படுத்தினார்.

ஆண்,பெண்களிடையே மறுமணம் அதிகரித்துள்ளமையும் கருவளவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளில் விவாக வயது, விவாக முறிப்பு, குழந்தைகளுக்குத் தகுந்த பராமரிப்பின்மையாற் தொற்று நோய்கள் அதிகரித்து இறப்புக்கள் ஏற்பபட்டுள்ளமை போன்ற பல விடயங்களையும் எடுத்துக் கூறினார். எனவே இவ்வாறாக 15ஆம், 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் மிக அரிதாகவே குடித் தொகை சம்பந்தமான ஆய்வுகள் இடம்பெற்றிருந்த போதிலும் ஏனைய துறை களுடாக இக்கல்வி வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். குறிப் பாக புவியியல், பொருளியல், சமூகவியல் ஆகிய துறைகளுடாக இக்கல்வி முன்னெடுத்துச் செல்லப்பட்டதைக் காணமுடிகின்றது. 18ஆம், 19ஆம் நூற் றாண்டுகளில் வாழ்ந்த பெரும்பாலான குடித்தொகை பற்றிய சிந்தனையாளர் கள் குடித்தொகை இயக்கத்தில் இறப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப் பதைக் காண முடிகின்றது. இக்காலப்பகுதிகளில் அபிவிருத்தியிலும் பார்க்கத் தொற்றுநோய்கள் மற்றும் மக்களைப் பாதிக்கக்கூடிய சுகாதார சீர்கேடுகளால் ஏற்படும் இறப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இறப் புக்கள் சம்பந்தப்பட்ட சமூக சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முதன்மை கொடுக்கபட்டது. குறிப்பாக உயிர்க்காப்புறுதி மற்றும் பொதுச் சுகாதாரம் என்பவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. காப்புறுதிக் கம்பனிகளுக்கு இறப்புக்கள் பற்றிய தகவல்கள் அதிகம் தேவைப்பட்டமையால் இவை சம்பந்த மான ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

15ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து மேற்குலக நாடுகள், நாடுகாண் பயணங்களை மேற்கொள்ளத் தொடங்கவே குடித்தொகையோடு தொடர்புடைய பண்புகளும் பிரச்சினைகளும் பலராலும் முன்வைக்கபட்டன. போர்களில் ஈடுபடல், கைத்தொழிற் புரட்சியின் விளைவாக உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல், புதிதாகக் கண்டுபிடித்த பிரதேசங்களில் குடியேற்றங்களை ஏற்படுத்தல், கைத்தொழிற் புரட்சியினால் விளைந்த தொழிலாளர் பற்றாக் குறையினைத் தீர்த்தல் போன்ற பலவேறு காரணிகளின் விளைவாக அதிகரித்த குடித்தொகை வேண்டப்பட்ட காலப்பகுதியாக இக்காலப்பகுதியினைக் கொள் ளலாம். அக்கால ஆய்வாளர்களும், மன்னர்களுக்கும் அரசுகளுக்கும் சார் பாகவே தமது ஆய்வுகளையும் சித்தாந்தங்களையும் வெளிப்படுத்தினர் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆய்வாளர்கள் கிடைக்கக்கூடிய வளங் களுக்குங் குடித்தொகையின் உள்ளார்ந்த ஆற்றலுக்குமிடையே காணப்படும் வேறுபட்ட பண்புகள்பற்றி எடுத்துரைத்துள்ளனர். குடித்தொகை வளர்ச்சியானது கிடைக்கப்பெறும் வளவாய்ப்புக்களிலும் பார்க்க அதிகரித்துக் கொண்டு செல் கின்றது என்பதை இவர்கள் வெளிக்கொணர்ந்தனர். 1755இல் பெஞ்சமின் பிராங்லின் (Benjamin Franklin) ஹங் லியாங்சி ( Hung Liangchi ) என்பவர்கள் மேற்குறித்த தோரணையிற் தமது கருத்தினை வெளியிட்ட போதிலும் 1798ஆம் ஆண்டு மால்தூஸ் என்பவரின் ( Thomas R. Malthus 1766 - 1834) An Eassy on

the Principle on Population or A view of its past and present effects on human happiness என்ற கட்டுரை முன்னோரின் கருத்துக்களிலிருந்து வேறுபட்டிருந்ததுடன், அக்காலத்திற் பலரால் விமர்சிக்கப்பட்ட போதிலும், அண்மைக் காலங்களின் வளர்முக நாடுகளில் மீளவும் வெளிப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. (இவை பற்றி குடித்தொகைக் கோட்பாடுகள் என்னும் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது) இதுவரை காலமும் இறப்புக்கள், பிறப்புக்கள், விவாகநிலை, மறுமணம் போன்றவற்றில் அதிக அக்கறை கொண்டிருந்த குடித்தொகைச் சிந்தனையாளர்களுக்கு மாறாகக் குடித்தொகைப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வுகள் வெளிவருவதற்கு மால்தூஸ் முன்னின்றுழைத்தார் என்றால் மிகையாகாது.

குடித்தொகைக் கல்வியினைப் பொறுத்தவரை 19ஆம்,20ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் முக்கியமான திருப்புமுனையாக அமைந்துள்ளது. எனலாம். இக்காலப் பகுதிகளிற் பின்வரும் மூன்று வழிகளில் இத்துறை வளர்ச்சியடைவதற்கான உந்துவிசையைப் பெற்றது எனக் கூறலாம்.

1 பல்வேறு நாடுகளிற் குடிக்கணிப்புக்கள் அரச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தமை.

2 வாழ்நிலைப்புள்ளி விபரங்களைப் பெற்று கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

3 நிகழ்தகவுக் கோட்பாட்டின் வளர்ச்சி

வளரும் குடித்தொகையின் எண்ணிக்கையினை அறிந்து கொள்வதற்கு மேற்குலக நாடுகள் குடித்தொகைக் கணிப்புக்களை மேற்கொண்டன. இக்கணிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட தரவுகளை நிரைப்படுத்தி, நாடுகளிடையே ஒப்பீட்டு அடிப்படையில் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இதனால் ஏற்பட்டது. நாடுகளின் குடித்தொகை வளர்ச்சிப் போக்குகளைக் கண்டறிந்து அதனை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வுகள் பல வெளிக் கொணர வாய்ப்புக்கள் ஏற்பட்டன. 1790இல் ஐக்கிய அமெரிக்காவிலும், 1801இல் இங்கிலாந்திலும், பிரான்சிலும் முதன் முதலாக கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற் கணிப்புக்கள் மேற்கொள்ளப்படலாயின. இரண்டாம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்து உலகின் பெரும்பாலான நாடுகளிற் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் 1871ஆம் ஆண்டில் கணிப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1968ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தான், லெபனான், தென் ஓமான், சோமாலியா, தென்வியட்னாம், பூட்டான், எதியோப்பியா, லாவோஸ் போன்ற நாடுகளில் இக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

குடித்தொகைக்கணிப்பு நுட்பமுறையிற் படிப்படியாக மாற்றங்கள் கொண்டு வரப்படவே குடித்தொகைக் கல்வியின் நோக்கங்களும் விரிவுபடுத்தப் பட்டன. குறிப்பாக இங்கிலாந்திற் பொதுப்பதிவாளர் கந்தோர் வில்லியம் பார் (William Farr) என்பவரின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இவர் 1880 ஆம் ஆண்டு வரையும் கடமையாற்றியதன் விளைவாக குடித்தொகை முறை மையியல் (Methodology) பலவழிகளிலும் பகுத்தாயும் தன்மை, வாழ்க்கை அட்டவணையைச் சீர்திருத்தல், தொழில் சார்ந்த இறப்பு ஆகியவற்றில் வளர்ச்சி பெரிதும் காணப்பட்டது. பொதுவாக காலத்துக்காலம் குடித்தொகைக் கணிப்புக்கான அட்டவணையிற் தேவைக்கேற்ப மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டதன் விளைவாக, படிப்படியாகச் சேமிக்கப்படும் தகவல்களும் அதிகரிக்கவே அதனூடாக குடித்தொகை ஆய்வுகளும் விரிவு பெறலாயின.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப்பகுதிகளில் இங்கிலாந்திலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் கருவளம் சம்பந்தமான படிப்பில் பலரும் அதிக அக்கறை கொண்டிருந்தனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளிலிருந்து இங்கிலாந்திற் பிறப்பு வீதம் குறைவடையத் தொடங் கவே 1916ஆம் ஆண்டு 'தேசிய பிறப்புக்கள் ஆணைக்குழு' ஸ்தாபிக்கப்பட்டு அதனூடாக கருவளம் சம்பந்தமான கருத்துக்கள் வெளிக்கொணரப்பட்டன. 1911ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பில் விவாகமான பெண்களிடையே காணப்படும் கருவளவாக்கநிலை பற்றிய வினாக்கள் இணைக்கப்பட்டுள்ளமை இவ் வாய்வினை ஆய்வாளர்கள் முன்னெடுத்துச் செல்வதற்குப் பேருதவியாக இருந் துள்ளன. 1922ஆம் ஆண்டு உயிரியல் அறிஞரான கார் சாண்டர்ஸ் (Car Saun-ders) அவர்களால் வெளியிடப்பட்ட 'குடித்தொகைப் பிரச்சினை' என்னும் நூல் குடித்தொகை வளர்ச்சியால் ஏற்பட்டு வரும் பிரச்சினைகளை முறையாக வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த நான்கு நூற்றாண்டுகளாக, குடித்தொகைக் கல்வியின் வளர்ச்சி யில் ஆர்வமுள்ள அறிஞர்கள் பலர் பங்கேற்றிருந்தனர். இருந்த போதிலும் 1938ஆம் ஆண்டு வரையிலும் பிரித்தானியப் பல்கலைக்கழகங்கள் இதனைப் போதிக்கவோ, முறையான ஆராய்ச்சிகளைச் செய்யவோ முயலவில்லை. கார் சாண்டர்ஸ் குடித்தொகைக் கல்விக்குப் பெரும் தொண்டாற்றிய போதிலும் அவர் சமூக, விஞ்ஞானப் பேராசிரியராகவே காணப்பட்டார். லான்ஸ்சலோட் கொக் பென் (Loncelot Hogben) என்ற பேராசிரியர் குடித்தொகைப் பிரச்சினையில் அதிக அக்கறை கொண்டிருந்த போதிலும் சமூக, உயிரியல் துறைக்களுக்கே தலைவராக இருந்துள்ளார். 1938இல் இத்துறை ஒழிக்கப்பட்டு முதன் முறை யாக லண்டன் பொருளியல் கல்லூரியில் குடிப்புள்ளியியற்றுறை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைவராக கிசென்ஸ்கி (Kuezynski.R.R) என்பவர் நியமிக்கப்பட்டதன் விளைவாகக் குடித்தொகைக் கல்வி பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுபடுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகின் பல்வேறு நாடுகளிலும் இக்கல்வியினை வேறு துறைகளுடன் இணைத்துக் கற்பிக்கும் அளவிற்காவது இதன் முக்கியத்துவம் உணரப்பட்டது.

1950களைத் தொடர்ந்து வளர்முக நாடுகள் அன்னியராட்சியிலிருந்து அரசியல் சுதந்திரத்தினை பெற்றபோதிலும், அதிகரித்து வருகின்ற குடித் தொகையானது பொருளதாரரீதியிற் பல்வேறு தாக்கத்தினை ஏற்படுத்தவே, அவை பற்றிய ஆய்வின் அவசியம் பெரிதும் உணரப்பட்டது. அத்துடன் சர்வதேச ரீதியாக மனிதனுக்கும் சூழலுக்குமிடையில் ஏற்பட்டு வரும் முரண் பாடுகளால் இவ்விரு துறைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் இக்கல்விக்குப் புத்தூக்கம் அளித்தன எனலாம். குறிப்பாக பிரான்சில் முதல் அரை நூற்றாண்டு களாக" மானிடப் புவியியற் கலைக்கூடம்" ஒன்றை உருவாக்கி மனிதன், அவனது நடத்தை, சூழல் ஆகியவற்றை இணைத்து ஆய்வு செய்தனர். விடால் டீ லாப்பிளாச் (Vidal de la Blache) ஜீன் புறூன்ஸ் (Jean Brunhes) மக்ஸி மில்லியன் (Maxi Millien ) போன்றோர் மனிதனைப் பற்றிய பல்வேறு கருத்துக் களை வெளியிட்டனர். 1953ஆம் ஆண்டின் பின் ரெவாதா (Trewartha) குடித் தொகைப் புவியியலின் பண்புகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். இவர் எண்ணிக்கை, போக்கு, தரம், (Quality of Population ) அடர்த்தி ஆகியவற்றில் அக்கறை கொண்டிருந்தார்.

1940களைத் தொடர்ந்து அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட வளர்முக நாடுகளில், குடித்தொகைப் பெருக்கத்தினால் பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியிலான பிரச்சினைகள் தலைதூக்கியதனால் இவை சம்பந்தமான ஆய்வுகளும் அதற்கான முயற்சிகளும் விரிவு பெறத் தொடங்கின. குடித் தொகை வளர்ச்சி, வாழ்க்கைத்தரம் பாதிப்படைதல், பருமட்டான இறப்புக்கள் அதிகரித்துக் காணப்படல், பிரசவத்தாய் - குழந்தை இறப்புக்கள் அதிகரித்தி ருந்தமை போன்ற குடித்தொகைப் பிரச்சினைகளுக்கு இந்நாடுகள் முகங் கொடுக்க வேண்டிய நிலை உருவானது. இதன் விளைவால் அந்நாடுகளில் அரசியல், சமூக, பண்பாட்டுக் கோலங்களுக்கு அமைவாகக் குடித்தொகைக் கொள்கைகளை வகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது எனலாம். இந்நாடுகளின் அரச, மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடாகக் குடித்தொகைக் கல்விக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, குடிக்கணிப்பை மேற் கொள்ளல், வாழ்நிலைப்புள்ளி விபரங்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற வற்றில் அண்மைக் காலங்களில் அக்கறை கொண்டுள்ளனர்.

## 1.1. குடித்தொகைக் கல்வி வளர்ச்சியில் அரச சார்பற்ற நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் சபையும் பல தனிப்பட்ட நிறுவனங்களும் குடித் தொகைக் கல்வியிற் பெரும் அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றன. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் குடித்தொகை அமையம் (Population Commission) உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமையம் 1954ஆம் ஆண்டு முதன் முதலாக ரோம் நகரில் உலக குடித்தொகை மாநாடு ஒன்றினை நடாத்தியது. அதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் இம்மாநாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அத்துடன் இந்நிறுவனம் பல ஆய்வுக் கட்டுரைகளையும், உலக

நாடுகளின் குடித்தொகை சம்பந்தமான தரவு ரீதியிலான அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றது. ஐ.நா சபை முக்கியமாக சில குறிப்பிட்ட நாடுகளில், அந்நாடுகளின் பகுதி ஆதரவுடன், குடிப்புள்ளியியற் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்திச் செயற்படுத்தி வருகின்றது. குறிப்பாக 1956ஆம் ஆண்டு பம்பாயில் அமைக்கப்பட்ட சர்வதேச குடித்தொகைக்கல்விக்கான நிறு வனம் (International Institute for Population Studies) போல பல்வேறு நாடு களில் இத்தகைய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையிற் குடிப் புள்ளியியலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் குடித் தொகை நிதியத்தின் உதவியுடன் (UNFPA) குடிப்புள்ளியியற் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அலகு (Demographic Training and Research Unit) ஒன்று 1973ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையானது பிரதேச ரீதியாகவும் குடித்தொகை சம்பந்த மான பிரச்சினைகளை வெளிக் கொணருவதற்குப் பல நிறுவனங்களை நிறுவியுள்ளது. ஆசியா மற்றும் தூரகிழக்கு ஆசிய நாடுகளுக்கான பொருளா தார, சமூக ஆணைக்குழுவினை ( Economic and Social Commission for Asia and the Pacific (ESCAP) பாங்கொக்கில் நிறுவிப் பல ஆக்கபூர்வமான ஆய்வு களை மேற்கொண்டு வருகின்றது. இதே போல சந்தியாகோ, கெய்ரோ, அக்ரா, Yaounde (Cameroon) ஆகிய நகரங்களிலிலும் இவ்வகை ஆய்வு நிலையங் களை அமைத்துக் குடித்தொகைக்கல்வியின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வருகின்றது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் குடித்தொகைப்பிரிவானது. குடித்தொகைக் கல்விக்கான முறைமையியல் நுட்பமுறைகள் பற்றி அங்கத் துவ நாடுகளுக்கு அறிவுறுத்தி வருகின்றது. இச்சபையின் குடித்தொகைப் பிரிவு மட்டுமல்லாது 'உலக சுகாதார நிறுவனம்' (World Health Organization) 'ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக கலாசார நிறுவனம்' (UNESCO), உலக விவசாய நிறுவனம் Food and Agricultural Organization (FAO) போன்ற அமைப்புக்களும் குடித்தொகைப் பிரச்சினை பற்றிக் கவனம் செலுத்தி வருகின் றன. அத்துடன் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் குறிப்பாக வளர்முக நாடு களின் குடித்தொகைப் பிரச்சினைகளில் அதிக அக்கறை செலுத்தி வருகின் றன. குறிப்பாக நெதர்லாந்திலுள்ள சர்வதேச புள்ளி விபர நிறுவனம் (International Statistical Institute) உலகக் கருவள அளவீட்டினைச் சிறப்பாகச் செய்து வருகின்றது.

## 1.2. குடிப்புள்ளியியலுக்கும் குடித்தொகையியலுக்குமிடையிலான தொடர்பு

குடிப்புள்ளியியலும் குடித்தொகையியலும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையன. குடிப்புள்ளியியலானது குடித்தொகைப் பண்புகளோடு தொடர் புடைய தரவுகளைச் சேகரித்து நெறிப்படுத்திக் கொடுப்பதாகும். அவ்வாறாக நெறிப்படுத்திய தரவுகளுக்கு விளக்கம் கொடுப்பது குடித்தொகையியலாகும்.

உதாரணமாக இரும்புத்தாதினை வெறுமனே உபயோகிக்க முடியாது. அதனைப் பொருத்தமான தொழிநுட்பத்தினூடாக இயந்திரத்திற் பாகம் செய்து இரும்பாக்கிய பின்பு தான் அது பிரயோசனப்படும். அதே போலவே குடித் தொகைத் தரவுகளைத் தேவைக் கேற்ப ஒழுங்குபடுத்திக் கொடுப்பது குடிப் புள்ளியியலாகும். எடுத்துக்காட்டாக ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் கருவளவாக்கம் பற்றி அறிய முற்படும் போது குறித்த பிரதேசத்தில் குறித்த காலப்பகுதியிற் பிறந்த குழந்தைகள், சாப்பிறப்புக்கள், மற்றும் பிறக்கும் போது தாயாரின் வயது என்பவை தரவுகள் ரீதியாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அத்தரவுகளை ஒழுங்குபடுத்தித் தரும் பட்சத்தில் அதற்குரிய சமூக, பொருளா தார, பண்பாட்டு நிலைமைகள், உயிரியற் காரணிகள் போன்ற பலவற்றினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதே போலவே ஏனைய குடித்தொகையுடன் தொடர்புடைய துறைகளை விளங்கிக் கொள்வதற்கு இவ்விரு துறைகளும் பல்வேறு மட்டத்தில் துணைபுரிவனவாகவுள்ளன.

## 1.3. குடிப்புள்ளியியல், குடித்தொகையியல் ஆகிய துறைகளுக்கும் ஏனைய துறைகளுக்குமிடையிலான தொடர்பு

குடிப்புள்ளியியலுக்கும் குடித்தொகையியலுக்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்படுவது போல இவ்விரு துறைகளுக்கும் ஏனைய துறை களுக்குமிடையிலும் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. மக்களை மையமாகக் கொண்டே சகல துறைகளும் விருத்தி பெற்றுள்ளன. எனினும் பின்வரும் துறைகள் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:

1. உயிரியல் விஞ்ஞானம்
2. சமூகவியல்
3. பொருளியல்
4. புவியியல்
5. மானிடவியல்
6. மனிதச் சூழலியல்
7. புள்ளிவிபரவியலும் கணிதவியலும்
8. சட்டவியல்
9. சமூக உளவியல்

### 1.3.1. உயிரியல் விஞ்ஞானமும் குடித்தொகையியலும்

குடித்தொகைக்கல்விக்கும் உயிரியலுக்குமிடையில் மிக நெருக்கமான தொடர்புகாணப்படுகின்றது. குடித்தொகை மாற்றமானது உயிர்க் கூற்றியலுடன் தொடர்புடையது. அதாவது கருவளவாக்கம், இறப்பு, நோய்த்தன்மையடைதல் போன்றன உயிர்க் கூற்றியலுக்குட்பட்டவை. ஒரு பெண்ணுக்கு கருச்செழிப்புக்

காலத்தில் உடலுறவின் விளைவாகக் கருவளவாக்கம் நிகழ்கின்றது. இத்துறை யானது இதுபற்றி விரிவாகக்கற்கும் துறையாக உள்ளதுடன் குடித்தொகையி யலுக்கு உட்பட்டதாகவுமுள்ளது. மீள்இனப்பெருக்கப் பரம்பலை ஏற்படுத்து வதற்கும் கருத்தடைக்கான நுட்பமுறைகளை அறிந்துகொள்வதற்கும் இத் துறை குடித்தொகையியலுடன் தொடர்புகொண்டுள்ளது. அதே போலவே இறப் புக்கள், அதற்கான காரணிளைக் கண்டறிதல், அவற்றினை மருத்துவ, சுகாதார, மற்றும் பொருளாதார, சமூக ரீதியில் இயன்றளவிற்குக் கட்டுபடுத்துதல் போன்ற வற்றை இவ்விரு துறைகள் மூலமும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. உயிர்க் கூற்றியலானது குடும்ப அளவு, சமூக பொருளாதார நிலைமைகள் போன்ற வற்றை தீர்மானிக்கின்றது. குறிப்பாக வளர்முகநாடுகளிற் பெண்களிடையே நிகழ்கின்ற பிறப்புக்களுக்குச் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளும் உயிர் கூற்றியற் பண்புகளுங் காரணங்களாக அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

### 1.3.2. சமூகவியலும் குடித்தொகையியலும்

குடிப்புள்ளியியலானது தரவுகளைச் சேகரிக்க, குடித்தொகையியலானது அதற்கு விளக்கங் கொடுக்க, சமூவியலானது மனிதனை ஒரு சமூகப் பிராணி யாகக் கருதி சமூகமாக அல்லது குழுக்களாகக் கொண்டு அவனது நடத்தை கள் பற்றி விரிவாக ஆராய்கின்றது. எனவே இத்துறைகள் பிறப்பு, இறப்பு, விவாகம், விவாகரத்து, விவாக முறைகள், பழக்கவழக்கங்கள், மரபு முறைகள் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அவனது நடத்தைகள் போன்ற பல்வேறு பண்பு களை வெளிக்கொணர்கின்றன. மேலும் சமூகத்திற் காணப்படும் சமூக நிலை மைகள், சமூக பழக்கங்கள் (Social habits), சூழலியல், மக்களது வாழ்க்கை நிலை, சமூக அமைப்பு (Social Organization) கலாசாரம் (Culture) சமூகமயமாக்கம் (Socialization) ஆரம்பக்குழுக்கள் (Primary Groups), சமூக இடைவெளிகளும், வேற்றுமைகளும், சங்கம், கூட்டுநடத்தை, குடும்பம், நகராக்கம், சிறுபான்மையினர், குற்றங்களின் வகைகள் போன்ற பலவற்றில் இவ்விரு துறைகளும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றன. குடித் தொகையியல் அளவு சார்ந்ததும், தரம் சார்ந்ததுமான படிப்பாகவிருக்க, சமூகவியல் தரம் சார்ந்த படிப்பாகவிருக்கின்றது.

மேலும் கருவளமானது சமூக நிறுவனங்களுடன் (Social Institutions) தொடர்புடையது. அத்துடன் குடித்தொகை அமைப்பிற் குடித்தொகை மாற்றத் திற்கும் சமூக, பொருளாதார அமைப்புக்குமிடையிலான தொடர்பு சமூக நிறுவனங்களுக்கும் தொழிலாளர் படைகளுக்குமிடையிலான தொடர்பு, குடிப் புள்ளியியற் பாங்கிற் குடும்ப அமைப்பு, சர்வதேச உள்நாட்டு இடப்பெயர்வு களுக்கும் சமூகவியற் பண்புகளுக்கிடையிலான தொடர்பு, சமூகவியல் ஆய்வின் அடிப்படையிற் குடும்பம், நகரம், கைத்தொழிற் சமூகவியல், அரசியற்

சமூகவியல், சமூகப்படிமுறைகள், கூட்டுப்பொறுப்பு போன்றன இவ்விரு துறைகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பினைக் கொண்டு வருகின்றன.

### 1.3.3. பொருளியலும் குடித்தொகையியலும்

பொருளியலுக்கும் குடித்தொகையியலுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. மக்களின் பொருளாதார நிலைக்குங் குடித்தொகை அமைப்புக்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. அதாவது குடித்தொகைப் பிரச்சினையானது வேலையில்லாப் பிரச்சினை, தலாவருமானக் குறைவு, புனர் வாழ்வுப் பிரச்சினை, கல்வி, போக்குவரத்து, கைத்தொழிலாக்கம் போன்றவற்றுடன் தொடர்புடையது. அத்துடன் குடித்தொகைப் பண்புகளுக்கேற்பத் திட்டமிடல், குடித்தொகைப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான எதிர்காலத் திட்டமிடல் - குறிப்பாகப் பாடசாலைகள், சுகாதார நிறுவனங்களை நிறுவுதல், வேலை வாயப்புக்களை ஊக்குவிப்பதற்கான திட்டமிடல், குடியிருப்புக்களை நிறுவுதலைத் தீர்மானித்தல், மனித வலுவினை விருத்தி செய்தல், சூழல் மாசடைதலைத் தவிர்த்தல் போன்ற பலவும் இவ்விருதுறைகளையும் இணைத்து வைத்திருக்கின்றன எனலாம்.

குறிப்பாக வளர்ந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற் குடித்தொகை வளர்ச்சிக்குப் பதிலாக வீழ்ச்சி நிலை ஏற்பட்டு வருவதாற் தொழிலாளர் பற்றாக் குறை நிலவவே இது பொருளாதார வளர்ச்சியிற் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இந்நாடுகளுக்குச் சென்றடையவே அங்கு பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. அதே போல வளர்முக நாடுகளிற் குடித்தொகை வெடிப்பின் விளைவாகப் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றிலிருந்து விடுபடுவதற்குப் பொருளியல் அறிஞர்களும் குடித்தொகையியல் அறிஞர்களும் பெரிதும் பாடுபட்டு வருகின்றனர்.

### 1.3.4. புவியியலும் குடித்தொகையியலும்

புவியியல் பல்வேறு துறைகளுக்குத் தாய் என்பர். அதாவது இது ஒரு தொகுப்பியலாகும். இத்துறையானது புவியியலிற் காணப்படுகின்ற பௌதீக பண்பாட்டுக் கோலங்களை விளக்கிச் செல்கின்றது. குறிப்பாக மனிதனுடன் மிக நெருக்கமாகவுள்ள தரைத்தோற்றம், காலநிலை, மண்வளம், இயற்கைத் தாவரம், கனிப்பொருள் வளம் ஆகியவற்றின் பரம்பலையும் அதன் தன்மைகளையும் எடுத்துக் கூறுவதுடன் மனிதனது பரம்பல், அடர்த்தி, அவர்கள் தம் இயக்கம், நகர-கிராமியப் பண்புகள், குடித்தொகைக் கூட்டு போன்ற சகல விடயங்களையும் விளக்கிச் செல்கின்றது.

மேலும் மக்களது பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கோலங்களையும் புவியியற்றுறை எடுத்து விளக்குகின்றது. எனவே இவற்றைப் புவியியலூடாக வெளிக்கொணர்வதற்குக் குடித்தொகையியல் அதனுடன் இணைந்த துறையாக

இருந்துவருகின்றது. இத்துறையால் வழங்கப்படும் தரவுகளையும் தகவல் களையும் உலகிற் பிரதேச ரீதியாக வகைப்படுத்தி புவியியற்றுறை விளக்கி வருகின்றது.

### 1.3.5. மானிடவியலும் குடித்தொகையியலும்

மானிடவியலுக்கும் குடித்தொகையியலுக்குமிடையிற் பிரித்தறிய முடியாத இணைப்புக் காணப்படுகின்றது. மனிதப் பரிணாமம், வரலாறு, மனிதர் களினதும் உயர்நிலைப்பால் குடித்தொகையினங்களினதும் விருத்தி, மனித இனப்பாகுபாடுகள், அண்மைக்காலங்களில் இனங்களிடையில் காணப்படும் பிணக்குகள், இனங்களுக்கிடையிலான கலப்பு விவாகம், அதனால் ஏற்படும் விளைவுகள் போன்றவற்றிற்குங் குடித்தொகையியலுக்குமிடையிற் தொடர்பு காணப்படுகின்றது. குறிப்பாகக் கருவளம், இறப்பு, விவாகம், இடப்பெயர்வு, குடித்தொகைக் கூட்டு, போன்ற குடித்தொகைப் பண்புகள் மானிடவியலின் உபகூறுகள் எனக் கொள்ளலாம்.

### 1.3.6. மனிதச் சூழலியலும் குடித்தொகையியலும்

இவ்விரு துறைகளுக்கிடையிலே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. சூழலியல் மாற்றம் பெறுகின்றபோது மனிதனது செயற்பாடுகளும் மாற்றம் அடைவதைக் காணமுடிகின்றது. பிறப்பு, இறப்பு மனிதச் சூழலியற் பண்பு களுக்குட்பட்டதாயுள்ளது. குறிப்பாக இறப்புக்கள் தான்சார்ந்த சூழலுடன் தொடர்புடையன. அதாவது வாழ்க்கை அட்டவணைகள் இதன் விளைவாக இடத்துக்கிடம் மாற்றம் பெறுகின்றன.

மேலும் ஒரு பிரதேசத்தின் குடித்தொகை அடர்த்திக்கும் சூழலியலுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்ற வேளை மக்கள் தாம் வாழும் பிரதேசங்களிலிருந்து வேறு பிரதே சங்களை நாடிச் செல்கின்றனர்.அதே போலவே குறிப்பிட்ட பிரதேசத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுமிடத்தோ அன்றில் தொழில் வாய்ப்பு மற்றும் குடியிருப்புப் பற்றாக்குறை ஏற்படுமிடத்தோ அப்பிரதேசம் அவர்களுக்கு உகந்த தல்ல எனக்கருதி வெளியேறுவர். இவை போன்றவற்றை மனிதச் சூழலியல் ஆராய்ந்து செல்கின்றது.

### 1.3.7. புள்ளியியல், கணிதவியலும் குடித்தொகையியலும்

ஒரு விடயத்தை அங்கீகரிப்பதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு புள்ளிவிபரவியலும், கணிதவியலும் பெரிதுந்துணை புரிகின் றன. இப்பண்பு சமூக விஞ்ஞானத்துக்கு மட்டுமல்லாது மானிடவியல், விஞ்ஞா னம், மருத்துவம் போன்ற பல துறைகளுக்கும் அவசியமானது. அந்த வகையில்

புள்ளிவிபரவியல், கணிதவியல் ஆகியன குடித்தொகையியல், குடிப் புள்ளியியல் ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன.

குடித்தொகையியலில் அளவினைக் கணிப்பீடு செய்யும் முறை முக்கியமானது. அதாவது பெறப்பட்ட தரவுகளை வகைப்படுத்தி தெளிவு காணப் படுவதற்கு இத்துறைகள் அவசியமானது மட்டுமல்லாது பிரித்தறிய முடியாததுமாகும். குடித்தொகையியலாளர்கள் புள்ளிவிபரவியல் மாதிரிகளைப் பயன் படுத்திக் குடித்தொகை வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்கின்றனர். இதன் மூலம் குடித்தொகைப் பண்புகளை இலகுவாக விளங்க வைக்க முடிகின்றது. குடித் தொகையியல் வளர்ச்சியின் மைற்கல்லாக, 19ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து புள்ளிவிபரவியல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

### 1.3.8. சட்டவியலும் குடித்தொகையியலும்

சட்டவியலும், குடித்தொகையியலும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. குடித்தொகை சம்பந்தமாகத் தற்போதைய, எதிர்காலப்பண்புகளை அண்மைக்காலங்களிற் சட்டவியல் பெருமளவிற்குத் தீர்மானித்து வருகின்றது. உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் குடித் தொகையுடன் தொடர்புடைய சட்டங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்படுத்தி வருகின்றன. குறிப்பாகப் பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு போன்ற வற்றிற் பெரும்பங்கு கொண்டுள்ளன. அதாவது வளர்முக நாடுகள் பல தமது நாடுகளிற் பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சட்டங்களை இயற்றியுள்ளன. குறிப்பாக சீனாவில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை மட்டும் தான் பெற்றுக் கொள்ளலாம் என நேரடியாகச் சட்டத்தின் வாயிலாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதே போலவே பல நாடுகள் விவாகம் செய்வதற்கான வயதெல்லையைச் சட்டரீதியாக அதிகரித்துள்ளன. உதாரண மாக இந்தியா 1972ஆம் ஆண்டில் ஆண்களுக்கான விவாக வயதெல்லையை 21 ஆகவும் பெண்களுக்கான விவாக வயதெல்லையை 18 ஆகவும் உயர்த்தி யுள்ளது.

அதே போலவே சர்வதேச இடப்பெயர்வினைப் பொறுத்தவரை அரசுகள் தங்கள் நாட்டுக்கு உள்வரவினை மேற்கொள்பவர்கள் விடயத்திற் கட்டுப்பாடு களைச் சட்டத்தின் மூலம் விதித்துள்ளன. குறிப்பாக அகதிகளாகச் செல்ப வர்கள் விடயத்தில் நாடுகளுக்கு நாடு வேறுபட்ட சட்டங்கள் செயற்படுத்த படுகின்றன. இவ்வாறே பொதுச் சுகாதாரம், உணவு தயாரித்தல், விற்பனை செய்தல், மருந்துகள் தயாரித்தல், மருத்துவமனைகளை உருவாக்கல், நடாத்து தல், போதைவஸ்து பாவனைத் தடை, விவாகம், விவாகரத்து, பிறப்பு, இறப்புக் கள் ஆகியவற்றைப் பதிதல், கட்டாயக்கல்வி, குழந்தைகளைத் தத்தெடுத்தல், பெண்களது அந்தஸ்தை நிலைநிறுத்தல் போன்ற பல விடயங்களில் மறைமுக மாகவும் நேரடியாகவும் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.3.9. சமூக உளவியலும் குடித்தொகையியலும்

இவ்விருதுறைகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. குறிப்பாகக் கருவள ஒழுங்கு சமூகவியலுக்குட்பட்டுள்ளது. வளர்முக நாடுகளிற் குடும்ப அளவினைப் பொறுத்தவரை அதிகரித்த குழந்தை களையே பெரிதும் விரும்பியேற்கின்றனர். ஏனெனில் குறிப்பிட்ட சமூகத்தில் அத்தகைய பண்புகள் காணப்படுவதே அதற்குக் காரணமாகவுள்ளது. அதே வேளை வளர்ந்த மேலை நாடுகளில் அளவான சிறிய குடும்பத்தினையே விரும் பியேற்கின்றனர். மீள் உற்பத்தி நடத்தையானது சமூக நிலைப்பாட்டுடனும் கலாசாரப் பண்புகளுடனும் நெருங்கிய தொடர்புடையது என்றால் மிகையாகாது. இதே போலவே இடப்பெயர்வினைத் தீர்மானிப்பதில் உளவியற் பண்புகள் பெரிதும் பங்காற்றுகின்றன.

# 2

# குடித்தொகைக் கோட்பாடுகள்

## 2.0. முன்னுரை

குடித்தொகை வளர்ச்சி, சமூக மாற்றங்கள், அவற்றினால் எழுந்துள்ள சாதக, பாதக நிலைமைகள் போன்றனவற்றின் உந்துதலின் விளைவாகக் காலத்துக்குக் காலம் அவ்வக்கால சூழ்நிலைக்களுக்கேற்பக் குடித்தொகைக் கோட்பாடுகளைச் சிந்தனையாளர்கள் தாம் சார்ந்த துறைகளின் நெறிமுறை களுக்கமைய வெளிக் கொணர்ந்துள்ளனர். வரலாற்றுக் காலத்தில் கொன்பியூ சியஸ் மற்றும் சீனச் சிந்தனையாளர்கள் ஒரு நாட்டின் பொருளாதார நிலை சீர்குலையுமாயின் குடித்தொகை வெடிப்பு ஏற்படும் என எடுத்துக் கூறினர். அதாவது பொருளாதார வளர்ச்சியிலும் பார்க்கக் குடித்தொகை வளர்ச்சி விரைவாக அதிகரிக்கும் பட்சத்தில் மக்கள் பலவேறு சிரமங்களை அனு பவிப்பர் என்றனர். எனினும் பிறப்பு, இறப்பு வீதங்களின் அதிகரிப்பானது எந்த வகையிற் பொருளாதார முறைமையிற் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவிக்கத் தவறியுள்ளனர். எனினும் மேற்குறித்த கருத்துக்களுக் கெதிரான கருத்துக்களும் அக்காலங்களில் நிலவியுள்ளன. குறிப்பாக பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றவர்கள் தேசிய பாதுகாப்பிற்கும் பொருளா தார தன்னிறைவைப் பெற்றுக் கொள்வதற்கும் அதிகரித்த மக்கள் தேவைப்படு பவர் என்ற கருத்தை முன்வைத்தனர். எனவே மிக நீண்டகாலமாகக் குடித் தொகை வளர்ச்சியினால் ஏற்படும் சாதக, பாதகத் தன்மைகள் பற்றிக் காலத்துக்குக் காலம் பல்வேறு துறைசார்அறிஞர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்து வந்துள்ளனர். இவர்களது கருத்துக்கள் கோட்பாடுகளாக வெளி வந்துள்ளன. வரலாற்று நோக்கில் எழுந்த அக்குடித்தொகைக் கோட்பாடுகள் அவ்வக் காலங்களில் நிலவிய சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கோலங் களுடன் தொடர்பு கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது.

## 2.1. கிரேக்க சிந்தனைகள்

பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற சிந்தனையாளர்கள் மட்டுபடுத்தப் பட்ட குடித்தொகையானது சமூகத்தின் வசந்த வாழ்வுக்கு உகந்தது அல்ல

எனவுங் குறைவான குடித்தொகையைக் கொண்ட சமூகத்தினர் வறுமையில் வாடுவர் எனவுங் கருதினர். மேற்குறித்த இருவரும் குடித்தொகைக்கும் வறுமைக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது என நம்பினர். பிளேட்டோ குடித்தொகைச் சமநிலையானது சமூகச் சமநிலையைத் தீர்மானிக்கின்றது என்றார். இவர்களைத் தொடர்ந்து ஹெரரோட்டஸ் Thucidides, Xenophon போன்றவர்கள் அதிகரித்த குடித்தொகை தான் பல்வேறு வகைப் பட்ட தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடர்பாடுகளைத் தராது என்றனர். அதாவது குடித்தொகை அதிகரிக்கின்றபோது உழைப்பாற்றல் அதிகரிக்கின்றது. அதனால் உற்பத்தி அதிகரித்து வருமானம் அதிகரிக்க வாய்ப்புண்டு என வாதிட்டனர். அவ்வாறு அதிகரிக்கும் பட்சத்தில் நாடுகளிடையே சமூக உறவு நிலை ஏற்பட்டு வர்த்தகம் விருத்தி பெறும் என்றனர்.

## 2.2. உரோம சிந்தனைகள்

பொதுவாக ரோமானியரின் சிந்தனையானது நகர அலகுக்குச் சாதகமாகவிருக்கவில்லை. அவர்கள் ஒரு நாடு பெரிய அலகாக இருத்தல் வேண்டும் எனவும் அது சாம்ராய்ச்சியமாக இருக்கலாம் எனவுங் தெளிவுபடக் கூறினர். இவர்கள் குறிப்பாக ரோமப் பொருளியலாளர்கள் அதிகரித்த குடித்தொகை வளர்ச்சியையிட்டுப் பெரிதுங் கவனத்திற்கு எடுக்கவில்லை. எனினும் ரோமப் பேரரசின் எல்லையினை விஸ்தரிக்கும் நோக்குடன் அதிகளவிற் படைவீரர்களைப் பெற்றுக் கொள்ளும் முகமாக அதிகரித்த குடித்தொகையை விரும்பியேற்றனர் என்றால் மிகையாகாது.

## 2.3. மால்தூசியக் கோட்பாட்டுக்கு முந்திய கோட்பாடுகள்

மத்திய காலப்பகுதி கி.பி 400-1500 ஆம் ஆண்டுகளிற்கிடைப் பட்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதிகளில் வாழ்ந்த சிந்தனையாளர் குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. கிரேக்க சிந்தனையாளர்கள் குடித்தொகைப் பிரச்சினைகளை வேறுபட்ட நோக்கில் அணுகினர். அதாவது விவாகரத்து, குழந்தைகளைக் கொல்லுதல், கருத்தடை செய்தல் ஆகியவற்றை முற்றாக எதிர்த்தனர். அதே வேளை கட்டிளம் வயதினரிடையே ஆசை, விருப்புகளுக்கு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறினர். இயற்கை மற்றும் பொதுவான துன்பங்கள் குடித்தொகையை குறைக்கவல்லன என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினர். இக்காலப்பகுதியில் இஸ்லாமியர்களிடையேயும் வர்த்தக நோக்கம் கொண்டவர்களிடையேயும் நிலவிய கருத்துக்களும் அதிகரித்த குடித்தொகையை விரும்பியேற்றிருந்தமையேயாகும். ஏனெனில் அதிகரித்த குடித்தொகையின் நுகர்வுக்காகப் பெருமளவு பொருட்களை உற்பத்தி செய்யவேண்டியிருந்தமையால் மக்கள் பெருக்கத்தை விரும்பியேற்றனர். ஆனால் அதிகரிக்கும் மக்களிடையேயான தலைக்குரிய வருமானத்தைப் பற்றியோ அன்றில் வாழ்க்கைத் தரத்தைப் பற்றியோ இவர்கள் எதுவித அக்கறையுஞ் செலுத்தவில்லை.

மக்களிடையே குடித்தொகைக் கட்டுப்பாடானது. கொள்ளை நோய்கள், கருச் சிதைவுகள், காலந்தாழ்த்திய விவாகம், போன்றவற்றால் நிகழக்கூடியன எனத் தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலான சிந்தனையாளர்கள் பிறப்புக்களும், இறப்புக் களும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ளன எனத் தெளிவற்ற சிந்தனைக்குட் பட்டிருந்தனர்.மேலும் மக்கட் செல்வம் தான் நாட்டின் செல்வம் எனவும் அதனைக் கட்டுப்படுத்துவது முட்டாள்தனமானது எனவும் இக்காலச் சிந்தனை யாளரிடையே கருத்து நிலவி வந்துள்ளது.

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 18ஆம் நூற்றாண்டின் முற் பகுதிக்கும் இடைப்பட்ட காலங்களில் மனித வாழ்வின் நோக்குகள் பலவற்றில் விரைவான தொடர் மாற்றங்கள் உருவாகின. இக்காலப்பகுதிகளில் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டமை, இந்தியாவுக்கான புதிய பாதைகளைக் கண்டறிந்தமை, வெடிமருந்துகள்தயாரிப்பு, அச்சியந்திரக்கண்டுபிடிப்பு போன்ற வற்றினால் விஞ்ஞான வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏனைய பிரதேசங்களுக்குமிடையிற் சர்வதேச வர்த்தகம் விருத்தி பெறத் தொடங்கியது. இதன் விளைவாக முதலாளித்துவ அரசுகளிற் பரந்த மாற்றங்கள் ஏற்பட்டமையாற் குடித்தொகை மற்றும் உள்நாட்டுப் பொருளாதார முறைமைகளின் சிந்தனைச் செயற்பாடுகளிற் பல மாற்றங்கள் ஏற்பட்டன எனலாம். ஐரோப்பியக் கொள்கைகளின் ஆலோசகரான மாக்கிய வெல்லி கூட, குடித்தொகை வளர்ச்சியை ஒரு புதிய வரலாற்றுச் சுற்றோட் டத்தின் ஆரம்பமாகவே காண்கின்றார்.

17ஆம் நூற்றாண்டிற் தோன்றிய குடித்தொகைக் கோட்பாடுகளின் வளர்ச்சி 18ஆம் நூற்றாண்டிற் பரந்துபட்டது எனலாம். Gulla Lime Bude என்பவர் மன்னனின் மகிமை அல்லது மாண்பு மக்களின் பெருக்கத்திலேயே தங்கியுள்ளது என்றார். Pesriere என்பவர் மக்கள் குறைவாகக் காணப்பட்டால் யார் ஆயுதங்களைத் தூக்குவது என்றார். அதே போலவே Jean Bodin என் பவர் மனிதனைப் போன்ற செல்வமோ பலமோ இவ்வுலகிற் கிடையாது என்றார். மேற்குறித்தவர்களின் கருத்துக்களை நோக்கும் போது குடித்தொகை வளர்ச் சியை இக்காலங்களில் விரும்பியேற்றிருந்தனர் எனக் கொள்ள இடமுண்டு.

வர்த்தக நோக்கம் கொண்டவர்களின் வாதமானது. குடித்தொகைக் கோட்பாட்டின் இயல்பான விரிவாக்கம், அரசியல் பொருளாதாரக் களத்தி லிருந்து தான் வெளிப்படுகின்றது என்பதாகும். மேற்குறித்தவர்கள் விவா கத்தை மேற்கொள்வதன் வாயிலாகப் பெரிய குடும்பங்களை ஊக்குவித்தல், பொதுச்சுகாதார அபிவிருத்தி, குடியகல்வைத் தடை செய்வதுடன் குடிவரவினை சிறப்பாக தொழிற் திறனுடையவர்களின் வரவினைத் தூண்டுதல் போன்றவற்றின் மூலம் குடித்தொகையை அதிகப்படுத்துதல் வேண்டும் எனக்கூறினர். இவர்களது கோட்பாடுகள் விஞ்ஞானக் குடித்தொகைக்கோட்பாடுகள் என்பதை விட ஒரு அரசியல் நடத்தையாகவே அமைந்திருந்தது. அதாவது அரசனதும் பின்னர் அரசுகளது சக்தியையுஞ் செல்வத்தையும் முன்னேற்றும் அளவுகோலாக இருந்த குடித்தொகை அதிகரிப்புக்கான விளக்கங்கள், வர்த்தக வாத நோக்கங் கொண்டவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன எனலாம். இதனை விரிவாகக்

கூறுவதாயின் முதலாவதாக பொருட்களின் உற்பத்தியினாலும் ஏற்றுமதி யினாலும் தேசிய செல்வத்தை அதிகரிக்கலாம். இதற்குக் குடித்தொகை வளர்ச்சி அவசியமாகின்றது. இரண்டாவதாக இவ்வாறான வளர்ச்சி ஏற்படு மாயின் இது நாடுகளிடையே போட்டிக்கு வழிகோலும் இவ்வாறான போட்டி போர்ச் சூழலையேற்படுத்தும். எனவே போரிடுவதற்கு மக்கள் தேவைப்படுவர். இவ்விரு கொள்கைகளையுந் தொழிலாளர் சுரண்டலுக்கும் பணவீக்கத்திற்கும் இடமளிக்கின்ற போதிலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை என்பதையுந் தெரிவித்துள்ளனர். குடித்தொகையை அதிகரிக்கவேண்டும் எனக் கூறும் இவர்கள் விவாகம் செய்வதை நேரடியாக ஊக்குவித்தல், கருவள வாக்கத்தை ஊக்கப்படுத்துதல், சட்டரீதியற்ற பிறப்புகளுக்குக் கடுந் தண்டனை அளிக்காது விடுதல் அல்லது தண்டனை முறையை முற்றாக நீக்குதல், மக்களது உள்வரவினை ஊக்கப்படுத்துதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றனர்.

குடித்தொகைக் கோட்பாடு குறித்து ஒரு நவீன கருத்தினை Petero என்பவர் முன்வைத்தார். அதாவது குடித்தொகை வளர்ச்சிக்கும் வளங்களுக்கு மிடையிலான தொடர்பினை விளங்க வைத்துள்ளதுடன் குடித்தொகை வளர்ச்சி யானது குறிப்பிட்ட காலத்தின் பின் அதே வீதத்தில் வளருவதில்லை. மாறாக மெதுவாக வளர்கின்றது. அல்லது வீழ்ச்சியடையத் தொடங்குகின்றது என்பதே அதுவாகும். குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான காரணம் வாழ்க்கைக்குத் தேவையான வரையறுக்கப்பட்ட பொருட்களாகும். அத்துடன் மண் வளமிழப்பு, மோசமான காலநிலை, நோய்கள், தொற்று நோய்கள் என்ப வற்றையுங் குறிப்பிடுகின்றனர்.

18ஆம் நூற்றாண்டிற் பெரும்பாலான வைதீக-பழமை வாய்ந்த சிந்தனை யாளர்கள் இயல்பாகவே குடித்தொகை அதிகரிப்பை விரும்பியேற்றனர். ஜேர்மனியைச் சேர்ந்த Hermavan Couring என்பவர் அரசுகளின் சக்தி குடித் தொகையே எனக் கூறினார். இதே காலத்தில் இங்கிலாந்தினைச் சேர்ந்த William Petty என்பவர் அரசியல் எண்கணிதம் (Political Arithmetic) என்ற விஞ்ஞான ரீதியிலான கருத்தினை வெளியிட்டார். Godwin என்பவர் Political Justice என்ற நூலின் வாயிலாகக் குடித்தொகைப் பெருக்கத்தினை விரும்பி யேற்றார் எனலாம். எனவே மால்தூசுக்கு முந்திய சிந்தனையாளர்கள் குடித் தொகை வளர்ச்சியைப் பெரிதும் விரும்பியேற்றனர் என்றே கூறல் வேண்டும்.

### 2.4. மால்தூசின் கோட்பாடுகள்

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் சமூகத்தில் மக்களிடையே இயற்கை ஒழுங்கினைப் பொறுத்தவரை ஒரு தாக்கம் ஏற்பட்டுள்ளது பற்றி அப்பிரதேசங் களில் வாழ்ந்து வந்த அறிஞர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் 18ஆம் நூற் றாண்டினைத் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளன. குடித்தொகை வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றி ஒரு சாராரும். குடித்தொகை வளர்ச்சியினால் ஏற்பட்டு

வரும் - ஏற்படவிருக்கும் பிரச்சினைகள் பற்றி மற்றொரு சாராரும் வாதப்பிரதி வாதங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்களில் றிக்காடோ, சிமித்,கொட்வின், மால்தூஸ் போன்றவர்கள் முக்கியமானவர்கள். மால்தூஸ் என்பவர் தனது காலத்திலும் அதற்கு முன்னுள்ள காலப்பகுதியிலும் நிலவிய குடித்தொகை சம்பந்தமான தத்துவப்போக்கிலிருந்து விடுபட்டு, முதல் முறையாகக் குடித் தொகை வளர்ச்சியினால் ஏற்படப்போகும் பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகளைக்கோடிட்டுக் காட்டியுள்ளார். அதுவே மால்தூசின் கோட்பாடாக உருப்பெற்றது.

தோமஸ் றொபேட் மால்தூஸ் என்பவர் 1766ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பிறந்து 1834ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். இவர் தனது இளமைக்கல்வியினைத் தனது கிராமத்திலும் 18 வயதினை அடைந்ததும் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் ஜீஸஸ் (Jesus College) கல்லூரியிலும் பயின் றவர். 1804இல் விவாகம் செய்தார். ஹெயில் பெரிக் கல்லூரியில் வரலாறு மற் றும் அரசியல் விஞ்ஞானத்துறையில் பேராசிரியராகக் கடமையாற்றினார். 1798 ஆம் ஆண்டு பாதிரியாகக் கடமையாற்றிய காலத்திற் பொருளாதாரப் புவியியல் என்ற நூலின் வாயிலாகக் குடித்தொகை பறறிய தமது ஆரம்ப அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். இவ்வாறு வெளியிடுவதற்கு இவரால் மேற்கொள் ளப்பட்ட ஐரோப்பிய விஜயங்களும் கைத்தொழிற் புரட்சியின் விளைவாக- தொழிலாளர் வர்க்கத்தினை நேரில் கண்டதுமே காரணங்களாக இருந் துள்ளன.1798ஆம் ஆண்டு " An Essay on the Principle of Population - As it Affects the Future Improvement of Society with Remarks on the speculations of Godwin" என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார். இக் கட்டுரை 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த, எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடிய சமூகத்தினருக்குப் பெரிய தாக்கத்தினையும் துன்பத்தையும் ஏற்படுத்தியது. அத்துடன் றிக்காடோ, சிமித் போன்றவர்களது சிந்தனை களுக்கும் கருத்துக்களுக்கும் முரணானதாக அமைந்திருந்தது. இவரது ஆய்வின் முடிவானது, மக்களிடையே இரங்கத்தக்க நிலையான வறுமையை ஏற்படுத்தவல்லது என்பதேயாகும். இவர் தனது கருத்தினை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் முகமாக 1805ஆம் ஆண்டில் " An Essay on the Principle of Population or A view of its past and prsent effects on Human Happiness" என்ற கட்டுரையை வெளியிட்டார். இக்காலங்களில் இவரது கருத்துகளுக்கு இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பின.

### 2.4.1. மால்தூசின் கோட்பாடு உருவாவதற்கான அடிப்படைக்காரணிகள்

பேராசிரியர் மால்தூஸ் தனது கோட்பாட்டினை உருவாக்குவதற்குரிய பின்னனியானது கிழக்கிந்திய கம்பனியின் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப் பதில் அவர் ஈடுபாடு கொண்டிருந்தமையேயாகும். அப்போது குடித்தொகை அமுக்கத்தினால் உலகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கப் போகிறது

என்பதை உணர்ந்தார். இவ்வாறாகக் குடித்தொகை அதிகரித்துச் செல்லுமாயின் வறியவர்கள், செல்வந்தர்கள் எனும் இருபிரிவினரின் உருவாக்கத்தைத் தடுக்க முடியாது என நம்பினர். வறியவர் அதிகரிக்கும் பட்சத்திற் பல்வேறு கொள்ளை நோய்கள் அதிகரித்து மனித உயிர்கள் அநியாயமாக அழிந்து போகும் என எச்சரித்தார். குடித்தொகை அதிகரித்துச் செல்லும் அதேவேளை உணவு உற்பத்தியுங் குறைவடைந்து செல்லும் என்றார். கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஐரோப்பாவிற் குறிப்பாக இங்கிலாந்தில் செல்வந்தர்கள், வறியவர்கள் என்ற இரு பிரிவினர் தோற்றம் பெற்றுள்ளதைத் தாம் நேரடியாகக் கண்டுகொள்ள முடிந்தது எனக் கருத்துத் தெரிவித்தார்.

மாஸ்தூஸ் தனது கருத்தினை எடுத்துக் கூறுவதற்கு அவரது காலத்தில் வாழ்ந்த குடித்தொகை சம்பந்தமான சிந்தனையாளர்களினால் வெளியிடப்பட்ட நூல்களும், கட்டுரைகளும் இன்னோர் காரணி ஆகும். வில்லியம் ஹொட்வின் என்பவர் "Enquiry Concerning Political Justice" என்ற தனது நூலிற் குடித்தொகை வளர்ச்சியானது சமூகத்திற்கு ஆரோக்கியமானது. தீங்கு எதுவும் ஏற்படுவதற்கு நியாயமில்லை எனத் தெரிவித்து இருந்தார். மக்களது வறுமையை போக்குவது அரசாங்கத்தின் கடமையாகும் எனவுந் தெரிவித்துள்ளார். இக்கருத்தினை பிரான்ஸில் வாழ்ந்த அறிஞர்கள் வரவேற்று ஆதரவாகக் கட்டுரைகளை எழுதினார்கள். பபொன் (Buffon) மற்றும் மொன்ரஸ்குயூ ஆகியோரும் இத்தகைய கருத்துக்களை முழுமையாக ஆதரித்திருந்தனர்.

மால்தூஸ் எல்லோரது கருத்துக்களை உள்வாங்கியதுடன் குடித்தொகைப் பெருக்கத்தினால் விளையப்போகும் பிரச்சினைகளை மிக அவதானமாக வெளிக்கொணர்ந்தார். அதாவது குடித்தொகை வளர்ச்சியை விரும்பும் அரசாங்கம் மற்றும் முதலீட்டாளர்களுக்குக் குறைந்த ஊதியத்தைப் பெறக்கூடிய தொழிலாளர் வர்க்கத்தினர் வேண்டப்படுகின்றனரே தவிர அதனால் விளைந்து வரும் பிரச்சினைகளை அறியாதது போலப் பாசாங்கு செய்கின்றனர் எனச் சாடினார். அதாவது குடித்தொகை வளர்ச்சியானது வறுமையையும் வேலையில்லாப் பிரச்சினையையும் நலிந்த சுகாதார சேவைகளையும் உருவாக்கி, இறுதியாக நோய்க்கு ஆளாகி விரைவில் இறந்து விடுவதை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை என்றார். எனவே தனது கருத்தினை ஒரு கோட்பாடாக உருவாக்கினார்.

### 2.4.2.கோட்பாட்டு உருவாக்கம்

மால்தூஸ் எழுதிய தனது முதலாவது ஆய்வுக் கட்டுரையில் அடிப்படையான இரு விடயங்களைக் கருத்தில் கொண்டிருந்தார்.

அ) மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமானது.

ஆ) அதேபோல மனித வாழ்வில் ஒன்றிணைந்ததான பாலுறவு அவசியமானது மட்டுமல்லாது தவிர்க்க முடியாததுமாகும் எனத் தெரிவித்தார்.

இவ்விரண்டு கருதுகோள்களையும் முன்வைத்துத் தனது கருத்துக் களுக்கு விளக்கமளித்துள்ளார். மேலும் இவரால் எழுதப்பட்ட கட்டுரையின் 6வது பதிப்பிற் பின்வருவனவற்றையுங் கருத்திற் கொண்டிருந்தார். முதலாவ தாக, வாழ்வாதாரத்தை அடிப்டையாகக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட குடித் தொகை அமைந்து காணப்படல் வேண்டும் எனவும் வாழ்வாதாரத்திற்கான நிரம்பல் அதிகரிக்கப்படுமாயின் குடித்தொகை அதிகரிக்கலாம் எனவும் அவ் வாறு செயற்படாதுவிடின் இறுக்கமானதும் வெளிப்படையானதுமான முன்காவற் தடையை ஏற்படுத்த வேண்டும் எனவும் இத்தடைகளை மிகக் கவனமாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

எனவே மால்தாஸ் தனது கருத்துக்களை வெளியிட முற்படும் போது பின்வரும் கருதுகோளைப் பொதுவாக முன்வைத்திருந்தார் எனக் கொள்ள இடமுண்டு.

அ) மனிதன் குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூடிய வளவாய்ப்புக் களைக் கொண்டிருக்கிறான்.

ஆ) விவசாய உற்பத்தியானது வளர்ச்சியடைவதற்குப் பதிலாக வீழ்ச்சி நிலையிற் சென்று கொண்டிருக்கின்றது.

இ) மனித வாழ்வுக்கு உணவு அவசியமானது

ஈ) பாலுறவு அவசியமானதுந் தவிர்க்க முடியாததுமாகும்.

எனபனவே அவையாகும். மேலும் அவர் தனது கருத்துக்களை வெளியி டும் போது ஒவ்வொரு இருபத்திதைந்து வருடங்களிலும் குடித்தொகை இரட்டிப்பு நிலையை அடைகின்றது எனத்தெரிவித்தார். இதனை விளக்கும் பொருட்டுக் குடித்தொகையானது தூய கணித அடிப்படையிலும் விவசாய உற்பத்தியானது எண்கணித அடிப்படையிலும் வளர்ச்சி அடைகின்றது என்றார்.அதாவது குடித்தொகை 1, 2, 4, 8, 16, 32, 64, 128, 256 என்ற நிலையி லும் விவசாய உற்பத்தியானது 1, 2, 3, 5, 6, 7, 8, 9 என்ற நிலையிலும் அதி கரித்துக் கொண்டு செல்கின்றன எனக் கூறிச் சென்றார். எனவே உலகில் வளர்ந்து வரும் குடித்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என எடுத்து ரைத்தார்.

வேண்டத்தகாத குடித்தொகையானது கட்டுப்படுத்தப்படல் வேண்டு மாயின் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய தடைகள் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும் என்றார். முன்காவற்தடை, இயற்கைத் தடை என்பனவே அத்தடைகளாகும். முன்காவற்தடை என்பது பிறப்புக்களைக் கட்டுபடுத்துவதற்கு முதலில் மேற்கொள்ளப்படும் தடைகளாகும். பாலுறவினைப் பொறுத்தவரை மனக்கட்டுப்பாடுடன் நடந்துகொள்ளல், கருத்தரிக்காத வகை யில் செயற்படுதல், கருச்சிதைவுக்கு ஊக்கப்படுத்துதல், இடப்பெயர்விற்கு ஊக்கம் கொடுத்தல், வறிய பிரதேசத்திலிருந்து மக்களை வளமுள்ள பிரதே சத்திற்கு இடம்பெயர வைத்தல், விவாகஞ் செய்யும் வயதினைப் பின்தள்ளுதல்

போன்றவற்றினூடாகக் குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதுடன் கிடைக்கப் பெறும் விவசாய உற்பத்தி மக்களுக்கு வழங்கப்படுமாயின் குடித்தொகைப் பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பு ஏற்படாது என வாதிட்டார்.

மனித வாழ்வில் இயற்கைத் தடை குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டது. இத்தடை இருவகைப்படும்.

1. இயற்கை அழிவுகளூடாக மனித வளம் இழக்கப்படுதல்
2. மனிதச் செயற்பாட்டின் விளைவாக மனித வளம் இழக்கப்படுதல் என்பன அவையாகும்.

காலநிலைபொய்த்தல், புவிநடுக்கம், எரிமலைகக்குதல், வெள்ளப் பெருக்கு, கடற்கொந்தளிப்பு போன்றவற்றை முதலாவது பிரிவுக்குள்ளும், திற மையற்றதும் போதாதுமான உணவு வழங்கல், குழந்தைகளுக்கு திருப்தியற்ற தாதிச்சேவை, நோய்கள், தொற்று நோய்கள் ஏற்படல், யுத்தங்கள், வறுமை போன்றன இரண்டாவது பிரிவுக்குள்ளும் அடக்கப்படுகின்றன. எனவே குடித் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கூறிய தடைகள் அவசிய மானவை என்றார்.

## 2.5. மால்தூசின் கொள்கையை ஏற்காதவர்களின் நிலைப்பாடு

முதலாளித்துவசிந்தனைப்பாங்கினைக் கொண்டமைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசுகளும் அவர்களின் கரங்களுக்கு உத்வேகம் அளித்த சிந்தனையாளர்களும் மால்தூசினது கோட்பாட்டுக்குப் பலத்த எதிர்ப்பினைக் காட்டியது மட்டுமல்லாது "சமகால முட்டாள்" என்ற பட்டத்தை யும் வழங்கினர். மால்தூஸ் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது தற்போதும் இக்கோட்பாடு பற்றிய கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இவரது கோட்பாட்டை கடுமையாக விமர்சித்த Oppenheim, Graham, Gray போன் றோரும் இதற்கு ஆதரவளித்த மார்சல், Tassing, Cassa, Ely, Pettan, Caruer போன்றோரும் முக்கியமானவர்கள். இவரது கருத்தினைக் கடுமையாக விமர் சித்தவர்களின் கருத்துக்கள் பின்வருமாறு

அ) மால்தூஸ் குடித்தொகை வளர்ச்சியானது தூய கணித அடிப்படையிலும் விவசாய உற்பத்தி எண்கணித அடிப்படையிலுங் காணப்படுகின்றன என் பதை இவர்கள் முற்றாக நிராகரிக்கின்றனர். இவர் வாழ்ந்த இங்கிலாந்தி லோ, அன்றில் ஐரோப்பாவிலோ இத்தகைய பண்புகளைக் காணமுடி யவில்லை என ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினர். கைத்தொழில் புரட்சி யின் விளைவாக அதிகரித்த தொழிலாளர் வர்க்கத்தினரிடையேகூட இவர் கூறிய கருத்துக்களைக் காணமுடிய வில்லை என்றனர். அவர்கள் முன்னர் இருந்ததிலும் பார்க்க வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது மட்டுமல்லாது குடும்ப அளவு குறைவடைந்து கொண்டு சென்றுள்ளதாகவும் கைத்தொழில்

புரட்சியுடன் கூடிய நகராக்க விருத்தி மேலும் குடித்தொகையைக் குறைக் கும் எனவும் வாதிட்டனர். இவர் கூறியது போல 25 வருடங்களில் இரட்டிப்பு நிலை ஏற்படும் என்பதையும் மறுத்துரைத்தனர். அண்மைக்காலம் வரை மேற்கு ஐரோப்பிய நாடுகளின் இரட்டிப்பு நிலைக்கு மிக நீண்ட காலம் எடுக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆ) மால்தூசின் கருத்துப்படி மக்கள் குடும்ப அளவை அதிகரிப்பதிலும் அதி கரித்த குழந்தைகளைப் பெற்றெடுப்பதிலும் ஆர்வம் கொண்டவர்களாக வும் இருந்து வருகின்றனர் எனப்பட்டது. ஆனால் இக்கருத்து உண்மைக் குப் புறம்பானது. அவர் வாழ்ந்த காலத்திற் பிறப்பு வீதம் அதிகரித்துக் காணப்பட்டது போல இறப்பு வீதமும் அதிகரித்திருந்தது. அண்மைக் காலத்திற் பிறப்பு வீதம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இறப்பு வீதமுங் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பிய மக்கள் குறிப்பாகப் பொருளாதாரக் கல்வி அறிவு பெற்றுள்ளதுடன் தொழில் வாய்ப்பினையும் பெற்றிருக்கின்றனர். எனவே அளவான குடும்பத்தையே அவர்கள் அன்றும் நாடினர். இன்றும் நாடுகின்றனர் எனத் தெரிவித்து மால்தூசின் இக்கருத்தினை நிராகரிக்கின்றனர்.

இ) வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூகத்திற்கு உரியவர் என வர்ணிக் கப்படும் மால்தூஸ் அவர்களின் உணவு நிரம்பல் பற்றிய கருத்துக்களுக் கும் எதிர்க்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர் உணவு நிரம்பல் எண்கணித அடிப்படையிற் சென்று கொண்டிருக்கின்றது என்றார். குடித் தொகை அதிகரிக்க அதிகரிக்க நிலந் தூண்டாடப்பட்டு விவசாய உற் பத்தி வீழ்ச்சி அடையும் என்றார். இதற்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்தவர்கள் கைத்தொழில் புரட்சியின் விளைவாக நிகழ்ந்த புதிய விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி, நீர்ப்பாசன விருத்தி போன்றவற்றாற் குறித்த நிலப்பரப்பில் முன்னரிலும் பார்க்க பலமடங்கு உற்பத்தி அதிகரிப் புக் காணப்படுகின்றது. அதாவது பசுமைப்புரட்சி வெடித்துள்ள காலப் பகுதியே இக்காலம் என்றனர்.

ஈ) மால்தூஸ் அவர்கள் குடித்தொகை அதிகரித்துச் செல்வதற்கு சமூகத்தில் வறியவர்கள் அதிகரித்துக் கொண்டு செல்வது தான் காரணம் என்றார். இவர் தெரிவித்தளவிற்கு வறுமை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் காணப் படவில்லை என இக்கருத்துக்கு எதிரானவர்கள் தெரிவிக்கின்றனர். அத்து டன் வறுமைக்கும் கருவளவாக்கத்திற்கும் இடையில் தொடர்புபேற் படுத்துவது பொருத்தமற்றது என்றனர்.

உ) விவாகஞ் செய்வது அதிகரித்த பிறப்புக்களை ஏற்படுத்துவதற்குத்தான் என மால்தூஸ் கூறியவற்றை இக்கோட்பாடு எதிர்ப்பாளர்கள், பாலுறவில் ஈடுபடல், குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்குத்தான் எனக் கொள்ள முடியாது எனக் கூறி நிராகரிக்கின்றனர்.

ஊ) குடித்தொகை வளர்ச்சிக்கும் உணவு அதிகரிப்புக்குமிடையில் நேரடியான தொடர்பு இருப்பதாக மால்தூஸ் தெரிவிப்பது மிகவும் விரும்பத்தகாதது எனப் பேராசிரியர் கானன் என்பவர் தெரிவித்துள்ளார். உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தில் வாழும் மொத்த மக்களில் ஆறிலொரு பங்கினரே விவசாயத்தில் ஈடுபட்டுள்ள போதிலும் நாட்டு மக்களது தன்னிறைவு உணவில் காணக்கூடியளவிற்கு பொருளாதார வலு கொண்டவர்களாக இருக்கின்றனர். இந்நிலையையே ஏனைய விருத்தியுற்ற நாடுகளிலுங் காணமுடிகின்றது. அதாவது இந்நாடுகளில் உற்பத்தி செய்யப்படுங் கைத் தொழில் உற்பத்திப் பொருட்களை ஏனைய நாடுகளுக்கு விற்பதன் மூல மும் அந்நாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதன் வாயிலாகவும் உணவுப்பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே மால்தூசின் மேற்குறித்த கருத்து உண்மைக்குப் புறம்பானது.

எ) மால்தூஸ் அவர்களின் மற்றொரு கருத்தில், குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்கைக்குப் புறம்பான வழிமுறைகளைக் கையாள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. உதாரணமாக குடித்தொகை வளர்ச்சி யைக் கட்டுப்படுத்தப் பாலுறவினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும் என்பதும் ஒன்றாகும். இவ்வாறு கட்டுபடுத்துவதால் உளவியல் ரீதியான பாதிப்பு அவர்களிடையே ஏற்படும் என்பதை அவர் அறியாதி ருப்பது வருந்தத்தக்கது என இவரது கருத்தை எதிர்ப்போர் தெரிவித் துள்ளனர்.

ஏ) மால்தூஸ் தன் கோட்பாட்டின் அடிப்படையான பல விடயங்களை அறியாத வராக எழுதியிருப்பது விசனத்துக்குரியது எனப் பலர் கருத்துத் தெரிவித் துள்ளனர். அதாவது உலகில் வாழும் மக்கள் உணவாக உட்கொள்ள கூடியது சைவ உணவு என்பதைப் பற்றியே விளக்கியுள்ளார். அதாவது பயிர்செய்கையின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுவதைப் பற்றியே கவலை கொண்டிருந்தார். ஆனால் உலகின் 71 சதவீதமான கடற்பரப்பில் உள்ள அசைவ உணவுகள் மற்றும் இறைச்சிவகைகள் போன்றவற்றைப் பற்றி அவர் எந்த விடத்திலும் கூறிச் செல்லவில்லை. அத்துடன் உணவு உற்பத் திக்கும் குடித்தொகை வளர்ச்சிக்கும் இடையிற் தொடர்பு காணப்படுகிறது என மால்தூஸ் கூறியுள்ளார்.அவர் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் குடித்தொகை வளர்ச்சிக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு என்பதை மறந்துவிட்டார் என்பது இவரது கோட்பாட்டை நிராகரிப்போர் கருத்தாக உள்ளது.

ஐ) எந்த ஒரு நாட்டிலுங் குடித்தொகை வளர்ச்சி ஏற்படுமாயின் அந்த நாடு பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் என மால்தூஸ் கருதினார். ஆனால் இது உண்மையல்ல. அதாவது பல நாடுகள் குறிப்பாக விருத்திபெற்ற நாடுகள் தமது பொருளாதார விருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கான வலுப்பற்றாக்குறையினால் வேறு நாடுகளிலிருந்து

தொழிலாளர்களைப் பெற்று வருகின்றனர். அதனாற் தமது நாட்டு மக்களி டையே குடித்தொகை வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கிவருகின்றனர். இவற்றை மால்தூஸ் உணராதிருந்தமை வருத்தத்திற்குரியது என்பர் எதிர்க் கோட் பாட்டாளர்.

ஒ) குடித்தொகை வளர்ச்சியினால் உலகில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளமான நிலங்கள், குடியிருப்பு நிலங்களாக மாற்றம் பெற்று விடுவதுடன் தொடர்ச்சியாக அவை உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமையால் வளமிழந்து, உற்பத்தி குறைய வாய்ப்பேற்படுகின்றது என மால்தூஸ் வாதிட்டார். ஆனால் நவீன விவசாய உற்பத்தி முறைகள், உரப்பாவனை, கிருமிநாசினிப் பயன்பாடு. தொழிநுட்ப விருத்தி, நவீன இயந்திரங்கள் புகுத்தப்பட்டுள்ளமை, விவசாயிகளிடையே நுட்பஅறிவு விருத்தி பெற்றுள ளமை போன்றவற்றைப் பற்றி அவர் எதுவித கருத்தும் கூறவில்லை. குறிப்பாக இந்தியாவில் ஒரு விவசாயி சராசரி நான்கு பேருக்கு உணவினை உற்பத்தி செய்ய ஐக்கியஅமெரிக்க விவசாயியோ நாற்பதுபேருக்கு உற்பத்தி செய்கின்றான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

ஓ) மால்தூஸ் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்கைக் குப் புறம்பான கோட்பாடுகளை முன்வைத்துள்ளார். ஆனால் நகராக்க வளர்ச்சியானது தாக்கமான முறை என்பதை உணரத் தவறிவிட்டார்.

ஔ) மால்தூசின் கோட்பாடுகள் சரியென ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் மனவிரக்தி அடைந்த சமூகத்தைத் தான் உலகிற் காண வாய்ப்பு உருவாகும் என எதிர்க்கோட்பாட்டாளர்கள் தெளிவுபட எடுத்துக் கூறியுள் ளனர்.

## 2.6. மால்தூசின் கோட்பாடு மீள வெளிப்படல்

மால்தூஸின் குடித்தொகைக் கோட்பாடானது சாதகமாகவும் பாதகமா கவும் விமர்சிக்கப்பட்ட போதிலும் இவரது கோட்பாடு எந்தவிதமான அடிப் படையிலுங் கட்டி எழுப்பப்படவில்லை என்பதே பலரின் வாதமாக இருந் துள்ளது. ஆனால் வளர்ந்த மேற்குலக நாடுகளை மையமாகக் கொண்டே பெரும்பாலான சிந்தனையாளர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். அந்நாடுகளினால் அரசியல், பொருளாதார, சமூகரீதியிற் சுரண்டப்பட்ட மூன்றாம் உலக நாடுகளின் குடித்தொகை நிலை பற்றி அப்போது எவரும் சிந்தித்தவர் களாக இருக்கவில்லை அல்லது சிந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டனர் எனத் தோன்றுகின்றது.

மூன்றாம் உலக நாடுகள் இன்று பொருளாதார ரீதியில் அவஸ்தைப் பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதாவது வளர்ந்துவரும் குடித் தொகைக்கு ஏற்பப் பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாற் பொரு

ளாதார, சமூக, பண்பாட்டு ரீதியாகப் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்றால் மிகையாகாது. இந்நிலையில் மால்தூஸ் அன்று கூறிய அடிப்படைக் கருத்துக்கள் இன்று மீள வெளியிடப்பட்டுள்ளன என்றே கூறல் வேண்டும்.

முதலில் மால்தூஸ் ஆணும் பெண்ணும் பாலுறவில் ஈடுபடுவது, குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்குத்தான் என்ற தவறான கருத்தினை முன்வைத்திருந்தார் என்பது இவரது எதிர்க்கோட்பாட்டாளர்கள் கருத்து. அண்மைக்காலங்களில் மூன்றாம் உலக நாடுகளில் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கான காரணிகளில் சமூக, பண்பாட்டுக் காரணிகள் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. குறிப்பாக மதங்கள் குடித்தொகை வளர்ச்சியை ஊக்கப்படுத்துவனவாகவுள்ளன. இந்துமதம் சமயச் சடங்குகளை மேற் கொள்ள குழந்தைகளின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றது. இஸ்லாம் மதமும் கத்தோலிக்க மதமும் கருத்தடையை எதிர்ப்புடன் அதிகளவிலான குழந்தைகள் எதிர்கால பொருட்தேட்டத்திற்கு உதவுவர் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தன. மால்தூசின் கோட்பாட்டுக்குப் புத்துயிர் ஊட்டுவோர் நவீன சமூகத்தில் மக்கள் பாலுறவு வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகின்றனரே ஒழியக் குழந்தைப் பேற்றினைப் பெருமளவுக்கு விரும்பியேற்கின்றனர் எனக் கூறமுடியாது என்கின்றனர். எனினும் இத்தகைய செயற்பாட்டினாற் குடித் தொகை வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதை மறுக்க முடியாது. அத்துடன் மால்தூஸ் உடலுறவு கொள்வதைக் கட்டுப்படுத்துவதிற் தன்னடக்கமும் மனவுறுதியும் காணப்படல் வேண்டும் எனக் கூறியிருந்தார். ஆனால் இதனை நிராகரித்தவர்கள் உடலுறவு கொள்ளல் இயற்கையுடன் தொடர்புடையது எனவும் அதனைச் செயற்கையாகத் தவிர்த்துக் கொண்டால் உளரீதியான பாதிப்பு ஏற்படும் எனவும் நவீன உலகிற் புதிய கருத்தடைச் சாதனங்களை பயன்படுத்திக் கொள்ளமுடியும் எனத் தெரிவித்துள்ளனர். இதை விடுத்து இயற்கைக்கு முரணாக நடந்து கொள்ள முற்படுமிடத்து சமூக மற்றும் சட்டரீதியான பிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு.

மால்தூஸ் உணவு உற்பத்தி சம்பந்தமாக வெளியிட்ட கோட்பாட்டினை முற்றாக நிராகரித்தவர்கள் நவீன விஞ்ஞானயுகத்தில் விவசாய உற்பத்தியி னைப் பெருமளவிற்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்பதை ஆதாரங்களுடன் நிருபித்தனர். எனினும் மூன்றாம் உலக நாடுகளின் ஏழைமக்களும் அவர்கள் தம் பின் தங்கிய விவசாய முறைகளுமே விவசாய உற்பத்தியைப் பாதிப்படையச் செய்கின்றன. இதனால் இங்கு குடித்தொகை வளர்ச்சிவீதத்திலும் பார்க்க விவசாய உற்பத்தி வளர்ச்சி வீதம் குறைவாகக் காணப்படுகிறது எனலாம்.

அண்மைக்காலச் சில சிந்தனையாளர்கள் மால்தூசின் கோட்பாட்டினை ஆதரித்து அவரது கருத்திற்குப் புதுவடிவம் கொடுத்து புதிய மால்தூசியக் கோட்பாட்டினை உருவாக்கிய போதிலும், அக்கருத்துக்களிலும் கசப்பு நிலை காணப்படுகின்றது. புதிய கோட்பாட்டாளர்கள் குழந்தைப் பேற்றினைத் தவிர்த் துக் கொள்வதற்குக் கருத்தடைச் சாதனங்கள் மற்றும் ஏனைய வழிமுறை களைப் பயன்படுத்தவேண்டும் எனத்தெரிவித்துள்ளனர். ஆனால் இத்தகைய

பயன்பாட்டினாற் பெண்கள் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் பாதிப்படைந்து வருகின்றனர் எனப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறிருப்பினும் மால்தூசின் குடித்தொகைக் கோட்பாடு வெளிவரா விட்டால் குடித்தொகை சம்பந்தமான ஆய்வுகள் மந்தகதியிலேயே சென்றிருக்கும் எனலாம். தற்போதைய நிலையில் மூன்றாம் உலக நாடுகளில் அவரது கோட்பாட்டின் பெரும்பாலான அம்சங்கள் மீள வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அத்துடன் குடித்தொகை வளர்ச்சிக்கான அடிப்படைத் தத்துவத்தைப் பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். உலகில் எந்த நாடுகளும் பொருளாதார விருத்தியிலும் பார்க்க அதிகரித்த குடித்தொகையை வேண்டி நிற்கவில்லை என்பதை அவ்வவ் நாடுகளின் குடித்தொகைக் கொள்கைகள் தெளிவுபட உணர்த்தியுள்ளன.

## 2.7. மிகைக்குடித்தொகை பற்றிய கார்ல் மாக்ஸின் கருத்து நிலை

பொதுவுடமைச்சித்தாந்தத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஜேர்மனியத் தத்துவஞானியான கார்ல் மாக்ஸ் குடித்தொகை பற்றி தனியான கொள்கைகள் எதனையும் வெளியிட்டிருக்கவில்லை. எனினும் அவர் பொதுவுடமைச் சிந்தாந்தத்திற்குட்பட்டுக் குடித்தொகை பற்றிக் கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் போது அவை ஒரு கோட்பாடாக உருவாகக் கூடியதாகவிருக்கின்றது. மனித வாழ்விற் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான பாரிய தீர்வினைப் பொதுவுடமைச் சிந்தாந்தத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது தீர்வு காணப்படலாம் என அவர் கருதியதுடன் மால்தூசின் கோட்பாட்டினைத் தான் ஆதரிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார். மால்தூஸ் மீதான கார்ல் மாக்ஸின் விமர்சனத்திற்கான முக்கிய காரணம் மால்தூஸ் இவ்விடயத்தில் முழுமையாக ஆய்வு செய்திருக்கவில்லை என்பதேயாகும்.

மேலும் எந்த ஒரு நாட்டினதுங் குடித்தொகை தொடர்பாக உணரப்படும் உணவுப் பற்றாக்குறையானது முதலாளித்துவத்தினாற் செயற்கையாக உருவாக்கப்படும் ஒரு தொடர்விளைவே எனத் திட்டவட்டமாக நம்பினார். அதாவது குடித்தொகைப் பிரச்சினையானது அதிகரித்த கருவளவாக்கத்தினால் அல்ல எனவும் முதலாளித்துவச் சமூகத்தின் உற்பத்தி முறையிலும் பங்கீட்டு முறையிலுமே தங்கியுள்ளது என்கின்றார். மிகை மதிப்பீடு எதிர்பார்க்கையினை ஊழியச் சுரண்டலினை அடிப்படையாக் கொண்டமைந்திருக்கிறது என வாதிட்டார். இவர் மேலும் கருத்து தெரிவிக்கையிற் தொழிற்ச் சங்கங்களின் பலவீனங் காரணமாகத் தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைப்பபதன் வாயிலாகவோ அன்றில் மேலதிக வேலையைப் பெற்றுக் கொள்வதனூடாகவோ தொழிலாளர் நிலை தொடர்ச்சியாகத் சீர்குலைந்து வருகின்றது. முதலாளித்துவ முறையிற் தொழிலாளர் வர்க்கத்தினூடாக மூலதனத் திரட்சியைப் பெற்றுக் கொள்வதன் விளைவாக தொழிலாளர், செல்வந்தர் என இருபிரிவுகள் உருவாகிவிடுகின்றனர் எனத் தெரிவித்த மார்க்ஸ் தொழிலாளர் வர்க்கமானது மிகையான குடித்தொகையாக உருவெடுக்கின்றது என்பதை எடுத்துக் கூறினார். அத்துடன் தொழிலாளர் வர்க்கத்தினரிடம் அதிக வரியினையும் பெற்றுக் கொள்கின்றனர்,

மேற்குறித்தவற்றினால் வறுமையும் வேலையின்மையும் முதலாளித்துவத்தின் கொடையாக அமைந்துவிடுவதுடன் குடித்தொகை வளர்ச்சியின் ஊடகமாகவு முள்ளன என்றார். பாரம்பரிய ஜமீந்தார் முறைகள், தாழ்மட்டத் தலைக்குரிய நிலம், நிலவுடமையின் நிச்சயமற்ற தன்மை போன்றன உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைவதற்குக் காரணங்களாகவுள்ளன எனத் தெரிவித்தார்.

## 2.7.1.நவீன பொதுவுடமைச் சிந்தனையாளர்கள்

கார்ல் மாக்ஸ்சை ஆதரிக்கும் குடித்தொகை கல்வியியலாளர்களான மலிசர் (Malisher), றெய்போஜ்சின் (Raibouchkin), சசாரின் (Shasharin) போன்றோர்கள் வேலைவாய்ப்பின்மையும், வறுமையும் முதலாளித்துவத்தினால் வளர்ச்சியடையும் எனவும் பொதுவுடமை பாதையினால் மட்டுமே உடைத் தெறியப்படும் எனவும் நம்பினர். பொதுவுடமை நாடுகளில் எல்லோரும் நியாய மான ஊதியத்திற்குத் தொழிலாற்றுபவர்களாக இருப்பதனால் அந்நாடுகளில் குடித்தொகைப் பண்புகள் ஒரு பிரச்சினையாக இருக்கமாட்டாது. இயற்கை வளம் சரிவர பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படுமானால் உணவுப் பிரச்சினை என்ற ஒன்று எழாது எனத் திடமாக நம்பினர். ரஷ்யக் குடியரசு மற்றும் பொது வுடமை நாடுகளில் குடும்பத்திட்ட நிகழ்ச்சிகள் சுய விருப்பின் பேரிற் தாமா கவே செயற்படுத்தப்படுகின்றன. அதன் மூலஞ் சிறிய குடும்ப அமைப்பினை மக்கள் உருவாக்க உதவுகின்றன. இங்கு அரசின் எந்தவிதக் கட்டாயப் படுத்தலுங் கிடையாது. கருச்சிதைவு சட்டரீதியாக்கப்பட்டுள்ளது. தோமசன் மற்றும் லூயிஸ் என்பவர்கள் குடித்தொகைப் பிரச்சினை என்ற நூலிற் பொதுவு டமைச் சித்தாந்தங்களைக் கடைப்பிடிக்கும் அரசுகளிற் குடித்தொகை வளாச்சி யாற் பொருளாதாரப்பிரச்சினை எழாது என வாதிட்டனர். ரஷ்யக் குடியரசில் பெரிய குடும்பங்களையுடைய தாய்மார்களுக்கு வெகுமதியளிக்கும் அதே வேளை சுலபமான கருச்சிதைவுக்கும் அனுமதியளிப்பதுடன் தடையற்ற வெளிப்படையான கருத்தடைச் சாதனங்கள் விற்பனைக்கும் அனுமதியளிக் கப்பட்டுள்ளது. பிறப்புக் கட்டுப்பாட்டிற்கு எந்தவித பொது முயற்சிகளும் மேற் கொள்ளப்படவில்லை. எனலாம்.

பொதுவுடமைச் சிந்தனையாளர்களின் கருத்துக்களுக்கு எதிரானவர்கள் பொதுவுடமைப் பொருளாதாரத்திற்கு கருவள குறைப்பிற்கான எவ்வித முயற்சி யுங் கிடையாதெனக் கூறுவது பொருத்தமற்றதும் போதுமான அடிப்படையற்றது மாகும் என்கின்றனர். அவர்கள் கூறுவது சரியானால் இந்நாடுகளிற் குடும்பத்திட் டமிடலின் தேவை என்ன என்பதும் கருத்தடைச் சாதனங்களின் உற்பத்தி ஏன் என்பதும் கேள்விக்குரியது என்கின்றனர். இந்த வகையிற் பார்க்கும் போது ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் ஏற்பட்டு வருகின்ற கருவள வீழ்ச்சியானது கருத்தடைச் சாதனங்களைப் பாவிப்பதற்கான பரவலான பிரசாரத்திற்கு உதாரணங்களாக உள்ளன. மேலும் இங்கு பொருளாதார சமமின்மை இல்லை யென்றால் அங்கு கருவள வேறுபாடு எவ்வாறு ஏற்படுகின்றது என்கின்றனர் எதிர்ப்பாளர்கள். எனவே மிகையான குடித்தொகை என்னும் எண்ணக்கரு ஒரு மாயையே என்றனர்.

## உ.8. உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாடு

மால்தூசின் கருத்துடன் ஒன்றுபட்டதாகவில்லாதுவிடினும் அவரால் எச்சரிக்கபட்ட குடித்தொகைப் பெருக்கம் பல்வேறு வழிகளில் பாதிப்பினை ஏற்படுத்தும் எனும் கருத்தோடு இணைந்ததாக வெளிவந்த முதற் கோட்பாடு உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாடு என்றால் மிகையாகாது. மால் தூசிற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருந்த சில பொருளியலாளர்கள், எல்லாநாடுகளிலும் குடித்தொகை அதிகரிப்பு, கெடுதியினை விளைவிப்பனவாக இருப்பதில்லை என்பதையும் எடுத்துக்காட்டினர். குறைந்தளவு குடித்தொகை யினைக் கொண்ட நாடுகளிற் குடித்தொகை அதிகரிப்பு அனுகூலமாகவிருக் கின்றது. அதாவது உற்பத்தியில் ஊழியப் பங்களிப்பினூடாக எந்தவொரு குடித்தொகை அதிகரிப்பும் இங்கு தலைக்குரிய வருமானத்தை உயர்த்துவ தாக அமைந்துள்ளது. உதாரணமாக இன்றைய நிலையில் ஜேர்மனி, டென் மார்க், லக்ஸம்பேர்க், சுவீடன், நோர்வே போன்ற நாடுகள் குடித்தொகை வளர்ச் சியை வேண்டி நிற்கின்றன. இதன் மறுபுறமாக, அதிகரித்த குடித்தொகை யைக் கொண்டுள்ள நாடுகளில் ஊழியத்தினது சராசரி உற்பத்தித் திறன் வீழ்ச்சி காரணமாகப் பிரச்சினைகள் எழுகின்றன.

உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாட்டினை முன்வைத்தவர்கள் யார் என்பதைக் கண்டறிதல் கடினமானது எனினும் 1815ஆம் ஆண்டின் எட்வெட் வெஸ்ட் (Edward West) என்பவர் எழுதிய Essay on the Application in Capital Land என்ற நூலிற்கு முன்னர், இக்கோட்பாடு தொடர்பான எண்ணக் கரு எதனையும் காண முடியவில்லை. இந்நூலினூடாக உற்பத்திப் பெருக் கத்தின் மீது குடித்தொகை வளர்ச்சி கொண்டிருந்த தாக்கம் குறித்துச் சில விளக்கங்களை முன் வைத்தார் எட்வேட் வெஸ்ட் அவர்கள். இவரைத் தொடர்ந்து பேராசிரியர்.சிட்விக் (Sidgewick) எனபவர் இக்கோட்பாட்டின் அடிப் படைக் கருத்தினை முதன் முதலில் பாவித்தார். இவர் ஒரு நிறுவனத்தி லுள்ளது போலவே ஒவ்வொரு பொருளாதாரத்திலும் உச்ச வெளியீட்டு நிலை யொன்று உண்டு எனக் கருதினார். இவர் "உத்தம அளவு" என்ற பதத்தி னைக் கையாளாத போதிலும் அத்தொனிப்படவே குறிப்பிட்டார் எனலாம். இவரைத்தொடர்ந்து எட்வின் கனன் (Edwin Cannan) என்பவர் இக்கோட் பாட்டினை விஞ்ஞானரீதியில் ஒழுங்குபடுத்தியவகையில் விரித்துரைத்தார். இது பேராசிரியர் டல்டன் (Dalton), றொபின்ஸ் (Robbins), கார் சவுண்டர்ஸ் (Car Saunders) போன்றோரால் பிரபல்யப்படுத்தப்பட்டது. டல்ரனின் கருத்துப்படி 'உத்தமம்' என்பது ஒவ்வொருவருக்கும் உச்ச வருமானத்தை அளிப்பது ஆகும். றொபின்ஸ் என்பவர் இது சாத்தியமான உச்ச வருமானத்தை உருவாக்குகின் றது எனவும் கருதுகின்றார். பேராசிரியர் போல்டிங் (Boulding) என்பவர் கருத்துத் தெரிவிக்கையில் வாழ்க்கைத் தரம் உச்ச நிலையில் இருக்கும் போது தான் உத்தம அளவுக் குடித்தொகைப் பண்பினைக் காணமுடியும் என்றார். இங்கு வாழ்க்கைத் தரம் என்பதனை' உயர்ந்த தரமிக்க வாழ்க்கை'

என்ற விரிந்த தளத்திலேயே பாவித்துள்ளனர். அதாவது இங்கு வாழ்க்கைத் தரம் என்பது உச்சலாபத்தினது பொருள் முதலானதும் பொருள் முதலற்றது மான மகிழ்ச்சிகளின் இணைப்பாகும். இது வாழ்வின் தர ரீதியான அம்சங்களை உள்ளடக்கியதாகவும் மக்களின் சிறந்த குணவியல்பு, சுகநலம் என்பவற்றை அழுத்துவதாகவும் உள்ளது. கார் சவுண்டர்ஸ் என்பவர் உத்தம அளவை விரிவுபடுத்துகையிற் பின்வருமாறு எடுத்துக் கூறினார் உத்தமக் குடித்தொகை என்பது ஆகக்கூடியளவிற்குப் பொருளாதார நலத்தினை உற்பத்தி செய்வ தாகும். ஆகக்கூடிய பொருளாதார நலன் என்பதும் ஆகக்கூடிய தலைக்குரிய உண்மை வருமானம் என்பதும் ஒன்றாயிருக்க வேண்டியதில்லை. ஆனால் நடைமுறை நோக்கங்களுக்காக அவற்றைச் சமமானதெனக் கருதலாம் என்றார்.

உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாட்டின் நோக்கம் ஒரு நாட்டின் தேசிய வருமானத்தாற் கணிக்கப்படும் பொருளாதார அபிவிருத்திக்கும் குடித் தொகை அளவிற்குமிடையிலான ஒன்றிலிலொன்று தங்கியிருக்கும் தொடர் பினை ஆராய்வதாகும். அதாவது பொருளாதார நோக்கில் ஒரு நாட்டிற்கேற்ற பொருத்தமான குடித்தொகை அளவினை மதிப்பிட உதவுகின்றது. உண்மை யில் உத்தம அளவுக்குடித்தொகை என்பது தலா தேசிய வருமானத்தின் உச்ச எல்லையில் இருக்கக்கூடிய குடித்தொகை அளவாகும். அதே வேளை ஒவ் வொரு உற்பத்தி நுட்பங்களும் அதன் முழுமையான இயற்றிறனுடன் பாவிக்கப் படுகின்றன என்ற அனுமானத்தின் அடிப்படையிலேயே உச்ச தலைக்குரிய வருமானத்தைக் குறிப்பது என்பது இதன் பிரதான நோக்கமாகும்.

மேலும் ஒரு நாட்டின் அதிகளவிலான குடித்தொகைக்கும் குறைந்தள விலான குடித்தொகைக்குமிடையிலான ஒரு நிலையே உத்தம அளவுக்குடித் தொகை என இக்கோட்பாட்டின் ஆரம்ப கர்த்தாக்கள் கருதினர். எனினும் இக்கருத்து தெளிவற்றுள்ளதுடன் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். பொருளிய லாளர்களும் கூட இக் கோட்பாட்டிலிருந்து மாறுபடுகின்றனர்.

### 2.8.1 உத்தம அளவினைக் கண்டறிதல்


ஒரு நாட்டின் குடித்தொகை சிறிதளவினதாயின் அங்கு தொழில் புரிவோர் தொகையுஞ் சிறிதளவாகவேயிருக்கும். இதனால் அந்நாட்டின் பெரு பான்மை உற்பத்தி வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் படாதிருக்கும். தாழ் நிலை சராசரி உற்பத்தித் திறனும், தாழ்நிலை தலைக்குரிய வருமானமும் இதனால் ஏற்படும் விளைவுகளாகும். எனவே இந்நாடுகளின் குடித்தொகை அதிகரிப்பு என்பது தொழிற்பகுப்பு, பாரிய உற்பத்தி என்பவற்றிலான சிறந்த வளப் பயன்பாட்டினையே குறிக்கின்றது. இதன் விளைவாகப் பாரிய அளவி லான உற்பத்தியும் உயர்ந்த தலைக்குரிய வருமானமும் ஏற்படுகின்றன. வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின் ஆரம்பத்தில் சராசரி உற்பத்தித்திறன், எல்லை உற்பத்தித்திறன் இரண்டுமே குடித்தொகை அதிகரிப்பால் உயர்ந்து வருகின் றன. அதாவது உற்பத்தியில் வெளியீட்டு அதிகரிப்பு விதி (Law of increasing Returns operates in the Production) தொழிற்படுகின்றது. அட்டவணை 2.1

உத்தம அளவுக் குடித்தொகை எவ்வாறு அமையும் என்பதை விளக்கி நிற்கின்றது. கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து குறிப்பிட்ட நாட்டினது குடித்தொகை 700,000 ஆக இருக்கும் போது உற்பத்தியில் நிலையான வெளியீட்டு விதி செயற்படுவது தெளிவாகின்றது. இக்குடித்தொகையின் சகல உற்பத்திக் காரணிகளுங் குடித்தொகையுடன் உத்தம இணைப்பைக் கொண்டுள்ளன என்பதையும் தலைக்குரிய வருமானம் அல்லது தலைக்குரிய உற்பத்தி உச்ச நிலையிலுள்ளதென்பதையும் இது குறிக்கின்றது. எனவே அவ்விடமே உத்தம அளவுக் குடித்தொகை என எடுத்துக் காட்டப்படுகின்றது. இவ்விடயத்தில் எல்லை மற்றும் சராசரி உற்பத்தித்திறன்களின் அதிகரிப்புப் போக்கும் காணப்படுகின்றது (விளக்கப்படம் 2.1.1 ஐப் பார்க்க).


குடித்தொகை உத்தம அளவு மட்டத்தை அடைந்த பின்னர் குடித்தொகை அதிகரிப்பு சராசரி மற்றும் எல்லை உற்பத்தித் திறன்களையும் தலைக்குரிய வருமானத்தையும் வீழ்ச்சியடையச் செய்கின்றது. அதாவது பொருளாதார ரீதியிற் தனது பூரணத்துவ நிலையை

<u>உத்தம அளவுக் குடித்தொகை வளையி</u>

**விளக்கப்படம் 2.1.1**




**விளக்கப்படம் 2.1.2**




அடைந்த பின்னர் ஏற்படும் குடித்தொகை அதிகரிப்பானது விரும்பத்தகாதது மட்டுமின்றி வெளியீட்டு வீழ்ச்சி விதியும் தொழிற்படத் தொடங்குகின்றது. இது தான் அதிகரித்த குடித்தொகையினால் ஏற்படும் விளைவுகளாகும். அதாவது உத்தம நிலைக்கு முன்னரான குடித்தொகை அதிகரிப்பானது வரவேற்கப்படுகின்றது. உத்தம நிலைக்குப் பின்னரான குடித்தொகை அதிகரிப்பு விரும்பத்தகாததாகவுள்ளது.

அட்டவணை 2.1

உத்தம அளவீட்டு தெரிவு

| குடித்தொகை (இலட்சம்) | தலைக்குரிய உற்பத்தி | மொத்த உற்பத்தி | எல்லை உற்பத்தி | வெளியீட்டு விதி | குடித்தொகை நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | வெளியீட்டு அதிகரிப்பு விதி | குறைவானது |
| 2 | 8 | 50 | - | | |
| 5 | 10 | 70 | 15 | | |
| 6 | 14 | 92 | 17 | | |
| **7** | **20** | **145** | **48** | நிலையான வெளீட்டு விதி | உத்தமமானது |
| 9 | 16 | 123 | 14 | வெளியீட்டு வீழ்ச்சி விதி | அதிகமானது |
| 10 | 15 | 135 | 12 | | |
| 11 | 14 | 140 | 10 | | |

## 2.9.மால்தூசின் கோட்பாடும் உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாடும்

உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாட்டின் உன்னதங் குறித்துக் காலத்துக்குக் காலம் பொருத்தமான வினாக்கள் எழுப்பப்படுகின்றன. இதற்குப் பின்வரும் நியாயங்களைக் கூறலாம். மால்தூசின் கோட்பாட்டினையும் உத்தம அளவுக் கோட்பாட்டினையும் ஒப்பீடு செய்யும் போது பின்வரும் பண்புகளைக் கண்டுகொள்ள முடிகின்றது. முதலாவதாக, மால்தூசின் கோட்பாடு குடித் தொகையுடன் மட்டுமே தொடர்புபடுத்தப்பட்டுள்ளதால் அக்கோட்பாடு குறுகிய வட்டத்துக்குள் காணப்படுகின்றது. உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாடு விரிந்த பரிமாணத்தில் குடித்தொகையை தேசிய உற்பத்தியுடன் தொடர்புறுத் துகின்றது. இரண்டாவதாக, மால்தூசின் கோட்பாடு வரையறுக்கப்பட்ட நிலம் மற்றும் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் வெளியீட்டு வீழ்ச்சி விதியையே கொண்டிருக்கின்றது. விவசாய உற்பத்தியும் கூட வெளி யீட்டு அதிகரிப்பு விதியிலும் இயங்கக்கூடும் என்பது பற்றி அவர் சிந்திக்க வேயில்லை. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட காலத்தின் உற்பத்தி உபாயத்தை அசைவற்றதாய்க் கொள்ளலாம். ஆனால் எப்போதுமே அவ்வாறிருப்பதில்லை. நிலநிரம்பலை அதிகரிக்க முடியாத போதிலும் தொழில்நுட்ப பாவனை மூலம் பயிர்ச்செய்கை உற்பத்தி அதிகரிக்கப்படலாம். மாறாக, உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாட்டிற்குடித்தொகை அளவு குறிப்பிட்டகாலத்தில் நிலை யானதாக கொள்ளப்படுகின்றது. இது .யதார்த்தத்தில் உண்மையாக இருப் பதில்லை. இப்பார்வையின் பிரகாரம் கால மாற்றத்துடன் நாகரிகம், இயற்கைச்

சூழல், சூழ்நிலை என்பனவும் மாறுதல் அடைவதாகவும் இம்மாற்றத்தால் உத்தம நிலையும் மாற்றமடைவதாகக் கூறப்படுகின்றது. (விளக்கப்படம் 2.1.2 ஐப் பார்க்க)

மால்தூசின் கருத்துப்படி குடித்தொகை அதிகரிப்பானது கெடுதி பயப் பனவாகவுள்ளதுடன் எண்ணிக்கையையும், அளவையும் சார்ந்த பிரச்சினையாக மட்டுமேயுள்ளது. மேலும் உணவு உற்பத்தியிலும் பார்க்கக் குடித்தொகை மாற்றம் வேகங் கொண்டதாயுள்ளது. மாறாக உத்தம அளவுக் கோட்பாட்டில் உத்தம நிலைக்கப்பாற்பட்ட குடித்தொகை அதிகரிப்பே கெடுதி பயப்பனவாகக் கருதப்படுகின்றது. அதற்கு முன்னைய நிலையிலான குடித்தொகை அதிகரிப்பு வரவேற்கப்படுகின்றது. மால்தூசின் கோட்பாடு சமூகத்தில் ஒரு நன்னம்பிக் கையீனச் சூழலை பரப்ப முயல்கின்றது. வேகமான குடித்தொகை அதிகரிப்பாற் துயரம், அனர்த்தம், இறப்பு வீதம் என்பன அதிகரிக்கும் எனக் கருதப்பட்டது. இதனால் உலகம் இருண்ட எதிர்காலத்தை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாதது எனத் தெரிவிக்கப்பட்டது. மாறாக உத்தமக் குடித்தொகைக் கோட் பாடு உத்தம அனுகூலத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஒரு நாட்டின் சகல பயன்தரும் வளங்களுஞ் சுரண்டப்படும் வரை குடித்தொகை அதிகரிப்பு அபாயகரமானதல்ல. இலகுவான மொழியில் கூறுவ தாயின் மால்தூஸ் வரப்போகின்ற நரகத்திற்குப் பயந்தார். உத்தம அளவுக் கோட்பாட்டின் ஆரம்பகர்த்தாக்களோ எதிர்பார்க்கப்படும் சொர்க்கத்தின் பெருமையை உணர்ந்தனர்.

வெள்ளப்பெருக்கு, சூறாவளி, தொற்றுநோய்கள், பஞ்சம் என்பன ஒரு நாட்டின் மிதமிஞ்சிய குடித்தொகையின் குறிகாட்டிகள் என மால்தூஸ் நம்பி னார். விரும்பப்படும் குடித்தொகைக்கு அப்பாலான-விரும்பப்படாத சுரண்டலுக்கு அப்பாலான - மேலதிக குடித்தொகையே பிரச்சினைக்குட்பட வாயப்புண்டு என உத்தம அளவுக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. மக்களிடையே பெரிய ஆபத்துக்கள் மித மிஞ்சிய குடித்தொகைப் பண்புகள் காணப்படாமலேகூட ஏற்படலாம்.

மால்தூஸ் குடித்தொகையிற் தரரீதியிலான அம்சங்களை முழுமை யாகவே அலட்சியப்படுத்தியுள்ளார். அவர் தொகைரீதியான விடயங்களில் மட்டுமே தனது கவனத்தைக் குவித்திருந்தார். உத்தம அளவுக்கோட்பாட்டா ளர்கள் குடித்தொகையில் இவ்விரு அம்சங்களையுமே கவனத்தில் கொண்டுள் ளதுடன் தகுந்த முக்கியத்துவத்தினையும் வழங்கியுள்ளனர். உச்சதலைக் குரிய வருமானத்திற்கு அப்பால் பொதுச்சுகாதாரம், மனோநிலை, மக்கள் யோக்கிதை போன்றவற்றிலுங் கவனம் செலுத்தவேண்டும் என இவர்கள் கருதினர். அத்துடன் குடித்தொகையின் இலட்சிய அல்லது குறிக்கோள் எண்ணக்கருவை அலட்சியப்படுத்துவதனால் மால்தூசின் கோட்பாடு விஞ்ஞான பூர்வமானதோ அன்றிற் தர்க்கரீதியானதோ அல்ல எனக் குற்றஞ்சாட்டப் படுகின்றது. உத்தம அளவுக்கோட்பாடானது இலட்சியக் குடித்தொகை அளவின்னை அளவிட முயல்கின்றது.

மால்தூஸ் ஒரு நாட்டின் குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான நேரிடைச்சரிப்படுத்தலை அழுத்த, மறுகோட்பாட்டாளர்களோ மேலதிகக் குடித் தொகை மட்டத்தை அல்லது நிலையை சரிப்படுத்தலையும் மிதமிஞ்சிய குடித்தொகை என்பது இயல்பாகவே இல்லாமல் போகக் கூடிய வகையிலான பொருளாதார வளப்பாவனையையும் அழுத்திக் கூறுகின்றனர். அத்துடன் மால்தூஸ் தீனிப் பொருளாதாரப் பிரச்சினைகளில் அக்கறையுடையவராக இருந்தார். ஆனால் உத்தம அளவுக் கோட்பாடானது. அறிவு பூர்வமான சூழ் நிலையிற் சாத்தியமான அளவிற்குக் குறித்த இலக்கை நோக்கி நகர்கின்றது.

மால்தூசின் கோட்பாட்டுக்கு எழுந்த பல்வேறு வாதப் பிரதிவாதங் களைப் போலல்லாதுவிடினும், பிரபல்யமானவர்களாலும் தத்துவஞானிகளாலும் கல்விமான்களாலும் பல வழிகளிலும் விமர்சிக்கப்படுகின்ற போதிலும் கூட உத்தமக் குடித்தொகைக் கோட்பாடு சார்பு ரீதியாக உன்னதமானது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

## 2.10. உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாடும் விமர்சனங்களும்

மொத்தக் குடித்தொகையின் அதிகரிப்புக்குப் பதிலாக மொத்தக் குடித் தொகையில் தொழில்புரிவோர் விகிதாசாரம் நிலையாக உள்ளது என்ற கருது கோள் யதார்த்தமற்றது. அதாவது குடித்தொகை மற்றும் உற்பத்தித் தொழில் நுட்பத்துடனான இயற்கைவளங்கள், மூலதனத் தொகை மாறாதிருக்கின்றன என்ற இதன் கருதுகோளானது ஆதாரமற்றதும் நடைமுறைச் சாத்திய மற்றது மாகும். கால வேகத்துடனுங் குடித்தொகை அதிகரிப்புடனும் எவ்வாறு சக்தி வாய்ந்த இயக்க பூர்வமான தடைகள் மாற்றமடையாது இருக்கும்?. மாற்ற மடையுஞ் சூழ்நிலைகளின் விளைவாகத் தற்போதைய உத்தம அளவுக் குடித் தொகை எதிர்காலத்தில் மிதமிஞ்சிய குடித்தொகையாகவோ அன்றிற் குறைந்த குடித்தொகையாகவோ மாற்றமுறலாம்.

மேலும் ஒரு நாட்டிற்கான உத்தம நிலையை நிர்ணயிப்பது என்பது சாத்தியமற்றது அல்ல என்ற போதிலுஞ் சிரமமானது. ஏனெனில் உயர்ந்த தலைக்குரிய வருமான நிலையிலுள்ள குடித்தொகையை நிர்ணயிப்பது நடை முறைச் சிக்கல் உடையது. இது கிடைக்கக்கூடியதாகவிருந்த போதிலும் கூட எல்லாச் சூழ்நிலைகளிலும் இது நிலையானதாயிருக்கும் என்பதற்கு உத்தர வாதமில்லை. அத்துடன் குடும்ப அளவு கூட மாற்றமடையக்கூடியது. எனவே இந்நிலையில் உத்தமம் என்பதற்கு ஓர் நிலையான அளவு கோலினை கண்டு கொள்வது சிரமம் என பேராசிரியர் நவற் (Nawat) என்பவர் கருத்துத் தெரிவிக் கின்றார்.

குடித்தொகையின் அளவினை நிர்ணயிப்பதிற் பெரும்பங்கு கொண் டுள்ள சமூக, அரசியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலை இக்கோட்பாடானது அலட்சியப்படுத்துவதுடன் மதக் காரணிகளுக்கு முக்கியத்துவம் செலுத்து வதால் இக்கோட்பாட்டின் வீச்சு குறுகியதாகிவிடுகின்றது என இக்கோட்பாட்டு எதிர்ப்பாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உத்தம அளவுக் குடித்தொகைக் கோட்பாட்டினை ஒரு கோட்பாடு அல்ல என விமர்சிப்பவர்கள் பெறுமதிமிக்க பொருளாதார எண்ணக்கருவான "உத்தமம்" என்ற பதத்தினைப் பாவிக்கின்றனரே ஒழிய, குடித்தொகை மாற்றத்திற்கான காரணங்கள் மீது கவனம் செலுத்தவில்லை. ஒரு நாட்டின் குடித்தொகை ஏன், எப்படி, எந்தளவில் அதிகரிக்கின்றது என்பதிலோ இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதிலோ கவனம் செலுத்தப்படவில்லை எனச் சாடுகின்றனர். அத்துடன் தலைக்குரிய வருமானம் உயர்வடையும் முறை, வருமானப் பகிர்வின் செய்முறை குறித்தும் இது விரிவாக ஆராயவில்லை. ஆனால் பேராசிரியர் பை (T.Bye) போன்ற அறிஞர்கள் "உத்தம அளவுக் குடித்தொகையானது தலைக்குரிய வருமான அளவுகோலினால் மட்டுமே மதிப்பிடுகிறது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இதனை இலக்கங்களின் அடிப்படையில் மட்டும் அளவிடக்கூடாது. இதனுடைய தரம் பற்றிய கவனமும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். உத்தமக் குடித்தொகையானது பொருளாதார வாழ்வுடன் சமூக வாழ்வையும் சிறப்பானதாக்குகின்றது. உத்தமக் குடித்தொகையை அளவிடும் போது அந்நாட்டின் குடித்தொகையில் வயதும் தொழில் சார் திரட்டும், தேசிய வருமானப் பகிர்வும், மனிதனைப் பாதிக்கும் நிறுவனங்கள், மக்களின் கல்வி நிலை என்பவற்றையும் மனதிற் கொள்ள வேண்டும்" என்றனர்.

உத்தம அளவுக் குடித்தொகை என்பது மனிதன் மகிழ்ச்சியுடன் வாழும் நிலை தான் எனப்படுகிறது. மனிதன் திருப்தியுறும்போதும் துன்ப துயரங்களிலிருந்து விடுபடும்போதுமே அவன் மகிழ்ச்சியாகி விடுகின்றான் எனவும் ஒரு தேசத்தின் உண்மையான செல்வம் அதன் நிலத்திலோ, நீரிலோ, இயற்கைத் தாவரப் போர்வை - கனிய வளங்களிலோ தங்கியிருக்கவில்லை. அத்துடன் அங்கு புழக்கத்திலிருக்கும் டொலர்களிலோ கூட அல்ல. அங்கு மக்களிடையே காணப்படும் அதன் ஆரோக்கியமான, சந்தோஷமான, ஆண் -பெண், குழந்தைகளின் சிரிப்பிலேயே தங்கியுள்ளது எனப் பேராசிரியர் வைப்பிள் (Prof.Wipple) கூறுவது சாலவும் பொருத்தமானதாகும்.

## 2.11. குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாடு

புராதன, மத்தியகால மற்றும் மால்தூஸின் கோட்பாடுகளுக்குப் பின்னர் நவீன மால்தூசியக் கோட்பாடுகள், உத்தமஅளவுக் குடித்தொகைக் கோட்பாடு, பொதுவுடமைக்கோட்பாடுகள், உயிரியற்கோட்பாடுகள், பொருளாதாரக் கோட்பாடுகள் போன்ற பல குடித்தொகைக் கோட்பாடுகள் காலத்துக்குக் காலம் வெளிவந்துள்ளன. இக்கோட்பாடுகள் அவ்வத்துறை ரீதியான அறிஞர்களாற் சார்பாகவும் எதிராகவும் விமர்சிக்கப்பட்டு வந்துள்ளன. இருப்பினும் அண்மைக் காலங்களில் பலராலும் போற்றப்பட்டு வரும் குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாடானது உலகின் குடித்தொகைப் பண்புகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பதன் விளைவாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இருந்த போதிலும் இக்கோட்பாட்டிற் பல சிந்தனையாளர்கள்

பொதுவாக ஒத்த பண்புகளைச் சுட்டிக் காட்டியுள்ள போதிலும், அவர்களால் தெரிவிக்கப்படும் கடந்து வரும் கட்டங்களைப் பொறுத்தவரை மாறுபட்டதான கருத்துக்கள் காணப்படுகின்றன.

குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாடானது ஏனைய குடித்தொகைக் கோட்பாடுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டமைந்த கோட்பாடாக உருவாக்கம் பெற்றுள்ளது. இக்கோட்பாடு மேற்குலக நாடுகளின் உண்மையான குடித்தொகை வரலாற்று அனுபவங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது. இதனடிப்படையிற் பெரும்பான்மையான கல்விமான்கள் வரலாற்று ரீதியாகக் குறைந்தளவிலோ அன்றிற் பெருமளவிலோ நன்கு வரையறுக்கப்பட்ட வேறுபட்ட கட்டங்களினூடாக குடித்தொகை வேறுபாட்டின் போக்கானது நகர்ந்து செல்கின்றது என்ற முடிவுக்கு வருகின்றனர். அதாவது உயர்ந்த பிறப்பு வீதம், உயர்ந்த இறப்பு வீதம் என்பவற்றினாலும் தாழ்ந்த பிறப்பு வீதம், தாழ்ந்த இறப்பு வீதம் என்பவற்றினாலும் குடித்தொகை வளர்ச்சியின் தாமதித்த பண்புகளை வெளிக்கொணரும் கோட்பாடாக இக்கோட்பாடு உருவாக்கம் பெற்றுள்ளது. விருத்தியடைந்த நாடுகளிற் பிறப்பு, இறப்பு வீதங்களின் வீழ்ச்சிச் செயன்முறை பற்றிய பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு விளக்கத்தை உருவாக்கும் ஒரு முயற்சியாக விபரிக்கப்பட்ட இக்கோட்பாடானது அண்மைக் காலங்களில் விரிவான அர்த்தத்தைப் பெற்றுள்ளதுடன் மூன்றாம் உலக நாடுகளில் இன்றும் கூட ஆரம்ப கட்டத்திலிருக்கின்ற குடித்தொகையின் மாற்றங்களுக்குப் பிரயோகிக்ககூடியதான கோட்பாடாகவும் காணப்படுகின்றது. உயர்மட்ட பிறப்பு வீதத்தாலும் வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் இறப்பு வீதத்தாலும் உயர்ந்த குடித்தொகை வளர்ச்சி வீதத்தைத் தற்போது கொண்டிருக்கும் நாடுகள் தமது எதிர்காலக் குடித்தொகையின் போக்கினைக் கண்டறிந்து செயற்படுத்துவதற்கு இக்கோட்பாடு பெரிதும் பயன்படக்கூடியதாக இருக்கின்றது.

இக்கோட்பாட்டின் உருவாக்ககர்த்தாவான லான்றி (Landry -1909) என்பவர் குடிப்புள்ளியியல் நிலை மாறுதல் பிரதானமாக மூன்று கட்டங்களூடாகச் சென்று கொண்டிருக்கிறது என்றார். அதாவது புராதனகாலம், இடைக்காலம், நவீனகாலம் என்ற மூன்று பொருளாதாரக் கட்டங்கள் இனங் காணப்படல் அவசியம் எனத் தெரிவித்திருந்தார். புராதன காலத்திற் கருவளமானது உடற்கூற்றியலில் உச்சத்தையடையும் பாலுறவுப் பண்புகளைக் கொண்டிருந்ததுடன் உணவு வழங்கலில் அக்காலத்திற் தடைகளிருந்தமையால் இறப்பு வீதத்திற் தமது செல்வாக்கினையும் கொண்டிருக்க, அதிகளவிலான பிறப்புக்களும், இறப்புக்களும் நிகழ்ந்துள்ளன என்றார். அதாவது அதிகரித்த பிறப்பினால் வளரவிருந்த குடித்தொகை அதிகரிப்பினைப் பலவீனமான பொருளாதாரக் காரணிகள் இறப்பினூடாகக் குறைத்திருந்தன. இடைக்கால கட்டத்திற்கு காலம் தாழ்த்திய விவாகங்கள் கருவளத்தைப் பாதித்திருந்தன. அத்துடன் பொருளாதாரக் காரணிகளின் விருத்தியும் உச்சமட்டத்திலிருந்து கீழ் நோக்கி செல்லக் காரணமாகவிருந்துள்ளது. நவீன காலத்தின் முந்திய காலப்பகுதிகளில் ஆற்றியது போலப் பொருளாதாரக் காரணிகள் பிரதான பங்கை ஆற்ற

வில்லை. இக்கட்டத்திற் பிறப்புவீதவீழ்ச்சி என்பது ஒரு பொதுவான பண்பாக இருந்துள்ளதுடன் தனது வாழ்நிலை சம்பந்தமான மனித அவாவானது குடும்ப வரையறை பற்றிய உணர்வு மாற்றத்தை ஏற்படுத்துவதன் காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம். இக்கட்டத்தில் ஆகக்குறைந்த மட்ட குடித்தொகை வேறு பாடு இருப்பதுடன் ஒரு சமநிலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம்.

ஐரோப்பியக் குடித்தொகை அனுபவங்களை ஒரு கோட்பாட்டு வடி வத்திற் பொதுமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட தோம்சன் மற்றும் நொட் டெஸ்ரெயின் (Warren Thompson (1929) Frank W. Notestein (1945) ஆகிய இருவரும் இக்கோட்பாட்டினை வேறு நாடுகளுக்கும் பிரயோகிக்கலாம் என்று வாதிட்டனர். இவர்கள் உலக நாடுகளை மூன்று பிரிவுகளாக வகுத்து விளக்குகின்றனர். குடித்தொகையியல் ரீதியாக விருத்தியற்ற கட்டத்திலிலுள்ள நாடுகளிலிருந்து ஆரம்பிக்கும் அவர்கள் .பின்வருமாறு மூன்று பிரிவுகளுக்குட் படுத்தினார்கள்.

1) பிறப்பு வீதம் அதிகரித்துள்ளதுடன் இறப்பு வீதம் குறைவடைந்து செல்வதால் வளர்ச்சிப் போக்கு அதிகரித்துக் காணப்படும் நாடுகள்.

2) பிறப்பு, இறப்பு வீதங்கள் மிக வேகமாக வீழ்ச்சியடையும் நாடுகள், ஆனால் இங்கு பிறப்பு வீதத்தை விட இறப்பு வீதம் மிக வேகமாக வீழ்ச்சியடைவதால் நிலையானதும் மெதுவானதுமான குடித்தொகை வளர்ச்சி நிலை காணப்படும்.

3) பிறப்பு, இறப்பு வீதங்கள் மிகவேகமாக வீழ்ச்சியடையும் நாடுகள்

மேற்குறித்த மூன்று நிலைகளைப் பின்வருமாறு அழைத்துக் கொள்ளலாம்.

1) நிலைமாறு காலத்துக்கு முந்திய நிலை (Pre-Transition Stage)
2) நிலைமாறு காலப்பகுதி (Transition Stage)
3) நிலைமாறு காலத்துக்குப்பிந்திய நிலை (Post Transition Stage)

முதலாவதில் இறப்புக்களும் பிறப்புக்களும் சிறிதளவு வேறுபட்ட போதிலும் கருவளவாக்கம் நிலையானதாக இருக்கின்றது. இரண்டவதிற் பிறப்பு வீதமும், இறப்பு வீதமும் குறைவடைந்து செல்கின்ற போதிலும் பிறப்பு வீதம் சார்பு ரீதியாக மெதுவாகவே குறைவடைந்து செல்கின்றது. மூன்றாவது நிலை யில் பிறப்பு, இறப்புவீதங்கள் மிகத்தாழ்மட்டத்திலேயே காணப்படுகின்றன. இந்த நிலையில் மக்களிடையே வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதைக் காணமுடிகின்றது. இவ்விடத்திலேயே வளங்கள் உத்தம அளவில் பயன் படுத்தப் படுகின்றன எனலாம்.

பேராசிரியர் ஓ.பி.வாக்கர் (O.B.Walker 1947) என்னும் அறிஞர் குடிப் புள்ளியியல் நிலைமாறற் கோட்பாட்டைத் தெளிவுபட எடுத்துக் கூறினார். குடித்

தொகை பரிணாம வளர்ச்சியை இவர் ஐந்து கட்டங்களாக இனங் காண்கிறார். (விளக்கப்படம் 2.2)

அ) உயர்மட்ட பிறப்பு, இறப்பு வீதங்களைக் குணவியல்புகளாகக் கொண்ட, உயர்மட்ட எண்ணிக்கையில் மாற்றமுறாத கட்டம் (High Stationary Stage). அதாவது இந்நிலையில் பிறப்புக்களும் இறப்புக் களும் அதிகமாகவிருக்கும். இதன் விளைவாக குடித்தொகை வளர்ச்சி குறைவடைகின்றது. 1920ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங் களில் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் இந்நிலையிற் காணப் பட்டிருந்தன. பொதுவாக விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளில் இந்நிலை காணப்படுவதை அவதானிக்கலாம். ஆபிரிக்கா வில் எதியோப்பியா, சோமாலியா, அங்கோலா, கொங்கோ போன்ற நாடுகளில் இத்தகைய நிலையினை தற்போது காண முடிகின்றது.

ஆ) உயர் பிறப்பு வீதத்ததையும், ஆனால் வீழ்ச்சியடைந்து வரும் உயர் இறப்பு வீதத்தையும் கொண்ட மிக முற்பட்ட விரிவாக்கக் கட்டம் (Early Expanding Stage). இக்கட்டத்திற் பிறப்பு வீதம் வீழ்ச்சி நிலைக் குச் செல்லாதிருப்பதுடன் இறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இதனால் பிறப்பு வீதத்திற்கும் இறப்பு வீத்திற்குமிடையில் வேறுபாடு அதிகரித்துச் செல்வதால் வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளது. தென்னாசிய நாடுகளின் குடித்தொகைப் பண்புகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இ) வீழ்ச்சியடையும் பிறப்பு வீதத்தையும், அதைவிட வேகமாக வீழ்ச்சி யடையும் இறப்பு வீதத்தையும் கொண்டது பிற்பட்ட விரிவாக்கக் கட்டமாகும் (Late Expanding Stage). விவசாய அபிவிருத்தி மற்றும் நகராக்க விருத்தி, கைத்தொழிலாக்க நிலை காணப்படும் நாடுகளில் இத்தகைய பண்புகளை காணமுடிகின்றது. யப்பான், சிலி, கனடா, ரஷ்யக் குடியரசு நாடுகள் இந்த வகையான பண்புகளுக்கு உட்பட்டி ருக்கும் நாடுகளாகும்.


ஈ) நான்காவதாக, குறைவான பிறப்பு வீத்ததையும், அதற்குச் சமமாகக் குறைவான இறப்பு வீதத்தையும் கொண்ட, குறைந்த எண்ணிக்கையில் மாற்றமுறாத கட்டமாகும்.(Low Stationary Stage) இங்கு குடித் தொகையின் வளர்ச்சியின் வீதத்தைக் காண முடியாதுள்ளது. அதா வது கருவளவாக்கமும் இறப்புக்களும் ஏறத்தாழ ஒரே மட்டத்தில் காணப்படுகின்றன. உயர்நத கைத்தொழில் வளர்ச்சியையும் உயர்ந்த தலைக்குரிய வருமானத்தையும் கொண்ட நாடுகளாக இவை காணப் படுகின்றன. குழந்தைகளுக்குத் தரமான உணவு நிரம்பல், உயர்ந்த கல்வி நிலை, வேலை வாயப்புக்களை தாராளமாகப்பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் போன்றன இக்கட்டத்தில் பண்பு

களாக விருக்கின்றன. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், நோர்வே, சுவீடன், போன்ற நாடுகளில் இத்தகைய பண்புகளைக் காண முடிகின்றது.

உ) இறுதியானது குறைமட்ட பிறப்பு, இறப்பு வீதங்களைக் கொண்டதும் பிறப்புக்களை விஞ்சிய இறப்புக்க்ளைக் கொண்டதுமான, வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் கட்டமாகும். (Declining Stage). இன்றைய நிலையில் ஜேர்மனி, லக்ஸம்போர்க், பெல்ஜியம் போன்ற நாடுகளில் இத்தகைய பண்புகள் காணப்படுகின்றன.

**விளக்கப்படம் 2.2**

## Stage of Demographic Transition




ஐக்கிய நாடுகள் சபையின் குடித்தொகைப் பிரிவினது நோக்குப்படி குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாட்டினை நோக்கும் போது சமூகத்தினை ஐந்து கட்டங்களாக வகைப்படுத்த முடிகின்றது.

அ) சமூகத்தில் உயர் பிறப்பும் உயர் இறப்புங் காணப்படுதல்

ஆ) சமூகத்தில் உயர் பிறப்பு வீதம் காணப்படுவதுடன் இறப்பு வீதம் படிப்படியாகக் குறைவடைந்து செல்லும் நிலை.

இ) சமூகத்தில் உயர் பிறப்பு வீதங் காணப்படுவதுடன் இறப்பு வீதந் தாழ்ந்த நிலையிற் காணப்படுதல்.

ஈ) சமூகத்தில் பிறப்பு வீதங் குறைவடைந்து கொண்டு செல்ல இறப்பு வீதந் தாழ்ந்து செல்லல்.

உ) இறப்பு வீதமும் பிறப்பு வீதமும் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டிருத்தல் எனபனவே அவையாகும்.

கால்சாஸ் (Karlsax) என்பவருடைய கருத்தின் பிரகாரம் குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாட்டின்படி முதலாவது கட்டத்திலுள்ளவை விருத்தி நிலையற்ற சமூகமாகவிருப்பதால் அங்கு உயர் பிறப்பு வீதமும், உயர் இறப்பு வீதமும் காணப்படும் என்றார். இரண்டாம் கட்டத்தில் உயர் இறப்பு வீதம் காணப்பட, பிறப்பு வீதத்தில் மாற்றம் நிகழவில்லை என்வும் இதன் விளைவாகக் குடித்தொகை அதிகரிப்பு ஏற்படுகின்றது எனவும் சமூகத்தில் மெதுவான பொருளாதார விருத்தி காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார். மூன்றாம் கட்டத்தில் இறப்பு வீதமானது ஆகக்குறைந்தளவிற்குச் சென்றிருக்க, பிறப்பு வீதம் குறைவடைந்து கொண்டு செல்லும் பண்பினைக் காணமுடிகின்றது. இதனை அடுத்து குடித்தொகையிற் சமநிலை காணப்படும். இவரது கணிப்பீட்டின் பிரகாரம் முதலாம், நான்காம் கட்டங்களில் குடித்தொகை வளர்ச்சி குறைவாகவும், இரண்டாம், மூன்றாம் கட்டங்களில் குடித்தொகை வெடிப்பு நிகழ்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தொகுத்து நோக்கும் போது குடித்தொகை வளர்ச்சி நிலை பற்றிப் பல அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். இதில் மிகவும் முக்கியமான பண்பு யாதெனில் ஒவ்வொரு நாடும் மேற்குறித்துரைத்த ஐந்து கட்டங்களில் ஏதோ ஒன்றிற்குட்பட்டுக் காணப்படுகின்றது என்பதாகும். முதலாவது கட்டமானது அதிகளவிலான பிறப்புக்களையும் இறப்புக்களையும் கொண்ட பின்தங்கிய நாடுகளுக்கு மிகவும் பொருந்துவனவாகவுள்ளது. இந்நாடுகள் பெரும்பாலும் பிழைப்பூதிய விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளாகக் காணப்படுகின்றன. இந்நாடுகளில் மக்கள் பெரும்பாலும் கிராமவாசிகளாக இருப்பர். அத்துடன் குழந்தைகள் குடும்பத்தின் செல்வமாக மதிக்கப்படுவதுடன் தலைக்குரிய வருமானம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் விவசாயத்தினூடாகவே பொருளாதாரத்தைப் பெற்றுக் கொள்வதுடன் கீழுழைப்பு மட்டுமல்லாது சிறுவர்கள் தொழில் தேடி அலையும் நிலையும் இங்கு காண முடிகின்றது.

இரண்டாம் கட்டத்திற் பொருளாதார வளர்ச்சியானது விவசாயம், மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படுகின்றது. கைத்தொழில் விருத்தியின் விளைவாக நகராக்கம் ஏற்படவே போக்குவரத்துக்களில் விருத்தி ஏற்படுகின்றது. இதன் விளைவாகச் சமூகத்தின் கல்வி நிலை. உணவு, சுகாதாரம் போன்றன விருத்தி பெற வாய்ப்பேற்படுகின்றது. சமூக வாழ்விற் பழமைவாதச் சிந்தனைகள் தானாகவே உருவாகின்றன. எனவே இக்கட்டத்திற் பெருமளவிற்கு குடித்தொகை வெடிப்பு ஏற்படுகின்றது.

மூன்றாவது கட்டத்தில் மக்களிடையே வாழ்க்கைத் தரம் அதிகரிக்கப் பௌதீகச் சுட்டெண்கள் வளர்ச்சி பெறுகின்றன. பெண்கள் உட்பட மக்கள் கல்வியறிவுடன் தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொள்கின்றனர். இதன் விளைவாகப் பெண்கள் குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகளை விரும்பியேற்கும் நிலை ஏற்படுகின்றது. பிள்ளைகளுக்குப் பெற்றோர் உயர்வான கல்வியினை வழங்குகின்றனர். அத்துடன் அதியுயர்வான நகராக்க வளர்ச்சியும்

கைத்தொழிலாக்கமும் ஏற்படவே பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது.

மேற்குறித்த கோட்பாட்டினை நோக்கும் போது உலகில் உள்ள நாடுகள் யாவும் ஏதோ ஒரு கட்டத்துக்குள் அடங்கியுள்ளன என்றே கூறல் வேண்டும். அதாவது ஆபிரிக்க நாடுகளிற் பெரும்பாலனவை முதலாம் கட்டத்திலும் ஆசியா நடுகளில் பெரும்பாலானவை இரண்டாம் கட்டத்திலும் ஐரோப்பிய நாடுகள் மூன்றாம் கட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளன.

## 2.12. உயிரியற் கோட்பாடு

நவீன காலத்தில் ஏற்கெனவே வெளிவந்த கோட்பாடுகளுக்கு மாற்றீடாக உயிரியற் கோட்பாடுகளைப் பல்வேறு அறிஞர்கள் முன்வைக்கின்றனர். அவர்களது கோட்பாடுகள் பின்வருமாறு.

1) மைக்கல் தோமஸ் சாட்லரின் கோட்பாடு (Micheal Thomas Sadler's Destiny and Fecundity Principle)
2) டபிள் டேயின் உணவுக் கோட்பாடு (Diet Theory of Thomas Doubleday)
3) றேமண்ட பேள் மற்றும் லோவல் றீட் என்போரின் லொயிஸ்டிக் வளையிக் கோட்பாடு ( Raymond Pearl and Lowall J. Reed's Logistic Curve Theory )
4) கொரடோ கியின் உயிரியல் படிமுறைக் கோட்பாடு ( Corardo Gini's Theory of Biological Stages)
5) ஹேபேட் ஸ்பென்சரின் கருவளவாக்கச் செயன்முறைக் கோட்பாடு (Herbert Spencer's Analysis of Fertility Function)
6) கஸ்ரோவின் புரத நுகர்வுக் கோட்பாடு (Jouse de Castro's Theory of Protein Consumption)

### 2.12.1.மைக்கல் தோமஸ் சாட்லர் கோட்பாடு

மைக்கல் தோமஸ் சாட்லர் (1780-1835) அவர்கள் மால்தூசின் சமகாலத்தவரும் பிரித்தானியப் பொருளியலாளருமாவார். குடித்தொகை விதிகள் (The Law of Population ) என்ற தனது நூலில் இவர் மால்தூஸை கடுமையாக விமர்சிப்பதுடன் இப்புதிய கோட்பாட்டையும் முன் வைக்கின்றார்.

இவரின் கருத்துப்படி மனித கருச்செழிப்பு அவர்களது எண்ணிக்கை சுருக்க - விரிவின் தலைகீழ் விகிதத்திலேயே உள்ளது. நாகரிக, விஞ்ஞான வளர்ச்சியின் விளைவால் மனித உழைப்பு, கடின உழைப்பிலிருந்து மாறி ஒரு மனப் பயிற்சியாக (Mental Exercise) மாறிவிடுகிறது. மனிதப் பெருக்கம் நகர வளர்ச்சியால் இடப்பற்றாக்குறையும் அதனோடு இணைந்து மனிதனது தனிமை (Privacy) இன்மையும் ஏற்பட்டு விடுகிறது. தனிமையின்மையும் உழைக்கும்

விருப்பமின்மையும் கருவளவீழ்ச்சிக்கு உதவிபுரிகின்றன. எனவே கருவளம் வீழும் போது குடித்தொகை அதிகரிக்கும் என்றும் மறுவளமாகக் கருவளம் அதிகரிக்கும் போது குடித்தொகை வீழ்ச்சியடையும் என்றும் இதனோடு காலத் துக்குக்காலம் குடித்தொகைதானாகவே தன்னைச் சரிப்படுத்திக் கொள்கின்றது எனவும் கூறினார்.

குடித்தொகை அதிகரிக்கும் போது மக்களது பொருளுற்பத்தியும் இயல்பாற்றலும் மூலதனமும் அதிகரிப்பதால் பஞ்சத்திற்கிடமில்லை எனவும், உயர்ந்த குடித்தொகைக்கு இயலுமான இன்பத்தை வழங்கும் நிலை உரு வாகும் போது குடித்தொகை அதிகரிப்புச் சுருங்கி நின்று விடும் எனக் கூறினார். இறப்பு வீதம் அதிகரிக்கும் போது தனிமனிதனில் அபரித இனவிருத்தியியல்பு தோன்றி பிறப்பு வீதம் அதிகரிக்கும் என்றும் இறப்பு வீதம் வீழ்ச்சியடைய இவ்வியல்பும் குன்றிவிடும் எனவும் விளக்குகிறார்.

கருவளத்திற்கும் கருச் செழிப்புக்கும் இடையேயான வேறுபாட்டை இனங்காண சாட்லர் தவறிவிட்டார் எனவும் உற்பத்தி இயலாற்றலுக்கும் தேவைப்படும் உணவுக்குமிடையேயான வேறுபாட்டைக் கவனிக்கவில்லை எனவும் இவர் மீது விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. இந்தியாவில் மூலதனம் கணிசமாக அதிகரித்த போதும் குடித்தொகை வீழ்ச்சியடையவில்லை என்பதும் இவருக்கு எதிராகக் காட்டப்படும் நடைமுறை உதாரணமாகும். எனினும் மால் தூசின் நன்னம்பிக்கையீனவாதத்தைப் போக்கிவிடும் இக்கோட்பாட்டின் பாரிய பங்களிப்பினால் இது அதன் சொந்தப் பெறுமானத்தில் மிகவும் முக்கியமான தாகும்.

## 2.12.2.டபிள் டேயின் உணவுக் கோட்பாடு

இங்கிலாந்தின் பொருளியலாளரும் சமூக தத்துவஞானியுமான டபிள்டே (1790-1870) என்பவர் சாட்லருக்கு இரண்டு தசாப்த்தங்களுக்கு பின்பு குடித் தொகை வளர்ச்சி பற்றிய தனது கருத்தினைத் தெரிவித்துள்ளார். இவர் தனது கோட்பாட்டினை முன்வைக்கும் போது உணவு வழங்கலில் கூடிய முக்கியத் துவம் செலுத்தினார். குறித்த மக்களிடையே உணவு வழங்கல் முன்னேற்ற மடையும் போது குடித்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடையும் என எடுத்துக் காட்டினார். செழுமையான பொருளாதார வளர்ச்சி கண்டுள்ள அரசுகளில் மக்களிடையே உணவு நிரம்பல் அதிகமாகக் காணப்படுவதால் அவர்களி டையே கருவளவாக்கம் குறைவாகக் காணப்படும் எனவும், சராசரி வருமான முடைய மக்களிடையே மட்டுப்படுத்தப்பட்ட கருவளவாக்கம் ஏற்பட்டு குடித் தொகை வளர்ச்சி குறைவாகவோ அல்லது அளவானதாகவோ காணப்படும் எனவும், வறுமையான அரசுகளில் சிரமமான வாழ்க்கை அமைப்பு முறை காணப்படுவதுடன் கருவளவாக்கம் அதிகரித்துக் காணப்படும் எனவும் எடுத்துக்கூறினார்.

டபிள்டே மாமிச உணவு உட்கொள்பவர்கள் குறைந்தளவு இனப்பெருக்க இயற்றிறன் கொண்டவர்கள் எனவும், மரக்கறிஉணவு உட்கொள்பவர்களி

டையே கருவளவாக்கம் மிக உயர்வாக இருக்கும் எனவும் கருத்துத் தெரிவித்தார். மேற்குறித்த இவரது கருத்துக்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருத்தப்பாடு உடையதாகவிருக்கும் எனக்கூறமுடியாது. உணவு வழங்கலுக்கும் கருவளவாக்கத்திற்கும் இடையில் தொடர்புண்டு என்பதைப் பலர் தெரிவிக்கின்ற போதிலும் வளர்ந்த செல்வந்த நாடுகளில் மக்கள் கூடிய உணவை நுகர்கின்றனர் என்பதையும் அவர்களுக்கு கருவளவாக்கம் குறைவானதாக இருக்கின்றது என்பதையும் ஒரு விதியாக ஏற்றுக்கொள்ள முடியாது என இவரது கருத்தினை விமர்சிப்பவர்கள் தெரிவிக்கின்றனர். செல்வந்த நாடுகளின் குடித்தொகை நிலையானதாக இருந்திருப்பதில்லை என்பதையும் அங்கு குடித்தொகை உயர்ந்து காணப்பட்ட காலப்பகுதிகள் பல காணப்பட்டுள்ளன எனவும் பலர் தெரிவித்துள்ளனர். மேலும் ஒவ்வொரு செல்வந்தனும் கொழுத்துப் பருத்திருப்பான் எனவும் அதனால் அவர்களது கருவளம் குறைந்துவிடுகிறது எனக் கூறும் இவரது கருத்து தப்பானதாகவேயுள்ளது. அதாவது எல்லா செல்வந்தனும் கொழுத்துப் பருத்தவனாக இருப்பதில்லை. ஸ்பென்சர் அவர்கள் பருத்த தோற்றத்தைக் கருவளத்துடன் இணைக்கும் டபிள்டேயின் கூற்று நிறையுணவைச் சார்ந்தல்ல என்கிறார். இன்றைய நிலையில் செல்வந்தர் தனது உடல் நலத்திற் கூடிய கவனமாக இருப்பதுடன் வைத்திய வசதிகள் பெற்றுச் சுகநலத்துடன் வாழ்கின்றனர். அதே வேளை வறிய நாடுகளில் மக்கள் போசாக்கற்ற உணவை உட் கொள்பவர்களாதலால் இறப்பு வீதம் அதிகரிக்க வேண்டும், ஆனால் நிலை அப்படியல்ல.

செல்வந்தர்கள் ஒரு சில குழந்தைகளையும் வறியவர்கள் அதிக குழந்தைகளையும் கொண்டிருப்பர் என்றார் டபிள்டே. ஆனால் இதற்கு மாறான நிலையை நாம் பல சந்தர்ப்பங்களில் காணமுடிகின்றது. அத்துடன் பொருளாதார வளர்ச்சி கண்ட நாடுளிடையே செல்வந்தர்களுக்கு வாரிசு மிகக் குறைவாகவோ இல்லாமலோ போகும் பட்சத்தில் அச்செல்வங்கள் வறியவர் களை நாடிச் செல்லும் எனத் தெரிவிக்கும் இவரது கூற்று சாத்தியப்படக்கூடிய தல்ல எனலாம்.

## 2.12.3.ரேமன்ட் பேள் மற்றும் ரீட் என்போரின் லொயிஸ்டிக் வளையிக் கோட்பாடு

பேள் மற்றும் ரீட் என்பவர்களது கோட்பாடு 1844ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட போதிலும் 1838ஆம் ஆண்டு வேகல்ஸ்ட் (Verhulst) என்பவரினாலேயே இது முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் அக்காலத்திற் பிரபல்யம் அடையவில்லை. ரேமன்ட்பேள் என்பவரது "குடித்தொகை உயிரியல்"(Biology of Population) என்ற நூலின் வாயிலாக இக்கோட்பாடு குடித்தொகையியலாளரைக் கவர்ந்திழுத்தது எனலாம். அவரின் கருத்தின் பிரகாரம் ஒரு வகையான ஈக்களின் (Fruit Flies) அதிகரிப்பு, குறைவுறுதல் என்பவற்றை மக்களுடன் ஒப்பீட்டு விளக்குவதாகும். இவ்வகை ஈக்கள் ஒரு காலத்தில் வேகமாக

அதிகரித்திருப்பதையும், காலப்போக்கில் இனப்பெருக்க விகிதாசாரம் படிப்படியாகக் குறைவடைந்து போவதையும் எடுத்துக்கூறினார். சிறிது காலத்தின் பின்னர் மீளவும் அதிகரிக்கத் தொடங்குகிறது. இத்தகைய பண்புகளை குடித்தொகை அதிகரிப்பு, வீழ்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்கின்றது என்றார்.

றேமண்ட் பேள் மற்றும் றீட் இருவரும் குடித்தொகை கேத்திர கணித ரீதியில் வளர்ச்சியடைகின்றது என்ற மால்தூசின் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் குடித்தொகை அதிகரிப்பானது ஒரு கணிதவியற் செயற்பாடே என்றும் குடித்தொகை வளர்ச்சிக்கான தளம் வரையறைக்குட் பட்டதே எனவும் கூறினர். உலகில் வரையறையற்ற நிலத்தொகுதியினைக் காணமுடியாது. ஆகையால் குடித்தொகையும் வரையறைக்குட்பட வேண்டியது நியதியாகும் என்றனர். இவ்விருவரின் கருத்துப்படி குடித்தொகை வளர்ச்சி ஒரு சுழற்சி முறையிலோ அல்லது கட்டம் கட்டமாகவோ ஏற்படுகின்றது. அதாவது ஒரு கட்டத்தில் வேகமான குடித்தொகை வளர்ச்சியைக் கொண்டிக்க, அடுத்த கட்டத்தில் வீழ்ச்சி நிலையிற் செல்ல, அதற்கடுத்த கட்டத்தில் உயர்ச்சியடைகின்றது என்றனர். வசதிபடைத்த குடும்பங்களுடன் ஒப்பிடும் போது வறிய குடும்பத்திற் பாலுறவு கொள்ளல் அடிக்கடி நிகழ்கின்றது எனவும் இதன் விளைவாக அதிகரித்த குழந்தைகளை பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது எனவும் கூறினார்.

ஏனைய குடித்தொகைக் கோட்பாடுகளிலுள்ள நிறைகுறைகள் விமர்சிக்கப்படுவது போல இக்கோட்பாடும் பல்வேறு வழிகளில் விமர்சிக்கப்படுகின்றது. கேத்திர கணித அதிகரிப்புப் பற்றிய மால்தூசின் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டிருந்ததாயினும் மறுபுறத்திற் குடித்தொகை அதிகரிப்பு ஒரு சுழற்சி முறையில் நடைபெறுவதாகக் கூறுகின்றனர். இதன்படி ஒரு நாட்டின் குடித்தொகை வளர்ச்சி ஒரு கட்டத்தை அடைந்த பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்குகின்றது. இது ஓரளவு உண்மையேயாயினும் முற்று முழுதாகத் திருப்திகரமானது எனக் கூறுவதற்கில்லை.

பேள் செல்வம் வளரும் போது கருவளம் வீழ்ச்சியடைவதாக கூறுகின்றார். ஆனால் நடைமுறையில் இது சரியான உண்மையென நிரூபிக்கப்படவில்லை. அத்துடன் ஒரு வகையான ஈக்களினைத் தொடர்புபடுத்தித் தமது முடிவுகளைத் தெரிவிக்கின்றார்கள். மனித வாழ்வுக்கும் ஈக்களுக்குமிடையில் பெருமளவுக்கு ஒற்றுமையில்லை என்பது தெளிவானது. இக்கோட்பாட்டின்படி எப்போது உத்தமக் கட்டத்தை குடித்தொகை அடைகின்றது என்பதைக் கண்டு கொள்ளல் சாத்தியமானதல்ல. அத்துடன் எப்போது குடித்தொகை வீழ்ச்சியடையும், எப்போது மீண்டும் உயர்வடையும் என்பதையுங் கூறமுடியாது. குடித்தொகை வளர்ச்சி நிலை காணப்படும்போது கருவளம் வீழ்ச்சியடையும் என்பது இக்கோட்பாட்டின் முக்கிய அம்சமாகும். ஆனால் பின்தங்கிய பொருளாதார, சமூக, பண்பாட்டாளர்களிடையே கருவளம் உயர்வான நிலையில் உள்ளது என்பதைப்பற்றி இவர்கள் விளக்கத் தவறியுள்ளனர். மேலும் இக்கோட்பாடு உயிரியற் பண்புகளை மாத்திரம் அழுத்திக் கூறுகின்றதேயொழிய சமூக,

பொருளாதார அரசியற் காரணிகளைப் பற்றி எந்த இடத்திலும் கூறாதது குறிப்பிடத்தக்கது. குடித்தொகை வளர்ச்சியிற் சுற்றுபுறச்சூழல் வகிக்கும் பங்களிப்பினையும் இவர்கள் அலட்சியம் செய்துள்ளனர் எனப் பின்வந்தோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### 2.12.4.கொரடோ கினியின் உயிரியற் படிமுறைக் கோட்பாடு

இத்தாலியில் வாழ்ந்த சமூகவியலாளரும் குடித்தொகைப் பிரச்சினை களைப் பற்றிப் பெரிதுஞ் சிந்தித்தவருமான கொரடோ கினி 1884 ஆம் ஆண்டு பிறந்தார். எல்லா நாடுகளும் ஆரம்ப காலங்களிற் குடித்தொகை வளர்ச்சியில் ஒரே விதமான சிக்கலற்ற தொகுப்பினையே கொண்டிருந்ததாக கருதுகின்றார். அக்காலத்திற் கருவளவாக்கம் மிகவும் உயர்வுற்றுக் காணப் பட்டது எனவும் அவ்வவ்நாடுகளில் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் சிக்க லடைந்திருந்தன எனவும் கருதினார். இதன் விளைவாக அச்சமூகங்களிற் புதிய வர்க்கங்கள் தோன்றுகின்றன. அத்துடன் பொருளாதார, சமூக நிலைமைகள் கடுமையானவையாக மாறுகின்ற போது குடித்தொகையின் கருவள வீதமானது வீழ்ச்சியடையத் தொடங்குகின்றது என்றார்.

ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் பரிமாணமானது அவர்களின் குடித் தொகை வளர்ச்சி வீத மாற்றங்களுடன் நெருங்கிய தொடர்புடையது எனவும் இவ்வளர்ச்சிக்கான வேறுபட்ட காரணிகள் சமூக வர்க்கங்களிலிருந்து வருவதா கவும் அவர் எண்ணினார். மேலும் குடித்தொகை வளர்ச்சியின் அடிப்படைக் காரணிகள் எப்போதும் உயிரியலுடன் சார்ந்ததாக உள்ளன. இவை பொருளா தார, சமூக காரணிகளுக்குட்பட்டது அல்ல என்கிறார். அத்துடன் ஒவ்வொரு சமூகத்திலும் அச்சமூகத்தின் சிறு பகுதியினரே தொடர்ந்து வரும் சந்ததியின் பெரும்பாலான மக்களை உற்பத்தி செய்கின்றனர். மேலும் குடித்தொகை வேறு பாட்டுச் செயற்பாடு சுற்றுவட்ட முறையில் உயர்ந்து தாழ்கின்றது.

முதலாவதாக, இச்சுற்று வட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் மிக வேக மாக வளர்ச்சி ஏற்படுகின்றது. பின்வரும் கட்டத்தில் ஒப்பீட்டு ரீதியிற் குறை வடைந்து செல்கின்றது. இக்கட்டத்தில் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதுடன் நாகரீகத்தின் தரமுங் கணிசமான அளவு சீர்குலைகின்றது. மேலே கூறியபடி எண்ணிக்கை அதிகரிக்க நிறுவனங்கள் சிக்கல் மிகுந்ததாக மாறிவிடுகின்றன. குறிப்பாகக் கைத்தொழிலாக்கம், வர்த்தக நடவடிக்கைகள் என்பன வளரச் சிக்கல் அதிகரிகின்றது. எனவே யுத்தங்களூடாகவோ அன்றிற் குடியேற்ற நாடுகளுடாகவோ அன்றில் இரண்டினூடாகவோ குடித்தொகை அமுக்கததைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கினி கருதுகின்றார்.

இரண்டாம் கட்டத்தில் மேற்குறித்த காரணிகளினாற் சக்தி வாய்ந்த மக்கள் கூட்டம் இழக்கப்படுவதால் கீழ் வர்க்க மக்களை விடக் குறைந்தளவு இனவிருத்திச் செயற்திறனுடைய உயர் வர்க்க குடித்தொகை அதிகரிப்பத னாலுங் குடித்தொகை குறைவடைகின்றது. அத்துடன் சமூக, பொருளாதாரக் காரணிகள் மறைந்திருப்பதனாற் கீழ் மட்ட வளர்ச்சி வீதத்திற்கான காரணம்

உயிரியல் சார்ந்ததே என அவர் கூறுகின்றார். கருவளவாக்க வீழ்ச்சி ஆரம்பத்திற் செல்வந்தரிடையே காணமுடிந்தாலுங் காலப்போக்கிற் கீழ்மட்ட வர்க்கத்தினரிடையேயும் காணப்படுகின்றது எனக் கூறினார். இதற்கான காரணம் மேல்மட்ட வர்க்கத்தினர் கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துதலினைக் கீழ்மட்ட வர்க்கத்தினரும் பின்பற்றத் தொடங்குகின்றனர். இதன் விளைவாகவே குடித்தொகை குறைவடைகின்றது என்கின்றார். மேலும் கினி அவர்கள் குடித்தொகை வளர்ச்சி, வீழ்ச்சிகளைத் தீர்மானிப்பதிற் தவிர்க்க முடியாத வகையிற் சில இயற்கைச் சக்திகள் இயங்குவதாகக் கருதுகின்றார். அத்துடன் குடித்தொகையின் தரஅபிவிருத்தியையும் தொகை வளர்ச்சியையும் தீர்மானிக்கும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட, புரிந்துகொள்ளமுடியாத உயிரியல் மாறுதல்களை அவர் தனது ஆய்வுக்கு அடித்தளமாகக் கொண்டிருந்தார் எனலாம்.

## 2.12.5. ஹேறபேட் ஸ்பென்சரின் கருவளவாக்க செயன்முறைக் கோட்பாடு

இங்கிலாந்திற் கீர்த்தி மிக்க தத்துவஞானியான ஹேறபேட் ஸ்பென்சர் தனது 'உயிரியல் விதிகள்' என்னும் நூலிற் சமூக உயிரியல் மாற்றங்கள் குறித்துப் பல்வேறு கோணங்களில் ஆய்வினை மேற்கொண்டுள்ளதுடன் குடித்தொகை வளர்ச்சி பற்றிய ஒரு இயற்கை விதியையும் முன்வைக்கின்றார். அதாவது குடித்தொகை வளர்ச்சி இயற்கை நியதிகளினால் ஏற்படுகின்றது என இவர் நம்பினார். விஞ்ஞான மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுக்குக் கூடிய நேரத்தைச் செலவிடுபவர்களிடையே இனப்பெருக்கத்திலுள்ள அக்கறை பலவீனம் அடையும். எவ்வளவுக்குக் கூடுதலான முயற்சியைத் தனது சொந்த முன்னேற்றத்திற்காக ஒருவர் செலவிடுகின்றாரோ அந்தளவிற்கு அவரது இனப்பெருக்க அக்கறையானது பலவீனப்படுகின்றது எனக் கருதுகின்றார். இதனால் பெண்ணினது இனப்பெருக்க ஆற்றலில் ஒரு இயற்கையான வீழ்ச்சி ஏற்படுவதுடன் அவர்களது சொந்த அபிவிருத்திக்கு கூடிய நேரமுஞ் சக்தியும் பயன்படுத்தப்படுகின்றது. உயர் வகுப்புகளிலுள்ள, நன்கு கல்வி கற்ற பெண்கள் உள ஆற்றலைக் கொண்டு பணிபுரியும் போது அவர்களது இனப்பெருக்க ஆற்றல் வழக்கத்திற்கு குறைவாகக் காணப்படும். அதாவது கருத்தரித்தலானது உரிய காலத்தில் நிகழ்வதில்லை. அத்துடன் தாய்ப்பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்க முடியாத நிலை ஏற்படலாம். எனவே மீள் இனப்பெருக்க ஆற்றலில் ஏற்படும் வீழ்ச்சி குடித்தொகையில் மெதுவான அதிகரிப்பை உறுதிப்படுத்துகின்றது. ஏனெனில் சமூகப் பரிமாணம் தவிர்க்க முடியாதவாறு அதிகரித்துச் செல்ல, அத்துடன் தன்னல நடத்தையும் இணைந்து செல்கின்றது. அத்துடன் பல்வேறு நிலைகளில் உயர் நிலையிலுள்ளவர்கள் பொதுவாகத் தம்மைப் பதிலீடு செய்வதில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் வளர்ந்து வருகையில் அந்த விகிதத்திற்கேற்ப குடித்தொகையும் வீழ்ச்சியடையத் தொடங்கும் என ஸ்பென்சர் நம்புகின்றார். உற்பத்தி மூலத்திற்கும் தனித் தன்மைக்குமிடையில்

எதிர்விரோதத் தன்மை காணப்படும். தனதும் தன்னுடைய உறுப்பினர்களினதும் வாழ்வைப் பராமரிக்க மனிதன் எடுக்கும் முயற்சிகளைத் தனித்தன்மை எனவும், புதிய உறுப்பினர்களை உற்பத்தி செய்தலை உற்பத்தி மூலம் எனவும் இவர் கருதுகின்றார். இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்லக் கூடியன வல்ல. குறிப்பாக ஒரு சமூகத்தில் மனிதனின் ஆயுட்காலம் அதிகரித்துச் செல்லுமானால் அச்சமூகங் குறைந்தளவு குழந்தைகளுடன் வாழும் நோக்க முடையதாகவே இருக்கும். இவ்வாறே பிறப்பு வீதம் உயர்வாக விருக்குமாயின் பல்வேறு காரணங்களினால் இறப்பு வீதமும் உயர்வாக இருப்பதுடன் ஆயுட் காலமும் குறைவாக இருக்கும் என்கின்றார்.

ஸ்பென்சர் தனது கோட்பாட்டை விளக்க முற்படும் போது உலகின் குடித்தொகையை மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார்.

அ) எளிமையான வாழ்க்கையை வாழும் வறியவர்கள்.
ஆ) மத்தியத்தர வர்க்கத்தினர்
இ) முன்னேற்றகரமானதுஞ் சிக்கல் மிகுந்ததுமான வாழ்க்கை வாழ்ப வர்கள்.

மனிதர்களிடையே வாழ்வும், வாழ்க்கைமுறைகளுஞ் சிக்கல் மிகுந்த தாக மாறும்போது அவர்களது தனித்தன்மை அதிகரிக்கின்றது. அதாவது அவர்களது ஆயுட்காலம் அதிகரிப்பதுடன் இறப்பு வீதமும் குறைவடைகின்றது. வறுமையிற் தனித்தன்மை குறைந்து உற்பத்தி மூலம் அதிகமாகவுள்ளது. அதாவது உடலுழைப்பைக் குறைவாகவும், மூளையுழைப்பைக் கூடுதலாகவுங் கொள்பவர்களின் இனப்பெருக்க இயற்றிறன் வீழ்ச்சியடைகின்றது. அசாதாரண மான மூளைத்திறன் கொண்டவர்களிடையே சந்ததி அல்லது குழந்தைப் பிறப்பு குறைவாக இருப்பதைக் காணமுடிவதாக ஸ்பென்சர் சுட்டிக் காட்டுகின்றார்.

குடித்தொகை அதிகரிப்பானது எப்போதுஞ் சமூகத்திற்கு தீமை பயப்பனவாக இருப்பதில்லை என ஸ்பென்சர் கருதுகின்றார். ஏனெனில் இயற்கை வளங்களை அதிகளவு சுரண்டுவதற்கு இது துணைபுரிவதால் மக் களின் பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தரவுயர்வுக்கு உதவுகின்றது என்கின் றார். மேற்படி பண்புகளில் ஏற்படும் மாற்றங்கள் எப்போதும் உலகப் புரட்சி களைக் கொண்டுவர உதவுகின்றன. பிறப்பு வீதம் கீழ்நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டுமாயின் ஆயுட்காலத்தை அதிகரித்தல் அவசியமாகின்றது எனக் கருதுகின்றார்.

ஸ்பென்சரின் கோட்பாட்டினைத் தொகுத்து நோக்குவோமாயின் கணிச மானளவு நியாயமானதாகவே தோன்றுகின்றது எனக்கொள்ள வேண்டும். பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியின் விளைவாக மேற்குலகப் பெண் களிடையே கருவளவாக்கம் வீழ்ச்சியடைந்திருந்ததைக் காணமுடிகின்றது. எனினும் உள - மூளை ரீதியாக அபிவருத்தி கண்டவர்களிடையே பிறப்பு வீத மானது, அவ்வாறு அபிவிருத்தியடையாதோர்களது பிறப்பு வீதத்தைவிடக் குறைவானது என்பதை உரிய வகையில் நிரூபிக்கத் தவறியுள்ளார் எனக்

கூறல் வேண்டும். இவரது கோட்பாட்டை, உண்மையான குடித்தொகை நியதியாகக் கொள்ளமுடியாது எனப்பலர் தெரிவித்துள்ளனர். ஏனெனில் செல்வந்த, அறிவுபூர்வமான பல குடும்பங்கள் உயர் பிறப்பு வீதத்தைக் கொண்டுள்ளமையைக் காணமுடிகின்றது என்பதனாலேயாகும்.

### 2.12.6.கஸ்ரோவின் புரத நுகர்வுக்கோட்பாடு

புவியியலாளரான கஸ்ரோ அவர்கள் பட்டினிப் புவியியல் (Geography of Hunger) என்ற நூலின் ஆசிரியராவர். இவர் குடித்தொகை வளர்ச்சியினால் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் பற்றிச் சிந்தித்து அதற்கான காரணங்களில் முக்கியமானது மக்களிடையே புரத உணவு உட்கொள்வதுடன் தொடர்புடையதாகவுள்ளது என எடுத்துக் கூறினார். அதாவது மக்களிடையே, புரத உணவு உட்கொள்வதற்குங் கருவளவாக்கத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது என்பதை வெளிக்கொணர்ந்தார். ஒரே வயதுடைய மூன்று எலிகளுக்கு வேறுபட்ட அளவிற் புரத உணவு வழங்கப்பட்டது. பின்னர் அவற்றின் மீள் இனப்பெருக்கத்தின் போது குறைவான புரத உணவை உட் கொண்ட எலிக்கு அதிகளவு பிறப்புக்களும் மத்தியளவு உட்கொண்ட எலிக்கு மத்தியளவு பிறப்புக்களும், அதிகளவிற் புரதத்தை உட்கொண்ட எலிக்குக் குறைவான பிறப்புக்களும் நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது எனவும் இதே போலவே மக்களிடையேயும் புரத உணவை உட்கொள்ளும் அளவிற்கும் கருவளவாக்கத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு எனவும் கருத்துத் தெரிவித்தார். மேலும் இவர் தனது கருத்தின்படி பருமனானவர்களுக்குக் குழந்தை உற்பத்தி இயற்றிறன் வீழ்ச்சியடையும் என்றார். அத்துடன் வறியவர் கள் புரத உணவை உட்கொள்வதிற் தவறுகின்றதால் அதிகரித்த பிறப்புக் களை ஏற்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

வளர்முக நாடுகளில் வாழும் மக்களிடையே இயற்கையாகவே அதி களவு மீள் இனப்பெருக்கம் ஏற்பட்டு வருகின்றது எனவும் இந்நிகழ்வுக்கு அவர்களைக் குறை கூறக்கூடாது எனவும் கருத்துத் தெரிவித்தார். இக்குற்றச் சாட்டினை வளர்ச்சியடைந்த நாடுகளிற்றான் சுமத்த வேண்டும். அதாவது குடியேற்றவாதிக்கத்தின் விளைவாக வளங்கள் சூறையாடப்பட்டு வளர்ச்சி யடைந்த நாடுகளுக்குத் தொடர்ச்சியாக எடுத்துச் செல்லப்பட்டதன் விளைவாக வளர்முக நாடுகளில் வாழும் மக்கள் வறியவர்களாக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவே அதிகரித்த பிறப்புக்கள் ஏற்படுவதற்குதவியது என்கின்றார். மேலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் அரசியல், பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கைகள் அன்றும்சரி, இன்றும்சரி தமக்குச் சாதகமாகவே வைத்துக் கொண்டிருக்கின்றனர். வளர்முக நாடுகளின் பஞ்சம் தொடர்பான பிரச்சினை களுக்கு இதுவரையும் மேற்குலக நாடுகள் பெருமளவில் அக்கறை கொண்ட தாக தெரியவில்லை. இங்கு பஞ்சம் என்பது உணவிற் புரதமின்மை என்பதைக் குறித்து நிற்கின்றது. பஞ்சம் ஏற்படும் பட்சத்தில் நோய் ஏற்பட்டு அதன் விளைவாக இறப்புக்கள் அதிகமாக நிலவுகின்றன. பஞ்ச நிலமை காணப்படும்

போது பாலியற் தொடர்பினை அதிகமாக அனுபவிப்பதன் மூலம் தமது விருப் பத்தினை திருப்திப்படுத்த முயல்கின்றனர். எனவே பஞ்சத்திலிருந்து விடுபட உணவுற்பத்தியினை பெருக்கவேண்டும் எனக் கஸ்ரோ அவர்கள் தெரிவிக்கின றார். அதாவது பொருளாதார அபிவிருத்தி குடித்தொகையையும் பிறப்பு வீதத் தையும் வீழ்ச்சியடையச் செய்யும். ஆதலால் இது பற்றி கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

எனினும் இவரது கருத்திறகுப் பலா் பல்வேறு வகைப்பட்ட விமா்சனங் களைத் தெரிவித்துள்ளனர். உணவு நிரம்பலுக்குங் கருவளத்திற்கும் இடையில் தொடர்புண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதனை விதியாகக் கொள்ள முடியாது எனப் பின்வந்தோர் தெரிவித்து உள்ளனர். மிக நீண்டகாலமாக செல் வந்த நாடுகளாக இருந்தவற்றில் அதிகரித்த குடித்தொகை வளர்ச்சி காணப் பட்டது எனவும் புதிய குடும்பத் திட்டமிடற் பாவனையின் பின்னர் தான் குடித் தொகை வளர்ச்சி குறைவடைந்து சென்றது எனவும் தெரிவித்துள்ளனர். வளர்ந்த நாடுகளில் மருத்துவத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் மக்கள் தமது உடல் நிலையை, அதாவது அதிகளவில் புரதம், கொழுப்பு போன்ற வற்றை உடல் பெற்றுக்கொள்ளாத வகையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்தி ருக்கின்றனர்.

# 3

# குடித்தொகையியற் தரவுகளின் முக்கியத்துவம்

## 3.0 முன்னுரை

குடித்தொகையியல் கல்வியின் விருத்திக்குக் குடித்தொகையுடன் தொடர்புடைய தரவுகள் மிகவும் வேண்டற்பாலன. இத்தரவுகள் குடித்தொகைக் கல்வியியலாளருக்கு மட்டுமன்றி நாட்டின் அபிவிருத்தி, திட்ட உருவாக்கல், அமுலாக்கல் போன்ற பல்வேறு துறையினருக்கும் மிக மிக அவசியமானதாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த குடித்தொகைத் தரவுகள் மூன்று முறை களின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

**அவையாவன:**

அ) குடிக்கணிப்பு முறை (Census Method)

ஆ) வாழ்நிலைப் புள்ளிவிபர முறை (Vital Statistical Method)

இ) மாதிரி அளவீட்டு முறை (Sample Survey Method)

## 3.1 குடிக்கணிப்பு முறை

குடித்தொகையியலிற் தரவுகளைச் சேகரித்தலிற் குடிக்கணிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அண்மைக்காலங்களில் குடித்தொகையுடன் தொடர் புடைய பல்வேறு ஆய்வுகளுக்கும் கணிப்பின் மூலம் பெறப்படும் தரவுகள் மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கின்றன. Census என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் குடிக்கணிப்பு என்னும் பதமானது லத்தீன் மொழியில் Censerer என்ற சொல்லிலிருந்து வந்தது எனலாம். இப்பதமானது வரி அல்லது பெறுமதி என்பதைக் குறித்து நிற்கின்றது.

குடிக்கணிப்பு என்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையால் 1980ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் குடித்தொகை மற்றும் குடியிருப்புக்கள் பற்றிய கணிப்புக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. "குடிக்கணிப்பு என்பது ஒரு நாட்டில் அல்லது நாட்டுக்குட் தெளிவாக வரையறுக்

கபட்ட பிரதேசத்தில் குறித்துரைத்த நாளிலோ அன்றிற் குறித்த காலப் பகுதியிலோ அங்கு வாழும் மக்களின் குடிப்புள்ளியியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தரவுகளை சேகரித்தல், தொகுத்தல், மதிப்பிடுதல், பகுப்பாய்வு செய்தல், வெளியிடுதல் என்பதாகும்". மறுவார்த்தையிற் கூறுவதாயின் குறித்த நாட்டிலோ அன்றிற் குறித்த பிரதேசத்திலோ வாழும் மக்களையும் அவர்களுடன் தொடர்புடைய விடயங்களையும் பெற்றுக் கொள்ளுதலே குடிக் கணிப்பு எனலாம்.

புராதன காலங்களில் இத்தகைய கணிப்பு வரி அறவிடுதல், இராணுவ சேவைக்கு ஆட்சேர்த்தல், கட்டாயத் தொழில் செய்வித்தல் போன்றவற்றின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டதாக வரலாற்றுப் பதிவுகளூடாக அறியமுடிகின் றது. சில சந்தர்ப்பங்களில் குடிக்கணிப்பின் நோக்குகளும் மட்டுப்படுத்தப்பட்டி ருந்ததாக காணப்பட்டிருந்தது. அக்காலங்களில் நாட்டிலோ அல்லது குறித் துரைக்கப்பட்ட பிரதேசத்திலோ வாழும் அனைத்து மக்களையன்றி குடும்பத் தலைவர்கள், விவசாயிகள், நிலச்சுவாந்தர்கள், இராணுவ சேவைக்குப் பொருத் தமான ஆண்களின் வயதுத் தொகுதியினர், நல்லுடல், ஆரோக்கியம் பெற்ற ஆண்கள் ஆகியோர்களைக் கணித்து வைக்கும் முறையும் காணப்பட்டது. சில குடிக்கணிப்புக்களில் மிக அருகலாகப் பெண்களும், குழந்தைகளும் கணிப் புக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். நவீன கணிப்புகளில் தலைக்குத் தலை என்னும் (சகலரையும்) முறை பரவலாகக் காணப்படுகின்றது.

புராதன காலங்களில் எகிப்து, பபிலோனியா, சீனா, இந்தியா, ரோமாபுரி போன்றநாடுகளிற் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின் றது. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சுமேரியர் வரி சேகரிக்கும் நோக்குடன் குடிக்கணிப்பினை மேற்கொண்டிருந்தனர். இந்தியாவில் கி.மு 270 - 230ஆம் ஆண்டுகளில் அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் அடிக்கடி குடிக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. கி.பி மூன் றாம் நூற்றாண்டிற் கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரத்தில் வரி அறவிடுவதற் கும் கொள்கை வகுப்பதற்கும் இக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. கி.பி 16ஆம் நூற்றாண்டில் அக்பர்மன்னர்காலத்திலும் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இலங்கையிற் புராதன காலத்தில் விவசாய விருத்தியின் பொருட்டுக் குளங்களை வெட்டுதல், நீர்ப்பாசனத்துக்கு நீரை வழங்கல், கட்டாய இராஜகாரிய சேவை, இராணுவ சேவை போன்ற பலவற்றை சிறப்புறப் பெற்றுக் கொள்வதற்கு கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வாய்ப்பிருந்த போதிலும் அவை பற்றி வரலாற்று ஏடுகள் ஏதும் குறித்துரைக்கவில்லை.

மத்திய காலப்பகுதிகளில் மேற்குலக நாடுகளில் குடிக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் 10ஆம் நூற்றாண்டிலும், சுவிற்ஸ லாந்தில் 15ஆம் நூற்றாண்டிலும், 18ஆம் நூற்றாண்டில் 14ஆம் லூயிஸ் காலத்திலும் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எவ்வாறெனினும் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகள் வரை குடிக்கணிப் பானது ஒழுங்கு முறையாகப் பெற்றுக்கொள்ளப்படாதது மட்டுமல்லாது அவர் களின் தேவைகளுக்கு ஏற்பவுமே நடாத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பல்வேறு நாடுகளில் மக்களிடமிருந்து வரியினை அறவிடுவதற்கும் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்குமே பெரும்பாலும் கணிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தன எனலாம். குடித்தொகை சம்பந்தமான நவீன சிந்தனை கள் வளர்ச்சி பெறவே 18ஆம் நூற்றாண்டின் பின்னர் ஒழுங்குமுறையில் அமைந்த கணிப்புக்களைப் பெறும் வழக்குப் படிப்படியாக வளர்ச்சி பெறலா யிற்று. அதாவது இறைமையுள்ள ஒரு நாட்டில் வாழும் மொத்த மக்களையும் அவர்களது குடித்தொகைக் கூட்டு, குடித்தொகை இயக்கப் பண்புகளையுஞ் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளையும் அறிந்து கொள்வதிற் படிப்படி யாக முன்னேற்றம் காணப்பட்டது.

குறிப்பிட்ட கால இடைவெளிகளில் முழுமையான குடிக்கணிப்பானது குவிபெக், நோவாஸ்கோசியா மாநிலங்களில் 1665ஆம் ஆண்டு கணிக்கப்பட் டது. இவ்விரு மாநிலங்களிலும் 1665 -1754ஆம் ஆண்டுகளிடையே 16 தடவை கள் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1790இல் ஐக்கிய அமெரிக்காவிலும் 1801இல் இங்கிலாந்திலும் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முழுமையான கணிப்புக்கள் மேற் கொள்ளப்படலாயின. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் முறையே 1871, 1881 ஆண்டுகளில் முழுமையான குடிக் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பெரும்பாலான வளர்முக நாடுகளில் 1950களைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் குடித்தொகைப் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கமைய கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுவாக உலகின் பல நாடு களில் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறையே கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் ஐக்கிய இராச்சியம், யப்பான் போன்ற நாடுகளில் ஐந்தாண்டு இடைவெளியில் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

### 3.1.1.குடிக்கணிப்பு நுட்ப முறைகள்

குடித்தொகை கணிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு இரு நுட்ப முறை கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

1) டீ பக்ரோ (De facto)

2) டீ யூரே (De jure)

என்பனவே அவையாகும். டீ பக்ரோ முறையின்படி நாடளாவிய ரீதியில் குறிப்பிட்ட ஒரு நாளில் இரவு நேரத்தில் கணிப்பு மேற்கொள்ளப்படுவதாகும். இவ்விரவினை "குடிக்கணிப்பு இரவு" என அழைக்கப்படும். இவ்விரவு மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படல் அவசியமாகும். தெளிந்த வானத்துடன் சந்திரனின் வெளிச்சம் இருக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுகின் றது. அத்துடன் மக்கள் தங்கள் வீடுகளில் தங்கியிருக்கக் கூடிய வகையிலான ஒரு நாளை தெரிந்தெடுக்க வேண்டியதும் அவசியமாகின்றது. இம் முறையின் படி குடிக்கணிப்பின் போது ஒவ்வொருவரும் கணிப்புக்குள் கொண்டு வரப்படு

வதால் அவர்கள் கணிப்பு இரவில் எங்கு வதிகின்றனரோ அங்கேயே பதிவுக் குட்படுத்தப்படுகின்றனர். இராணுவம் மற்றும் அத்தியாவசிய சேவைகளிலீடு படுவர்கள் தனியாக கணிப்புக்குட்படுத்தபடுவர்.

டீபக்ரோ நுட்பமுறையிற் பலநன்மைகள் இருக்கின்றன. இம்முறை யின்படி பெறப்படும் கணிப்பு இலகுவானதும் தெளிவானதுமாகும். அத்துடன் நாட்டின் அல்லது குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தின் மொத்த மக்களையும் கணிப்புக்குட்படுத்துவதால் உண்மைத் தன்மை கொண்டதாக அமைகின்றது. அத்துடன் சர்வதேச ரீதியாக ஒப்பீட்டு ஆய்வு செய்வதற்கும் வாய்ப்பளிக் கின்றது. எவ்வாறெனினும் இக்கணிப்பு முறையிற் குறைபாடுகளும் காணப்படா மலில்லை. இம்முறையினால் குறிப்பிட்ட கணிப்பு இரவில் (Census Night) நட மாடும் மக்கள் கணிப்புக்குட்படுத்தப்படாமல் விடப்படும் நிலை காணப்படுகின் றது. அத்துடன் நாடளாவிய ரீதியில் கணிப்பு மேற்கொள்ளப்படுவதால் குறிப் பிட்ட நாள் இரவில் மிகத் தகுதிவாய்ந்த கணிப்பாளர்களும் பயிற்றப்பட்ட கள உத்தியோகத்தர்களும் தேவைப்படுவர். இச்சேவையை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் சிரமத்தினால் கணிப்புக்கள் சிறப்படைவதில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புக் கள் உருவாகின்றன. மேலும் குறித்துரைத்த இரவில் மேற்கொள்ளப்படுவதால் அட்டவணையிலுள்ள வினாக்கள் யாவும் பூர்த்தி செய்யப்படுவதில் இடர்பாடு கள் காணப்படலாம். அத்துடன் உண்மைக்குப் புறம்பான விடைகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதை பல்வேறு நாடுகளின் குடிக்கணிப்பு அறிக்கைகளின் மறு சீராய்வுகள் தெரிவிக்கத் தவறவில்லை. மேலும் எல்லாக் குடியிருப்பாளர்களும் கணிப்புக்களின் அவசியத்தை அறிந்தி ருப்பர் எனக் கூறமுடியாது. அத்துடன் கல்வியறிவுடையவராக இருப்பர் என்றோ பொறுமையாகவிருந்து அட்டவணையில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை யளிப்பர் என்றோ கூறமுடியாது. இதனால் முற்றுமுழுதாகச் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டுள்ளது எனக்கூறுவது சிரமமானதாக அமையலாம். வளர்ச்சி யடைந்த நாடுகளில் இத்தகைய குறைபாடுகள் வராதிருக்கும் வகையில் கணிப்பின் அவசியம் பற்றி மக்கள் விளக்கம் கொண்டிருக்கின்றனர். ஆனால் வளர்முக நாடுகளில் குறைபாடுகள் காணப்படவே செய்கின்றன. கணிப்பின் அவசியத்தை உணராமை-அதாவது வருமானவரி பற்றி தீர்மானிக்கவோ அன் றில் தமக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்ற நோக்கிலோ சரியான தகவல்களைத் தெரிவிக்கத் தவறுகின்றனர் என 1981ஆம் ஆண்டு இந்தியக் குடிக்கணிப்புத் தலைவர் தெரிவித்துள்ளமை இங்கு நோக்கற்பாலது. எவ்வாறெனினும் டீ பக்ரோ முறையானது சர்வதேச ரீதியாகப் பல நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

டீபக்ரோ முறையிலிருந்து வேறுபட்ட பண்புகளை கொண்ட டீ யூரே முறையானது குடிக்கணிப்பின் போது மக்களை அவர்களது சொந்த இருப்பி டங்களில் வைத்தே பதிவு செய்யும் முறையாகக் கொள்ளப்படுகின்றது. குடிக் கணிப்புக்கு உட்படுபவர் தற்காலிக இருப்பிடத்திலேனும் இருத்தலாகாது. அவ் வாறிருந்தால் தகுந்த அத்தாட்சி காட்டப்படல் வேண்டும். இம்முறையின் மூலம் பெறப்படும் கணிப்புக்கள் டீபக்ரோ முறையைப் போல ஒரே நாளில் மேற்

கொள்ளப்படுவதில்லை. அதாவது இக்கணிப்பு இரண்டு அல்லது மூன்று கிழமைகளில் தொடர்ச்சியாக நடத்தப்படலாம். இதனை Period Enumeration என அழைப்பர். ஐக்கிய அமெரிக்காவில் இந்த முறையே பினபற்றப்படுகின்றது. பிரேசிலில் டீ பக்ரோ, டீயூரே ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்து கின்றனர்.

இந்த கணிப்பு முறையில் சாதகத் தன்மைகள் காணப்படுவது போலப் பாதகத் தன்மைகளும் இல்லாமலில்லை. கணிப்புக்கான காலம் நீண்டிருப்பத னால் - குடியிருப்பாளர் தரப்படும் வினாக்களுக்கு ஆறுதலாகப் பதிலளிக்க வகை செய்வதால் - உண்மைத்தன்மையை நிலைநாட்டக் கூடியதாக விருக் கும். டீ பக்ரோ முறைக்கு ஒரே நாளில் பல ஆயிரக்கணக்கான கள உத்தியோ கத்தர், கணிப்பு உத்தியோகத்தர்கள் தேவைப்படுவர். இவர்களுக்குக் கொடுக் கப்படும் பயிற்சியும்போதுமென்று கூறமுடியாது. இலங்கையில் 1981ஆம் ஆண்டு கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| அத்தியட்சகர் | - | 01 |
| பிரதி அத்தியட்சகர் | - | 02 |
| உதவி அத்தியட்சகர்- தொழில்நுட்பம் | - | 24 |
| உதவி அத்தியட்சகர் | - | 75 |
| ஆணையாளர் | - | 168 |
| உதவி ஆணையாளர் | - | 245 |
| மேற்பார்வையாளர்கள் | - | 3400 |
| கணிப்பினை மேற்கொள்பவர்கள் | - | 63616 |
| மொத்தம் | - | 67531 |

ஆனால் டீயூரோவை பொறுத்தவரை குறைவான உழைப்பாளிகளே தேவைப்படுவர். இதனாற் சிறப்பான பயிற்சியாளர்களைப் பெற்றுக்கொள்வது சுலபமானதாக அமையலாம்.

இக்கணிப்பில் நிரந்தர வசிப்பிடம் கோரப்படுவதால் இடப்பெயர்வினை மேற்கொண்டு, தொழில் மற்றும் வேலைகளில் ஈடுபட்டோரைப் பொறுத்தவரை கஷ்டமானதாகவே உள்ளது. அவர்களைக் கட்டாயப்படுத்தி நிரந்தர இடத்திற் குக் கொண்டுவர வேண்டியுள்ளது. அத்துடன் கணிப்புக்காலம் நீண்டிருப்பதாற் சில தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்திற்குட்பட வாய்ப்புண்டு. குறிப் பாகக் கணிப்புக் காலத்திற்கு இடையில் நிகழும் பிறப்புக்கள், இறப்புக்கள், இடப்பெயர்வுகள் ஆகிய இயக்கப் பண்புகளைச் சரியாகக் கணிப்பிட முடியா துள்ளது. எவ்வாறெனினும் ஜோன்கிளாக் என்ற குடித்தொகைப் புவியியலாளர் டீயூரே முறையோடு ஒப்பிடும் போது டீ பக்ரோ முறை சிறப்புவாய்ந்தது என வலியுறுத்துகின்றார்.

### 3.1.2.கணிப்புகள் மேற்கொள்ளப்படும் முறைகள்

பொதுவாக குடிக்கணிப்பு பெறப்படும் போது தொடர்ச்சியான வழிமுறை களைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். குடிக்கணிப்பு மேற்கொள்வ

தற்குக் கேள்விக்கொத்தினைத் தயாரித்தலே முதலாவது படிமுறையாகும். இக் கேள்விக்கொத்தினைத் தயாரிக்கும் போது முன்னைய கணிப்புக்களுக்குட் படுத்தப்பட்ட கேள்விக்கொத்தினை ஆதாரமாகக்கொண்டு, புதிதாக சேர்த்துக்கொள் வதற்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளையும் இணைத்துத் தயாரிக்கவேண்டும். குடிக்கணிப்பினை மேற்கொள்ளும் திணைக்கள அதிகாரிகள் உட்பட மக்கள் நலன் பேணும் ஏனைய அரசசார்புடைய, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்தக் கேள்விக்கொத்தினைத் தயாரிப்பதில் ஈடுபடுவார்கள். இது முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட மகாநாட்டிற் சமர்ப்பிக்கப்படும். இங்கு அதனைப் பரிசீலனை செய்து பூர்த்தி செய்த பின்னர், வெளிக்களத்தில் எழு மாற்று ரீதியிற் பரீட்சித்துப் பார்க்கப்படும். அங்கு குறித்துரைக்கப்பட்ட குறை பாடுகள் குறித்து, இரண்டாவது தரவுகளை நெறிப்படுத்தும் மகாநாட்டிற் சமர்ப் பிக்கப்படும். அம்மகாநாட்டிலே கேள்விக் கொத்துக்கு இறுதி வடிவம் கொடுக் கப்படும். இதன் பின்னரேயே குடிக்கணிப்பினை மேற்கொள்வதற்கு தயாராக கப்படும். இக்கேள்விக்கொத்து மூன்று வகைப்படும்.

1. வீட்டு விபரம் ( House List )
2. குடியிருப்பாளர் அட்டவணை ( Household Schedule )
3. தனிப்பட்டவருக்கான விபரப்பட்டியல் (Individual List )

### 3.1.3.வீட்டு விபரம்

குடிக்கணிப்பின் ஆரம்ப செயற்பாடே கணிப்பு அலகுகளை (Census Block) பிரித்துக் கொள்வதாகும். நகரமாயின் வட்டாரங்களையோ அல்லது குறித்துரைக்கப்பட்ட எல்லைக்கு உட்பட்ட பகுதியையோ, கிராமமாயின் கிராமத்தலைவரின் பிரிவினையோ அல்லது குறித்துரைக்கப்பட்ட குக்கிராமங் களையோ கொண்டதாக இது அமையலாம். இதனைத் தொடர்ந்து குடிக் கணிப்புக்கு முன்னரேயே வீடுகளுக்குக் கணிப்புக்கான இலக்கமிட்டு வீட்டு விபரங்கள் ஒழுங்குபடுத்தப்படும். குடியிருக்கும் அல்லது குடியிருக்காத வீடுகள் எவையென்றாலும் விபரப்பட்டியலுக்குட்படுத்தப்படல் வேண்டும்.

### 3.1.4.குடியிருப்பாளர் அட்டவணை

குடியிருப்பாளர் அட்டவணை இருவகைப்படும். பகுதி ஒன்றில் வீட்டு நிலைமை, குடிநீர் பெறும் வழி, மின்சாரங் கிடைக்குந் தன்மை, பொதுவாக வீட்டில் வாழும் விவாகமான குடும்பங்களின் எண்ணிக்கை, குடியிருப்பாளர் பயிர்செய்யும்நிலம், மொத்தக் குடியிருப்பாளர் எண்ணிக்கை என்பன பெற்றுக் கொள்ளப்படும். பகுதி இரண்டில் குடியிருப்பாளர்களுக்கு குடும்பத்தலைவரு டனான உறவு, பால், வயது, விவாகநிலை, கல்விநிலை போன்றன பெற்றுக் கொள்ளப்படும்.

### 3.1.5.தனிப்பட்டவரின் விபரப்பட்டியல்

குடிக்கணிப்பின் மிகமுக்கியமான தகவல்கள் இந்த விபரப்பட்டியல் மூலமே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இதனைப் பிரதானமான அடிப்படைக் கேள்விக்கொத்து (Core Questionnaire) என்றால் மிகையாகாது. இதிற் கேட் கப்படும் வினாக்கள் நாடுகளுக்கு நாடு வேறுபட்டதாய் அமைந்திருக்கும். பொதுவான விபரப்பட்டியல், எழுமாற்று விபரப்பட்டியல், என இருவகைப் படுத்தப் பட்டுள்ளன. இப்பட்டியலில் 16 அம்சங்கள் கேட்கப்படுகின்றன.

### 3.2. இலங்கையில் குடிக்கணிப்பு

இலங்கையின் குடிக்கணிப்புப் பற்றிப் புராதன காலங்களிற் பல்வேறு வழிகளில் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளனவே தவிர முறையான கணிப்புகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. ரெனன்ற் (Tennent) 17.5 மில்லியன், நைற்றன் (Knighton) 7.5 மில்லியன், பிறிட்காம் (Pridham) 6.0 மில்லியன், போப்ஸ் (Forbes) 5.0 மில்லியன், அருணாசலம் 10.0 மில்லியன், சக்கார் ஆகக்கூடியது 8.47 மில்லியன், ஆகக்குறைந்தது 7.08 மில்லியன் என்றவாறு மக்கள் வரலாற்றுக்காலங்களில் வாழ்ந்து வந்துள்ளனர் எனத் தத்தமக்குரிய ஆதாரங்களைக் கொண்டு மதிப்பீடு செய்துள்ளனர். இவர்களது பணி மதிப்பீடுகளாகவே இருந்துள்ளது.

போர்த்துக்கீசர் ஆட்சியில் இலங்கையில் கணிப்புகளோ அன்றில் மதிப்பீடுகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒல்லாந்தர் குடிக்கணிப்பு முறையானது வரி அறவிடுதலுக்கு மிகவும் ஏற்ற ஒன்று என்பதைக் கருத்தில் கொண்டனர். இலங்கையின் முதலாவது கணிப்பினை ஒல்லாந்த தேசாதிபதி வாண்டர் கிராவ் (Vander Graff) என்பவர் 1789ஆம் ஆண்டு டச்சு கிழக்கிந்திய கம்பனிகள் உட்பட கரையோரப் பிரதேசங்களுக்கு மேற்கொண்டார். அதன்படி 817,000 மக்கள் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வரியினை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இக்கணக்கெடுப்பு முற்று முழுதாகச் சிறப்புடையது எனக் கூறமுடியாது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் முதற்காற்பகுதியில் அவர்களின் உடனடித் தேவையினைக் கருத்திற் கொண்டு கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. 1821 ஆம் ஆண்டிலிருந்து நீலப்புத்தகம் (Blue Book) என்றழைக்கப்பட்ட அரசாங்கச் செயலறிக்கை வெளியிடப்பட்டது. 1814ஆம் ஆண்டு கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி 492083 மக்கள் வாழ்ந்துள்ளனர் என அறியப்படுகின்றது. 1821ஆம் ஆண்டு கண்டி மாகாணத்தில் 256835 மக்கள் வாழ்ந்துள்ளதாக எடுக்கப்பட்ட கணிப்பிலிருந்து அறியலாம். 1827ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 885574 மக்கள் வாழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இம்மூன்று கணிப்புக்களும் எவ்வளவு தூரம் உண்மைத்தன்மை கொண்டவை என்பதை அறிவது சிரமமானது ஆகும். 1821-1871ஆம் ஆண்டு

களிடையிற் குடிக்கணிப்பு நடைபெற்றதற்கான உண்மைச் சான்றிதழ் கிடைக்கப்பெறவில்லை. இக்காலப் பகுதிகளிற் சில தேசாதிபதிகளின் வேண்டுகோளுக்கிணங்க மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக 1835 ஆம் ஆண்டு நீலப்புத்தகத்தில் தேசாதிபதி சேர் றொபேட் வில்லியம் ஹோட்டன் என்பவரின் பணிப்புரையின்படி மேற்கொண்ட கணிப்பின் பிரகாரம் இலங்கையின் மொத்தக்குடித்தொகை 1,241,825 ஆகவிருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேர் எமர்சன் ரெனென்ற் என்பவரின் மதிப்பீட்டின்படி 1857ஆம் ஆண்டில் இராணுவத்தினரும் அவர்களது குடும்பத்தினரும் தவிர்ந்த ஏனையோர் 1,697,975 ஆகவிருந்துள்ளனர். இக்காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் கிராமத்தலைவரினால் கொடுக்கப்படும் தகவலை கொண்டமைந்தமையால் இம்மதிப்பீடுகள் பெருமளவிற்கு உண்மையாக இருக்கும் எனக் கூறமுடியாது.

1869ஆம் ஆண்டு ஐந்தாம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி காலத்திற்குக்காலம் ஒழுங்கமைப்புடையதும் விஞ்ஞான ரீதியில் அமைந்ததுமான குடிக்கணிப்பு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என எடுத்துக் கூறப்பட்டது. இதனடிப்படையில் முதலாவது குடிக்கணிப்பானது 1871ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. அக் கணிப்பின்படி நாட்டின் மொத்தக் குடித்தொகை 2.4 மில்லியனாகவிருந்துள்ளது. இக்கணிப்பினைத் தொடர்ந்து பிரித்தானியர் ஆட்சியில் 1931ஆம் ஆண்டு வரையும் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை கணிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. 1941ஆம் ஆண்டு கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2ஆம் உலக மகாயுத்தம் காரணமாக பின்போடப்பட்டு 1946 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து கணிப்பு ஆண்டுகள் ஒழுங்குபடுத்தப்படாது 1953, 1963ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்ப்பட்டது. தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்குப் பேணப்படல் வேண்டும் என்ற தோரணையிலும் ஐக்கிய நாடுகள் சபையின் குடித்தொகைப் பிரிவின் ஆலோசனையின் பேரிலும் 1971,1981ஆம் ஆண்டுகளில் கணிப்பினை மேற்கொண்டிருந்தனர். 1991ஆம் ஆண்டு கணிப்பினை மேற்கொள்ள முடியவில்லை. நாட்டிற் காணப்படும் இனப்பிரச்சினைகளும் அதன் விளைவாக உருவான ஆயுதப் போராட்டம் காரணமாக, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாம் வாழும் பிரதேசங்களிலிருந்து தூண்டப்பட்ட இடப்பெயர்வு இடம்பெற்றதன் விளைவாகவும் கணிப்பினை மேற்கொள்ள அரசினால் முடியாதுள்ளது. இதனால் 1991ஆம் ஆண்டு நடைபெறவிருந்த குடிக்கணிப்பானது 2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. எனினும் இக்கணிப்பானது நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் வடமாகாணத்திலும், கிழக்குமாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இதனால் தேசிய ரீதியாக முழுமையான குடித்தொகைப் பண்புகளை பெறமுடியாதுள்ளதுடன் கணிப்பின் அவசியத்தை வேண்டி நிற்கும்

ஆய்வாளர்கள், மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச ஆய்வாளர்கள் இதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக 1981ஆம் ஆண்டுக்குடிக்கணிப்பின் போது நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 12.7 சதவீதமாகவிருந்த இலங்கைத் தமிழர்கள் 2001ஆம் ஆண்டுக் குடித் தொகைக் கணிப்பின் பிரகாரம் 4.0 சதவீதமாகவே குறித்துக் காட்டப்பட்டுள்ளமை குடிக்கணிப்பின் நோக்கத்திற்கு மாறானதாகவேயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 3.2.1. இலங்கையிற் குடிக்கணிப்பினைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள்

இலங்கையிற் குடிக்கணிப்பினை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தும் பொறுப்பு திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஒரு பிரிவான, குடிக்கணிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (Department of Census and Statistics) இத்திணைக்களம் குடிக்கணிப்பினை மேற்கொள்ளல், வெளியிடுதல் ஆகிய இரண்டினையுஞ் செய்து வருகின்றது. 1868ஆம் ஆண்டு 5ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கணிப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1880, 1900 ஆண்டுகளில் கணிப்புக்கு உதவியாகப் புதிய கட்டளைச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1901ஆம் ஆண்டுக் குடிக்கணிப்புக்குப் பொறுப்பாயிருந்த சேர்.பொன். அருணாசலம் இந்தியக்குடிக்கணிப்பு மாதிரியைக் கொண்ட கட்டளைச் சட்டத்தினை வரைந்து சட்டசபையில் நிறைவேற்றி அதனடிப்படையில் கணிப்பு மேற்கொள்ள வழிசெய்தார். கணிப்புக்கான கட்டளைச் சட்டங்கள் காலத்துக்குக்காலம் மாற்றியமைக்கப்பட்டன. குடித்தொகைக் கணிப்பினை மட்டும் மேற்கொள்ளாது குடியிருப்பு, விவசாயம், கால்நடை, வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளுக்குமான கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1945, 1955, 1980களில் இது தொடர்பாக சட்டத்தில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டன. மக்களின் குடிப்புள்ளியியல் மட்டுமல்லாது சமூக, பொருளாதார நிலைகளையும் கண்டறிவதிற் கணிப்புக்கள் பெரும்பங்கு கொண்டுள்ளன. 1980ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குடிக்கணிப்புப் புள்ளிவிபரப் பணிப்பாளரே கணிப்பு அத்தியட்சகராகப் பணியாற்றத் தொடங்கினார். அத்துடன் கணிப்புக்களை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தர் பின்வருமாறு காணப்பட்டனர். குடிக்கணிப்பு அத்தியட்சகர் குடிக்கணிப்பினை மேற்கொள்வதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றார். இவரைத் தொடர்ந்து குடிக்கணிப்பு புள்ளிவிபரப் பிரதிப்பணிப்பாளர், குடிக்கணிப்புக்கான பிரதி அத்தியட்சகராக பணியாற்றுவார். குடிக்கணிப்பு புள்ளிவிபர உதவிப்பணிப்பாளர் குடிக்கணிப்புக்கான உதவி அத்தியட்சகராகவும் கடமையாற்றுவார்.

குடித்தொகைக் கணிப்பிற்கான ஒழுங்கமைப்பானது இருவழிகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

1. தொழில்நுட்பம்

2. நிர்வாகம்

தொழில்நுட்ப அணுகுமுறையின் விருத்தியை அமுலாக்குவதிற் தலைமைச் செயலகக் கணிப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுவர்.

பன்முகப்படுத்தும் பொறுப்புகளும் அதிகாரங்களும் மாவட்ட அலுவலகம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளன. மாவட்ட நிர்வாகத்திற்கான பொறுப்பானது அரச அதிபர், உள்ளூராட்சித் தலைவர்கள் அல்லது ஆணையாளர்களைச் சார்ந்தது. தலைமைச் செயலகம் பின்வரும் குடிக்கணிப்புத் தொடர்பான விடயங்களுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும். கேள்விக் கொத்தினையும் ஏனைய படிவங்களையுந் தயார் செய்தல், கைநூல்களைத் தயார் செய்தல், மாதிரிகளை (models) அச்சிடுதல், விநியோகித்தல் போன்ற பலவற்றினைச் செயற்படுத்துவர். மாவட்ட அலுவலர்கள் விடயதானங்களை வழங்குவர்.

குடிக்கணிப்பின் நிர்வாகப் பொறுப்புக்கள் மாவட்ட ரீதியாகப் பன்முகப் படுத்தப்பட்டு மாவட்ட அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அரச அதிபர் அம்மாவட்டத்தின் குடிக்கணிப்பு ஆணையாளராகவும் உதவி அரச அதிபர்கள் உதவிக் குடிக்கணிப்பு ஆணையாளர்களாகவும் பணி புரிவர். இவர்கள் குறிப்பிட்ட மாவட்டத்தில் - மாநகர, நகரப்பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில், குடிக்கணிப்பினை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டவர்களாவர். நகர சபைகளிற் தலைவர் அல்லது ஆணையாளர் தம்பிரதேசத்தின் கணிப்புக்கான ஆணையாளராகவிருப்பர். உள்ளூராட்சி சபையின் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மேற்பார்வையாளர்கள் இருப்பர். கிராமப்புறங்களில் கிராம சேவகர்களே மேற்பார்வையாளராகவும் தத்தம் கிராமங்களுக்கு கணிப்பாளர்களை நியமனம் செய்வதற்கும் உதவியாகவிருப்பர். பொதுவாகக் கணிப்பாளர்கள் ஆசிரியர் உட்பட அரச உத்தியோகத்தர்களாக இருப்பர். திணைக்கள உத்தியோகத்தர்கள் கள உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

### 3.2.2.குடிக்கணிப்புக்கான திட்டமிடல்

ஒரு கணிப்பினை மேற்கொள்ளும் போது திட்டமிடல் அவசியமாகின்றது. கணிப்புக்கான நாள் ஒன்றினைத் தெரிவு செய்வதற்கு 3-4 ஆண்டுகளுக்கு முன்னர் குடித்தொகைக் கணிப்பு மற்றும் புள்ளிவிபரத்திற்கான பணிப்பாளர் தலைமையிற் கணிப்புக்கான 'வழிப்படுத்தற் சபை' ஒன்று அமைக்கப்படும். உதாரணமாக இலங்கையில் 1981ஆம் ஆண்டு, கணிப்பீட்டினை மேற்கொள்ள 1978ஆம் ஆண்டே இச்சபை உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வழிபடுத்தற் சபையானது குடிக்கணிப்பு நடவடிக்கைக்கான சகல திட்டங்களையும் வகுக்கவும் செயற்பாடுகள்- முன்னேற்றங்களை அவதானித்து ஆலோசனை வழங்கவும் ஏற்படுத்தபபட்டதாகும். இச்சபையின் ஆரம்ப நடவடிக்கையாகக் குடித்தொகை, வீட்டு, மற்றும் இதனோடு தொடர்புடைய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும். அரச, அரசசார்பற்ற நிறுவனங்

களுக்கு கணிப்பின் நோக்கத்தையும் உள்ளடக்கத்தையும் அனுப்பி அவர் களது பரிந்துரைகளையும் விளக்கங்களையும் கேட்டறிதல் அமைகின்றது.

அத்துடன் பின்வரும் விடயங்களிற் கவனம் செலுத்தப்படுவது அவசிய மானதுந் தவிர்க்க முடியாததுமாகும். அதாவது முன்னர் மேற்கொள்ளபட்ட குடிக்கணிப்புக்கள் எவ்வாறு செயற்படுத்தப்பட்டன என்பதை அறிதல் அவசிய மாகும். அத்துடன் கணிப்பானது எவ்வாறு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதிலும் எவ்வளவு காலப்பகுதியில் இதனை நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். குடித்தொகையுடன் தொடர்புடைய துறைகளிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கணிப்பினை மேற் கொள்வதற்கு வசதியினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உதாரணமாகத் தபால்மா அதிபர் அலுவலகம், பொலீஸ் திணைக்களம், அரச போக்குவரத்துச் சபை, உள்ளூராடசிச் சபையினர் போன்ற பல்வேறு துறைகளுடன் இது சம்பந் தமாக கருத்தரங்குகளை நடாத்திக் கணிப்பு சிறக்க வழி காணப்படல் வேண்டும்.

### 3.2.3.நிர்வாகப் பிரிவுகள்

ஒவ்வொரு மாவட்டங்களுந் தனித்தனிக் குடித்தொகைக் கணிப்புக் களின் நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு மாவட்டமும் மீண்டும் உதவி அரச அதிபர் பிரிவாகவும் அவை பின் கிராம சேவகர்கள் பிரிவாகவும் பிரிக்கப்பட்டுக் கணிப்புமேற்கொள்வதற்கு வசதியாக அமைக் கப்படும். கிராம சேவகர் பிரிவு ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங் களையோ உள்ளடக்கியதாக அமையலாம். உதவி அரசஅதிபர் பிரிவுக்குள் உள்ளூராட்சிப் பிரிவுகள் காணப்பட்டாலும் அவை அவ்வவ் உள்ளூராட்சி சபைகளாகக் கணிக்கப்பட்டுத் தனியாகக் கணிப்பு மேற் கொள்ளப்படுவ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிர்வாக எல்லைகளில் மாற்றங்களை செய்ய வேண்டுமாயின், அது வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட வேண்டும். அத்தகைய மாற்றங்கள் உள்நாட்டு அமைச்சுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்ற போதிலுங் குறைந்தபட்சம் கணிப்பு நடைபெறுவதற்கு முன்னர் ஆறுமாத காலங்களுக்கு நிர்வாக எல்லைகளில் இம்மாற்றங்களை ஏற்படுத்தாது இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். எந்தவிதமான மாற்றங்கள் வேண்டப்படுமாயினும் அவை குடிக்கணிப்புக்குப் பின்னர் மேற்கொள்வதே நன்று.

### 3.2.4. குடிக்கணிப்பு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி

இலங்கையில் 1981ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டின் படி குடிக்கணிப்பு உத்தியோகத்தர்கள் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டனர். முதலாவதாக சிரேஷ்ட பயிற்சியாளர்களுக்கு (Master Trainees) இது தொடர் பாக பயிற்சி வழங்கப்பட்டது. இவர்கள் உதவிப்பணிப்பாளர் மற்றும் புள்ளி விபரவியலாளர் தரத்தினைக் கொண்டவர்கள். இவர்களே குடிக்கணிப்பினை

மேற்கொள்ளும் பொறுப்பிற் பெரும்பங்கினைக் கொண்டவர்கள். இவர்களே கள வேலைகளுக்குப் பொறுப்பாக விருப்பதுடன் கேள்விக்கொத்துச் சம்பந்தமான சகல விடயங்களுக்கும் விளக்கம் அளிப்பவர்களாவர். அத்துடன் குடிக்கணிப்பு அட்டவணையினை வரைதலுடன் அறிவுறுத்தல் கைநூல்களையும் தயாரித் தலிலும் ஈடுபடுபவர்களாவர்.

இரண்டாவது வகையினர் சிரேஷ்ட பயிற்சியாளர்களினாற் பயிற்சி யளிக்கப்படும் பயிற்சியாளர் ஆவர். இவர்கள் புள்ளிவிபரவியலாளர்களாக இருப்பதுடன் ஒவ்வொரு உதவிஅரசஅதிபர் பிரிவுகளிலும் மேற்பார்வையாளர் களுக்கும் கணிப்பினை மேற்கொள்பவர்களுக்கும் பயிற்சி அளிப்பார்கள். எவ்வாறு கணிப்பு அட்டவணையினை நிரப்ப வேண்டும் என்பதற்குரிய விளக் கங்கள் இவர்களால் வழங்கப்படும். மேற்பார்வையாளர்களாக உள்ளவர்களுக் குப் பயிற்சியளித்து அவர்களுக்குப் பொறுப்பினை வழங்கி செயற்படுவார்கள். மூன்றாவது வகையினராகக் கொள்ளப்படுவர் இவர்கள் பிரதானமாகக் கிராம சேவையாளர்களாகவும் உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்களாகக் கடமைபுரிபவர்களாகவுமிருப்பர். இப்பயிற்சியில் மேற்பார்வையாளர்களின் கடமைகள் பற்றி விளக்கமளிக்கப்படும்.

மேற்பார்வையாளர்களினாலும் மற்றும் பயிற்சியாளர்களினாலும் ஒவ் வொரு உதவிஅரசஅதிபர் பிரிவுகளிலும், கிராமசேவையாளர் மட்டத்திலும், உள்ளூராட்சிச்சபைகள் மட்டத்திலும் கணிப்பினை நேரடியாகச்சென்று மேற் கொள்பவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இலங்கையில் 1981ஆம் ஆண்டு 67,000 கணிப்பாளர்கள் பயிறசி பெற்றுக் கணிப்பீடடில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குக் கணிப்பீடு செய்வதற்கான வழிமுறைகள், விளக்கங்கள், கணிப்பு அட்டவணையை எவ்வாறு பதிவுக்குட்படுத்துவது போன்றவற்றிற்குச் சிறப்பிடம் கொடுத்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது கணிப்பு சம்பந்தமான கைநூல் ஒன்றும் வழங்கப்படும்.

மேற்குறித்த நான்கு வகையினரதுங் கூட்டுமுயற்சியின் விளைவாகவே குடிக்கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.2.5.கணிப்புக்கான நடைமுறைகள்

ஏற்கனவே கூறப்பட்டது போலவே, இலங்கையின் குடிக்கணிப்பானது டீபக்ரோ முறையினைச் சார்ந்தது. இம்முறையின் பிரகாரம் குறிப்பிட்ட 'கணிப்பு இரவில்' ஒவ்வொருவரையும் எண்ணிக் கணக்கு எடுக்கப்படும். கணிப்பாளர்கள் இரு படிகள் வாயிலாகக் கணித்துக் கொள்வர்.

1.ஆரம்பக் கணிப்பு

2.இறுதிக்கணிப்பு என்பனவே அவையாகும்.

இலங்கையில் 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் படி ஆரம்பக் கணிப்பிற்கான காலப்பகுதி 01.03.81 தொடக்கம் 10.03.81ஆம் திகதி வரையாகும். இக்காலப்பகுதியிற் கணிப்பாளர்கள் குறிப்பிட்ட கணிப்புப் பிரிவுகளிற் காணப்படும் வீட்டு அலகுகளினதும் கட்டங்களினதும் பிரிவுகள்

ஆகியவற்றினைக் கணிப்பு அட்டவணையிற் குறித்துரைப்பதுடன் இறுதிக் குடிக்கணிப்பின் போது மேற்படி அலகுகளில் வாழ்பவர் எனக் கருதப்படுவர்களையும் பதிவு செய்தனர்.

இறுதிக் கணிப்பு இரவான 17.03.81ஆம் திகதி மாலை 6 மணி தொட்டு நள்ளிரவு 12.00 மணி வரையும் ஏற்கனவே பதிவுக்குள்ளான ஒவ்வொரு அலகுகளுக்குஞ் சென்று ஏற்கனவே ஆரம்பஅறிக்கையிற் குறிப்பிடப்பட்டவற்றைப் பற்றி விசாரித்து கணிப்பு அட்டவணையை சரிசெய்து கொண்டனர். உதாரணமாக ஆரம்ப கணிப்பின் போது பதிவு செய்யப்பட்டவர் அன்றைய தினம் அங்கு இருக்காதுவிடின் அவரின் பெயரினை நீக்கினர். அதே போலப் புதியவர் ஒருவர் அங்கு பிரசன்னமாயிருந்திருந்தால் அவரினை பதிவுக்குள்ளாக்கினர் எனலாம்.

குறிப்பிட்ட கணிப்பு இரவில் வீட்டுக்கு வெளியில் நடமாடுபவர்களைப் பதிவு செய்வது தொடர்பாக விசேட ஒழுங்குகள் செய்யப்படடிருக்கும். வீட்டுக்கு வெளியே கணிப்பீடு செய்யப்படுபவர்கள் அருகிலுள்ள விமானநிலையம், புகையிரத நிலையம், பேருந்து நிலையம், காவல்நிலையம் போன்ற பொது இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர். அவ்வவ்விடங்களிற் காணப்படுபவர்கள் அங்கு வைத்தே கணிப்பீடு செய்யப்படுவார்கள். பெருந்தோட்ட மக்களின் கணிப்பினை பொறுத்த வரை விசேட ஒழுங்குகள் செய்யப்படும். 1981ஆம் ஆண்டு கணிப்பிலும் இவ் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறிப்பாக மேற்படி தோட்ட அத்தியட்சகர் தமது தோட்ட எல்லைக்குள் வாழும் மக்களின் கணிப்பினை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் அவரே முழுப் பொறுப்பினையும் ஏற்கவேண்டும்.

இறுதியாகக் கணிப்பினை மேற்கொள்பவர்கள் கணிப்பு அட்டவணையைத் தமது மேற்பார்வையாளர்களுக்குக் கொடுப்பதற்கு முன்னர் வயதுத் தொகுதி அடிப்படையில், மொத்தக் குடித்தொகை பற்றிய சுருக்கமான அறிக்கையினையுஞ் சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும். மேற்பார்வையாளர் கணிப்பு அட்டவணையை மீள் பார்வை செய்து, தமது மேலதிகாரியான உதவிக்கணிப்பு அத்தியட்சகருக்கு அனுப்பிவைப்பார். அதனை அவர் மாவட்ட அத்தியட்சகருக்கு அனுப்பவே அவரூடாகக் கொழும்பிலுள்ள தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

### 3.2.6.விளம்பரப்படுத்தல்

குடிக்கணிப்பு மேற்கொள்வது தொடர்பாகத் தேசிய ரீதியில் மக்களுக்குக் கணிப்பு சம்பந்தமாகத் தெளிவு ஏற்படுவதற்காகத் தொடர்பு சாதனங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்படும். இந்த விளம்பரப்படுத்தல் இரு நோக்கங்களை அடைவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது. மக்களுக்குக் கணிப்பின் நோக்கத்தைத் தெளிவுபட வைப்பதுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் இதனால் கிடைக்ககூடிய நன்மைகளை எடுத்துக் காட்டுவதற்குமாகும். இரண்டாவதாக, ஆரம்பக் கணிப்பின் போதும் இறுதிக்கணிப்பின் போதும் வேண்டப்படுகின்ற

தகவல்களைக் குடியிருப்பாளர்கள் கணிப்பினை மேற்கொளபவர்களுக்கு அளிப்பதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதற்கேயாகும்.

1981ஆம் ஆண்டுக்கணிப்பின் போது இலங்கை ஜனாதிபதி மக்களுக்கு கணிப்பு சம்பந்தமாக இரண்டு விண்ணப்பங்களை விடுத்தார். ஆரம்பக் கணிப் பினை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் சிறப்பாக இயங்குவதற்கு ஏற்ற உதவியினை வழங்குமாறும் இறுதிக் கணிப்பினை மேற்கொள்ளும் குறித்த இரவு 6 மணியிலிருந்து 12 மணி வரையும் மக்கள் தமது இல்லங்களிற் தவ றாது இருக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

குடிக்கணிப்பினை மேற்கொள்ளும் போது மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டுமென்று தொடர்பு சாதனங்களுடாக விளக்கமளிக்கப்படும். அத்துடன் அடிக்கடி பத்திரிகைகளில், மக்கள் அக்கறை கொள்வதற்கு வசதி யாக, விளம்பரங்கள் கொடுக்கப்படும். இவை எல்லாம் கணிப்பின் அவசியத்தை வெளிக்கொணர்வதன் பொருட்டே ஆகும். சினிமாக் கொட்டகைகளிற் "கணிப் பும் நீங்களும்" என்ற சிறிய விவரணப்படம் சினிமாக் காட்சிக்கு முன்னர் காண்பிக்கப்படும்.

### 3.2.7.தரவினை ஒழுங்குபடுத்தலும் வெளியிடுதலும்

கணிப்பு அட்டவணையின் மூலம் சேகரிக்கப்பட்டவற்றைத் தலைமைச் செயலகத்தில் ஒழுங்குபடுத்துவது அடுத்த முக்கிய பணியாகும். அதாவது கிடைக்கப்பெற்ற தரவுகளை வகைப்படுத்துவதுடன் சில விடயங்களிற் 10 சத வீத மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படும். தரவுகளை ஒழுங்குபடுத்துதல் இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் கைநூலாக வகுத்துத் திரட்டுவதும் தொகுப்பாக்கம் செய்வதும் கணணிக்கு வழங்குவதுமாகும். இதே வேளை கணிப்பு அட்டவணைத் தரவுகளிற் காணப்படுங் குறைகளை நிவர்த்தி செய்வதுடன் கணிப்பின் போது பெறப்பட்ட ஒவ்வொரு விடயங்களும் அட்ட வணைகள் மூலமாக வெளிக்கொணரப்படுகின்றன.

இறுதிக்கணிப்பு மேற்கொள்ளப்பட்ட இரு வாரங்களிற் குடிக்கணிப்புத் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியாகக் கணிப்பிடப்பட்ட மொத்தக் குடித் தொகையின் ஆரம்ப அறிக்கை வெளியிடப்படும். இவ்வறிக்கையில் மாவட்டரீதி யாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் ரீதியாகவும் குடித்தொகை எண்ணிக்கை யையும் பால் வேறுபாட்டினையுந் தெரிவிப்பர். இதன் பின்னர் எல்லாத் தகவல் களையும் ஒன்று திரட்டி மூன்று மாதங்களுள் முதலாவது வெளியீட்டினைச் செய்தல் வேண்டும். இலங்கையில் அவ்வாறு 1981ஆம் ஆண்டும் செய்யப் பட்டது. இதில் இனம், மதம், 18 வயதுக்கு மேலும் 18 வயதுக்குக் கீழும் உள்ள மக்களின் எண்ணிக்கை என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

1981ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி பின்வரும் வெளியீடுகள் வெளி வந்துள்ளன.

1. 10 சதவீத மாதிரியை அடிப்படையாகக் கொண்ட குடித்தொகை அட்ட வணை ஆரம்ப வெளியீடு 2

2. 10 சதவீத மாதிரியை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்பு அட்டவணை ஆரம்ப வெளியீடு 3

3 பொருளாதார நடவடிக்கையில் ஈடுபாடு கொண்ட குடித்தொகை ஆரம்ப வெளியீடு 4

4. இயற்கையாக வலது குறைந்தவர்களின் புள்ளிவிபரம்

5. மாவட்ட அறிக்கைகள்

6. சிறிய பிரதேசங்களில் அடிப்படைக் குடித்தொகைத் தரவுகள்

7. அகில இலங்கைக் குடித்தொகை அட்டவணைகள்.

8. இடப்பெயர்வு

9. குடியிருப்புக்கள்

போன்ற வெளியீடுகளே அவையாகும்.

### 3.3.குடிக்கணிப்புக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகள்

இலங்கையில் 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிக்கணிப்பிற்கு ஐக்கிய நாடுகள் சபை பெருமளவில உதவி புரிந்துள்ளது. முதலாவதாக (BM 4331) கணணி முறை அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் கணிப் புப் பிரிவிற் படவரைகலைப் பிரிவினை ஏற்படுத்திக் கொடுத்தது மட்டு மல்லாது இத் துறைசார்ந்த தொழில்நுட்பவியலாளர்களுக்கு வெளிநாடுகளிற் பயிற்சியும் கொடுத்ததுடன் கட்டிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அத்துடன் UNFPA யின் அனுசரணையுடன் குடிக்கணிப்பினை மேற்கொள்வ தற்குத் துறைசார் நிபுணர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்கியதுடன் கருததரங்குகளையும் நடாத்தியது. இந்நிறுவனத்தின் உதவியால் முன்னர் எப்போதும் இல்லாத விதத்தில் புள்ளிவிபரங்களைச் சேகரிக்க முடிந்தது மட்டுமன்றி வெளியீடுகளையும் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது எனலாம்.

### 3.4.கணிப்பு அட்டவணை

கணிப்புத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு வகையான கணிப்பு அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன.

1. பொது
2. மாதிரி

மாதிரி அட்டவணையானது பொது அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட சகல விடயங்களையும் கொண்டிருப்பதுடன் இடப்பெயர்வு, குடியிருப்புக்கள் பற்றிய விடயங்களையும் கொண்டதாக அமைந்திருக்கும். 1981ஆம் ஆண்டுக் கணிப் பின் போது பெறப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### 3.4.1.பொது அட்டவணை

குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை

ஒவ்வொருவருக்கான தொடர் இலக்கம்

குடும்பத் தலைவர்களுக்கு ஏனையோரின் உறவு முறை
பால்
மதம்
இனத்தொகுதி
பிரஜாவுரிமை
உடற் பலக்குறைவு
பிறந்த திகதியும் வயதும்
விவாக நிலை
பாடசாலைகளில் அல்லது ஏனைய கல்வி நிறுவனங்களிலான வரவு
கல்விப்பேறு
தமிழ், சிங்கள, ஆங்கில எழுத்தறிவு
கடந்த 30 நாட்களில் பிரதான தொழில்கள்
தொழில் தேடப்பட்டது
தொழில் தேடாததற்குரிய காரணிகள்
தொழில் தேடிக்கொண்டிருக்குங் காலம்
பிரதான தொழில்
கைத்தொழில், வர்த்தகம், சேவைத்தொழில் வகைகள்
தொழில் நிலை
தொழில் பார்க்கும் அல்லது பாடசாலை இருக்கும் இடத்திற்கும் வாழுமிடத்திற்கும் இடையிலுள்ள தூரம்
மேற்படி இடத்துக்குப் போக்குவரத்து எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது.

### 3.4.2.மாதிரி அட்டவணைக்குரிய மேலதிக விபரங்கள்

இடப்பெயர்வு
பிறந்த இடம்
வழக்கமாகக் குடியிருக்கும் இடம்
வழமையான வதிவிடம் அமைந்துள்ள நகரத்தில் அல்லது கிராமத்தில் வசித்த காலம்
முன்னைய வதிவிட மாவட்டம்
வீட்டு வசதிச் சிறப்பியல்புகள்
வீடுகளின் அலகின் விபரணம்
குறித்த அலகில் எத்தனை குடியிருப்பாளர்
பொதுவாகக் குடியிருப்பாளரின் எண்ணிக்கை
நிறைவு செய்த ஆண்டு
கட்டிட அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான பொருட்கள்.

1. சுவர்
2. கூரை
3. தளம்

அறைகளின் எண்ணிக்கை

குடிநீர் பெறுவதற்கான பிரதான மூலாதாரம்
மலசலகூட வசதி
வெளிச்சமூட்டும் பிரதான வகைகள்
சமையலுக்கான எரிபொருள்
நிலவாட்சி அலகுகள்
ஊனமுற்றவரின் பெயர்
பால்
வயது
பிறந்த திகதி
பிறந்த இடம்
குருடர்/ செவிடர்/ ஊனம் எனக் குறிப்பிடுக.
குருடு/ செவிடு/ ஊனநிலை ஏற்பட்ட வயது
குருடு/ செவிடு/ ஊன நிலை ஏற்பட்டமைக்கான காரணம்
கையிலேற்பட்ட குறைபாடு
கைகளில் ஊனம் எவ்வயதில் ஏற்பட்டது.
கைகளில் ஊனம் ஏற்பட்டமைக்கான காரணம்
கால்களில் ஏற்பட்ட குறைபாடு
கால்களில் ஊனம் ஏற்பட்ட வயது
கால்களில் ஊனம் ஏற்பட்டமைக்கான காரணம்
ஏனைய இயலாமைகள்
பிழைக்கும் வழிவகைகள்
நிறுவனம் ஒன்றில் தொழில் புரிகின்றீரா?.
தொழில் யாது
என்பனவே அவையாகும்.

அட்டவணை3.1, 1871-1981ஆம் ஆண்டுகளின் குடிக்கணிப்புக் காலங்களில் பெறப்பட்ட தகவல்களாகும். சகல குடிக்கணிப்புக் காலங்களிலும் வயது, பால், இனம், மதம் என்பன ஒழுங்காகப் பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் முக்கியமான தொழில்கள் பற்றி 1953ஆம் ஆண்டு தவிர்ந்த ஏனைய கணிப்புக்களில் ஒழுங்காகப் பெறப்பட்டுள்ளன. 1953ஆம் ஆண்டில் மாதிரி அளவீட்டின் மூலம் தொழில் பற்றிய தகவல் பெறப்பட்டுள்ளது. பிறந்த இடம் தொடர்பாக 1881ஆம் ஆண்டுக் கணிப்பினை விட ஏனைய காலங்களில் சேகரிக்கப்பட்டுள்ளது. 1971, 1981ஆம் ஆண்டுக் கணிப்புக்களில் இவ்விடயம் மாதிரி அளவீட்டின் மூலம் பெறப்பட்டிருக்கின்றது. 1981ஆம் ஆண்டுக் கணிப்பில் வேலை தேடாமைக்கான காரணிகள், மும்மொழியில் எழுதவும் படிக்கவுமான அறிவு,பாடசாலைகள், தொழிலிடத்துக்குமானதூரம், அதற்கான போக்குவரத்து முறைமை போன்றன முதல்முறையாகப் புகுத்தப்பட்டுள்ளன. பொதுவாக நோக்கின் 1946ஆம் ஆண்டின் பின்னரே குடிக்கணிப்பின் மூலம் பெறப்படும் தகவல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1**

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குடிக்கணிப்பு அட்டவணையில்
உள்ளடங்கிய விடயங்கள் - 1871 - 1981

| குடிக்கணிப்பு அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்ககள் | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **குடிப்புள்ளியியலும் தனிப்பண்புகளும்** | | | | | | | | | | | | |
| பெயர் | * | * | * | * | * | * | * | *S | * | * | * | * |
| குடியிருப்பாளருடன் அல்லது குடும்பத்தலைவருடன் உள்ள தொடர்பு | * | * | * | - | - | - | - | * | * | * | * | * |
| பால் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| பிறந்த திகதி | - | - | - | - | - | - | - | - | - | * | * | * |
| வயது | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| விவாக நிலை | * | - | - | * | * | * | * | * | *S | * | * | * |
| இனம் அல்லது சாகியம் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |

| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சமயம் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| பிரஜாவுரிமை | - | - | - | - | - | - | - | - | * | * | * | * |
| **கல்வி பற்றிய தகவல்கள்** | | | | | | | | | | | | |
| சிங்களம் அல்லது தமிழைப் பேசும் ஆற்றல் | - | - | - | - | - | - | - | * | * | * | - | - |
| ஆங்கிலம் பேசும் ஆற்றல் | - | - | - | - | * | * | * | * | * | * | - | - |
| எழுதவும் படிக்கவும் உள்ள அறிவு | - | * | * | * | * | * | * | * | * | * | * | - |
| ஆங்கிலத்தில் எழுதவும் படிக்கவும் உள்ள அறிவு | - | - | - | * | * | * | * | * | * | * | - | - |
| தமிழ் ஆங்கிலம் சிங்களம் எழுதவும் படிக்கவுமானஅறிவு | - | - | - | - | - | - | - | - | - | - | - | * |
| கல்வி ஆற்றல் | - | - | - | - | - | - | - | - | *s | * | * | * |
| பாடசாலைக்குச் செல்லல் | - | - | | - | - | - | - | - | - | - | - | * |

| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பொருளாதார நிலைமை** | | | | | | | | | | | | |
| தொழில் நிலைமை | - | - | - | - | - | - | - | - | - | * | * | * |
| முதல் நிலைத் தொழில் | * | * | * | * | * | * | * | * | *S | * | * | * |
| உபதொழில் | - | - | - | * | * | * | - | - | - | - | - | - |
| கைத்தொழில் | - | - | - | - | - | - | - | * | * | * | * | * |
| தொழிற்றகைமை | - | - | - | - | - | - | - | * | * | * | * | * |
| சம்பளம் அல்லது கூலி (வருமானம்) | - | - | - | - | - | - | - | - | * | *S | - | - |
| தங்கியிருத்தல் | - | - | - | * | * | * | * | * | * | - | - | - |
| வேலையில்லாது இருக்கும் காலம் | - | - | - | - | - | - | - | - | *S | - | * | - |
| வேலை தேடாமைக்குரிய காரணம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | * |

| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **இடப்பெயர்வும் வதிவிடம் பற்றிய தகவலும்** | | | | | | | | | | | | |
| பிறந்த இடம் | * | - | * | * | * | * | * | * | * | * | *s | *s |
| வழக்கமாகக் குடியிருக்கும் இடம் | - | - | - | - | - | - | - | - | - | - | *s | *s |
| வழக்கமாகக் குடியிருக்கும் இடத்தில் வாழும் காலம் | - | - | - | - | - | - | - | - | - | - | *s | *s |
| முன்பு குடியிருந்த இடம் | - | - | - | - | - | - | - | - | - | - | *s | *s |
| இலங்கையில் வாழ்ந்த காலம் | - | - | - | - | - | - | - | * | * | - | - | - |
| **விவாகம்- கருவளம்** | | | | | | | | | | | | |
| விவாகத் திகதி | - | - | - | - | - | - | * | *s | - | - | - | - |
| முன்னர் விவாகம் புரிந்திருந்தால் அதன் திகதி | - | - | - | - | - | - | * | *s | - | - | - | - |

| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் விவாகம் செய்யும் போது வயது | - | - | - | - | - | - | - | - | - | - | *s | - |
| முதல் விவாக காலம். | - | - | - | - | - | - | - | - | - | - | *s | - |
| ஒரு தடவைக்கு மேல் விவாகம் புரிந்திருந்தால் அந்த விவாகத்தின் காலம் | - | - | - | - | - | - | - | - | - | - | *s | - |
| முதற் குழந்தை பிறந்த போது வயது | - | - | - | - | - | - | - | * | *s | - | - | - |
| பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை | * | - | - | - | - | - | - | * | *s | - | *s | - |
| வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | - | - | - | - | s* | - |
| கடந்த ஐந்து வருடத்திற்குட் கடைசியாகப் பிறந்த உயிர்ப்பிறப்பின் திகதி | - | - | - | - | - | - | - | - | - | - | s* | - |

| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வேறு விடயங்கள்** | | | | | | | | | | | | |
| உடல் நலக்குறைவு | * | * | * | * | * | --- | * | * | * | --- | * | |
| அனாதை | ---- | ---- | ---- | ---- | --- | --- | --- | * | * | --- | --- | --- |
| பாடசாலைக்கும் தொழிலிடத்துக்குமான வீட்டிலிருந்து தூரம் | ---- | ---- | ---- | ---- | ---- | ---- | ---- | ---- | ---- | ---- | ---- | * |
| பாடசாலை அல்லது வேலைத்தலத்துக்கான பிரதான போக்குவரத்து முறை | ---- | ---- | ---- | ---- | ---- | ----- | ----- | ----- | ----- | ----- | ---- | * |

* - ஒவ்வொருவரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்
*s- மாதிரி ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்
---- - தகவல் பெறப்படவில்லை.

Source : Census of Population 1981, General Report

### 3.4.3.பயிற்சி (Training)

குடிக்கணிப்பின் முக்கியத்துவத்தினைப் பற்றிக் கணிப்பினை மேற்கொள்பவர்கள் தெரிந்திருக்கும் பட்சத்திலேயே தரவுகளைச் சேகரிப்பதிற் கவனம் செலுத்தலாம். அதாவது பொறுப்பும் கடமையும் இதனை மேற்கொள் வதற்கு அவசியம் வேண்டப்படுவதாகும். குடிக்கணிப்புத் திணைக்களத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைச் செயலில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் தெளிவாக விளங்க வைப்பது கணிப்பினை மேற்கொள்பவர்களது கடமை யாகும். தவறும் பட்சத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும்.

### 3.4.4.கணிப்பினை மேற்கொள்ளல்

பொதுவாக மக்கள் ஓய்வாகவிருக்கும் நாளொன்றினைத் தெரிவு செய்து கணிப்பினை மேற்கொள்ளுதலே கணிப்பீட்டின் முக்கிய அம்சமாகும். இக்கணிப் பில் ஆசிரியர்களே பெரும் பங்கு கொள்கின்றனர். எனினும் அரச மற்றும் உள் ளூராட்சி உத்தியோகத்தர்களும் பங்குகொள்கின்றனர். பொதுவாகக் கணிப்புக்கான திகதி குறிப்பிட்ட நாளாகவிருப்பினும் நிரந்தரமாகக் காணப்படும் தகவல்கள் குறைந்தபட்சம் முதல் இரண்டு கிழமைகளிற் பெற்றுக்கொள்ளப் படுகின்றது. டீபக்ரோ முறையில் குடிக்கணிப்பு இரவன்று எங்கு பிரசன்னமாக விருக்கின்ற னரோ அங்கேயே கணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர். டீயூரே முறையில் வழமையாகக் குடியிருக்கும் வாழ்விடத்தில் வைத்துக் கணிப்புக்குட்படுத்தப் படுகின்றனர்.

இவ்வாறு பெறப்பட்ட கணிப்பினை மேற்பார்வையாளர்கள் மிகக் கவன மாகச் சரிபார்த்துப் பரிசீலினை செய்தல் முக்கிய பணியாகவிருக்கின்றது. இவ் வாறு பெறப்பட்ட கணிப்பீடுகள் தலைமைச்செயலகத்திற்கு அனுப்பப்பட்டு இரண்டு கிழமைக்குள் ஆரம்ப அறிக்கையினை தொடர்பு சாதனங்களூடாக மக் களுக்கு அறிவிக்கப்படும். இதனைத் தொடர்ந்து மீண்டும் நுணுக்கமாகக் கணிப் பினைச் சரிபார்த்துக் கொள்ளல். குடிக்கணிப்பினை மேற்கொள்பவர்களின் தலையாய கடமையாகின்றது. இதன் பின்னர் குடிக்கணிப்பின் முழு விபரங்கள் அடங்கிய பொது அறிக்கை வெளியிடப்படும். அத்துடன் அரசின் நிதி நிலைமை மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டு கணிப்புக்குட்படுத்தப்பட்ட விடயங்கள் பகுதி பகுதியாக பின்னர் வெளியிடப்படும்.

### 3.5. 2001 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பு

1871-1981ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பு களுக்கும் 2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்புகளுக்குமிடையில் பெருமளவு வேறுபாட்டினைக் காண முடிகின்றது. 1950களின் பிற்பகுதிகளி லிருந்து இலங்கையின் இனப்பிரச்சினையானது இனக்கலவரங்களாக பரிண மித்து 1980களின் முற்பகுதியிலிருந்து விரிவு பெற்று ஆயுதப் போராட்டமாக

வளர்ந்துள்ளது. இதன் விளைவாக நாட்டின் மக்களின் குடிப்புள்ளியியல் மற்றும் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகள் பற்றி துல்லியமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதான 1991ஆம் ஆண்டிற்கான குடிக்கணிப்பினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதனால் அரசின் கொள்கை உருவாக்கம், திட்டமிடல், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல், மக்கள் நல்வாழ்வினை முன்னெடுத்துச் செல்லல், கல்விச்செயற்பாடுகள், பாராளுமன்றத்துக்கான அங்கத்தவர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல், மக்களது பிரதேசப்பரம்பலை அறிந்துகொள்ளல், வாழ்க்கைத் தரத்தினை அறிதல் போன்ற பலவற்றைக் கண்டறிதலிலும் செயற்படுத்துதலிலும் அரசாங்கத்திற்கும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கும் ஆய்வாளர்களுக்கும் கடினமாகவிருந்துள்ளமை கண்கூடு.

2001ஆம் ஆண்டுக் கணிப்பீட்டினை இலங்கை அரசு மேற்கொள்வதன் மூலம் மேற்குறித்தவற்றிற்கு தீர்வு காண முற்பட்டு 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆம் திகதி கணிப்பு மேற்கொள்ளப்படுவதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் முடுக்கிவிடப்பட்டிருந்தது. எனினும் நிலையான கணிப்பினை மேற்கொள்வதற்கான சூழ்நிலை நாட்டில் நிலவவில்லை. குறிப்பாக இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் (அம்பாறை மாவட்டம் தவிர்ந்த) யுத்தநிலை காரணமாக கணிப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை. அதாவது 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டுமே கணிப்பு நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடித்தொகைக் கணிப்பானது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே குடிக்கணிப்பின் தத்துவமாகும். நாட்டின் ஒரு பகுதியில் மேற்கொண்டு வேறொரு பகுதியில் மேற்கொள்ளாது விடுவதால் அக்கணிப்பு முழுமைத்தன்மையைப் பெறுமெனக் கூறமுடியாது. அதாவது நாட்டிலுள்ள மக்களது முழுமையான சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் குடிப்புள்ளியியல் பண்புகளை அறியமுடியாது. மாவட்டரீதியாகவோ இன ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ ஒப்பிட்டு விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது. குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் இனப்பிரச்சினையின் விளைவாக அகதிகளாக சர்வதேசங்களில் வாழ்ந்து வருவதுடன் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கணிப்பு மேற்கொள்ளாத நிலையாலும் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 4.4 சதவீதமானவர்களென கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் இப்பண்புகளை ஆராயும் ஆய்வாளனுக்கு மயக்கத்தைக் கொடுக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது மட்டுமல்லாது சில சந்தர்ப்பங்களில் இவ்வீதத்தினையே உண்மைநிலை எனக் கொள்ளவும் இடமுண்டு.

அதே போலவே வடக்கு,கிழக்கு மாகாணங்களில் கணிப்புக்கள் மேற்கொள்ளப்படாததால் போர்ப்பிரதேச வாழ்வில் விதவைகள், அங்கவீனர்கள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் தனிமைப்படுத்தும் நிலை, கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைவடைதல், கலாசார சீரழிவு, குழந்தை இறப்பு உட்பட உயிரிழப்புக்கள், போசாக்கற்ற நிலையில் சாப்பிறப்புக்கள், பிரசவத்தாய் இறப்புக்கள், பால் வீதாசார மாற்றங்கள், விவாகநிலைப் பண்புகள் போன்றவற்றினை நாடளாவிய ரீதியில் அறிய முடியாத நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் 18 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட குடிக் கணிப்புக்கள் அவ்வவ் மாவட்டங்களில் வாழும் மக்களின் பல்வேறுபட்ட சமூக பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளை முழுமையாகப் பெற்றுள்ளதனால் அவ்வவ்மாவட்ட நிலையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளிற்குப் பேருதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையில் குடித்தொகையானது (7 மாவட்டங்கள் தவிர) 16,864,544 ஆகும். 1981-2001ஆம் ஆண்டுகளிற்கிடையில் சராசரி வளர்ச்சி வீதம் 1.2 ஆகவுள்ளதை கணிப்பு வெளிக்கொணர்ந்துள்ளது. எனினும் கேகாலை மாவட்டம் ஆகக்குறைந்த வளர்ச்சி வீதத்தினையும் (0.6%) அம்பாறை மாவட்டம் கூடுதலான வளர்ச்சி வீதத்தினையும் (2.0%) கொண்டுள் ளதைக் காணமுடிகின்றது. வடக்குக் கிழக்கு மாவட்டங்களில் கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் மாவட்ட வளர்ச்சிப் போக்கில் வேறுபட்ட நிலையையே காட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. 1981ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடித்தொகை 731,000 ஆகும். 2001ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1,000,000 மக்களாக வளர்ச்சியடைந்தி ருக்க வேண்டும். ஆனால் இம்மாவட்டத்தில் 2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 502000 மக்களே வாழ்ந்ததாக பிறிதொரு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது என் பதும் இங்கு நோக்கற்பாலது.

இன அடிப்படையில் இஸ்லாமியர்களின் வளர்ச்சியே அதிகம் காணப் படுவதாக 2001ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. அதாவது குடும்பத்திட்டமிடலில் ஈடுபாடு கொள்ளாத நிலையும் இள வயது விவாகமும் வளர்ச்சிக்குக் காரணம் எனப்படுகின்றது. மேலும் நகரக் குடித்தொகையானது கொழும்பு மாவட்டத்தில் 57.4 சதவீதமாயும் இதற்கு அடுத்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் 19.1 சதவீதமாயும், கம்பஹா மாவட்டத்தில் 14.6 சதவீதமாகவும் இருந்துள்ளது.

மதரீதியான கணிப்பில் பௌத்தர்கள் 76.7 சதவீதமாகவும், இஸ்லாம், இந்து, ரோமன் கத்தோலிக்கர், ஏனைய கிறிஸ்தவர்கள் முறையே 8.5, 7.9, 6.1, 0.8 சதவீதமாக இருப்பதைக் குறித்துக் காட்டுவது பொருத்தமானதாக இருக் கும். ஏனெனில் 18 சதவீதத்திற்கு மேற்பட்ட இந்துக்கள் முழுமைப்படுத்தப் படாத கணிப்பில் 7.9 சதவீதமாக இருக்கின்றமையைக் காணலாம். கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கொழும்பு, திம்பிரிகாசய என்ற இரு பிரதேச செயலகங்கள் உண்டு. கொழும்பு மாநகரசபைப் பகுதியில் 2001ஆம் ஆண்டுக் கணிப்பில் 642,000 மக்கள் வாழ்ந்துள்ளனர். 1981இல் 588,000மாக இருந்தது. 1881இல் 110,000 ஆகவும், 1901இல் 154,000 ஆகவும் 1953இல் 260,000 ஆகவும் இருந்துள்ளதைக் காணலாம். இதற்கு வாழ்நாள் உள் இடப் பெயர்வாளர்கள் அதிகளவில் உள்வரவினை ஏற்படுத்தியுள்ளமையை இப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் கடந்த இரு தசாப்தங்களாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் குடித்தொகை வளர்ச்சி 0.4 சதவீத மாகவே இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகரசபை எல்லையில் இன விகிதாசாரத்தினைக் கருத்தில் கொள்ளின் சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லீம்கள் முறையே

41.4, 28.9, 23.9 சதவீதமாக காணப்படுகின்றனர். கொழும்பு பிரதேச பிரிவில் முறையே 31.0,31.1,31.8 சதவீதமாக இருக்கின்றனர். சிங்களவர்கள் மூன்றி லொரு பங்கிற்கும் குறைவாகவே உள்ளனர் என்பது இங்கு நோக்கத் தக்கது. திம்பிரிகாசய பிரதேச செயலர் பிரிவில் முறையே 56.1, 25.8, 12.5 சதவீமாக இருந்துள்ளனர்.

இவ்வாறாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்கு நாட ளாவிய ரீதியில் புள்ளிவிபரங்கள் வேண்டப்பட்ட போதிலும் 2001ஆம் ஆண்டு குடிக்கணிப்பு முழுமைத்தன்மை பெறாத நிலையில் தேசிய ரீதியிலான ஆய்வுகள், கணிப்பீடுகள், மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனவே விரைவில் முழுமையான குடிசனக் கணிப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். அதனை முன்னெடுப்பது சிரம மாக இருக்குமாயின் கணிப்பு நிகழாத மாவட்டங்களில் உடனடியாகக் கணிப் பினை மேற்கொள்ளும் பட்சத்திலேயே தேசிய ரீதியில் குடித்தொகை சம்பந்த மான விடயங்களிற்கு முக்கியத்துவம் கொடுத்து தேசிய பொருளாதார சமூக, பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

## 3.6.வாழ் நிலைப்புள்ளி விபரங்கள்

குடித்தொகையுடன் தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகளில் வாழ் நிலைப்புள்ளி விபரங்களைச் சேகரிப்பதும் ஒரு வழியாகும். இது ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறுதியாக இறப்பு வரையும் அவர் வாழ்விற் காணப்படுகின்ற நிகழ்வினை வெளிப்படுத்துவதாகும். சாப்பிறப்புத் (Still Birth) தொட்டுபிறப்பு, இறப்பு, மற்றும் விவாக நிலையோடு தொடர்புடைய விடயங்களைப் பதிவு செய்து கொள்வதே வாழ்நிலைப்புள்ளி விபர முறை எனப்படுகிறது.

குடிக்கணிப்பு முறையினூடாகப் பெறப்படும் பிறப்பு, இறப்புத் தரவுகள் பெரும்பாலும் திருப்தியுடையது எனக் கூறமுடியாது. ஏனெனில் இவை தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் செயற்பாடாதலாற் கணிப்பு அட்டவணையிற் கேட்கப்படும் வினாக்களுக்குச் சரியான பதிலினைத் தெரிவித்திருப்பர் எனக் கூறமுடியாது. எனவே தான் திருப்தியான, தொடர்ச்சியான வாழ் நிலைப்புள்ளி விபரத்தரவினை அவ்வவ் நாடுகளின் சட்டங்களூடாகப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாகப் பிறப்பு, இறப்பு, விவாகங்கள், விவாகரத்து, பிரிந்து வாழல், தத்தெடுத்தல் போன்ற பலவற்றைப் பெற்றக்கொள்வதையே இது குறித்து நிற்கும்.

வாழ்நிலைப்புள்ளிவிபரங்கள் மிக நீண்ட காலமாகப் பெறப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இத்தகவல்களைக் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மத நிறுவனங்களாற் பெற்றுக்கொள்ளப்பட்டன. பிறப்புக்கள், விவாகங்கள், ஞானஸ்தானம், இறந்தவர்களைப் புதைத்தல் ஆகிய விபரங்கள் கிறிஸ்தவ தேவாலய நிர்வாகத்தினாற் பெறப்பட்டு வெளியி டப்பட்டு வருகின்றன. இங்கிலாந்தில் தோமஸ் குரோம்வெல் (Thomas Groom-

well) என்ற மதகுருவினால் 1538ஆம் ஆண்டு இத்தகவல்கள் பெறப்பட்டன. சுவீடனில் 1608ஆம் ஆண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட கோவிற்பற்றுகளில் பதிவு செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டது. கனடா (1610), பின்லாந்து(1628), டென் மார்க்(1648) ஆகிய நாடுகளில் படிப்படியாக பதிவு செய்யும் முறை கொண்டு வரப்பட்டது.

19ஆம் நூற்றாண்டிற் பெரும்பாலான மேற்குலகநாடுகளில் இத்தகவல் களை சேகரிப்பதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து பதிவு செய்வதனை அவ்வவ் நாடுகளின் அரசாங்கங்கள் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். குறிப்பாக இங்கிலாந்தில் 1826ஆம் ஆண்டில் முதலாவதாக வாழ்நிலைப்புள்ளி விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. எனினும் இவற்றைக் கட்டாயமாக பதிவு செய்யவேண்டும் என 1874ஆம் ஆண்டிலேயே சட்டம் கொண்டு வரப்பட்டது. அக்காலப்பகுதிகளிற் பிறப்பு, இறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1926ஆம் ஆண்டிலிருந்தே சாப்பிறப்பினையும் பதிவு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கையில் 1867ஆம் ஆண்டிலிருந்தே வாழ்நிலைப் புள்ளி விபரங்களை பதிவு செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1897ஆம் ஆண்டு வரையும் பதிவு செய்வது கட்டாயப்படுத்த பட்டிருக்கவில்லை. எனினும் காலப்போக்கிற் பதிவு செய்வதில் அக்கறை கொண்டிருந்த போதிலும் எல்லா விபரங்களும் ஒழுங்காகப் பதிவுக்குட்படுத்தப்படுகின்றன எனக் கொள்ள முடியாது. உலகில் ஏறத்தாழ அரைப்பங்கு மக்களாற் பருமட்டான பிறப்பு, இறப்புக்கள் பதிவுக்குட் படுத்தப்படாதுள்ளன. மூன்றிலொரு பங்கு மக்களுக் கும் குறைவானவர்களாலேயே விவாகம் மற்றும் விவாகரத்து போன்ற பதிவுகள் பதிவுக்குட்படுத்தப்படுகின்றன எனலாம்.

வாழ்நிலைப்புள்ளி விபரங்களில் ஒவ்வொரு விடயங்களிலும் பல தகவல்கள் பெறப்படுகின்றன. குறிப்பாக பிறப்புக்களை எடுத்துக்கொண்டால், பிறந்ததிகதி, பால், தாயாரின்வயது, எத்தனையாவது குழந்தை, போன்ற வற்றையும் இறப்பினைப் பொறுத்தவரை நிகழ்ந்த திகதி, வயது, பால், இறந்த இடம், இறப்புக்கானகாரணி போன்ற பலவும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக 1992ஆம் ஆண்டில் இலங்கையில் நிகழ்ந்த பிறப்புக்களின் எண்ணிக்கை 350431 ஆகும். அதே ஆண்டில் நிகழ்ந்த இறப்புக்களின் எண்ணிக்கை 98017 ஆகும். எனவே தேறிய வளர்ச்சியானது 252414 ஆகும். அதே போலவே இவ்வாண்டில் நிகழ்ந்த பிறப்பு, இறப்புகளிற் பால் ரீதியாக ஆண்கள், பெண்கள், எத்தனைபேர் என்பதையும் கண்டுகொள்ளலாம்.

வளர்ச்சியடைந்த நாடுகளிற் பெருமளவில் இத்தகவல்கள் உண்மைத் தன்மை கொண்டதாகும். ஏனெனில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வுகளும் அங்கு பதிவுக்குட்படுகின்றன. வளர்முகநாடுகளிற் கணிசமான நிகழ்வுகள் பதிவுக்குட் படுத்தப்படாதுள்ளதால் உண்மை நிலையை வெளிக்கொணரும் எனக் கூறமுடி யாது. வாழ்நிலைப்புள்ளிவிபரங்களைப் பதிவுசெய்வது அண்மைக் காலங்களிற் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்றது. பதிவுக்குள்ளாகின்றவருக்கு அப்பத்திரம் சாட்சியாக அமைகின்றது. வளர்ந்துவரும் நவீன சமூகத்திற் தம்மை இணைத்துக் கொள்வதற்கு இப் பதிவுப்பத்திரங்கள் அவசியமானவை.

பிறப்பு, இறப்பு, விவாகஞ் சம்பந்தப்பட்ட பதிவுப்பத்திரங்கள் தன்னை அடையாளங் காட்டுவதற்கும் பிரஜாவுரிமையினை நிலை நிறுத்துவதற்கும் தனது தேசியத்தை உறுதிப்படுத்துவதற்கும் சமூகத்திலிருந்து நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியமாகவிருக்கின்றது. குறிப்பாக ஒருவரின் பிறப்பினை பதிவு செய்யும் போது அவரது பிறந்ததிகதி, இடம், நாடு ஆகியவற்றை அறிந்துகொள்ளமுடியும். அத்துடன் அவரது வயதினை உறுதிப்படுத்தக் கூடியதாகவிருக்கும். குடும்ப உறவு முறைகளைப் பலப்படுத்துவதற்குரிய, சட்டரீதியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய, அத்தாட்சியாகவும் அமைகின்றது. உதாரணமாகக் குடும்பங்களிற் சொத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவசியமாகின்றது. இறப்புப்பதிவானது இறந்தஉடலை அப்புறப்படுத்துவதற்கும் அவசியம் தேவைப்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் அப்புறப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படாத போதிலும் மேலைநாடுகளில் மிகமிக அவசியமாகும். இறப்புப்பதிவுகள் காப்புறுதி, ஓய்வூதியங்கள், உடமைகளைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றிற்குத் தேவைப்படும் ஆவணங்களுள் ஒன்றாகும். விவாகப் பதிவுகள் மக்களது விவாக அந்தஸ்தை வெளிக்கொணருவதாகும். மத ரீதியாக இந்து, கிறிஸ்தவ, பௌத்த கலாசாரத்தில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை விவாகம் செய்வது விருப்பத்துக்குரியதானதாய் இல்லை. ஒருவர் அவ்வாறு செய்யவேண்டும் எனத் தீர்மானித்தால் அவர் முதல் மனைவியை விவாகரத்து செய்த பின்னரேயே செய்யலாம். இவ்விடத்தில் விவாகப்பதிவுப்பத்திரம் அவரது முதல் விவாகத்தினை உறுதிப்படுத்துகின்றது. இருந்த போதிலும் பல நாடுகளில் விவாகங்கள் சம்பிரதாய முறைப்படியே நடந்துவருவதைக் காணமுடிகின்றது.

வாழ்நிலைப்புள்ளிவிபர முறையானது ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் தன்னை அறிமுகப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் தேசிய ரீதியாகக் குடிப்புள்ளியியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குடித்தொகை மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் குடித்தொகை எதிர்வுகூறலைப் பெற்றுக் கொள்ளவும் இப்புள்ளிவிபரங்கள் உதவுகின்றன. மேலும் சுகாதார மருத்துவத்துறைகளின் வளர்ச்சிக்கு இப்புள்ளி விபரங்கள் அவசியம் வேண்டப்படுகின்றன. உதாரணமாக வேற்றுமைக் கருவளவாக்கத்தினைப்பெற்றுக் கொள்ளப் பிறப்புப் பதிவுகள் மிக வேண்டற்பாலன. இதேபோலவே இறப்புப் பதிவுகளும் தேசிய ரீதியில் பெருமளவிற்குத் தேவைப்படும் ஒன்றாகும். இறப்புக்கான காரணிகளை கண்டறிந்து அவற்றினைத் தடுப்பதற்கு உதவிபுரிவதுடன் சமூகத்தின் சுகாதார நிலைமைகளை அறிவதற்கும் உதவியாகவிருக்கின்றது. இலங்கையில் 1940கள் வரை மலேரியா, கொலரா போன்றவற்றினால் அதிகளவில் மக்கள் இறந்தனர். நாடளாவிய ரீதியில் டி.டி.ரி.மருந்து தெளித்ததன் விளைவாக இது உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இறப்புப் பதிவுகள் சிறப்பாகக் காணப்படுமாயின் பொதுச் சுகாதார நிகழ்ச்சித் திட்டத்திற்கான திட்டமிடலை மேற்கொள்ள வாய்ப்புண்டு.

### 3.7. மாதிரி அளவீடுகள் (Sample Surveys)

குடிப்புள்ளியியலாளர் மட்டுமல்லாது பொருளியலாளர், மானிடவியலாளர், அரசறிவியலாளர் உட்பட பல்வேறு சமூக விஞ்ஞானிகள் தாம் மேற்கொள்ளும் ஆய்வு சிறப்பானதாகவும் உண்மைத்தன்மை கொண்டதாகவும் அமைவதற்கு மாதிரி அளவீட்டின் மூலந் தரவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். வரலாற்றுக் காலங்களிலிருந்து முழுமையான தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளின் விளைவாக மாதிரி அளவீட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இருப்பினும் அண்மைக்காலங்களில் இவ்வளவீடுகள் மூலம் பல்வேறு துறைசார் அறிஞர்கள் தமது ஆய்வுகளுக்குத் தகவல்களைப் பெற்று வருகின்றனர்.

குறிப்பாகக் குடிக்கணிப்பானது 10 வருடங்களுக்கு ஒரு முறையோ அல்லது 5 வருடங்களுக்கு ஒரு முறையோ பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதே போலவே வாழ் நிலைப்புள்ளிவிபரத்தரவுகள் பதிவாளர் திணைக்களத்தினாற் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. எனினும் மேற்படி பெறப்பட்ட தரவுகள் எல்லாம் முற்றுமுழுதாக உண்மைத்தன்மை கொண்டதாக அமைந்திருக்கும் எனக் கொள்ள முடியாது. அத்துடன் குடிக்கணிப்புப் பெறப்படும் கால இடைவெளி நீண்டதாக இருப்பதால் இடைப்பட்ட காலத்தின் குடித்தொகைப் பண்புகள் சம்பந்தமாகத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மாதிரி அளவீடுகள் பெரிதும் உதவுகின்றன.

குடிக்கணிப்பின் மூலம் பெறப்படும் தகவல்கள் பெரும்பாலும் உண்மைத்தன்மை கொண்டதாக அமைந்துள்ள போதிலும் தொடர்ச்சியாக வருடந்தோறும் அல்லது தேவைக்கேற்ப மேற்கொள்வதற்குப் பெரும் நிதி மட்டுமல்லாது பயிற்றபட்ட பாரிய ஆட்பலமும் தேவைப்படுகின்றது. அத்துடன் தனிப்பட்டவர்களோ அன்றில் நிறுவனங்களோ நாடளாவிய ரீதியிலோ அன்றில் பிரதேச மட்டத்திலோ மேற்படி தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி மற்றும் பயிற்றப்பட்ட ஆட்பலத்தினைப் பெற்றுக்கொள்ளவியலாதுள்ளது.

மாதிரி அளவீட்டிற் தாம் குறித்த ஆய்வுக்குப் பொருத்தமானவர்களிடம் தரவுகளைப் பெற்றுக்கொள்பவர் பயிற்சி பெற்றவராக இருப்பதுடன் கேட்கப்படும் கேள்விகளும் கவனமாக தயாரிக்கப்பட்டுள்ளமையாற் பெறப்படும் தரவுகள் சிறப்பாக அமைகின்றன. உதாரணமாக் ஒரு குடித்தொகையியலாளன் தான்பெற்ற பயிற்சியின் காரணமாக குடித்தொகைப் பண்புத் தரவுகளை மாதிரி அளவீட்டின் மூலம் ஆழமாக படிக்கவும், ஆராயவும் முடிகின்றது. குறிப்பாக குடித்தொகைக்கணிப்பில் பெற்றுக்கொள்ளமுடியாத கருவளவாக்கம், கருச்சிதைவு, கருத்தடைப்பயன்பாடு போன்றவற்றைப் பற்றி விளக்கமாகப் பெற்று விஞ்ஞான ரீதியிலான ஆய்வினைச் செய்ய வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் நாட்டின் அபிவிருத்தித் திட்டமிடலுக்கும் குடிக்கணிப்புக்கும் இடைப்பட்ட காலங்களிற் தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுஞ் சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படும் வேளை தேசிய மாதிரி அளவீட்டின் மூலம் தரவுகள் பெற்றுக்கொள்வது சகல நாடுகளிலும் வழக்கமாக இருந்து வருகின்றது

அண்மைக்காலங்களில் பல்வேறு நாடுகள் தேசிய மாதிரி அளவீட்டின் மூலந் தரவுகள் பெற்றுக்கொள்வது சாதாரண வழக்காகவுள்ளது. 1966ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்திற் குடிக்கணிப்பின் போது கூடுதலான தகவல் களைப் பெற்றுக்கொள்ள மாதிரி அளவீட்டினை மேற்கொண்டிருந்தனர். இதே போலவே ஐக்கிய அமெரிக்காவிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தியாவில் National Sample Survey Organization, Research Programme Committee of the Planning Commission, Demographic - Fertility and Family Planning Survey போன்ற அமைப்புக்கள் மாதிரி அளவீட்டினைக் காலத்துக்காலம் மேற்கொண்டு வருகின்றன. 1950ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தேசிய மாதிரி அளவீட்டுப் பிரிவு குடிப்புள்ளியியற் தரவுகளை பிறப்பு, இறப்பு, உள்நாட்டு இடப்பெயர்வு, தொழில்வாய்ப்பு, வேலைவாய்ப்பின்மை, வீட்டுநிலை போன்ற வற்றை - நாடளாவிய ரீதியிற் பெற்றுக் கொள்கின்றது. மேலும் இந்தியாவிற் பிறப்பு, இறப்புத் தரவுகள் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினாற் பெறப் படுகின்ற போதும் பெருமளவிற்கு உண்மைத்தன்மை கொண்டதாகவில்லை. இதன் விளைவாக மேற்படி திணைக்களம் மாதிரிப் பதிவுத்திட்டம் (Sample Registration Scheme ) ஒன்றினை 1960ஆம் ஆண்டு உருவாக்கிக் குறிப்பிட்ட கிராமங்கள், நகரங்களில் மாதிரி அளவீட்டின் மூலந் தரவுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆப்கானிஸ் தானில் இதுவரை குடிக்கணிப்புகள் முறையாக நடைபெறாததால் அங்கு சமூக, பொருளாதார குடிப்புள்ளியியற் தரவுகளைப் பெற்றக்கொள்வற்கு மாதிரி அளவீட்டினையும் வேறு மதிப்பீடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மாதிரி அளவீட்டினைப் பொறுத்தவரை இலங்கையில் காலத்துக்குக் காலம் குடிப்புள்ளியியற் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இவ்வகை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி அளவீட்டினை நான்கு பிரிவுகளுக்குள் வகைப்படுத்தி நோக்கலாம்.

1) குடிக்கணிப்புகளிற் மாதிரி அளவீடு

2) தொழிலாளர் படை அளவீடுகள் ( Labour Force Surveys)

3) நுகர்வோர் நிதி அளவீடுகள் ( Consumer Finance Surveys )

4) சமூக, பொருளாதார அளவீடுகள் ( Socio Economic Survey )

இலங்கையில் குடிக்கணிப்புத்திணைக்களம் குடிக்கணிப்பினைத் தொடர்ந்து முக்கியமான தகவல்களைப் பெறும் பொருட்டு மாதிரி அளவீட் டினை மேற்கொண்டுள்ளது. 1931, 1951, 1971, 1981ஆம் ஆண்டுக் கணிப்பி னைத் தொடர்ந்து மாதிரி அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1981ஆம் ஆண்டுக்கணிப்பீட்டின் பின்னர் இடப்பெயர்வு, குடியிருப்புக்கள் பற்றி 10 சதவீத மாதிரி அளவீடு மேற்கொள்ளப்பட்டிருககின்றது. இவ்வளவீடுகள் தற்போது பல்வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர் படை அளவீட்டினைப் பொறுத்தவரை காலத்துக்குக் காலம் மாதிரி அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வளவீடுகள் தொழில்

வாய்ப்பு, தொழில் வாய்ப்பின்மை, கீழுழைப்பு போன்றவற்றைக் கண்டறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்குறித்த பண்புகள் சார்ந்த அளவீடு கள் 1959, 1960ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து தொழிற்படை அளவீடு 1968, 1969களிலும், கிராமிய தொழில் பிரச்சினைகள் பற்றிய அளவீடுகள் 1964இலும் இலங்கைத் தொழிற்படையின் பங்களிப்பு பற்றிய மாதிரி அளவீடு 1973இலும் மேற்கொள்ளப்பட்டன.

நுகர்வோர் நிதி அளவீடானது மத்திய வங்கியால் 1953ஆம் ஆண்டிலி ருந்து ஒவ்வொரு 10 வருடத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1953ஆம் ஆண்டு 1000 குடியிருப்பாளரிடம் பெறப்பட்ட இவ் அளவீடு 1963, 1971 ஆம் ஆண்டுகளில் 5000 குடியிருப்பாளரிடம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வளவீடு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. 1969, 1970ஆம் ஆண்டுகளிற் குடிக்கணிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நாட்டில் சமூக, பொருளாதார ஆய்வொன்றினை மாதிரி அளவீட்டின் அடிப்படையில் மேற் கொண்டது.

இலங்கையிற் கருவளவாக்க நிலையினை அறிந்து கொள்ளும் பொருட்டு 1975ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நாடளாவிய ரீதியில் மாதிரி அளவீட்டினை மேற்கொண்டிருந்தது. அதே போலவே மேற்குறித்த திணைக்களம் குடிப்புள்ளியியல் மற்றும் சுகாதார அளவீட்டினைச் சுகாதார அமைச்சுடன் இணைந்து தொடர்ச்சியாகச் செயற் படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 4

# இறப்புக்கள்

## 4.0 முன்னுரை

குடித்தொகை மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய கருவளம், இடப்பெயர்வு ஆகியவற்றுடன் இறப்புக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை குடித் தொகை வேறுபாட்டினை ஏற்படுத்தவல்லன. இறப்பு என்றால் உயிர்ப்பிறப்பு நிகழ்ந்த பின்னர் வாழ்வின் முடிவாக நிர்ந்தரமாக உடலிலிருந்து உயிர் பிரிவது என்பது பொருள். அதாவது மனிதன் தனது வாழ்வில் மனதிலிருத்திய எண்ணங் கள், கற்பனைகள், சிந்தனைகள், செயற்பாடுகள் யாவற்றையும் இறப்பின் மூலம் இழந்து விடுகின்றான்.

வரலாற்றுக்காலங்களில் மனித இறப்புக்களைப் புனிதமான முறையிற் போற்றி வந்துள்ளனர். இறந்தவர்களின் உடல்களைத் தெய்வமாக வழிபட் டனர். இறப்புகள் ஏற்படுமிடத்துத் தத்தம் சமூக, பண்பாட்டு நிலைமைகளுக் கேற்பச் சடங்குகளை நடாத்தி நிறைவேற்றி வைத்தனர். எனினும் இறப்புக்கள் பற்றிய தரவுகளைப் பேணிக்காத்து வைக்கவில்லை. ஆனாற் காலப்போக்கிற் பொருளாதார மற்றும் மதரீதியாக, இறப்புக்களின் தகவல்களைத் தரவுகளாகப் பேணிப் பாதுகாக்கும் வழக்கு மேற்குலக நாடுகளிற் காணப்பட்டிருந்தது. குறிப் பாக, ரோமர் காலத்தில் மூன்றாம் நூற்றாண்டு முதற்தரவுகள் சேகரிக்கப்பட் டிருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. அதேபோலவே புராதன இற்றாலியிலும் நான்காம் நூற்றாண்டில் இத்தகைய தரவுகள் சேகரிக்கப்பட்டதற்கான சான்று கள் உண்டு. இத்தரவுகள் தேவாலய மத குருமார்களாற் பெறப்பட்டு வந்துள் ளன. காலப்போக்கில் இவ் வழக்கு பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது. குறிப்பாக இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றி மன்னன் காலத்திற் தோமஸ் குரோம்வெல் (Thomas Croomwell) என்பவரால் இறப்புத் தரவுகள் பெறப்பட்டிருந்தன. காலத்துக்குக் காலம் தொற்று நோய்களால் இறப்புகள் ஏற்படுமிடத்து, அவை அதற்கான காரணிகளுடன் சஞ்சிகையில் வெளியிடப் பட்டுள்ளன. குடித்தொகைக் கல்வியின் முன்னோடியான ஜோன் கிரான்ட் என்பவர் இறப்புக்களையும் அதற்கான காரணிகளையும் லண்டனிற் தொடர்ச்சி

யாக வெளியிட்டுள்ளார். இவர் 1662ஆம் ஆண்டு Natural and Political Observation Mentioned in the Following Index and made upon the Bills of Mortality என்ற நூலையும் வெளியிட்டார்.

சுவீடன் நாட்டில் 1755-1757ஆம் ஆண்டுகளிடையே பெறப்பட்ட இறப்புக் கான தரவுகளைக்கொண்டு வாழ்க்கை அட்டவணைகள் தயாரிக்கப்பட்டன. இத்தரவுகள் பால், வயது அடிப்படையிலும் இறப்புக்களுக்கான காரணிகளி னடிப்படையிலும் பெறப்பட்டன. இந்நாடே இறப்புப் பதிவுகளை நாடளாவிய ரீதியில் ஒழுங்குபடுத்திப் பெற்றுக்கொண்ட முதல் நாடு என்பது குறிப்பிடத் தக்கது. 1837ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நாடளாவிய ரீதியில் இறப்புக்கள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும் நடைமுறை புகுத்தப்பட்டது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் 48 அரசுகளில் 14 அரசுகளிலேயே இறப்புப்பதிவு செய்யப்படும் முறைகள் காணப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து எல்லா நாடுகளும் இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து சட்டரீதியாக பதிவு செய்யும் முறையை அமுலுக்குக் கொண்டு வந்த போதிலும், பெரும்பாலான நாடுகளிற், குறிப்பாக வளர்முக நாடுகளில் முழுமையான அளவிற் தரவுகள் சேகரிக்கப்படவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

மனித இறப்புகள் பற்றிப் பல்வேறு நாடுகளில் வெவ்வேறுபட்ட முறை யில் வரைவிலக்கணங்கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக உயிர்ப்பிறப்புக்கள் எது என்பதில் வெவ்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஸ்பெயின், கியூபா உட்படச் சில நாடுகளிற் பிறந்து 24 மணித்தியாலங்களில் சிசு இறந்து விட்டால், அதனை உயிர்ப்பிறப்பாக கருதாது கருச்சிதைவாகவே கொள்கின் றனர். சில நாடுகளில் மேற்குறித்த இறப்புக்களை உயிர்ப்பிறப்பாகக் கருதித் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இங்கு இறந்தபின் அது குழந்தை இறப்பாக பதிவுசெய்யப்படுகின்றது. வேறு சில நாடுகளில் குறித்த காலப்பகுதியில் இறந்தால் அதனையும் கருச்சிதைவாகவோ அன்றிற் சாப்பிறப்பாகவோ கருதித் தரவுகள் பெறப்படுகின்றன.

ஒவ்வொரு சமூகத்திலும் இறப்புக்கள் முக்கியத்துப்படுத்தப் படுகின்ற போதிலும் எல்லாச் சமூகங்களும் இறப்புக்கான காரணிகளை சேகரிப்பதிலோ அல்லது பொது நோக்குடன் அவற்றை வகைப்படுத்தி அறிந்து கொள்வதிலோ அக்கறை கொண்டவர்களாகவிருக்கவில்லை. குறிப்பாக வளர்முக நாடுகளில் இத்தகைய பண்புகளைக் காணமுடிகின்றது.

உலகில் மிக நீண்டகாலமாக இறப்புக்கள் அதிகரித்துக் காணப்பட்டி ருந்தன. ஏனெனில் மக்களிடையே சுகாதார, மருத்துவ வசதிகள் மற்றும் போசாக்குநிலை என்பன மிகக் குறைவாகக் காணப்பட்டிருந்ததேயாகும். அண்மைக்காலங்களில் வளர்ந்த நாடுகளில் மட்டுமல்லாது வளர்முக நாடுகளிலும் மருத்துவ, சுகாதார வசதிகளின் விரிவாக்கம் காரணமாக இறப்பு வீதம் படிப்படியாகக் குறைவடைந்து சென்றுள்ளது. இன்றைய உலகிற் பெரும்பாலான நாடுகளிற் உயிர்க்கொல்லி நோய்கள் படிப்படியாகக் கட்டு பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

## 4.1. இறப்புக்கான தரவுகளின் அவசியம்

இறப்புக்களுக்கான தரவுகள் பெற்றுக்கொள்வதன் அவசியம் பல்வேறு நோக்கங்களுக்குட்பட்டதாகும். குறிப்பாக குழந்தை இறப்பாயினும்சரி, வயோதிபர் இறப்பாயினும்சரி, அவ்வவ் இறப்புகளுக்கான காரணிகளைக் கண்டறிந்து அவ்விறப்புக்களைப் பின் தள்ளுவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கு இறப்புகளுக்கான தரவுகளை அறிந்து கொள்ளல் அவசியமாகின்றது. 1954ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அவதானிப்பின் பிரகாரம் 20.0 சதவீதம் அல்லது அதற்கும் மேலான கருவானது பிறப்புக்கு முன்னரே அழிந்துவிடுகின்றது எனவும் 15-20 சதவீதமான பிறப்புக்கள் ஐந்து வயது பூர்த்தியாவதற்கு முன்பே இறந்துவிடுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் தமது வாழ்வின் ஆரம்பத்திலேயே இவ்வுலகை விட்டு நீங்கிவிடுகின்றனர். அதே போலவே பல வளர்முக நாடுகளில் ஆயுள் எதிர்பார்ப்பானது 50 வயதுக்கும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இவற்றிற்கான காரணிகளை ஆராய்ந்து இறப்புக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இறப்புக்கான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறை சகல நாடுகளிலும் கடைப்பிடிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

இறப்புக்களையும் அதற்கான காரணிகளையும் பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் விசாலமானவை. அவையாவன.

அ) இறப்பு நிகழ்வதற்கான காரணிகளைக் கண்டறிவதன் வாயிலாக, நோய்க் குறிகளைக் கண்டறியக்கூடிய வகையில் விஞ்ஞான, தொழில்நுட்ப உதவியுடன் வைத்திய சேவையை விஸ்தரித்தலும் அதற்கான புதிய மருந்து வகைகளைத் தயாரித்தலுமாகும். குறிப்பாக, தற்போது உலக மக்களை அச்சுறுத்தி வரும் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் முகமாகப் புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆ)அரசு மற்றும் தனியார் துறைகளிற் பொருளாதார, சமூக, பண்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கு இவ்விறப்புப் பதிவுகள் அவசியம் தேவைப்படுகின்றன. குறிப்பாக கல்விக்கான செலவினங்கள், சேமிப்புத் திட்டங்கள், காப்புறுதிக் கம்பனிகளின் கொள்கைகள் உருவாக்கம், தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பல் போன்றவற்றிற்கு இப்பதிவு முறை மிகமிக அவசியமாகின்றது.

இ) இறப்புப் பதிவினை மேற்கொள்ளும் போது சமூக நிறுவனங்கள் குறிப்பாக விவாக நிலை பற்றிய பண்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளன.

ஈ) கூட்டுக்குடும்பமுறை வளர்ச்சியடைவதைத் தவிர்த்துக்கொள்வதற்கான வழி வகைகளை மேற்கொள்ளுதல். அத்துடன் சமூகத்தில் ஆதரவற்றோர், விதவைகள் போன்றோரின் பிரச்சினைகளை ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளல்.

உ) ஒரு நாட்டினதோ, சமூகத்தினதோ அன்றிற் குடும்பத்தினதோ இறப்புக்கள் அவர்தம் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கோலங்களை மாற்றும் தன்மை யன. அதாவது சமூகக்கேடு, புறக்கணிப்பு, பலவீனமான பொருளாதார நிலை, போதியளவிலான வசதிகள் கிடைக்கப்பெறாமை போன்றவற்றை ஆராய்ந்து தீர்வு காணல்.

ஊ) தரவுகள் கிடைக்கப்பெறுமாயின் கடந்தகால, நிகழ்கால இறப்புக்களையும் அதற்குரிய காரணிகளையும் ஒப்பிட்டு அறிவதுடன் எதிர்காலத்தில் மேலும் இறப்புக்களைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளைப் பெற்றுக்கொள்ளல்.

எ) எதிர்கால குடித்தொகை எதிர்வுகூறலைப் ( Population Projection ) பெற்றுக் கொள்ளல்.

ஏ) குடிப்புள்ளியியற் பண்புகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தரவுகள் அவசியமாகின்றன.

எனவே மேற்குறித்த நோக்கங்களுக்காக இறப்புப்பதிவுகள் மிக அவசியமாகின்றது.

## 4.2. இறப்புக்களை அளவிடும் முறைகள்

இறப்புக்களின் வகைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு பல்வேறு அளவை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய அளவை முறை களின் மூலம் இறப்புக்களின் பண்புகளை அறிந்து கொள்ளமுடியும்.

**(அ) பருமட்டான இறப்பு வீதம் (Crude Death Rate)**

$$CDR = \frac{D}{P} \times K$$

D - குறித்த ஆண்டின் மொத்த இறப்புக்கள்.

P - குறித்த ஆண்டின் நடுப்பகுதி மொத்தக் குடித்தொகை.

K - 1000.

**(ஆ) வயது வகை இறப்பு வீதம் (Age Specific Death Rate)**

$$ASDR \ \frac{di}{pi} \times K$$

di குறித்த வயதுத் தொகுதிக்குள் குறித்த ஆண்டில் நிகழ்ந்த இறப்புக்களின் எண்ணிக்கை.

pi - குறித்த வயதுத் தொகுதிக்குள் குறித்த ஆண்டின் நடுப்பகுதி மொத்தக் குடித்தொகை.

K - 1000.

$$\text{உ-ம்} \quad \frac{\text{0-14 வயதிற்கிடைப்பட்ட இறப்புக்கள்}}{\text{0-14 வயதிற்கிடைப்பட்ட குடித்தொகையின் எண்ணிக்கை}} \times 1000$$

**(இ) குழந்தை இறப்பு வீதம் ( Infant Mortality Rate )**

$$\mathbf{IMR} = \frac{\text{Do-I}}{\text{B}} \times \text{K}$$

Do- I - குறித்த ஆண்டில் 0 - 1 வயதுக்கிடையிற் பதிவு செய்யப்பட்ட இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.

B - குறித்த ஆண்டில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.

K - 1000.

**(ஈ) பிறப்புக்கால இறப்பு வீதம் ( Neo - Natal Mortality Rate )**

$$\mathbf{NNMR} = \frac{\text{Do - 28}}{\text{B}} \times \text{K}$$

Do-28 - குறித்த ஆண்டில் 0-28 நாட்களுள் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.

B - அதே ஆண்டில் பிறந்த பதிவு செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.

K- 1000.

**(உ) காரணி வகை இறப்பு வீதம் ( Course Specific Death Rate )**

இந்த வகையிற் குறிப்பிட்ட காரணிகளினால் ஏற்பட்ட இறப்புக்களினை மட்டும் கொண்டு வகைப்படுத்தி அளவை செய்யப்பட்டுள்ளது. அதாவது.

$$\mathbf{CSDR} = \frac{\text{Di}}{\text{P}} \times \text{K}$$

Di - குறிப்பிட்ட ஆண்டிற் சில குறித்த காரணிகளினால் இறந்தவர்களின் எண்ணிக்கை.

P - குறித்த ஆண்டின் நடுப்பகுதி மொத்தக்குடித்தொகை.

K- 1000.

சிலசமயங்களில் வயதுத் தொகுதியடிப்படையில் அல்லது வயதடிப் படையிற் காரணி வகை இறப்பு வீதத்திதைக் காண்பதுமுண்டு.

$$\text{CSDR} = \frac{\text{Dix}}{\text{Px}} \times \text{K}$$

Dix- குறித்த வருடத்தில், குறித்த வயதிலோ அன்றிற் குறித்த வயதுத் தொகுதியிலோ சில காரணிகளடிப்படையில் நிகழ்ந்த இறப்புக்களின் எண்ணிக்கை.

Px- குறித்த வயதினை அன்றிற் குறித்த வயதுத் தொகுதியினைக் கொண்ட குறித்த ஆண்டின் நடுப்பகுதி மொத்தக் குடித்தொகை.

K- 1000.

**(ஊ) பிரசவத்தாய் இறப்பு வீதம் (Maternal Mortality Rate)**

$$MMR = \frac{D}{B} \times K$$

D- குறித்த ஆண்டிற் பிரசவகாலத்தில் இறந்த பெண்களின் மொத்த எண்ணிக்கை.

B- குறித்த ஆண்டில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.

K- 1000. அல்லது 100,000

**(எ) தரப்படுத்தப்பட்ட இறப்பு வீதம் (Standardised Death Rate - SDR)**

மேலே நாம் பார்த்த முறைமைகள் எளிமையாகவும் விளங்கக் கூடியனவாகவும் இருந்தபோதும் இவை சரியான பொது இறப்புவீத மட்டத்தைக் காட்டுவனவாகக் கொள்ளமுடியாது. இதனால் மேற்கூறிய முறைகளில் இரு முறைகளான வயதுவகை இறப்பு வீத முறைமை, பருமட்டான இறப்புவீத முறைமை எனபவற்றின் சிறப்பியல்புகளை ஒன்றிணைத்துக் கணிதச் செய்கையூடாக இறப்பு வீதத்தைக் கணிப்பிடும் முறையே தரப்படுத்தப்பட்ட இறப்புவீத முறையாகும். ஒப்பீட்டாய்வில் பெரிதும் பயன்படுத்தப்படும் இம் முறை நேரடித் தரப்படுத்தல்முறை, மறைமுகத் தரப்படுத்தல்முறை என இரு வகைப்படும். எனினும் இவ்விரு முறைகளுமே வேறோர் குடித்தொகையிலிருந்து பெறப்படும் தகவலின் அடிப்படையில் குறித்தவொரு குடித்தொகையில் எதிர்பார்க்கப்படும் இறப்புக்களை கணிப்பீடு செய்வதையே நோக்காகக் கொண்டுள்ளன.

**(ஏ) நேரடித் தரப்படுத்தல் முறை (Direct Standardisation Method)**

இம்முறையின் கீழ் வயதுவகை இறப்பு வீதங்கள் ஒரு நியமக் (Standard) குடித்தொகையுடன் இணைக்கப்படுகின்றன. இரு குடித்தொகைகளின் வயதமைப்பானது ஒரே விதமானதாக இருக்கும் போது அவற்றின் பருமட்டான இறப்பு வீத ஒப்பீட்டில் குழப்பம் ஏற்படுவதில்லை. எனவே குடித்தொகையின் ஒரே விதமான வயதுக் குழுக்களின் பருமட்டான இறப்பு வீதங்களைக் கண்டு, ஒவ்வொரு வயதுப் பிரிவினதும் நியமக் குடித்தொகையால் இவ்வீதங்கள் பெருக்கப்படும். இது எதிர்பார்க்கப்படும் இறப்புக்களைக் குறிக்கும். இவ் எதிர்பார்க்கப்படும் இறப்புக்களுக்கும் நியமக் குடித்தொகைக்கும் இடையிலான விகிதாசாரம் தரப்படுத்திய இறப்பு வீதமாகும். சுருங்கக்கூறின் இம்முறையில் ஒரு நியமக் குடித்தொகைக்கு வயதுவகை இறப்பு வீதங்கள் பிரயோகிக்கப் படுகின்றன. இதனடிப்படையில் கணிப்பீட்டு முறைமை பின்வருமாறு அமையும்.

$$SDR_d = \frac{\Sigma (Ps \times DL)}{\Sigma Ps}$$

இங்கு

Ps - வேறுபட்ட வயதுக் குழுக்களின் நியமக் குடித்தொகை.

DL - உள்ளூர் (உண்மையான) குடித்தொகையின் வயதுவகை இறப்பு வீதம்.

**(ஐ) மறைமுகத் தரப்படுத்தல் முறை**

## (Indirect Standardisation Method)

இங்கு வயது வகைக் குடித்தொகைக்கு நியம இறப்பு வீதத் தொகுதி ஒன்று பிரயோகிக்கப்படுகின்றது. குடித்தொகையின் வயதுவகை இறப்பு வீதங்கள் கிடைக்கப்பெறாத போது இம்முறையினைப் பயன்படுத்தலாம். எனினும் இதற்கு உண்மையான வயதுவகை நட்டாண்டுக் குடித்தொகை, குறித்த ஆண்டில் சகலவயதுகளிலுமான மொத்த இறப்புக்களின் எண்ணிக்கை, ஒரு நியமக் குடித்தொகையின் வயது வகை இறப்புவீதப் பட்டியல், அந்நியமக் குடித்தொகையின் பருமட்டான இறப்புவீதம் ஆகிய தரவுகள் தேவைப்படுகின்றன. இவ்வகையில் உண்மையான இறப்புக்களின் எண்ணிக்கையை எதிர் பார்க்கப்படும் இறப்புக்களின் எண்ணிக்கையால் வகுத்து, பருமட்டான இறப்பு வீதத்தாற் பெருக்கும் போது மறைமுகத் தரப்படுத்திய இறப்புவீதம் கிடைக்கின்றது. இதனைப் பின்வரும் முறையிற் காணலாம்.

$$SDR_I = \frac{\dfrac{\Sigma (Ps \times Ds)}{\Sigma Ps}}{\dfrac{\Sigma Ps}{\dfrac{\Sigma (P_L \times Ds)}{\Sigma P_L}}} \times \frac{\Sigma (P_L \times D_L)}{\Sigma P_L}$$

இங்கு

PL = வயது வகை உள்ளூர் (உண்மை) குடித்தொகை.

Ps = வயது வகை நியமக் குடித்தொகை.

DL = உள்ளூர் குடித்தொகையின் வயது வகை இறப்புவீதம்.

Ds = நியமக் குடித்தொகையின் வயது வகை இறப்புவீதம்.

நியமக்குடித்தொகை என்பதை இவ்விரு முறைகளுமே அனுமானங்களாகக் கொள்கின்றன. அனுமானமானது காலம், இடம், நபர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதால் இவற்றின் நம்பகத் தன்மை கேள்விக்குரியது. எனினும் இப்பிரதேச பொருளாதார நிலைகளை ஒப்பிட தற்போது இம்முறைகள் பரவலாகப் பாவிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு

| வயதுத் தொகுதி | பிரதேசம் I (உள்ளூர்) | | | பிரதேசம் II (நியமம்) | | |
|---|---|---|---|---|---|---|
| | குடித்தொகை | இறப்புக்கள் | இறப்புவீதம் (1000) | குடித்தொகை | இறப்புக்கள் | இறப்புவீதம் (1000) |
| 0-9 | 15,000 | 350 | 23.3 | 15,000 | 300 | 20.0 |
| 10-19 | 14,000 | 200 | 14.3 | 12,000 | 150 | 12.5 |
| 20-39 | 40,000 | 800 | 20.0 | 45,000 | 750 | 16.7 |
| 40-59 | 35,000 | 900 | 25.7 | 30,000 | 600 | 20.0 |
| 60+ | 8,000 | 700 | 87.5 | 10,000 | 700 | 70.0 |
| | 112000 | 2950 | 26.3 | 112000 | 2500 | 22.3 |

**பிரதேசம் II இற்கான நேரடித் தரப்படுத்திய இறப்பு வீதம்.**

இங்கு உள்ளூர்ப் பிரதேசத்தின் வயது வகை இறப்புப் பட்டியல் மட்டுமே உள்ளதால் இதே வகையான வேறோர் பிரதேசக் குடித்தொகை யொன்றை நியமக் குடித்தொகையாகக் கொண்டு உள்ளூர் பிரதேசத்திற்கான இறப்பு வீதம் நேரடித் தரப்படுத்தல் முறையிற் பின்வருமாறு காணப்படுகின்றது.

$$\mathbf{SDR} = \frac{\Sigma(Ps \times D_L)}{\Sigma Ps}$$

$$= \frac{(23.3\times15000) + (14.3 \times 12000) + (20.0 \times 45000) + (25.7 \times 30000) + 87.\ 5 \times 10000)}{112000}$$

$$= \frac{3067100}{112000}$$

$$= 27.4\ \%$$

**பிரதேசம் 1 இற்கான மறைமுகத் தரப்படுத்திய இறப்புவீதம்**

இங்கு உள்ளூர் குடித்தொகையின் வயது வகைக் குடித்தொகை அதன் மொத்த இறப்புக்கள் பற்றிய தரவுகளே உள்ளதால் இதே போன்ற பிறிதொரு

பிரதேசக் குடித்தொகையின் வயது வகை இறப்பு வீதங்களை நியம வயது வகை இறப்பு வீதமாகக் கொண்டும் அதன் பருமட்டான இறப்பு வீதத்தை நியமப் பருமட்டான இறப்பு வீதமாகக் கொண்டும் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

$$\mathbf{SDR_1} = \frac{\dfrac{\Sigma(Ps \times Ds)}{\Sigma Ps}}{\dfrac{\Sigma(P_L \times Ds)}{\Sigma P_L}} \times \frac{\Sigma(P_L \times D_L)}{\Sigma P_L}$$

இங்கு $\dfrac{\Sigma(Ps \times Ds)}{\Sigma Ps}$

என்பது நியமக் குடித்தொகையிற் பருமட்டான இறப்பு வீதத்தையும்

$\dfrac{\Sigma(P_L \times D_L)}{\Sigma P_L}$ என்பது உள்ளூர்க் குடித்தொகையின் பருமட்டான

இறப்பு வீதங்களையும் குறிக்கின்றன.

எனவே

$$\mathbf{SDRI} = \frac{22.3}{\dfrac{(20 \times 15000) + (12.5 \times 14000) + (16.7 \times 40000) + (20.0 \times 35.000) + (70.0 \times 8000)}{112000}} \times 26.3$$

$$= \frac{22.3}{2403000/112000} \times 26.3$$

$$= \frac{22.3}{21.5} \times 26.3$$

$$= 27.3$$

### 4.3. உலக நாடுகளில் இறப்புக்களின் போக்கு

குடித்தொகை வேறுபாட்டினைப் பொறுத்தவரை உலக நாடுகளை வருமான அடிப்படையில் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள், மத்திய வருமானம் கொண்ட நாடுகள், உயர் மத்திய வருமானம் கொண்ட நாடுகள், மிகஉயர் வருமானம்கொண்ட நாடுகள் என நான்கு பிரிவுகளுக்குட்படுத்த லாம். விருத்திபெற்ற மேற்குலகநாடுகள் இறப்புக்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 150 வருடங்கள் போராடியிருந்தன. இதன் விளைவாக இந்நூற்றாண்டின் முதல் காற்பகுதியிலிருந்து அங்கு இறப்புவீதம் படிப்படியாகக் குறைவடைந்து வந்துள்ளது. இந்நாடுகளில் அண்மைக்காலங்களில் 1000:10 என்ற விகித அளவிலேயே இறப்புக்கள் நிகழ்கின்றன. (அட்டவணை 4.1)

அதாவது இங்கு பிறப்பு வீதத்திற்கும் இறப்பு வீதத்திற்குமிடையில் மிகச்சிறிய வேறுபாட்டினையே காணமுடிகின்றது. சில நாடுகளில் பிறப்பு வீதத்திலும் பார்க்க இறப்பு வீதம் கூடியதாகவே உள்ளது. எனவே இத்தகைய பண்பு களாற் பொருளாதார விருத்திக்குத் தேவையான குடித்தொகையினைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதனால் வளர்முக நாடுகளுட்பட வேறு நாடுகளிலிருந்து இந்நாடுகளுக்கு மக்கள் இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். இவ் இடப்பெயர்வினால் சென்றடையும் நாடுகளில் இன, மற்றும் சமூகப் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. இறப்பு வீதம் படிப்படியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமையால் வளர்ந்தநாடுகளிலும் வளர் முகநாடுகளிலும் பொருளாதார நடவடிக்கையிற் பங்குபற்றாத வயது சென் றோரின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றுள்ளது. இதன் விளைவாக அவ்வவ் நாடுகளின் அரசுகளுக்கு பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகக் குடித் தொகையியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இறப்புக்கள் பற்றிய கல்வியானது உயிரியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. அத்துடன் இது குடித்தொகை அளவு, அமைப்புப் போன்றவற்றை மாற்றிய மைக்கவல்லது. இவ் இறப்புக்கள் உடலமைப்புக் காரணிகள், சூழலியற் காரணிகள் (Constitutional factors, Enviornmental factors) என இரு வகைப்படும். மனிதனானவன் பௌதீக, உடற்கூற்றியல், தேக அமைப்பு, உளவியல் பண்புகளுடன் தொடர்புடையவன் என்பது முதற்பிரிவாகும். பொருளாதார, சமூக பண்பாட்டு மற்றும் பழக்க வழக்கத்திற்குட்பட்டு நிகழும் இறப்புக்கள் இரண்டாவது வகையாகும்.

**அட்டவணை 4.1**

**வருமான அடிப்படையிற் தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளில் தலைக்குரிய வருமானம், பிறப்பு வீதம், இறப்பு வீதம், இறப்பு வீதம் குழந்தை இறப்பு வீதம், வாழ்க்கை எதிர்பார்ப்பு - 2001**

| நாடுகள் | தலைக்குரிய வருமானம் (டொலர்) 2001 | பிறப்புவீதம் (1000) | இறப்புவீதம் (1000) | குழந்தை இறப்பு வீதம் (1000) 2001 | பிரசவத்தாய் இறப்பு வீதம் 2001 (100000) | வாழ்க்கை எதிர்பார்ப்பு 2001 |
|---|---|---|---|---|---|---|
| **அ) குறைந்த வருமானம் கொண்ட நாடுகள்** | - | **28** | **10** | **73** | - | **62.0** |
| 1. எதியோப்பியா | 870 | 51 | 18 | 116 | 1800 | 45.7 |
| 2. வங்காளதேசம் | 1610 | 31 | 11 | 51 | 600 | 60.5 |
| 3. இலங்கை | 3180 | 21 | 06 | 17 | 60 | 72.3 |
| 4. சோமாலியா | 1100 | 48 | 17 | 133 | 1600 | 50.2 |
| 5. சம்பியா | 780 | 47 | 17 | 79 | 870 | 33.4 |
| 6. பாகிஸ்தான் | 1890 | 40 | 10 | 84 | 200 | 60.4 |
| **ஆ) மத்திய வருமானம் கொண்ட நாடுகள்** | - | **24** | **08** | **43** | - | **68.0** |

| நாடுகள் | தலைக்குரிய வருமானம் (டொலர்) 2001 | பிறப்புவீதம் (1000) | இறப்புவீதம் (1000) | குழந்தை இறப்பு வீதம் (1000) 2001 | பிரசவத்தாய் இறப்பு(100000) 2001 | வாழ்க்கை எதிர்பார்ப்பு 2001 |
|---|---|---|---|---|---|---|
| **குறைந்த மத்திய வருமானம் கொண்ட நாடுகள்** | - | **24** | **09** | **45** | - | **67.0** |
| 1. பிலிப்பைன்ஸ் | 3840 | 32 | 07 | 29 | 200 | 69.5 |
| 2. குவாட்டமாலா | 2100 | 37 | 07 | 43 | 270 | 65.3 |
| 3. ஜோடான் | 3870 | 38 | 05 | 27 | 41 | 70.6 |
| 4. ஜமேக்கா | 3720 | 25 | 06 | 17 | 120 | 75.5 |
| 5. தாய்லாந்து | 6400 | 20 | 06 | 24 | 44 | 68.9 |
| 6. ஈரான் | 6000 | 37 | 07 | 26 | 130 | 69.8 |
| **கூடிய மத்திய வருமானம் கொண்ட நாடுகள்** | - | **24** | **07** | **40** | - | **69.0** |
| 1. தென்னாபிரிக்கா | 11290 | 31 | 09 | 56 | 340 | 50.9 |
| 2. பிறேசில் | 7360 | 23 | 07 | 31 | 260 | 67.8 |
| 3. மெக்சிக்கோ | 8430 | 28 | 05 | 24 | 65 | 73.1 |
| 4. சவுதி அரேபியா | 13330 | 35 | 05 | 23 | 23 | 71.9 |
| 5. ஹங்கேரி | 12340 | 12 | 14 | 08 | 23 | 71.5 |
| 6. போர்த்துக்கல் | 18150 | 12 | 10 | 05 | 12 | 75.9 |
| **உயர் வருமானம் கொண்ட நாடுகள்** | - | **13** | **09** | **07** | **10** | **77.0** |
| 1. ஐக்கிய இராச்சியம் | 24160 | 14 | 11 | 06 | 09 | 77.9 |
| 2. நோர்வே | 29620 | 14 | 10 | 04 | 15 | 78.7 |
| 3. டென்மார்க் | 29000 | 13 | 12 | 04 | 08 | 76.4 |
| 4. சுவிற்சலாந்து | 28100 | 13 | 09 | 05 | 10 | 79.0 |
| 5. நெதர்லாந்து | 21190 | 13 | 09 | 05 | 12 | 78.2 |
| 6. ஜேர்மனி | 25350 | 10 | 11 | 04 | 09 | 78.0 |

**ஆதாரம்** : World Development Report -2003

மத்திய மற்றும் குறைந்த வருமானமுடைய நாடுகளில் கடந்த நான்கு தசாப்தங்களாக, சார்பு ரீதியாகப் பருமட்டான இறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றது. இதனால் பருமட்டான பிறப்பு, இறப்பு வீதங்களுக்கிடையிலான வேறுபாடு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இதனால் குடித்தொகை வளர்ச்சி யடையவே அந்நாடுகள் பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியாகத் தொடர்ந்தும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன எனலாம். இதன் மறுவிளைவாக இந்நாடு களில் வாழும் மக்கள் போசாக்கற்ற உணவினை உட்கொள்வதனாலும் சுகாதார மருத்துவச் சீர்கேடுகளுடன் வாழ்ந்துவருவதாலும் "வாழ்க்கை எதிர் பார்ப்பு" குறைவாகவே உள்ளது. பெரும்பாலான வளர்முக நாடுகளின் சராசரி வாழ்க்கை எதிர்பார்ப்பு 45-55 வயதிற்கிடையிலேயே உள்ளது எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மேற்குறித்த வலுவிழந்த பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளின் இறப்புக்களும் பிரசவத் தாய்மாரின் இறப்புக்களும் அதிகரித் துக் காணப்படுகின்றது. (அட்டவணை 4.1)

## 4.4.குழந்தை இறப்புக்கள்

பொதுவாக ஒரு நாட்டில், குழந்தை இறப்புக்கள் அதிகமாகக் காணப் படுமாயின் அந்த நாடு பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியிற் பாதிப்பினைக் கொண்ட நாடு எனக் கொள்ளலாம். அந்த வகையில் மத்திய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் பலவற்றில் குழந்தை இறப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (அட்டவணை 4.1)

குழந்தை இறப்புக்களை இரண்டு பிரிவுக்குட்படுத்தி நோக்கலாம்.

1) பிறப்புக்கால குழந்தை இறப்புக்கள்
   (Neo - Natal Infant Mortality)
2) பிறப்பின் பின் குழந்தை இறப்புக்கள்
   (Post Neo - Natal Infant Mortality)

முதலாவது, குழந்தை உயிருடன் பிறந்து 28 நாட்களுள் இறப்பதைக் குறித்து நிற்க, இரண்டாவது, முதல் மாதத்திலிருந்து ஒரு வருட காலத்தினுள் இறப்பதைக் குறித்து நிற்கின்றது. இவை தவிர பிரசவ காலத்தில் ஏழாவது மாதத்திலிருந்து உயிருடன் இருந்து, பிறந்து ஒரு வார காலத்துள் நிகழும் இறப்பும் இதனுள் அடங்கும். (Perinatal Mortality) இத்தகைய குழந்தைகளின் இறப்புக்கள் பற்றிய புள்ளிவிபரங்களைப் பல நாடுகள் சேகரித்து வைப்ப தில்லை. சேகரிக்காமைக்கு பெற்றோர் தரவுகளை வழங்கத் தவறுவதே காரணமாகும். வளர்முக மற்றும் விருத்தியடையாத நாடுகளிற் பொதுவாக, குழந்தை இறப்புக்கள் பற்றிய தகவல்கள் உண்மைத் தன்மை கொண்டவை யல்ல. ஏனெனில் இறப்புப் பதிவின் முக்கியத்துவம் மக்களால் உணரப்படாமை யாற் தரவுகள் ஒழுங்காகப் பதிவு செய்யப்படாமையேயாகும். குறிப்பாக பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளிலும் பார்க்க அங்கு இவ்வகை இறப்புக்கள் அதிகமாகவே இருப்பதாக உலக சுகாதார

நிறுவனம் தெரிவித்துள்ளது. அட்டவணை 4.2 இல் உலக நாடுகளின் குழந்தை இறப்பு வீதம் தரப்பட்டுள்ளது. மேற்குறித்த நாடுகளின் குழந்தை இறப்புக் களைக் கவனத்தில் கொள்ளின் அவ்வவ் நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டுச் சூழலுடன் இவை நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

**அட்டவணை 4.2**

**உலகின் குழந்தை இறப்பு வீதம் 1965-2001**
**(குழந்தை இறப்பு வீதம் 1000 பிறப்புகளுக்கு)**

| நாடுகள் | 1965 | 1984 | 1992 | 2001 |
|---|---|---|---|---|
| மாலி | 207 | 176 | 130 | 141 |
| சியாராலியேன் | 221 | 176 | 143 | 182 |
| கயானா | 197 | 176 | 133 | 109 |
| எதியோப்பியா | 166 | 172 | 122 | 116 |
| மாலாவி | 201 | 158 | 134 | 114 |
| ஏமன் அரபுக்குடியரசு | 200 | 155 | 106 | 79 |
| அங்கோலா | 193 | 144 | 106 | 154 |
| சாட் | 184 | 139 | 122 | 117 |
| ஜப்பான் | 21 | 06 | 05 | 03 |
| சுவீடன் | 13 | 07 | 05 | 03 |
| நெதர்லாந்து | 14 | 08 | 06 | 05 |
| டென்மார்க் | 19 | 08 | 07 | 05 |
| நோர்வே | 17 | 08 | 06 | 04 |
| சுவிற்சலாந்து | 18 | 08 | 06 | 05 |
| பிரான்ஸ் | 22 | 09 | 07 | 04 |
| கனடா | 24 | 09 | 07 | 05 |

ஆதாரம் : World Development Report 1986 ; 2003

குழந்தைகளின் இறப்புக்குப் பொறுப்பாகவுள்ள காரணிகளைப் பொது வாக உள்ளார்ந்த காரணிகள் (Endogenous Factors) புறம் சார்ந்த காரணிகள் (Exogenous Factors) என இரு வகைப்படும். முதலாவதில், பிறப்பில் ஊறுபாடு, கருமுதலமைவுடைய காரணிகள், பிறப்புக்காயங்கள், பிறப்புக்குமுன்னர் போசாக்கின்மை, மூச்சுத்திணறுதல், நிறைகுறைவாயிருத்தல் போன்ற பல காரணிகள் உள்ளடக்கப்படுகின்றன. பின்னதிற் சத்துணவின்மை, மருத்துவப் பற்றாக்குறை, குழந்தை வளர்ப்பில் அக்கறையின்மை, பெற்றோரின்வறுமை, குறைந்த வாழ்க்கைத் தரம், அடுத்தடுத்து குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளல், சுகாதார வசதியற்ற வாழ்விடம், நோய்களிலிருந்து தக்க பாதுகாப்பு அளிக்கத் தவறுதல், தொப்புள் கொடியை அறுப்பதோடு தொடர்புடைய நோய்கள், வயிற்றோட்டம் போன்ற பல காரணிகளைக் குறிப்பிடலாம்.

## 4.5.சிறுவர் இறப்புக்கள்

விருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது ஏனைய நாடுகளிற் சிறுவர் இறப்பு வீதம் அதிகமாகவே உள்ளது. சிறுவர் என்பது 1-4 வயதிற் இடைப்பட்டவர்களைக் குறித்து நிற்கும். வளர்முகநாடுகளிலும், விருத்தி குறைவான நாடுகளிலும் மொத்த இறப்புக்களில் நான்கிலொரு பங்கு சிறுவர் இறப்பேயாகும்.

**அட்டவணை 4.3**

**குறிப்பிட்ட சில நாடுகளில் சிறுவர் இறப்பு வீதம் - 1992**

| நாடுகள் | ஆண் | பெண் |
|---|---|---|
| மாலி | 212 | 189 |
| சியராலியேன் | 253 | 229 |
| கயானா | 237 | 213 |
| எதியோப்பியா | 216 | 194 |
| மாலாவி | 238 | 215 |
| ஏமன் அரபுக்குடியரசு | 162 | 144 |
| நியூசிலாந்து | 11 | 08 |
| பெல்ஜியம் | 13 | 10 |
| நெதர்லாந்து | 09 | 07 |
| சுவீடன் | 08 | 06 |
| ஐக்கிய அமெரிக்கா | 12 | 09 |
| சுவிற்சலாந்து | 09 | 07 |

ஆதாரம் : World Development Report - 1994

## 4.6.பிரசவத் தாய் இறப்புக்கள்

பாதகமான சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளின் விளைவாக ஏற்படும் இறப்புக்களில் பிரசவத் தாய் இறப்பும் ஒன்றாகும். பிரசவத்தின் போது இறக்கும் தாய் மார்களையே இவ்இறப்பு குறித்து நிற்கின்றது. ஆயிரம் குழந்தைகளது பிறப்பின் போது இறக்கும் பிரசவத் தாய்மார்களை வைத்துப் பிரசவ இறப்புவீதம் கணிக்கப்படும். பொதுவாக விருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே இவ்வகை இறப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. ஆபிரிக்க நாடுகளில் அதிகமாகவிருந்த போதிலும் ஆசிய நாடுகளில் படிப்படியாக இது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றது. (அட்டவணை 4.1)

1988, 1990ஆம் ஆண்டுக்காலங்களில் விருத்தியடையாத நாடுகளிற் சராசரி1000 பிறப்புக்களுக்கு85 பிரசவத்தாய்மார்கள் இறப்பினைத் தழுவியுள்ளனர். விருத்தி யடைந்து வரும் நாடுகளில் 15-20 வரையான இறப்புக்கள் நிகழ, விருத்தியடைந்த நாடுகளில் 1000 பிறப்புகளுக்கு 0.5 இறப்புகளே நிகழ்ந்துள்ளன. இலங்கையில் 1998ஆம் ஆண்டில் 1000:13.4 இறப்புகளே நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு சுகாதார, மருத்துவ சேவைகளின் விரிவாக்கமேகாரணம் என்றால் மிகையாகாது. பிரசவத் தாய்மார்களின் இறப்புக்கு பெண்களின் கல்வியறிவுக் குறைவு, மிக ஆழமாகப் பழமைகளைப் பேணல், குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூடிய உடல்நிலை பெண்களுக்கில்லாமை, பிறப்புகளுக்கிடையேயான இடைவெளி குறை வாக இருத்தல், மருத்துவ வசதிகள் குறைவாகவிருத்தல், போசாக்குள்ள உணவினை பிரசவத் தாய்மார்கள் உட்கொள்ள தவறுகின்றமை, இளவயது விவாகம் போன்ற பல காரணிகள் பங்களிக்கின்றன.

## 4.7.வேற்றுமை இறப்புக்கள்

இறப்புக்களும் அதன் வகைகளும் பண்புகளும் வெவ்வேறுபட்ட வையாக' இருக்கின்றன. அதாவது வெவ்வேறுபட்ட உயிரியல் பொருளாதார, சமூக பண்பாட்டுக் காரணிகளின் விளைவாக இறப்புக்களின் பண்புகளும் மாறுபட்டமைகின்றன எனலாம். அவை வருமாறு.

### 4.7.1.பால் வேறுபாடு

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளிற் பெறட்பட்டுவரும் இறப்புகளுக் கான புள்ளிவிபரங்களின் பிரகாரம், பொதுவாக ஆண்களிலும் பார்க்க பெண் கள் காலந்தாழ்த்தி இறக்கும் நிலையினையே காணமுடிகின்றது. அதாவது பெண்கள் கூடுதலான காலம் வாழ்கின்றனர். (அட்டவணை 4.4)

**அட்டவணை 4.4**

**இறப்புக்களில் பால் வேறுபாடு 1965-1992**

| நாடுகள் | வயது | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | | | | பெண்கள் | | | |
| | 1965 | 1984 | 1992 | 1998 | 1965 | 1984 | 1992 | 1998 |
| **குறைந்த வருமானம் கொண்ட நாடுகள்** | 49 | 60 | 61 | 59 | 51 | 61 | 63 | 61 |
| அ) எதியோப்பியா | 42 | 43 | 47 | 42 | 43 | 46 | 50 | 44 |
| ஆ) வங்காளதேசம் | 45 | 50 | 45 | 58 | 41 | 51 | 56 | 59 |
| இ) நைகர் | 35 | 42 | 44 | 44 | 38 | 45 | 48 | 48 |
| ஈ) சோமாலியா | 36 | 44 | 47 | 52 | 40 | 47 | 50 | 55 |
| **மத்திய வருமானம் கொண்ட நாடுகள்** | 51 | 59 | 65 | 66 | 54 | 63 | 71 | 70 |
| **குறைந்தமத்திய வருமானம் கொண்ட நாடுகள்** | -- | --- | 64 | 67 | --- | --- | 71 | 72 |
| அ) சம்பியா | 42 | 50 | 49 | 43 | 46 | 53 | 46 | 43 |
| ஆ) நைஜீரியா | 40 | 48 | 50 | 52 | 46 | 51 | 54 | 55 |
| இ) பேரு | 49 | 58 | 67 | 66 | 52 | 61 | 67 | 71 |
| ஈ) பிலிப்பைன்ஸ் | ---- | ---- | 63 | 67 | ---- | ---- | 67 | 71 |
| **கூடிய வருமானம் கொண்ட நாடுகள்** | 56 | 63 | 66 | 67 | 60 | 68 | 72 | 74 |
| அ) சிலி | 56 | 67 | 69 | 72 | 62 | 73 | 76 | 78 |
| ஆ)ஆஜென்ரீனா | 63 | 67 | 68 | 70 | 69 | 74 | 75 | 77 |
| இ) இஸ்ரேல் | 70 | 73 | 75 | 76 | 73 | 77 | 78 | 80 |
| ஈ) ஹங்கேரி | ---- | --- | 65 | 66 | --- | --- | 74 | 75 |
| **உயர் வருமானம் கொண்ட நாடுகள்** | --- | --- | 74 | 75 | ---- | --- | 80 | 81 |
| அ) நியூசிலாந்து | 71 | 73 | 73 | 75 | 76 | 80 | 79 | 80 |
| ஆ) ஜப்பான் | 68 | 73 | 76 | 77 | 73 | 80 | 82 | 84 |
| இ) சுவிற்சலாந்து | 72 | 74 | 75 | 76 | 76 | 80 | 82 | 82 |
| ஈ) நோர்வே | 71 | 74 | 74 | 76 | 76 | 80 | 80 | 81 |

ஆதாரம் : World Development Report 1965, 1986, 2001

### 4.7.2.பொருளாதாரம்

அட்டவணை 4.4 இற் குறித்துரைக்கப்பட்ட நாடுகளில் ஆண்களிலும் பார்க்க பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு அதிகமாகவே உள்ளது. ஆண்கள் கடினமான வேலை செய்தல், பதட்டப்படல், உளரீதியாகப் பாதிப்படைதல் என்பன இதற்கான பல்வேறு காரணிகளில் சிலவாகும். பெண்களைப் பொறுத்த வரை, குழந்தைப் பேற்றுக்கால இறப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளமை, வேலைப்பளு குறைவாகவிருத்தல், வீட்டுப்பணி செய்பவர்களா கவே பெரும்பாலானோர் காணப்படல், தாய்-சேய் நலத்திட்டங்கள் விரிவு பெற்றமை போன்ற பல காரணிகள் பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பினை அதிகரித்துச் செல்கின்றது. உயிரியலாளர்கள் பெண்கள் ஆண்களைவிட கூடிய காலம் வாழ்வதற்கு உடற்கூற்றியலும் ஒரு காரணமாகும் என்பர்.

இந்நூற்றாண்டின் ஆரம்பகாலங்களிலிருந்து ஆண்-பெண் இருபாலாரின தும் ஆயுள் எதிர்பார்ப்புத் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே செல்கின் றது. அட்டவணை 4.4 உம் இதனையே எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறாக ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டு செல்வதனால் எல்லா நாடுகளும் தொழிற்படையிலிருந்து நீங்கியவர்களைப் பராமரிக்கப் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்யவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

### 4.7.3.நகர - கிராம வேறுபாடு

இறப்புக்களை ஏற்படுத்துவதற்குப் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளுடன் உயிரியற் காரணிகளும் காரணங்களாயுள்ளன. உலகில் நிகழ்கின்ற இறப்புக்களைப் பொறுத்தவரை நகரங்களிலும் பார்க்க கிராமங் களிலேயே அதிகம் நிகழ்கின்றன எனப்புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின் றன. கிராமப்புறங்களில் மருத்துவ, சுகாதார வசதிகள் பின்தங்கிக் காணப் படுகின்றமை, கல்வியறிவு குறைவு, இளவயது விவாகம், போசாக்கற்ற நிலை, வருமானக் குறைவு, பருவகாலத் தொழில் போன்ற பல காரணிகள் இறப்புக் களை அதிகரிக்கச் செய்கின்றன. ஆனால் நகரங்களில் மேற்குறித்த பாதகத் தன்மைகள் குறைவடைந்திருப்பதால் இறப்புக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்நிலையினை விருத்தி பெற்ற நாடுகளில் காணமுடிகின்றது.

வளர்முக நாடுகளிலும் விருத்தியடையாத நாடுகளிலும் சேவை மையங் களே பெரும்பாலான நகரங்களாக வளர்ச்சி பெற்றனவாக இருப்பதால் இறப்புக் களைப் பொறுத்தவரை நகர - கிராம வேறுபாடு மிகக் குறைவாகவே காணப் படுகின்றது. கிராமங்களோடு ஒப்பிடுமிடத்து நகரங்களிலும் சுகாதாரச் சீர்கேடு, சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு, சேரிகளிலும் சிறிய குடிசைகளிலும் வாழ்ந்துவரல் போன்ற பல காரணிகள் அதிகரித்த இறப்பினை ஏற்படுத்தி விடுகின்றன. குறிப்பாக, இந்திய நகரங்களில் இத்தகைய பண்புகளைக் காணக்கூடியதாக விருக்கின்றன.

### 4.7.4.விவாக நிலையும் இறப்புக்களும்

விவாக நிலையானது இறப்புக்களுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதைக் குடிப்புள்ளியியலாளர், சமூகவியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது விவாகம் செய்து குடும்பமாக வாழ்பவர்களிலும் பார்க்க, விதவைகள் விரைவில் இறந்துவிடுகின்றனர் என்பர். இவர்கள் தனிமைப்படுத்தப்படுவதால் இறப்பினை விரைவில் தழுவுகின்றனர். தோம்சனும் லூயிஸும் இத்தகைய இறப்புக்களுக்கு பல காரணிகளைத் தெரிவிக்கின்றனர். விவாகமானது உடற்பண்புகளுடனும் சமூகப் பொருத்தப்பாட்டுடனும் தொடர்புடையதால் இறப்புக்கள் பொதுவாக விரைவில் ஏற்படுவதில்லை. அத்துடன் உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ பெருமளவிற்குப் பாதகநிலை ஏற்படுவதில்லை. விவாகமானவர்கள் வாழ்வு ஒழுங்கமைக்கப்பட்டதும் ஒரு காரணமாகின்றது. இதனாலேயே விதவைகள், பிரிந்து வாழ்பவர்களிடையே இறப்புக்கள் அதிகம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. தோம்சனின் கருத்துப்படி மேற்குறித்தவர்கள் விவாகத்தின் மூலம் பெறக்கூடிய திருப்தியினை இழந்து விடுவதாலேயே விவாகமானவருடன் ஒப்பிடுமிடத்து விரைவில் இறந்து விடுகின்றனர் என்கிறார்.

### 4.7.5.தொழில் நிலையும் இறப்புக்களும்

பொதுவாக ஒருவருடைய தொழிலைக் கல்வி நிலை தீர்மானிக்க, தொழிலினூடாக வருமானம் கிடைக்கப் பெறுகின்றது. கல்வியும் அதனூடாகப் பெறப்பட்ட வருமானமும் உணவு, வீட்டு நிலை, பழக்கவழக்கத்தை தீர்மானிக்கின்றன. எனவே இவை ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் இருப்பதால் ஒன்று சேர்ந்து ஆராய்தல் கடினமானது. 1851ஆம் ஆண்டு இங்கிலாந்தில், தொழிற் பண்புகளுக்கும் இறப்புக்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொழில் நிலையினை ஐந்து சமூக வகுப்பாக வகைப்படுத்தியபோதும், சமூக வகுப்பு (Social Class) ஒன்றிலுள்ளவர்களின் ஆயுள் அட்டவணை பின்தள்ளப்பட்டதாகவும், சமூக வகுப்பு 5இல் உள்ளவர்களின் ஆயுள் அட்டவணை முன்னோக்கிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்பவர்கள் இருதய நோய்கள், இருதயப் புற்று நோய்களால் பீடிக்கப்பட்டு இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கடினஉழைப்பைக் கொண்டதும் வருமானம் குறைவானதும் மனத் திருப்தியற்றதுமான தொழில்களைச் செய்வோர் விரைவில் இறந்து விடுகின்றனர் எனச் சமூகவியல் மற்றும் குடிப்புள்ளியியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

### 4.7.6.கல்வி நிலையும் இறப்புக்களும்

கல்வி நிலையானது மனிதனுடைய இறப்புக்குரிய காலத்தினைப் பின்தள்ளக் கூடியதாக இருக்கின்றது. கல்வி கற்ற பெண்களுக்குப் பிரசவ காலத்திலும் அதன் பின்னரும், குழந்தை இறப்புக்களும் சிறுவர் இறப்புக்களும்

மிகக் குறைவாகவே இருக்கின்றன. கங்கேரி, வெனிசூலா, பேரு ஆகிய நாடுகளிற் பாடசாலைக்குச் செல்லாத தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் இறப்பு 1000:95 ஆகவுள்ளது. அங்கே 13 வயது வரையும் பாடசாலைக்குச் சென்ற பெண்களுக்குப் பிறக்கும் குழந்தை இறப்பானது 1000:27 ஆகவுள்ளது. கல்விகற்கும் காலம் நீடிக்கப்படுகின்ற நிலையில் இளவயது விவாகம் பின்தள்ளப்படுவதால் இவர்களிடையே முழுமையான உயிர் பிறப்புக்கள் நிகழ வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் கல்வியினூடாகச் சுற்றுபபுறச்சூழல், சுகாதார நிலைகளைப் பேணமுடிகின்றது.

### 4.7.7.சமூக பண்பாட்டுக் காரணிகளும் இறப்புக்களும்

சமூக நிலைமைகள் - மதம், பாரம்பரியம், இளவயது விவாகம் போன்றன பல இறப்புக்களின் பண்புகளை மாற்றியமைக்கக் கூடியதாகவுள்ளன. பின்தங்கிய சமூகங்கள், பின்தங்கிய வாழ்விடங்கள், காலவோட்டத்தோடு ஒன்றியமையாத தன்மைகள் காணப்படும் நிலைமைகளில் இறப்புக்கள் அதிகரித்துக் காணப்படும். மதங்களில் கொண்ட நம்பிக்கைகளும் இறப்புக்களின் பண்பினை மாற்றியமைக்க வல்லன. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட தேசிய மாதிரி அளவீட்டின்படி இறப்புக்கள் கிராமங்களில் இந்துக்களிடையே 1000:13 ஆகவும், இஸ்லாமியரிடையே 1000:11 ஆகவும், கிறிஸ்தவர்களிடையே 1000:6.0 ஆகவும் சீக்கியர்களிடையே 1000:5.0 ஆகவும் காணப்பட்டன. நகரங்களில் முறையே 1000:8.1, 1000:8.3, 1000:6.0, 1000:5.4 ஆகக் காணப்பட்டன. பல நாடுகளில் கத்தோலிக்க, இஸ்லாம் மதத்தவர்களிடையே அதிகரித்த பிறப்புக்களும் இறப்புக்களும் நிகழ்கின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் இந்நிலைமையினை அவதானிக்கலாம்.

### 4.7.8.பெரும் ஆபத்து நிறைந்த சூழலியற் காரணிகளும் இறப்புக்களும்

புவியிற் பல்வேறு பிரதேசங்களிற் காலத்துக்குக் காலம் பல அனர்த்தங்கள் ஏற்பட்டு, இறப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன. வெள்ளப்பெருக்கு, சுனாமி, புவிநடுக்கம், மண்சரிவு, எரிமலை கக்குதல் போன்றவற்றால் குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குள் பல்லாயிரக்கணக்கான இறப்புக்கள் நிகழ்ந்து விடுகின்றன. உதாரணமாக வடகீழ் பருவக்காற்றுக் காலங்களில் வங்காள தேசத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் தாழ்நிலப் பிரதேசங்களில் அதிகளவு மனித இறப்புக்கள் ஏற்படுகின்றன.

1992ஆம் ஆண்டு இந்தியாவிலும், 1995ஆம் ஆண்டு மத்திய ஜப்பானிலும் நிகழ்ந்த புவிநடுக்கத்தினால் பல்லாயிரக்கணக்கான உயிர்ச் சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன. இவைதவிர மத்திய சீனாவில் நிகழ்ந்த புவிநடுக்கங்களினால் 8 மில்லியன் மக்கள் இதுவரை இறந்துள்ளனர். 2004அம் ஆண்டு மார்கழிமாதம் 26ஆம் திகதி வடசுமாத்திராவுக்கு அண்மையில் வங்காளவிரிகுடாப்பகுதியில் நிகழ்ந்த புவிநடுக்கத்தில் கடலலையானது

இப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள நாடுகளில் நிலப்பகுதிக்குள் வேகமாக உள் வந்து அனர்த்தத்தை ஏற்படுத்தியதனால் 250,000 இற்கும் மேற்பட்ட உயிர் களைக் காவுகொண்டதுடன் பெரும் பொருட்சேதத்தையும் விளைவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இக்கடலலை (Tsunami) உள்வந்ததன் விளைவாக 40,000இற்கும் அதிகமான மக்களின் உயிர்களைப் பறித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மாறுபாடுடைய காலநிலை மாற்றங்களினால் கொடிய தொற்று நோய்கள் ஏற்பட்டு மக்கள் இறக்கின்றனர். குறிப்பாக மலேரியா, கொலரா, பிளேக் போன்ற நோய்களால் ஏற்படும் இறப்புக்கள் அதிகமானவை. உதாரண மாக 1994 ஆம் ஆண்டில் இந்தியாவில் பரவிய பிளேக் நோய் உலகத்தையே அச்சுறுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் உலகில் குறிப்பாக வளர்முக நாடுகளில் வேண்டத்தகாத மனித நடத்தையின் விளைவாக எச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்று வேகமாக அதிகரித்து வருவதனால் இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக 2010ஆம் ஆண்டில் உலகில் இந்தியாவிலேயே அதிக இறப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளமையையும் காணமுடிகின்றது.

### 4.7.9.போர்களும் இறப்புக்களும்

இன்றைய நவீன உலகில் கொடிய போராயுதங்களை பயன்படுத்தி சில நாடுகள் யுத்தங்களைச் செய்துவருவதால் போராளிகளும் பொதுமக்களும் இறந்து விடுகின்றனர். இத்தகைய நிகழ்வுகள் வளர்முக நாடுகளில் மட்டுமல் லாது வளர்ந்த நாடுகளிலும் நிகழ்ந்து வருகின்றன. இவ்வகை யுத்தங்களால் வருடமொன்றுக்கு உலகில் சராசரி 6 இலட்சம் மக்கள் இறப்பினைத் தழுவிக் கொள்கின்றனர் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

### 4.8. இலங்கையில் இறப்புக்கள்

இலங்கையில் வரலாற்றுக் காலங்களில் நிகழ்ந்த இறப்புக்கள் சம்பந்த மான தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறாத போதிலும் ஊகித்து அறியக் கூடிய பல சம்பவங்கள் உள்ளன. இலங்கையின் வரண்ட பிரதேசம் வரலாற்றுக் காலத்தில் சிறப்பிடம் பெற்று விளங்கியமைக்குப் பல்வேறு சான்றுகள் கிடைக் கப் பெற்றுள்ளன. குடித்தொகைப் பண்புகளைப் பொறுத்த மட்டிலுஞ் சிறப்பாக இருந்துள்ளன என அறிஞர்கள் கருதுகின்றனர். "ரெனன்ற்", அருணாசலம் போன்றோர் முறையே 17.5 மில்லியன், 10.0 மில்லியன் மக்கள் வரண்ட பிரதேசத்தில் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். இதற்குச் சாட்சியாகப் பரவலாகக் காணப்படும் குளங்கள், நகர சுத்திகரிப்பாளரின் எண்ணிக்கை, பௌத்த பிக்குகள், பிக்குணிகளின் எண்ணிக்கை, அரசுகளின் இராணுவபலம், கிராமங்களின் எண்ணிக்கை போன்ற பல ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்துள்ளனர்.

இருப்பினும் வரலாற்றைத் தெளிவாகப்பெறக்கூடிய காலப்பகுதி களிலிருந்து வரண்ட பிரதேசத்தில் மக்கள் மிகக் குறைவாகவே இருந்துள்ள

னர். குறிப்பாகக் கரையோரம் சார்ந்த பகுதிகளிலேயே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் எனலாம். அதாவது வரலாற்றிற் காணப்பட்ட அதிகளவு குடித்தொகை பெருமளவிற் குறைவடைந்தமைக்குப் பல்வேறு காரணிகள் இறப்புக்களை அல்லது இடப்பெயர்வினை ஏற்படுத்தியிருக்கலாம். தென்னிந்தியப் படையெடுப்புக்கள் இறப்பினை அல்லது இடப்பெயர்வினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

சோழர் படையெடுப்பின் போது, அநுராதபுரம் வீழ்ச்சியடைந்ததும் பொலனறுவை தலைநகரமானதும் பின்னர் படிப்படியாகத் தலைநகரங்கள் மாற்றப்பட்டு இறுதியிற் கோட்டை, கண்டி சார்ந்து அமைந்தமையையும் வரலாறு கூறும். இந்நிலையில் வரண்ட பிரதேசப் பொருளாதாரம், குறிப்பாக விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்தது மட்டுமல்லாது மலேரியா, கொலரா போன்ற நோய்களினால் மக்கள் இறந்திருக்க வேண்டும். இந்நிலையால் இப்பிரதேசம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பகுதியாக இலங்கை சுதந்திரம் அடையும் வரையும் இருக்கவில்லை.

இலங்கையின் வாழ்நிலைப் புள்ளிவிபரங்களின் சேகரிப்பு, பிரித்தானியரால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இதன் விளைவாக விஞ்ஞான ரீதியான தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அட்டவணை 4.5 இலங்கையின் பருமட்டான இறப்புக்கள், பிரசவத் தாய் இறப்புக்கள் ஆகியவற்றைத் தெரிவிக்கின்றன.

அட்டவணை 4.5

**இலங்கையில் இறப்புக்கள் (1871-2001)**

| காலப்பகுதி | பருமட்டான இறப்புவீதம் | பிரசவத்தாய் இறப்பு வீதம் (100,000) |
|---|---|---|
| 1871 - 1875 | 20.8 | ----- |
| 1881 - 1885 | 23.5 | ----- |
| 1891 - 1895 | 28.5 | ----- |
| 1901 - 1905 | 26.7 | ----- |
| 1906 - 1910 | 30.8 | ----- |
| 1911 - 1915 | 30.6 | ----- |
| 1916 - 1920 | 30.1 | ----- |
| 1921 - 1925 | 27.8 | 20.1 |
| 1926 - 1930 | 25.1 | 19.4 |
| 1931 - 1935 | 24.6 | 21.0 |
| 1936 - 1940 | 21.4 | 19.2 |
| 1941 - 1945 | 19.9 | 14.7 |
| 1946 - 1950 | 14.3 | 9.3 |
| 1951 - 1955 | 11.2 | 5.1 |
| 1956 - 1960 | 9.5 | 3.6 |
| 1961 - 1965 | 8.4 | 2.7 |
| 1966 - 1970 | 7.9 | 1.7 |

| | | |
|---|---|---|
| 1971 - 1975 | 8.2 | 1.4 |
| 1976 - 1980 | 8.0 | 1.3 |
| 1981 - 1985 | 7.0 | 1.2 |
| 1986 - 1990 | 6.5 | 1.2 |
| 1991 - 1995 | 5.9 | 3.9 |
| 1995 - 2000 | 6.4 | 3.9 |
| 2001- | 5.9 | 3.1 |

ஆதாரம்: பதிவாளர் நாயகத்தின் அறிக்கைகள்

பிரித்தானியர் ஆட்சிக்காலத்திற் பெருமளவிலான இந்தியத்தமிழர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்களிற் பலர் தமது தாய்நாட்டில் வறியவர்களாகவும் நோய்வாய்ப்பட்டவர்களாகவும் காணப்பட்டிருந்தனர். இந் நிலையிற் தலைமன்னாரில் இருந்து தொழிற்பகுதிக்குச் செல்வதற்கு முன்னர் பலர் இறந்துள்ளனர். 1840-1850ஆம் ஆண்டுகளிலும் 1920-1935ஆம் ஆண்டு களிலும் இந்தியத் தமிழரின் இறப்புக்கள் முறையே 1000 பேருக்கு 366,155 ஆக இருந்துள்ளன. இறப்புக்கான காரணிகளில் முக்கியமானது மலேரியாவும் கொலராவும் ஆகும். இதன் விளைவாக இலங்கையிற் பலரும் தொற்று நோயினால் இறந்துள்ளனர் என அக்கால அரசாங்க அறிக்கைகள் தெரிவிக் கின்றன.

### 4.8.1.பருமட்டான இறப்புக்கள்

அட்டவணை 4.5 இன்படி இலங்கையின் பருமட்டான இறப்புக்களை 4 காலப் பிரிவுகளாக பிரித்து அறிதல் சிறப்புடையது.

1) 1871 - 1910

2) 1911 - 1920

3) 1921 - 1945

4) 1946 - 2000

ஆகிய காலப்பகுதிகளே அவையாகும்.

1871-1910ஆம் ஆண்டுகளிடையே இறப்பு வீதம் படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காணலாம். இக்காலப்பகுதியிற் பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் பெருமளவிற்கு தவறானது என்ற கருத்தும் நிலவுகின்றது. 1867 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு சம்பந்தமான தகவல்கள் மக்களால் வெளிப் படுத்த வேண்டும் என்று சட்டம் தெரிவித்த போதிலும் 1897இல் இருந்தே அது கட்டாயப்படுத்தபபட்டது. இதனால் இறப்பு, பிறப்பு பதிவுகளுக்கான தகவல் களைக் கொடுப்பதில் காணப்படும் குறைபாடும் தவறுக்குக் காரணமாக இருந்துள்ளது. அத்துடன் மக்களின் கல்வியறிவின்மையும் மருத்துவ, சுகாதார வசதிக்குறைவும் இக்காரணிகளில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

1911-1920ஆம் ஆண்டுக் காலப்பகுதியையே இறப்புக்கள் அதிகரித்த காலப்பகுதியாகக் கொள்ள வேண்டும். இதனை இலங்கையில் மட்டுமல்லாது

தெற்காசிய நாடுகளிலும் அவதானிக்க முடிந்தது. பருமட்டான இறப்புக்கள் மட்டுமல்லாது பிரசவத்தாய், குழந்தைகள் இறப்புக்களும் அதிகரித்த காலப் பகுதி இதுவாகும். 1918-1919களில் அதியுயர்ந்த இறப்பு வீதமாக 37.6 வீதம் இருந்துள்ளது. இக்காலத்தில் இறப்புக்கள் அதிகரிப்பதற்குரிய காரணங்கள் மலேரியா, நெருப்புக்காய்ச்சல் என்பனவாகும். 1910இல் இலங்கையின் மொத்த இறப்புக்கள் 110,195 ஆக இருக்க 1911இல் அது 143,380 ஆக உயர்ந்துள்ளது. 1912இல் 134,383 ஆக குறைவடைந்துள்ளது.

அதேவேளையில் ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்புக் கள் 1910இல் 1000 பிறப்புக்கு 176 ஆக இருக்க 1911இல் 218 ஆகவும் 1912இல் 215 ஆகவும் இருந்தது. 1921ஆம் ஆண்டு குடித்தொகை கணிப்பு அதிபரின் மதிப்பீட்டின் படி நெருப்புக் காய்ச்சலினால் மட்டும் 57000 மக்கள் இறந்துள் ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த காலப்பகுதியில் இறப்புக்கள் அதிகரித்திருந்தாலும் இலங்கை அரசு பல்வேறு நலத்திட்டங்களை ஏற்படுத்தி இறப்புக்களைக் கட்டுப் படுத்த முயற்சி செய்தது. குறிப்பாக 1859இல் குடிசார் மருத்துவத் திணைக் களம் (Civil Medical Department), 1899இல் நுண்ணுயிரியல் நிறுவனம் (Pactriological Institute), 1870இல் உயர்தொழில் வைத்தியப்பிரிவு (Proffessi-onal Medical Training), 1897இல் அம்மைக்கெதிரான கிருமிப் பாய்ச்சுதலும் பால்கட்டலும் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

1916இல் வைத்தியத் துறையின் கிளையான துப்பரவேற்பாட்டுப் பகுதி யும் (Sanitation Branch) கொழுக்கிப்புழு இயக்கமும் (Hook Worm Campaign) 1926இல் பிரதேசங்களுக்கான சுகாதார அலகுகளும் (Health Units) ஏற்படுத்தப் பட்டன. இவை காலப்போக்கில் விருத்திபெற்றுச் சுகாதார ஆய்வை மேற் கொள்ளல், சுகாதாரக் கல்வியை பாடசாலைகளில் அறிமுகம் செய்தல், சுற்றுப்புறச் சுகாதாரத்தை விருத்தி செய்தல் என்பனவற்றில் ஈடுபட்டன. மேலும் தாய் - சேய் நலனை உறுதிப்படுத்த எனத் தனியான பிரிவொன்றையும் சுகாதார அமைச்சு ஏற்படுத்தியது. மேற்கூறிய நடவடிக்கைகள் தரவுகள் பெற்றுக் கொள்ளக்கூடிய காலப்பகுதியிலிருந்து படிப்படியாக இறப்புக்கள் குறைவடை வதற்குப் பெரிதும் உதவின எனலாம்.

மூன்றாவது காலப்பகுதியான 1921 - 1945 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இறப்புவீதம் படிப்படியாக குறைவடைந்து கொண்டு செல்வதைக் காணலாம். எனினும் 1935ஆம் ஆண்டு நாட்டிற் பரவலாக ஏற்பட்ட மலேரியா நோய் திடீரென இறப்புக்களை அதிகரித்து, 1934இல் 1000:22.9 ஆக இருந்த இறப்பு வீதத்தை 1935இல் 36.5 ஆக அதிகரித்தது. அதேவேளை பிறப்பு வீதம் 34.4 என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

குழந்தை இறப்புக்கள் கூட 1934இல் 1000:173 ஆக இருந்து 1935இல் 262 ஆகவும் பிரசவத்தாய் இறப்புக்கள் 1000:20.1 லிருந்து 26.8 ஆகவும் உயர்ந் தது. எனினும் 1936ஆம் ஆண்டிலிருந்து இவற்றைக் கட்டுப்படுத்த முடிந்தது. இறப்பினைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவ வசதி மட்டுமல்லாது நாட்டின் பல

பாகங்களையும் இணைக்கும் போக்குவரத்து வசதிகளின் விளைவாகப் பொது வான பொருளாதார, சமூக நன்மைகளைப் பெறக்கூடியதாக இருந்தமையையும் காரணமாகக் கொள்ள வேண்டும்.

1946-2000ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் குடித்தொகை இயக்கப் பண்புகளைப் பொறுத்தவரை, முன்னர் உள்ள காலப்பகுதியோடு ஒப்பிடுமிடத்து வேறுபட்டமைக்கின்றது. குறிப்பாக இறப்பு வீதமானது திடீரென குறைவடைந்து செல்வதைக் காணலாம்.

1945இல் 21.5 ஆக இருந்த இறப்புவீதம் 1948இல் 19.8 ஆகவும் 1974இல் 14.0 ஆகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. தொடர்ச்சியான வீழ்ச்சியால் 2000இல் 6.0 ஆகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 1943 -1946 காலப்பகுதியில் வருடாந்த சராசரி இறப்புக்கள் 136000 ஆக இருந்து 1947-1950 காலப்பகுதியில் 95000 ஆக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை 1945இல் 35.9 ஆக இருந்த பிறப்பு வீதம் 1946 இல் 37.4 ஆக உயர்வடைந்தது. இறப்பு வீதத்தில் படிப்படியான வீழ்ச்சி காணப்பட, பிறப்பு வீதம் ஏற்ற இறக்கத்துடன் கூடிய தன்மையைக் கொண்டிருந்ததால் இயற்கை அதிகரிப்பு இக்காலப்பகுதியில் அதிகரிக்க காரணமாக இருந்துள்ளது. இதற்கான காரணிகள் பலவாயினும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் மலேரியா ஒழிப்புக்கான டி.டி.ரி மருந்து தெளித்ததன் விளைவே முக்கியமானது. நியூமனின் கருத்துப்படி மலேரியா நோயினால் இறந்தவர்கள் மட்டுமல்லாது மறைமுகமாக அதனால் பாதிக்கப்பட்டவர்களிடையே பல்வேறு அசௌகரிய நிலை காணப்பட்டது என்கிறார். இவை 1946ஆம் ஆண்டின் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து சென்றுள்ளது.

இறப்பு வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றமைக்கு மறைமுகக் காரணிகள் பல உதவியுள்ளன. டொனமூர் குழுவின் சிபார்சின்படி இலங்கையர் நாட்டின் நிர்வாகத்திற் பங்குகொண்டிருந்தமை, 1947இல் இலங்கையரைக் கொண்ட புதிய அரசின் தோற்றம், வரண்டபிரதேசம் உட்பட நாட்டின் பொருளாதார விருத்தியுடன் கூடிய வாழ்க்கைத் தர உயர்வு, 1942இலிருந்து கட்டாய இலவசக் கல்வி முறையின் அறிமுகம், கிராமப்புறங்களில் வைத்திய நிலையங்கள் - குறிப்பாக பிரசவ விடுதிகள் ஸ்தாபித்தமை (Para Medical Services). இலவசப் பால் வழங்கும்திட்டம், இலவச மற்றும் மானிய முறைகளின் மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் முறையின் அறிமுகம், பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவுத்திட்டம், கெயர் ஸ்தாபனத்தின் உதவிகள், மருத்துவ மற்றும் தாதிப் பயிற்சிகளுக்கு அதிகளவில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் முறை, உலக நாடுகளினதும் சர்வதேச நிறுவனங்களினதும் உதவிகள் கிடைக்கப்பெற்றமை, 1953இல் குடும்பத்திட்டச் சங்கத்தின் தோற்றம் மற்றும் அதன் செயற்பாடுகள் படிப்படியாக அதிகரித்தமை, பொதுச்சுகாதார முறைகளின் விருத்தி, முன்கூட்டியே தொற்று நோய்களுக்கான மருந்துகளை மக்களிடம் சென்றடையச் செய்தல் போன்ற பல காரணிகளும் இறப்பினைக் கட்டுப்படுத்திய காரணிகளில் சிலவாகும். 1970களின் பின்னர் மக்களிடையே போசாக்கு உள்ள உணவுகளை உட்கொள்ளும்

பண்பு அதிகரித்தமையும் சேர்ந்து இறப்புக்களை மேற்குலக நாடுகளுக்கு இணையாக குறைக்க முடிந்தது என மத்திய வங்கி அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

**அட்டவணை 4.6**

**இலங்கையில் குழந்தை இறப்பு வீதம் 1881-2001**
**(1000)**

| காலப்பகுதி | குழந்தை இறப்பு வீதம் | காலப்பகுதி | குழந்தை இறப்பு வீதம் |
|---|---|---|---|
| 1881 - 1885 | 158 | 1941 - 1945 | 131 |
| 1886 - 1890 | 159 | 1946 - 1950 | 101 |
| 1891 - 1895 | 169 | 1951 - 1955 | 75 |
| 1896 - 1900 | 168 | 1956 - 1960 | 63 |
| 1901 - 1905 | 172 | 1961 - 1965 | 54 |
| 1906 - 1910 | 109 | 1966 - 1970 | 50 |
| 1911 - 1915 | 201 | 1971 - 1975 | 47 |
| 1916 - 1920 | 190 | 1976 - 1980 | 45 |
| 1921 - 1925 | 190 | 1981 - 1985 | 48 |
| 1926 - 1930 | 175 | 1986 - 1990 | 43 |
| 1931 - 1935 | 183 | 1991 - 1995 | 17 |
| 1936 - 1940 | 160 | 1996 -2000 | 15 |
| | | 2001- | 12 |

ஆதாரம்: 1) Populaton of Sri Lanka, ESCAP Publication 1976)
2) Registrar Generals' Department.

### 4.8.2.குழந்தை இறப்புக்கள் 1881-2001

அட்டவணை 4.6 இன் பிரகாரம் குழந்தை இறப்புப் பற்றி 1881ஆம் ஆண்டில் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. மேற்படி இறப்புக்கள் 1940கள் வரை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டுள்ளன.

1950களின் பின்னர் குழந்தை இறப்பு வீதமானது படிப்படியாக வீழ்ச்சி யடைந்து 1999இல் 1000:13 ஆகக் காணப்பட்டது. 1950ஆம் ஆண்டிற்கு முன் சராசரி இறப்புக்கள் அதிகமாகக் காணப்பட்டதற்குப் பின்வரும் காரணிகள் செயற்பட்டிருந்தன.

1) மருத்துவ, சுகாதார வசதிகளின் விருத்திக் குறைவு
2) மலேரியா, கொலரா நோய்களின் உக்கிரம்.
3) பெற்றோரிடையே கல்வியறிவுக் குறைவு.
4) கர்ப்பமாயிருந்த தாயும் பிறந்த குழந்தையும் போசாக்குள்ள உணவு உட்கொள்வதில் உள்ள குறைபாடுகள்.
5) குழந்தை பராமரிப்பின் தன்மைகள்
6) தாயானவள் குறைந்த இடைவெளியில் பல குழந்தைகளைப் பெற்றெடுக் கும் நிலை

7) சுகாதார வசதியற்ற குடியிருப்புக்கள்

8) பெற்றோரின் பொருளாதார நிலை

9) தென்னிந்தியாவிலிருந்து வருவதும் போவதுமாக இருந்த தொழிலாளரினால் காவிக்கொண்டுவரப்பட்ட தொற்றுநோய்கள் போன்ற பல்வேறு காரணிகள் இறப்பினை அதிகப்படுத்தியிருந்தன.

குறிப்பாக 1910இல் 1000:176 ஆக இருந்த இறப்புக்கள் 1911இல் 218 ஆகவும் 1912இல் 215 ஆகவும் அதிகரித்தன. மலேரியா நோய் உக்கிரம் அடைந்த காலங்களில் குழந்தை இறப்புக்களும் பிரசவத்தாய்மாரின் இறப்புக் களும் அதிகரித்துக் காணப்பட்டன. 1934இல் 1000:73 ஆகவிருந்த இறப்புக்கள் 1935இல் 262 ஆக அதிகரித்தது. இலங்கையில் 1950ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட நிலையினை 1984இல் சியாராலியோன் (176) கயானா (176) எதியோப்பியா(176) சோமாலியா(153) ஆகிய நாடுகளில் அவதானிக்க முடிந்தது.

1950களின் பின்னர் குழந்தை இறப்பு வீதமானது வளர்ந்த நாடுகளின் இறப்புவீதத்தோடு ஒப்பிடும் அளவிற்கு குறைவடைந்துவருவது வரவேற்கக் கூடியது. இஸ்ரேல் (14) கியூபா (16) கிறீஸ் (16) கோஸ்ரோறிக்கா (19) ஆகிய வளர்முக நாடுகளின் வரிசையில் இலங்கையும் 1999இல் 13 ஆக இருப்பது எதிர்காலத்தில் மேலும் குறைவடையும் சாத்தியத்தை வெளிப்படுத்துகின்றது.

2001ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின் படி வளர்ந்த நாடுகளில் குறிப்பாக ஜப்பான் (3) பின்லாந்து (4) சுவீடன் (3) நெதர்லாந்து (5) டென்மார்க் (4) நோர்வே (4) சுவிற்சலாந்து (6) ஆகியன மிகக்குறைந்த அளவிற் குழந்தை இறப்புக்களை கொண்டிருந்தன. எனினும் பொருளாதார ரீதியில் பலம் குறைந்த இலங்கை படிப்படியாகக் குழந்தைகள் இறப்பினைக் கட்டுப்படுத்தி வருவதற்கு பின்வரும் காரணிகள் வலிமை பெற்றுவருவதே காரணமாகும். அவையாவன.

1) உயிரியல் காரணிகள்
2) சமூக, கலாசாரக் காரணிகள்
3) பொருளாதாரக் காரணிகள்
4) மருத்துவக் காரணிகள்

#### 4.8.2.1.உயிரியல் காரணிகள்

பொதுவாகக் குழந்தை இறப்புக்களையும் பிரசவத்தாய்மாரின் இறப்புக் களையும் கட்டுப்படுத்துவதில் உயிரியல்காரணிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. கர்ப்பம் தரித்த பெண்கள் வைத்திய ஆலோசனைகளைப் பெறுதலும் சத்துள்ள உணவுகளை உண்ணலும் அவசியமாகும். இலங்கையில் ஒரு வருடத்தில் பிரசவத்தாய்மாரில் 80-90 சதவீதமானோர் நற்பயிற்சியுள்ள மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்றுவருகின்றனர் என மருத்துவஅறிக்கைகள் தெரிவிக் கின்றன. அதுமட்டுமன்றி 95.0 சதவீதமான கர்ப்பவதிகள் பிரசவ விடுதிகளி லேயே குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஐக்கியநாடுகளின் அறிக்கைப்படி

வளர்முகநாடுகளின் தாய்மார்கள் முதற் பிரசவத்திலேயே அதிகளவில் இறக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இலங்கையில் இவ் இறப்பு மிகக் குறைவாகவே இருப்பதற்கு இளவயது விவாகம் குறைவடைந்துள்ளமையும் தகுந்த மருத்துவ, சுகாதார மற்றும் தனிப்பட்ட பராமரிப்புக் காணப்படுவதுமே காரணமாகும். 1984ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி சராசரி கிராமப் பெண் 5.1 குழந்தைகளையும் நகரப்பெண் 4.4 குழந்தைகளையும் பிரசவித்தாள். இது 1940களிலே முறையே 8.4, 6.8 ஆக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 2001 ஆம் ஆணடில் சராசரி கிராமப் பெண் 4.1. குழந்தைகளையும் நகரப்பெண் 2.4 குழந்தைகளையும் பிரசவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியக் குடித்தொகை அறிஞர் சந்திரசேகர், இளவயது விவாகம் காரணமான அதிகரித்த பிறப்பு, இறப்பின் போது தாயின் வயது, பிறப்பிடைவெளிக்காலம் போன்றன குழந்தை இறப்பை நிர்ணயம் செய்யும் உயிரியல் காரணிகளாகும் எனக் கூறுகின்றார். இலங்கையில் ஓரளவுக்கு மேற்கூறப்பட்டவற்றிற்கு எதிரான நிலைமை காரணமாகக் குழந்தை இறப்புக்களை படிப்படியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடிகின்றது.

### 4.8.2.2. சமூக, கலாசார காரணிகள்

இலங்கையில் குழந்தை இறப்பினைத் தீர்மானிக்கும் காரணிகளில் சமூக, கலாசார காரணிகளும் பங்கு கொள்கின்றன. இந்நாட்டில் 90.0 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கல்வியறிவு உடையவர்களாகவுள்ளதுடன் ஆண்களுக்கு நிகராக பெண்களும் கல்வித் தகைமை கொண்டவர்களாக இருப்பது, பிறப்பின் அளவினைக் குறைத்து இறப்பின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. கடந்த 40 வருடங்களில் பெண்களின் விவாக வயது 5ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளதான உள்ளார்ந்த காரணிகளால் அதிகளவிலான குழந்தை இறப்பின் தாக்கம் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எல்லா இனத்தவர்களிடையேயும் ஆண் குழந்தைகளிலான மோகம் இருந்து வருகின்றது. எனினும் பொருளாதாரக் காரணியுடன் சமூகக்காரணிகளும் இணைந்து இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து வருவதை அண்மைக் காலங்களில் பல்வேறு ஆய்வுகளிலிருந்து அறியமுடிகின்றது. இதனால் ஆண்குழந்தை கிடைக்கும் வரை குழந்தை பெறும் நிலை பெருமளவில் குறைவதனால் தாய்-சேய் இறப்புக்களை கட்டுப்படுத்தக் கூடியதாக உள்ளது. அத்துடன் கல்வியறிவு, தொழில்வாய்ப்பு, சமசம்பள நடைமுறை போன்ற பல காரணிகளால் பெண்களிடையே சமூக அந்தஸ்து அதிகரித்துள்ளமை, திட்டமிட்ட குடும்ப அமைப்பு மற்றும் கணவன் - மனைவியரிடையே புரிந்துணர்வு வளர்வது போன்றவற்றை அண்மைக்காலங்களில் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. குடும்பத்திட்டமிடலை மக்கள் விரும்பியேற்கும் நிலை கடந்த காலங்களில் அதிகரித்து வருவதனால் பிறப்புக்களை கணிசமானளவு கட்டுப்படுத்தி இறப்பினைத் தவிர்க்க முடிகின்றது. 1971ஆம் ஆண்டில் 49323 பேர் நிரந்தரக் குடும்பத்திட்டமிடலினை ஏற்றுக்கொண்ட நிலையில் 1986இல் 137,307 பேர் ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் நகராக்க வளர்ச்சி, நகரப்

பண்புகளை உடைய கிராமங்களின் வளர்ச்சி, சமூக நலத்துறை பாதுகாப்பு, தொடர்பு சாதனங்களின் பரவல், மதம் மற்றும் கலாசாரத்தின் இறுக்கமான பிடித்தளர்வு, சுகாதார வசதிகளுடன் கூடிய குடியிருப்புக்களின் அதிகரிப்பு, போக்குவரத்து வசதிகளின் விருத்தி போன்ற பல்வேறு காரணிகள் பிறப்புக் களைக் கட்டுப்படுத்துவதுடன் குழந்தை இறப்புக்களை மட்டுப்படுத்தியும் வருகின்றன. மேற்கூறிய காரணிகள் இலங்கையில் சகலரிடமும் சென்றடை வதெனக் கூறமுடியாது. பொருளாதார. வளம் மக்களிடையே அதிகரிக்கும் பட்சத்தில் மட்டுமே, மேலும் சமூக, கலாசார. பண்புகளிற் தாக்கத்தை ஏற்படுத்தி வளர்ந்த நாடுகளுக்கு இணையாகக் குழந்தை இறப்பினைக் கட்டுப்படுத்தலாம் எனத் துணியலாம்.

#### 4.8.2.3.பொருளாதாரக் காரணிகள்

1950களிலிருந்து குழந்தை இறப்புக்கள் படிப்படியாகக் குறைவடைந்து செல்வதற்குப் பொருளாதாரக் காரணிகளும் கணிசமான பங்கினை வகிக் கின்றன. இக்காரணிகளானது இவ் இறப்பில் உள்ளார்ந்த காரணிகளை மட்டு மல்லாது புறம்சார்ந்த சார்ந்த காரணிகளையும் கட்டுப்படுத்திவிடும் வல்லமை யைப் பெற்றிருக்கிறது.

1945இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக்கல்வி முறை, மலேரியா ஒழிப்புக்கான டீ.டீ.ரி தெளித்தலில் ஏற்பட்ட வெற்றி, 1947இல் இலங்கையரைக் கொண்ட அரசாங்க அமைப்பு, 1948 இல் நாட்டின் சுதந்திரம், 1950-1954 களிற்கு இடையில் ஏற்பட்ட கொரியன் செழிப்பு - தேயிலைச் செழிப்பின் விளைவாகப் பெருமளவு அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி, மானிய முறையிலும் இலவசமாகவும் நுகர்வுப் பொருட்களின் விநியோகம், வரண்ட பிரதேச விருத்தி, குடிச்செறிவுள்ள பிரதேசங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இடப் பெயர்வு, மக்களிடையே வாழ்க்கைத்தர உயர்வு, உணவு முத்திரை விநியோ கம், புதிய குடியிருப்புக்களை இலவசமாக வழங்கும் முறையின் அறிமுகம், தொழில்வாய்ப்பு அதிகரிப்பு - குறிப்பாகப் பெண்கள் தொழிலில் ஈடுபடுதல் அதிகரித்துச் செல்லும் நிலை, நாளாந்த உணவில் கலோரிப் பெறுமானம் - புரதச்சத்து ஆகியவற்றின் அளவு படிப்படியாக அதிகரித்துச் செல்லும் நிலை போன்ற பல காரணிகள் குழந்தை இறப்பினைக் குறைத்துச் செல்லும் பொருளாதாரக் காரணிகளில் சிலவாகும். இலங்கையில் தற்போது காணப்படும் குழந்தை இறப்புக்களில் 65.0 சதவீதமானவை உள்ளார்ந்த காரணிகளாலும் 35.0 சதவீதமே ஏனைய காரணிகளாலும் நிகழ்கின்றன என மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக இவ் இறப்பினைக் குறைக்க வேண்டுமெனில் மேலும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையும் பட்சத்திலேயே இது சாத்தியமாகலாம்.

#### 4.8.2.4.மருத்துவக் காரணிகள்

தென் ஆசிய நாடுகளில், இலங்கையிலே கர்ப்பவதிகளில் ஐந்தில் நான்கு பங்குக்கு அதிகமானோர் மருத்துவ உதவியை நாடுகின்றனர் என

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. 1953இல் ஆரம்பிக்கப்பட்ட குடும்பத்திட்ட சங்கத்தின் மூலமும், சுகாதார அமைச்சினால் 1960களிலிருந்து படிப்படியாக விரிவுபடுத்தப்பட்ட தாய் - சேய் நலப்பிரிவுடன், குடும்பத் திட்டமிடல் பிரிவும் இணைந்தும் வழங்கிய ஆலோசனைகள், செயற்கைத் தடைகளை ஏற்படுத்தல், போசாக்குள்ள உணவினை வழங்குதல் போன்ற பல நடவடிக்கைகளினால் குழந்தை இறப்பு மட்டுமல்லாது பிறப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை சிறிய நாடாக இருப்பதுடன் சர்வதேச உதவிகள் பெருமளவில் சுகாதாரத் துறைக்குக் கிடைத்துவருவதாலும், கிராமிய மட்டம் வரை பிரசவ விடுதிகள் அமைத்தல், கிராமம் ரீதியாக தாதிகள் நியமிக்கப்பட்டுள்ளமை, கிராமங்களுக்கும் வசதியுள்ள நகரங்களுக்கும் இடையில் தூரவித்தியாசம் குறைவாக இருத்தல் என்பன இறப்புக்கள்-குறிப்பாக குழந்தை இறப்புக்கள் குறைவடையச் சில காரணங்களாகும்.

பெரும்பாலான குழந்தைகள் பிரசவ விடுதிகளில் பிறப்பதால் தொற்று நோய்த் தடுப்பிற்கான நடவடிக்கைகள் அங்கேயே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நாட்டில் மலசலகூட வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றம், நீர் விநியோகத்தில் ஏற்பட்ட விருத்தி, வீட்டுப்பிரசவம் பெருமளவில் குறைவடைந்து சென்றமை போன்றவற்றையும் குழந்தை இறப்பினைக் கட்டுப்படுத்தும் மறைமுகக் காரணிகளாகக் கொள்ளவேண்டும். விருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையில் குழந்தை இறப்புக்கள் அதிகமே. எனினும் சமூக, கலாசார மருத்துவக் காரணிகளைச் சாதகமான முறையில் வளர்த்து, குழந்தை இறப்பைக் கட்டுப்படுத்தலாம் என நம்பலாம்.

### 4.8.2.5.குழந்தை இறப்பிற்கான காரணிகள்

குழந்தை இறப்புக்கள் பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. இலங்கையில் இவ்இறப்புக்கள் 1980ஆம் ஆண்டு புள்ளிவிபரத்தின்படி 1000:37.7 ஆக அல்லது 15766 ஆகவிருந்தது. இவற்றில் குழந்தைகள் பிறந்த ஒரு மாதத்தில் இறந்துவிடும் தொகை 10131 ஆக அல்லது மொத்த இறப்பில் 64.3 சதவீதமாக இருந்தது. இத்தகைய இறப்புக்களுக்கு வெளிக்காரணிகளிலும் பார்க்க உட்காரணிகளே பெரும்பங்கு வகிக்கின்றன. பொதுவாக கருமுதிரா நிலை, பேற்றுக்காயமும் கஷ்டமான பிரசவமும், வயோதிப பலவீனம், தாயானவள் ஊட்டச்சத்துள்ள உணவு உட்கொள்வதில் தவறுகின்றமை, உடன்பிறப்புக் குறைபாடு போன்றவற்றால் அதிகளவு இறப்புக்கள் ஏற்படுகின்றன. (அட்டவணை 4.7) இவை தவிர உட்காரணிகளின் பலவீனத்தாலும், வெளிக்காரணிகளின் தாக்கத்தினாலும் ஏனைய இறப்புக்கள் இடம் பெறுகின்றன.

மாவட்ட ரீதியாக குழந்தை இறப்புக்களை அவதானிக்கின்ற மக்களின் பலவீனமான பொருளாதார, சமூக நிலை காணப்படும் மாவட்டங்களிலேயே அது அதிகமாகவுள்ளதைக் காணலாம். வாழ்க்கைத்தரம் குறைவான இந்தியத் தமிழரிடையே இவ் இறப்புக்கள் அதிகமாகவுள்ளன. நுவரெலியா (1000:79), கண்டி (60), பதுளை (57) இரத்தினபுரி (55) மாவட்டங்களில் அதிக இறப்புக்கள் நிகழ்ந்ததற்கு இந்தியத் தமிழரின் குழந்தை இறப்பே காரணமாகும்.

கொழும்பு மாவட்டத்தில் 1000:50ஆகக் குழந்தை இறப்பு காணப்படு வதற்கு, வெளிமாவட்டங்களிலிருந்து கடினமான நோயினால் பாதிக்கப்பட்டவர் களின் வருகையே காரணமாகும். அதேவேளை 1950ஆம் ஆண்டுக்கு முன்னர் அதிக இறப்பினைக் கொண்டிருந்த வரண்ட பிரதேச மாவட்டங்களான முல்லைத்தீவு (18), பொலநறுவை (18), திருகோணமலை (19), அநுராதபுரம் (21), மொனராகலை (22) மாவட்டங்கள் சராசரி இறப்பிலும் பார்க்க குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணமாவட்டத்தில் 1000:18 ஆக 1980இல் காணப்பட்டாலும் 1983ஆம் ஆண்டின் பின்னர் அதிகமான குழந்தை இறப்புக்கள் மட்டுமல்லாது கருமுதிரா பருவத்தையுடையதும் பிறப்புக் குறைபாடுடையது மான குழந்தைகளின் பிறப்புக்களும் நிகழ்கின்றன என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் சராசரி இறப்பு வீதத்திற்கும் குறைவான இறப்புக்களே நிகழ்ந்துள்ளன என அறியமுடிகின் றது.

**அட்டவணை 4.7**

**குழந்தை இறப்புக்குரிய காரணிகள் - 1980**

| காரணிகள் | எண்ணிக்கை | விகிதம் (Rate) | வீதம் (Percerntage) |
|---|---|---|---|
| முதிரா நிலை | 3508 | 13.2 | 25.5 |
| நியூமோனியா | 1289 | 3.1 | 9.4 |
| வலி | 1196 | 2.9 | 8.7 |
| வயிற்றோட்டம் சார்ந்தநோய் | 1032 | 2.6 | 7.5 |
| தாயின் வயோதிபப் பலவீனம் | 822 | 2.0 | 6.0 |
| பேற்றுக்காயமும் கஷ்டமான பிள்ளைப் பேறும் ஏனையனவும் | 778 | 1.9 | 5.6 |
| வளிநாளியழர்ச்சி | 447 | 1.1 | 3.2 |
| உடன் பிறப்புக் குறைபாடு | 301 | 0.7 | 2.2 |
| ஏற்பு | 299 | 0.7 | 2.1 |
| ஊட்டக்குறைவு | 284 | 0.7 | 2.1 |
| மெனிக்கிற்றிஸ் | 284 | 0.7 | 2.1 |
| கிரந்தி | 256 | 0.6 | 1.9 |
| காய்ச்சல் | 231 | 0.6 | 1.7 |
| தொற்றுக்கள் | 229 | 0.6 | 1.6 |
| கிருமிநோய்கள் | 52 | 0.1 | 0.4 |
| ஏனைய காரணிகள் | 2758 | 6.3 | 20.0 |
| மொத்தம் | 13766 | 37.8 | 100.0 |

ஆதாரம்: Bulletin on Vital Statistics 1981

## 4.9.பிரசவத்தாய் இறப்புக்கள்

பிரசவத்தாய் இறப்பானது குழந்தைகளைப் பெற்றெடுக்கும் காலத்தில் இறப்பினைத் தழுவுபவர்களைக் குறித்து நிற்கும். பொதுவாக இதற்கான அளவீடு உயிருடன் பிறக்கின்ற 1000 குழந்தைகளுக்கு எத்தனை தாய்மார் இறக்கின்றனர். என்பதாகும். இலங்கையில்பொதுவாக எல்லாமாவட்டங்களி லும் 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் பிரசவத் தாய் இறப்புக்கள் அதிகமாக இருந்துள்ளன. 1921 - 1925 ஆம் ஆண்டு களில் சராசரி இவ் இறப்புக்கள் 1000:20.1 ஆகவிருந்தது. ஆனால் 1988இல் இது 1000:3:9 ஆகவும் 1999இல் 2.1 ஆகவும் வீழ்ச்சிகண்டுள்ளது. அண்மைக் காலங்களில் இவ்இறப்பு வீதங்கள் மேலும் குறைவடைந்து செல்வதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்கு பருமட்டான இறப்புக்கள் குறைவடைவதற்கான காரணிகளுடன் சிறப்பான காரணிகளும் உண்டு. இள வயது விவாகம் சட்டரீதியாக மட்டுமல்லாது சமூக ரீதியாகவும் தவிர்க்கப்படும் பண்பு, விவாக வயது அதிகரித்தமை, பெண்களிடையே கல்வியறிவு வளர்ச்சி, கல்வி கற்கும் காலம் அதிகரித்தமை, போக்குவரவு வசதிகள், மற்றும் பிரசவ நிலையங்கள் அதிகளவில் ஸ்தாபிக்கப்பட்டமை, ஊட்டச்சத்துள்ள சத்துணவு வகைகளை அரசு இலவசமாக வழங்கும் முறை, சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து உயர்வடைந்துள்ளமை, பெரும்பாலான கணவன் - மனைவியரிடை யேயான புரிந்துணர்வின் விருத்தி, இனங்களிடையே வெவ்வேறுபட்ட சமூக, கலாசார, பண்புகளில் கொண்டுள்ள கவர்ச்சி, சிறிய குடும்பத்தை வரவேற்கும் நிலை, குடும்பத் திட்டமுறைகளின் விருத்தி போன்ற காரணிகள் பிரசவத் தாய் இறப்புக்களை கட்டுப்படுத்த உதவின எனலாம்.

## 4.10.எயிட்ஸ் - ஓர் சமூகப்பார்வை

உலகில் வாழும் மக்களுக்கு மட்டுமல்ல சர்வதேச நாகரிக வளர்ச்சிக்கே சவாலாக அமைந்துள்ளது எயிட்ஸ் நோய். (Acqured Immun Deficiency Syndrome) குடித்தொகைப் பெருக்கத்தின் விளைவாக உணவு, உறையுள், உடைப்பிரச்சினைகள் ஒரு புறமிருக்க மக்களிடையே வேண்டத் தகாத பாலியலுறவு முறைகளின் பண்புகள் மாற்றமடைந்து வருவதனால் அதனூடாக குணப்படுத்த முடியாத நோய்கள் ஏற்பட்டு மக்கள் அழிவை மட்டுமல்லாது சமூகத்தவர்களால் ஒதுக்கப்பட்டவர்களாக - வேண்டத்தகாதவர் களாக - அன்னியப்படுத்தப்பட்டவர்களாக மாறிவருபவர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது. இந்நிலை 21ஆம் நூற்றாண்டுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என இந்நோய் பற்றி ஆய்வினை மேற்கொள்பவர்களினால் அபாய ஒலி எழுப்பப்படுகின்றது.

உலகில் குறிப்பாக வளர்முக நாடுகளில் வாழும் மக்களிடையே அச்சுறுத்தும் நோயாக எச். ஐ. வி. வைரஸ் (Human Immune Deficiency Virus-HIV) நோய் பரப்பப்பட்டு வருகின்றது. சிம்பன்சி குரங்கிலிருந்து

இந்நோய் பரப்பப்பட்டதெனினும் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் வளர்ந்த நாடுகளில் இதன் தாக்கம் சிறிதளவு காணப்பட்டாலும் காலப்போக்கில் சமூக, பொருளாதார வளர்ச்சியினூடாகவும் கொடூரமான எயிட்ஸ் நோயினால் ஏற்படும் தாக்கத்தினை உணரக்கூடியவர்களாகவிருந்தமையாலும் அந்நாடுகளில் இதன் தாக்கம் பெருமளவிற்கு உணரப்படவில்லை என்றே கூறல் வேண்டும். ஆனால் வளர்முக நாடுகளில் அண்மைக் காலங்களில் தகாத பாலியலுறவின் மெத்த னப்போக்கின் காரணமாக இந்நாடுகளில் எச்.ஐ.வி எயிட்ஸ் நோய் கணிச மானவர்களிடையே தொற்றிக் கொள்வது மட்டுமல்லாது அதனூடாக பலருக்கும் பரவச்செய்கின்றமையைக் காணமுடிகின்றது. அதாவது இந்நோய்க் குறிகளைக் கண்டு கொள்வதற்கான மருத்துவ வசதிகளும் விரிவுபடுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும். எனவே இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவமுறை கள் பெரும்பாலும் வெற்றியளிக்காத நிலையில் ஓர் உயிர்க் கொல்லியாக வளர்ச்சி பெற்று வருகின்றது.

### 4.10.1.நோய் ஏற்படுவதற்கான காரணிகள்

எச். ஐ. வி/ எயிட்ஸ் நோயானது பின்வரும் முதன்மைக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பரவுகின்றன.

அ) பலதரப்பட்ட தரங்களிடையே பாலியலுறவு கொள்ளல்

ஆ) ஓரினச் சேர்க்கை

இ) பிறப்புச் சார்ந்த நிலையில் ஏற்படல் (தாய் - குழந்தை)

ஈ) தொற்று நோய்களுக்குள்ளானவரின் குருதியை மற்றவர்களுக்கு ஏற்றுதல்

உ) போதை வஸ்தினை ஊசிமூலம் ஏற்றுதல்.

பலதரப்பட்ட தரத்தினரிடையே பாலியலுறவு கொள்வதன் விளைவாக இந் நோய் பரப்பப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகும். கைத் தொழில் மயப்படுத்தப்பட்ட மேற்குலக நாடுகளில் இவ்வுறவின் மூலம் எயிட்ஸ் நோய் ஏற்படுவது மிகவும் குறைவாகவே உள்ளது என புள்ளி விபரங்கள் தெரிவிக் கின்றன. எனினும் வளர்முகநாடுகளில் மக்களிடையே இந்நோய் விரைவாகக் தொற்றிக் கொள்கின்றது. பெண் ஒருவர் பலதரப்பட்ட ஆண் களுடன் பாலுறவு கொள்ளும்போதோ அல்லது நோய்க்காவியான கணவனுடன் உறவு கொள்ளும் போதோ எச்.ஐ.வி/ எயிட்ஸ் நோய் தொற்றுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்ணின் பிறப்புறுப்பு வாயிலில் கிருமித்தொற்று ஏற்படக்கூடிய சீதம்போன்ற திரவம் கூடுதலாக சுரப்பதே இதற்குக் காரணமாகும். பெண்களது பிறப்புறுப்பிலிருந்து சுரக்கும் சீதத்தில் இருப்பதிலும் பார்க்க ஆண்களது விந்தில் கூடுதல் கிருமி கள் உள்ளன. இந்த விந்து பாலுறவின் பின்னர் பல மணித்தியாலங்களுக்கு பெண்களின் பிறப்புறுப்பினுள் தங்கி இருக்கின்றது. எனவே ஆணிலும் பார்க்க பெண்களுக்கே இத்தொற்று விரைவாக ஏற்பட வாய்ப்புண்டு எனத் தெரிவிக்கப் படுகின்றது. பலதரப்பட்ட பாலியல் உறவு கொள்பவர்களில் 75.0 சத வீதத்தினருக்கு பாலியல் தொடர்புடைய நோய்கள் தொற்றிக்கொள்வதாக

(Sexual Transmitted Desease) உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆபிரிக்காவில் உப சுகாதாரப் பிரதேசங்களில் இத்தகைய உடலுறவு கொள்ப வர்களில் 80.0 சதவீதத்தினரிடையே எச்.ஐ.வி./ எயிட்ஸ் நோய காணப்படுகின்றன என உலக எயிட்ஸ்பாதுகாப்பு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பலதரப்பட்டவர்களிடையே உறவு கொள்பவர்களில் 80-90 சதவீதத்தினருக்கு இந்நோய் தொற்றிக் கொள்வதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஓரினச் சேர்க்கையின் விளைவாகவும் இந்நோய் பரப்பப்படுவதாக கண்டறியப்பட்டுள்ள போதிலும் இதுசம்பந்தமாக போதிய ஆய்வுகள் மேற் கொள்ளப்படவில்லை. இருப்பினும் இத்தகைய சேர்க்கையானது விருத்தியுற்ற நாடுகளிலேயே அவதானிக்க முடிந்தாலும் வளர்முக நாடுகளிலும் அதிகரித்து வருகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டில் பெண்ணினச் சேர்க்கையாளர் எவருக்கும் எச்.ஐ.வி /எயிட்ஸ் நோய் ஏற்பட்டதாக இல்லை எனவும் பெண்ணினச் சேர்க்கை பாதுகாபபானது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பற்ற முறையில் இவர்களிடையே பாலியலுறவுகொள்ளப்படுமாயின் இந்நோய் தொற்றுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவிருக்கும் எனவும் கூறப்படுகின்றது. ''மனிலா அவுட்'' என்ற சஞ்சிகையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஓரினச் சேர்க்கை யாளர்கள் மொத்தக் குடித்தொகையில் 10.0 சத வீதத்தினராக விருக்கின்றனர் என வெளியிட்டிருப்பதும் இங்கு நோக்கற்பாலாது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் ஆண்தம்பதிகள் தங்களை ஓர் குடும்பமாக அங்கீகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளமையை இங்கு குறிப்பிடலாம்.

பிறப்பு சார்ந்த நிலையில் ஏற்படுகின்ற எச்.ஐவி/எயிட்ஸ் தாக்கமானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஒரு தந்தை அல்லது தாய் பலதரப்பட்டவர்களுடன் ஏற்படுத்துகின்ற பாலியலுறவின் காரணமாக பெற்றுக் கொள்ளப்படும் குழந்தைகளுடாக சமூகத்திற்கு இந்நோய் எடுத்துச் செல்லப் படுகின்றது. ஒன்றும் அறியாத இக் குழந்தை இந்நோய்க்குள்ளாவது மட்டு மல்லாது அவர்கள் சமூகத்தவர்களால் ஒதுக்கப்படுவதும் வேதனைக்குரிய விடயமாகும். ஆபிரிக்காவில் பிறப்பு சார்ந்த கடத்தல் முறையின் மூலம் 15.0 சதவீதமான குழந்தைகளுக்கு இந்நோய் தொற்றிக் கொள்வதாக உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவைதவிர எயிட்ஸ் நோய் தொற்றிக் கொண்ட தாயானவள் பாலூட்டுவதன் மூலமாகவும் குழந்தை களுக்கு தொற்றிக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு.

எச்.ஐ.வி/எயிட்ஸ் நோயுள்ள ஒருவருக்கு பயன்படுத்தப்பட்ட ஊசி மருந்துக்கருவியினை மற்றொருவருக்கு பயன்படுத்தப்படும் வேளைகளில் இந் நோய் தொற்றவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன. உதாரணமாக ஒருவரின் உடலில் தற்செயலாக ஏற்பட்ட காயத்தில் எயிட்ஸ் நோயாளி ஒருவரின் குருதி படியும் சந்தர்ப்பங்களிலும் இந்நோய் ஏற்படலாம்.

போதை ஊசி ஏற்றுவதன் மூலம் இந்நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் உண்டு. அதாவது போதைவஸ்துவை ஏற்றுகின்ற ஊசியினை பலர் பயன்

படுத்துவதன் மூலம் அந்நோய்க் குறி உள்ளவர்களிடமிருந்து நோயில்லாதவர்களுக்கு பரப்பப்படுகின்றது. அத்துடன் போதைவஸ்து பழக்கமானவர்களுடன் உறவு கொள்ளும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்நோய்த் தொற்று ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எச்.ஐ.வி / எயிட்ஸ் உள்ளவர்களிடையே எதிர்ப்புச் சக்தி குறைவடைவதால் காசநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் உண்டு என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### 4.10.2.நோய் பரவுவதற்கான சமூக பண்பாட்டுக்காரணிகள்

எயிட்ஸ் நோய் பரவுவதற்கான காரணிகளில் முக்கியமானது முறை தவறிய பாலியல் உறவாகும். இவ்வுறவுகள் மனித வாழ்வில் மிக நீண்ட காலமாக நிகழ்ந்து வந்திருப்பினும் இதன் தாக்கத்தினை அக்காலங்களில் அறியாதிருந்திருக்கலாம். இதனூடாக ஏற்பட்ட எச.ஐ.வி/எயிட்ஸ் நோய்க்கு வேறு காரணிகளைத் தெரிவித்தும் இருக்கலாம். ஏனெனில் அக்காலங்களில் மருத்துவ வசதி விருத்திபெற்றிருக்கவில்லை. ஆனால் தற்போது நோய் ஏற்படுவதற்கான காரணிகள் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் மருத்துவ ரீதியில் குணப்படுத்தக் கூடியளவு முன்னேற்றம் இதுவரை எட்டப்படவில்லை. என்றே கூறலாம்.

இன்றைய உலகின் சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியாக இந்நோய் பரவுவதற்கான காரணிகளை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

அ) வறுமை:- மக்களிடையே காணப்படுகின்ற கடுமையான வறுமையின் காரணமாக மூலதனமற்ற விபச்சாரத்தில் ஈடுபடுவதன் வாயிலாக எச்.ஐ.வி/எயிட்ஸ் நோய்க்குள்ளாகும் நிலையே வளர்முக நாடுகளில் குறிப்பாக விருத்தியடையாத சமூகங்களிடையே அதிகரித்து வருகின்றன. குறிப்பாக ஆபிரிக்காவின் உபசகாராப் பிரதேசங்கள், தென், தென்கிழக்காசியப் பிரதேசங்கள் குறிப்பாக இந்தியா, வங்காளதேசம், லாவோஸ், கம்போடியா போன்ற நாடுகளில் வறுமையின் காரணமாகவே இந்நோய் அதிகமாகத் தொற்றிக் கொள்கின்றன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஓரினச் சேர்க்கை, விபச்சாரம், சிறுவர் விபச்சாரம் போன்ற பல வடிவங்களில் பாலியலுறவு மேற்கொள்ளப்படுவதனால் இந்நோய் தொற்றிக் கொள்வதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.

ஆ) தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கத்திற்காக ஒரு வர்த்தக ரீதியியான பாலியல் தொழிலாளர்களாக (Commercial Sex Workers) செயற்படுவதன் வாயிலாக இந்நோயினைத் தாமும் பெற்று தம்முடன் தொடர்பு கொள்பவர்களுக்கும் தொற்றவைக்கப்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகள் உலகில் பெரும்பாலான நகரங்களில் காண முடிகின்றது. குறிப்பாக தென்கிழக்காசியாவில் தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் மூலம் இந் இந்நோய் தொற்றிக்கொள்வதாக அறியப்படுகின்றது. தாய்லாந்தில் நாடு பூராகவும் இத்தொழில் சட்டத்திற்

குப் புறம்பான ரீதியில் மேற்கொள்ளப்படுவதால் இத்தகைய வர்த்தக ரீதியிலான பாலியல் பெண் தொழிலாளர்களுடன் உறவு கொள்வதற்காக சர்வதேசங்களில் இருந்து ஆர்வமுள்ளவர்கள் தொடர்ச்சியாக வந்து செல்வதால் நாட்டில் தேசிய வருமானத்தில் உல்லாசப் பயணக் கைத்தொழில் முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது வர்த்தக ரீதியிலான பாலியல் பெண் தொழிலாளர்கள் தம்முடன் உறவு கொள்ளும் பங்காளிகளைத் திருப்தியடையக்கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டியிருப்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளமுடியாத நிலையினால் தான் இந்நோய் இவர்களுடாக பாலியல் ரீதியாக தொடர்பு கொள்பவர்களுக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கும் பரப்பப்படுகின்றன என தாய்லாந்திலுள்ள மகிடோல் பல்கலைக்கழகத்தின் குடித்தொகைப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வருகன்றது.

இ) பாலியலுறவுச் செயற்பாட்டினை ஒரு பொழுது போக்காகக் கருதி செயறபடுபவர் களின் வாலியலாகவும் இந்நோய் தொற்றிக் கொள்கின்றது. இத்தகைய செயற்பாடுகள் பொதுவாக விருத்தி பெற்ற சமூகங்களிடையே தான் பெருமளவிற்கு அவதானிக்க முடிகின்றது. ஏனைய காரணிகள் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் காணப்பட இந்நிகழ் வானது தத்தமது கிளர்ச்சியினைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்திற்காக மேற் கொள்ளப்படுவதால் நோய் தொற்றிக்கொள்கின்றது என பல ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

பொதுவாக எச்.ஐ.வி/எயிட்ஸ் நோயானது குழந்தைகள், சிறுவர், இளைஞர், முதியோர்களிடையே ஏற்படக்கூடிய தொற்று நோயாக இருப்பினும் 15 - 40 வயதிடைவெளியிலுள்ளவர்களிடையே அதிகரித்துக் காணப்படுகின்றது. வேலைவாய்ப்பின்மை, கூடாநட்பு, ஒழுக்கக்குறைவு, பெற்றோருக்கு கட்டுப்படாத சுதந்திர வாழ்க்கை, பாதுகாப்பற்ற உடலுறவு போன்றவற்றின் விளைவாகவே இந்நோய் தொற்றிக் கொள்கின்றது. என இந்தியாவின் மனிப்பூர் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் இந்நோய் பரவுவதற் கான காரணிகளை அறியக்கூடியதாக இருப்பினும் அதற்கான சமூகக் காரணி களை விரிவாக நோக்கும் போது பல்வேறு காரணிகள் உந்துசக்தியாக உள்ளன என்றே கூறல்வேண்டும். சிறுவர்கள் பாலியல் நடத்தைக்கு உட்படுத்தப்படுதலும் இந்நோய் பரவக் காரணமாகும். உலகில் 10.0 மில்லியன் 14 வயதுக்கு குறைந்தவர்கள் பாலியல் நடத்தைக்குக் தூண்டப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சுற்றுலாத்துறையின் விரிவாக்கமும் இந்நோய் அதிகரிக்க வாய்ப்பளிக்கின்றது. இலங்கையின் தென்மேற்குப் பகுதிகளில் இத்தகைய பண்புகளை அவதானிக்கலாம். இவைதவிர உலகரீதியாக மக்களின் இடப்பெயர்வுகள், பரிசோதனைவசதிகள் குறைவாகவுள்ளமை அதாவது உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கு கூடுதலான செலவு, தொடர்புசாதன உட்கட்டுமானங்களின் போதாமை, பின்தங்கிய சமூக அமைப்பு,

இளைஞர்களிடையே ஒழுக்கக் கேடு போன்ற பல பொருளாதார சமூகக் காரணிகள் உந்து சக்தியாகவுள்ளன எனலாம்.

### 4.10.3.உலகளாவிய பரம்பல்

உலகில் 1996 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின் பிரகாரம் 30.6 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகியுள்ளனர். உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி ஆபிரிக்காவில் மட்டும் 21.0 மில்லியன் மக்கள் எச்.ஐ.விக்கு ஆளாகியுள்ளனர் (HIV Positive) எனத் தெரியவருகின்றது. இவை தவிர பல மில்லியன் மக்கள் இந்நோய்க் குறியினை கண்டறிவதில் அலட்சியம் அல்லது அதற்குரிய பணத்தினைக் கொண்டிராத நிலையும் காரணமாக இருக்கின்றது என தனிப்பட்ட ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தென்கிழக்காசிய நாடுகளில் அதிகளவில் இந்நோய்க்குறிகொண்டவர்களும் இதன்மூலம் இறப்பினை சந்திப்பவர்களும் அதிகம் உளர். இவர்களில் 20.0 சதவீதமானவர் கள் சிறுவர்கள் எனவும் AIDS ACTION என்ற சஞ்சிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவில் நகரங்களில் பாலியல் தொழிலாளர்களாகத் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்காக வருடாந்தம் 200,000 நேபாளிய இளம்பெண்கள் இந்தியாவுக்கு அழைத்து வரப்படுகின்றனர். மேலும் தமிழ் நாட்டின் தற்போதைய நிலவரத்தின்படி ஆண்டு தோறும் 3600 குழந்தைகள் எச்.ஐ.வி அறிகுறியுடன் பிறக்கின்றனர் என சுகாதாரத்துறைச் செயலர் தெரிவிக்கின்றார். அத்துடன் இந்தியாவிலுள்ள வர்த்தக ரீதியிலான 900,000 பாலியல் தொழிலாளர்களில் 30.0 சத வீதத்தினர் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களாவர் என குழந்தைத் தொழிலாளர் தடுப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

தாய்வான் நாட்டில் 100,000சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இலங்கையில் வயதுவந்தோர் 6700 பேரும் பெண்களில் 2000 பேரும் சிறுவர்களில் 190 பேரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின் மூலம் தெரியவருகின்றது. 1997இல் 400 பேர் இந்நோயினால் இறந்துள்ளனர் என அறிய வருகின்றது. தற்போதய சூழ்நிலையில் ஆபிரிக்காவின் உபசகாராப் பிரதேசத்தில் தான் இந்நோயா ளர்கள் அதிகளவில் காணப்படுகின்றபோதிலும் 21ஆம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியில் இந்தியிவிலேயே இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களும் இறப் பினைத் தழுவுபவர்களும் அதிகமாகவிருப்பர் என ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர். இதனால் தென்னாசிய பிராந்திய நாடுகளும் பாதிப்புற வாய்ப்புண்டு.

### 4.10.4.விருத்தியடைந்த நாடுகள்

பொதுவாக எச்.ஐ.வி/எயிட்ஸ் நோயைப் பொறுத்தவரை வளர்முக நாடு களுடன் ஒப்பிடுமிடத்து விருத்தியடைந்த நாடுகளில் மிகக் குறைவாகவே யுள்ளது. இந்நாடுகளில் ஓரினச் சேர்க்கையின் மூலம் பரபரப்பப்படுகின்றது என்றாலும் குறிப்பாக மேற்கைரோப்பிய, அமெரிக்க நாடுகளில் ஓரினச் சேர்க்கையிலும் பார்க்க போதை ஊசி ஏற்றுவதன் வாயிலாகவும் அதிகம்

பரப்பப்படுகின்றது. உதாரணமாக 1980களின் ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்கா வில் தீவிரமாக பாலியலுறவில் ஈடுபடும் பெண்களிடையே எச்.ஐ.வி/எயிட்ஸ் நோயினைப் பெருமளவிற்கு கண்டு கொள்ளமுடியவில்லை. குறிப்பாக இத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் பாதுகாப்பான முன்காவல் நடவடிக்கை களில்ஈடுபடுவதே அதற்கான காரணியாகும் எனக் கூறப்படுகின்றது. இந்நாடு களில் எச்.ஐ.வி/வைரஸ் ஆண்களின் மூலமாக தமது பெண் துணைக்குத் தொற்றிக் கொள்கின்றது. அதாவது இந்நாடுகளில் நோய்க்குள்ளானவர்களைப் பொறுத்தவரை 10 ஆண்களுக்கு ஒரு பெண் என்ற வகையிலே காணப் படுகின்றது என்பர். அதேவேளை தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 2.0 ஆண் களுக்கு 1.0 பெண் என்ற வீததத்திலும் கருபியன் தீவுகளில் 1.5 ஆண்களுக்கு 1.0 பெண் என்ற வீதத்திலும் ஆபிரிக்காவின் உபசகாராப் பகுதியில் ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்ற வீதத்திலும் எச்.ஐ.வி/வைரஸ் நோய் காணப்படுகின் றது..

### 4.10.5.நோய் பரவுவதற்கான சமூக, உளவியல் காரணிகள்

உலகில் பொதுவாக 90.0 சதவீதமான எச்.ஐ.வி/வைரசினால் பாதிக் கப்பட்டவர்கள் வளர்முக நாடுகளிலே வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் மிகக் கொடூரமான வறுமைப் பிடிக்குள் சிக்குண்டவர்களாவர். இதனால் இந்நோய் தொற்றிக் கொண்டதற்கான அறிகுறிகளைக் கண்டறிவதில் பின் நிற்பதன் காரணமாகவோ அன்றில் அந்நோய் பற்றிய அறிவினைக் கொண்டிராததன் காரணமாகவோ இந்நோய் வேகமாக பரவுவதற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றே கூறல் வேண்டும். அத்துடன் இந்நோய்க் குறி தமது உடலில் காணப்படுகின்றதா என்பதை அறிந்து கொள்வதற்கு கூடுதலான செலவு ஏற்படும் என்ற காரணத்தினாலும் பரிசோதனை செய்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். குறிப்பாக கொங்கோ குடியரசு, தன்சானியா, ஆசிய நாடுகளில் வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்டத்தில் சுகாதார நலனுக்காக ஒருவருக்கு 5 அமெரிக்க டொலரே ஒதுக்கப்படுகின்றது. எனினும் கொங்கோ குடியரசில் மருந்திற்காக செலவு, மருத்துவத்திற்கான கொடுப்பனவு, வைத்திய சாலைக்குரிய செலவு, உணவு போன்றவற்றிற்கு ஆகக்குறைந்த பட்சம் 132 அமெரிக்க டொலரையும் ஆகக்கூடிய பட்சம் 1185 டொலரையும் எச்.ஐ.வி/ எயிட்ஸ் பரிசோதனை மேற்கொள்வதற்கு செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே பெருந்தொகையான பணத்தினை எயிட்ஸ் நோயாளியினால் செலுத்த முடியாத காரணத்தினால் நோய்க்குறியைக் கண்டறியத் தவறுகின்றனர். ஆபிரிக்கா உப சகாராப்பகுதி நாடுகளில் வறுமையின் நிமித்தம் தகாத பாலியல் உறவு ஏற்படுகின்ற காரணத்தினால் வைத்திய நிலையங்களுக்கு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை அவர்களிடையே ஏற்பட்டுள்ளது. மேலும் இந்நாடுகளில் பரிசோதனைக்குரிய வசதிகள் கூடமட்டுப்படுத்தப்பட்ட நிலையி லேயே தற்போதும் காணமுடிகின்றது.

தொடர்புச்சாதன கட்டுமான வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவுள்ள துடன் எழுத்தறிவுக்குறைவின் காரணமாக தனிப்பட்ட அல்லது குடும்பத்தவர்

களிடையே காணப்படும் எயிட்ஸ் நோய் பற்றிய அறிவு மிகக்குறைவாகவிருப் பதையும் இந்நோய் பரவுவதற்கு வசதியாக அமைந்துள்ளது. வளர்முக நாடுகளில் விருத்தி பெற்ற சமூகங்களிடையே எச்.ஐ.வி வைரஸ் கிருமிகள் தொற்றுவதற்கான அறிகுறிகளை ஓரளவு அறிந்திருந்த போதிலும் அந்நோயா னது தனது உடலில் தொற்றியுள்ளதை ஏனையோர் அறிந்து கொள்ளக் கூடாது என்ற காரணத்தினால் வைத்திய பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்துவதிலி ருந்து தவறுகின்றனர்.

எச்.ஐ.வி வைரஸ் கிருமி ஒருவரது உடலில் தொற்றிய காலத்தி லிருந்து ஏறத்தாழ பத்து ஆண்டுகள் வரைகூட அவர்களிடையே பெருமளவில் மாற்றத்தைக் காணமுடியாது இருக்கும் என வைத்திய ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர். எனவே நோய்க்குறி தொற்றிய காலத்திலிருந்து அதனை அவதானிக் கக் கூடிய காலப்பகுதிகள் வரை பாலியல் நடத்தையில் ஈடுபடுவதன் காரண மாக வாரிசுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்களும் இத்தகைய நோயி னைக் காவிக் கொள்வதால் குழந்தைகளிடையே இந்நோய் தொற்றவது மட்டு மல்லாது அக்குடும்பங்கள் இந்நோய்க்குறி இல்லாதவர்களினால் புறக்கணிக் கப்பட்டு தனிமைப்படுத்தப்படுகின்றனர். இந்நோய்க்குறி கண்ட குழந்தைகள் தமது கல்வியினைத் தொடர முடியாதவர்களாகின்றனர். இது வேதனைக்குரிய விடயமாகும். உதாரணமாக தாய்லாந்தில் இத்தகைய குழந்தைகள் தனிமைப் படுத்தப்படுவதை விரும்பாத பௌத்த பிக்கு ஒருவர் இந்நோய்க்குறி கண்டவர் களைப் பராமரித்து வருவதையும் நோய்க்குறி கண்ட பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பளித்து வருவதையும் நூலாசிரியரால் நேரில் அவதானிக்கமுடிந்தது.

### 4.10.6.நோய் பாதிக்கப்பட்டவர்களிடையே சமூக பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகள்

எச்.ஐ.வி எயிட்ஸ் நோயானது சர்வதேச சமூகத்தவர்களால் வெறுக் கப்பட்ட ஒன்றேயாயினும் சமூகத்தில் காணப்படும் ஒழுக்கக்கேடுகள் படிப்படி யாக அதிகரித்து வருவதனால் இந்நோய்க்காளானவோரும் அதிகரித்த வண்ணமேயுள்ளனர். பொருளாதாரப் பிரச்சினைகள் இதனால் ஏற்படுவது மட்டு மல்லாது சமூகப் பிரச்சனைகளே அவர்களைப் புறந்தள்ளி வைக்கின்றது எனலாம். இந்நோய்க் குறி உள்ளவர்கள் என அறியப்படும் பட்சத்தில் அவர் தாம் சார்ந்துள்ள தொழிலில் இருந்து அப்புறப்படுத்தப்படுகின்றார். அந்நோய்க் குறி கண்டவர் தொழில் வழங்குபவராக இருப்பின் அவரது தொழிற்றுறையில் ஈடுபாடு கொண்டவர்கள் வெளியேறிவிடுகின்றனர். இந் நிகழ்வுகள் தாய்லாந்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. பெண்களாயின் தமது சமூக, பொருளாதார வாய்ப்புகளை இழந்து விடுகின்றனர். அத்துடன் சமூக நிந்தைக்கு உட்படுகின்றனர். அதாவது அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். அல்லது தாம் சமூகத்திலிருந்து விலகி வாழ வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால் பொட்சுவானாவில் நோய்க்குறி கண்டவர்களை ஒதுக்கி வைக்காது தொழிலில் ஈடுபட அரசு அனுமதித்துள்ளது.

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கும் பெற்றோரின் குழந்தைகள் பாடசாலையில் இருந்து விலக வற்புறுத்தப்படுகின்றது. அத்துடன் அவர்கள் அநாதையாக்கப்பட்டுவிடுகின்றனர். மேலும் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனான பாலியல் தொழிலில் ஈடுபட்டவர்கள் நோய்க்குறி கண்ட பின்னர் அதனைத் தொடர முடியாது தனிமையில்-வறுமையில் வாடும் சூழ்நிலை ஏற்பட ஏதுவாகின்றது. இந் நிலை ஆபிரிக்க உபசகாராப் பகுதிகளில் அவதானிக்க முடிகின்றது. குடும்பத்தில் இந்நோயினால் ஒருவர் பாதிப்புறுவாரானால் அவர் இறக்கும் வரை பேணிப் பாதுகாப்பதற்கும் மருத்துவச் செலவிற்கும் இறுதிக்கிரியைக்கும் அதிக பணம் தேவைப்படுவதால் அதனைக் கடனாகவோ அன்றில் தமது சொத்துக்களை விற்றோ பெற்றுக்கொள்வதால் அக்குடும்பம் பொருளாதார ரீதியிலான பாதிப்பினை அடைய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றது. எயிட்ஸ் நோய்க்கு கணவனோ, அன்றி மனைவியோ உள்ளாகும்போது குடும்பத்தில் பிரச்சனைகள், இறப்புகள் தோன்ற வாய்ப்பு உண்டு. இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி குறையும். இச் சூழ்நிலையில் வளர்ந்த குழந்தைகள் வேறுவழிகளில் மகிழ்ச்சியைத் தேடிச் செல்ல வாய்ப்புண்டு. அது மட்டுமல்லாது நோய்க்குள்ளானோரை யார் பராமரிப்பது என்ற பிரச்சினைகள் எழுகின்றன. அதாவது எயிட்ஸ் நோயாளியைப் பராமரிப்பவர் சமூகத்தில் ஒதுக்கப்படும் நிலையினை பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நோயின் அறிகுறிகளைக் கண்டவர்கள் சமூகத்தில் நடமாடுவதற்கு வெட்கப்படும் நிலமை காணப்படுவது மட்டுமல்லாது வருமானத்தை இழத்தல், இறப்புப் பற்றிய பய உணர்வு, மனத்தளர்ச்சி, வெறுப்புநிலை, நம்பிக்கையீனம், கவலை, கோபம், உணர்ச்சிக்கொந்தளிப்பு, பிரத்தியேகத்தன்மையை இழத்தல், மற்றும் வாழ்க்கையில் பற்றற்ற நிலைக்குள்ளாக்கப்படுவதாக இந்நோய்க்காவிகள்பற்றி ஆராய்ந்த உளவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### 4.10.7.நோய்பரவாமல் தடுப்பதற்கான வழிவகைகள்

உயிர்க்கொல்லி நோய்கள் பல இவ்வுலகில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக பிளேக் நோயினைக் கூறிக்கொள்ளலாம். எச்.ஐ.வி எயிட்ஸ் வைரஸ் கிருமிகளால் ஏற்படும் நோய்க்கான மருத்துவ முறைகள் இதுவரை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை அடையவில்லை என்றேகூறல் வேண்டும். இந்நிலையில் இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு தனிப்பட்டவர்களிலிருந்து சர்வதேச நிறுவனங்கள் வரை செயற்படுவதன் மூலமே சாத்தியப்படும். முதலாவதாக பாலியல் உறவு கொள்பவர் மிகுந்த மனக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும். கூடா நட்பினை வெறுப்பதுடன் உடலுறவின்போது பாதுகாப்பான பாலியல் முறைகளைக் கையாளுதல் வேண்டும். உதாரணமாக சர்வதேச நிறுவனங்களும் அரசும் தாய்லாந்தில் உடலுறவின் போது 100.0 சதவீதம் ஆண் உறைகளைப்பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துவதுடன் ஆணுறைகள் இலகுவாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிவகையினைக் செய்துள்ளனர். எனினும் பல்வேறு உளவியற்காரணிகளின்

அடிப்படையிலும் பொருளாதாரக் காரணிகளினடிப்படையிலும் பெருமளவிற்கு சாத்தியப்படுகின்றன என்றுகூற முடியாது. எனவே மனக்கட்டுப்பாடு தான் இதில் முக்கியப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் எயிட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதில் மருத்துவர்களும், தன்னார்வ நிறுவனங்களும் பங்காற்ற வேண்டும். அதாவது பாதுகாப்பான பாலியல் தொடர்பினை ஊக்குவித்தல், பாலியல் பங்காளிகளைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்துதல், எயிட்ஸ் தொடர்பான கல்வி, தகவல்களை மக்களிடம் சென்றடைய வைத்தல், சேவை அடிப்படையில் பரிசோதனை செய்தல், ஒருதுணைத்தன்மையை (Monogany) ஊக்குவித்தல், சுகாதார சமூக சேவையினை விஸ்தரித்தல், சுற்றுலா விடுதிகளை அண்மித்து சேரிகள் அமைப்பதைத் தடை செய்தல், சமூக அபிவி ருத்தி சார் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்றவற்றிற்கு ஊக்கம் கொடுத்தல் வேண்டும். அத்துடன் உலகில் வாழும் அனைவருக்கும் கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகின்றது. இதற்கான புதிய மருந்து வகைகளை கண்டறிவதில் மருத்துவர்களின் பங்களிப்பும் தேவையாகும்.

இறுதியாக எச்.ஐ.வி வைரஸ் கிருமிகளினால் பாதிக்கப்பட்ட உலக சமூகத்தவர்களை ஒதுக்கிப்புறம் தள்ளுவதை நிறுத்த வேண்டும். அவர்க ளுக்கு சமூக, குடும்ப ஆதரவைக் வழங்குவதில் தயக்கம் காட்டக்கூடாது. பாதிக்கப்பட்டவர்களைக் கவனித்துக்கொள்ளல் அவசியமாகின்றது. அவர் களுக்கு ஆலோனைகளை வழங்கவேண்டும். இவ்வாறாக செய்யும் பட்சத்தில் இவ்வுயிர் கொல்லி நோயினைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் உருவாகலாம்.

# 5

# கருவளம்

### 5.0. முன்னுரை

குடித்தொகையியற் பண்புகளில் பிறப்புக்கள், இறப்புக்கள் ஆகியன உயிர்க்கூற்றியலுடன் தொடர்புடையன. ஒவ்வொரு சமூகத்திலும் மக்களின் பிறப்புக்கள், இறப்புக்கள் ஆகியன தவிர்க்கமுடியாதபடி முக்கியத்துவம் வாய்ந்தனவாகவுள்ளன. ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தை அக்குடும்பத்தின் சொத்தாகக் கருதப்படுகின்றது. அத்துடன் மேற்படி நிகழ்வானது அக்குடும் பத்தின் அமைப்பினையே மாற்றியமைக்கக்கூடியதாகயுள்ளது. மறுபுறத்தில் அதிகரித்த பிறப்பானது குடும்ப வாழ்வில் பெண்கள் உடல் மற்றும் உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்து வருவதால், குடும்ப வாழ்வின் போக்கும் மாற்றமடை யக் கூடியது. எனவே, கருவளவாக்கமானது குடித்தொகையியலாளர்களின் பெரும் கவனத்திற்குரியதாக மாற்றம் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது.

தோம்சன் மற்றும் லூயிஸ் என்பவர்கள் பெண்களின் கருவளமானது சகல மக்களினதும் வாழ்நிலைப் பண்புகளைக் கொண்டமைந்தன என்பர். இன்றைய நிலையில் கருவளமும் குடித்தொகைப் பிரச்சினையும் ஒன்றி லொன்று தங்கியிருப்பதனால் இவை பற்றிய ஆய்வு சர்வதேச ரீதியாக முடுக்கி விடப்பட்டுள்ளது. குறிப்பாக நாடுகளின் அரசசார்பற்ற நிறுவனங்களூடாகக் கொள்கைத் திட்டமிடுபவர்களால் இவைபற்றிய ஆய்வு நன்கு விருத்தியடைந் துள்ளது.

### 5.1. கருவளம்

கருவளம் என்பதற்குத் தோம்ஸனும் லூயிஸ்சும் பொதுவாக ஒரு தொகுதிப் பெண்களினது உண்மையான மீள்இனப்பெருக்க நிறைவேற் றத்தையே குறித்து நிற்கும் என்றனர். பேனாட் பெஞ்சமின் என்பவர் கருச் செழிப்புள்ள பெண்ணுக்கு உடலுறவினூடாக உருவாகுங் கருவினூடாகப்

பெறப்படுகின்ற பிறப்பினையே கருவளம் எனக்கொள்ளலாம் என்றார். ஆசா பாண்டே என்பவர் கருவளமானது சிக்கல் மிகுந்த படிமுறையைக் கொண்ட மைந்ததுடன் உயிர்க் கூற்றியலின்பாற்பட்டது என்றும் பல்வேறு சமூக, பொரு ளாதார, கலாசார, உளவியல் மற்றும் அரசியல் காரணிகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது எனவும் கூறினார். இவற்றினூடாக வேற்றுமைக் கருவளத்தின் பண்பினைக் காணமுடிகின்றது.

## 5.2. கருச்செழிப்பு

தோம்சன் மற்றும் லூயிஸ் என்பவர்கள் கருச்செழிப்பானது உயிரியற் கூறுகளுடன் தொடர்புடையது என்பர். அதாவது இது மீள் இனப்பெருக்கத்திற் பங்குகொள்ள வைப்பதைக் குறித்து நிற்கின்றது. கருத்தரிக்கும் நிலையை உருவாக்கவோ அன்றில் குழந்தைப்பேற்றை பெற்றுக்கொள்ளவோ இச்செழிப்பு உதவுகின்றது. ருதுவான பெண்களிடையே காணப்படும் கருச்செழிப்பின் விளை வாகவே கருவளவாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. மேலும் கருவளத்தைப் பேணக் கூடிய கருச்செழிப்பு நிலையானது உடலுறவு கொள்ளும் போதும் வயது, பருவம், பழக்கவழக்கங்கள், கருத்தடைச் சாதனங்களின் பாவனை, சுகாதார மருத்துவநிலை, பால்சுரக்கும்தன்மை போன்றவற்றாலும் தீர்மானிக்கப்படுகின் றது. குறிப்பாக குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பட்சத்தில் கருச்செழிப்பு நிலை மிகக் குறைவாகவே காணப்படும் எனலாம். பொதுவாக தென் ஆசிய நாடுகளில் வாழும் பெண்களிடையே கருச்செழிப்பானது ஐரோப்பிய நாடு களிலும் பார்க்க அதிகமாக இருப்பதைக் காணலாம். இந்நாடுகளில் ருதுவான காலம் தொடக்கம் இறுதி மாதவிடாய் காலஅளவு, குழந்தை பிறப்புகளுக்கான இடைவெளி, பாலுறவு கொள்ளலும் அதன் போக்கும் ஆகியன கருவளவாக் கத்தினைத் தீர்மானிக்கின்றன.

## 5.3. கருவளவாக்கத்தினை பாதிக்கும் காரணிகள்

ஆண், பெண்ணிடையே ஏற்படுத்தப்படும் பாலுறவின் காரணமாகப் பிறப் புக்கள் நிகழ்கின்றன. இந்நிகழ்வுக்குப் பல காரணிகள் தனித்தோ அன்றில் இணைந்தோ செயற்படுவதைக் காணலாம். இன்றைய காலகட்டத்தில் குழந் தைப் பிறப்புக்கள் பற்றிய பெற்றோரின் முன்கூட்டியே சிந்திக்கும் ஆற்றல் அதிகரிக்கப்பட்டிருப்பது போல, கடந்த காலங்களில் இவை பற்றி எந்தவிதக் கட்டுப்பாடும் இருந்திருக்கவில்லை. வளர்ந்த நாடுகளில் கருவளவாக்கம் குறைவடைந்துகொண்டு சென்ற போதிலும் வளர்முக நாடுகளில் அவ்வாறில் லை, வளர்ந்தநாடுகளில் விவாக வயது பின்தள்ளப்படல் சட்டரீதியிலான விவாக முறிப்பு அதிகரித்திருத்தல், கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத் துதல், கல்வி அறிவு அதிகரித்துக் காணப்படல் போன்ற பல காரணிகள்

பிறப்புக்களைக் கட்டுப்படுத்துவனவாக அமைந்துள்ளன. வளர்முக நாடுகளின் பின்தங்கிய சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளின் விளைவாக அங்கு பிறப்புக்கள் அதிகரித்து வருகின்றன.

மேற்குறித்த வகையில் பொதுவாகக் கருவளவாக்கத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

1) உயிரியற் காரணிகள்
2) சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள்
3) நேரடிக் காரணிகள்

என்பவையே அவையாகும்

## 5.4.உயிரியற் காரணிகள்

கருவளவாக்கமானது ஒருஆணினதும், பெண்ணினதும் உயிர்க்கூற்றியலுடன் தொடர்புடையதாகும். புரதச்சத்தினையோ, கொழுப்புச் சத்தினையோ உட்கொள்பவர்களிடையே பிறப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன. அத்துடன் மலட்டுத்தன்மை, அல்லது உடலிற் கருச்செழிப்பில்லாத நிலை காணப்படுமிடத்துப் பிறப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன. அயன, அயன அயல் வலயத்தில் வாழ்பவர்களிடையே பிறப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. எனவே உயிரியல் காரணிகள் பிறப்புக்களை அதிகரிக்கவோ அன்றி குறைக்கவோ செய்கின்றன.

## 5.5.சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள்

விவாக வயது, பலதார மணம், பிரிந்து வாழல், சட்டமுறிப்புச் செய்தல், விதவையாதல், விவாகமாகாதிருத்தல், கருத்தரிக்காத காலங்களைத் தெரிவு செய்து பாலுறவு கொள்ளல் போன்றன மறைமுகமான சமூகக் காரணிகளாக இருக்கின்றன. நேரடியான சமூகக் காரணிகளாக உணவு நிரம்பல், பொருளாதார நிலை, குடும்ப அமைப்பு, பெண்களது அந்தஸ்து, அரசியல் முறைமை, மதம், குழந்தையினை விரும்பும் தன்மை, இறப்பு வீதம், அறிவாற்றலின் சுதந்திரம், விஞ்ஞான வளர்ச்சி, நகராக்கம் போன்ற பல காரணிகள் கருவளவாக்கத்தைத் தீர்மானிப்பனவாக அமைகின்றன.

## 5.5.1.மறைமுகமான சமூகக் காரணிகள்

### 5.5.1.1. விவாக வயது

பொதுவாக வளர்முக நாடுகளில் பெண்களிடையே கருச்செழிப்பு 15-49 வயது இடைவெளியிலும் வளர்ந்த நாடுகளில் 15-44 வயது இடைவெளியிலும் காணப்படுகின்றது எனக் குடித்தொகை ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்

கின்றனர். எனினும் இது வலுவான வயதெல்லைக் கோடல்ல. வளர்ந்த நாடுகளில் விவாகம் செய்யாதிருத்தல், காலந்தாழ்த்திய விவாகம், அதிக எண்ணிக்கையினர் விவாக முறிப்புச் செய்தல் மற்றும் சமூக-பண்பாட்டுக் காரணிகளின் விளைவாகக் கருவளவாக்கம் குறைவாகவே காணப்படுகின்றது.

பின்வரும் அட்டவணை 5.1 இல் குறித்த சில நாடுகளின் சட்டத்தின் அடிப்படையிலான விவாக வயது தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.1**

| | விவாக வயது | |
|---|---|---|
| **நாடுகள்** | **ஆண்** | **பெண்** |
| பரகுவே | 14 | 12 |
| ஈக்குவடோர் | 14 | 12 |
| சிலி | 14 | 12 |
| சவூதிஅரேபியா | 13 | 13 |
| ஐக்கிய இராச்சியம் | 16 | 16 |
| ரஷ்யா | 18 | 18 |
| சுவிற்சலாந்து | 20 | 18 |
| இந்தியா | 21 | 18 |
| சீனா | 22 | 20 |

ஆதாரம்: Population and Vital Statistics - Report, Special Supplement. New York, 1992

பொதுவாக உலக நாடுகளில் ஆண்களுக்கு 14 ஆகவும் பெண்களுக்கு 12 ஆகவும் சட்டரீதியாக விவாக வயது காணப்படுகின்றது. இந்தியாவில் விவாக வயதைச் சட்டரீதியாக நிர்ணயம் செய்துள்ள போதிலும் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகள் தொடர்ந்தும் இளவயது விவாகத்தினை ஊக்கப்படுத்தி வருகின்றன. 1927ஆம் ஆண்டுக்கு முன்னர் பால்ய விவாகம் அதிகரித்துக் காணப்பட்டது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டி விவாக வயதினை அதிகரித்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் சாரதாச் சட்டம் என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் ஆண்களுக்கான விவாக வயது 21 ஆகவும் பெண்களுக்கான விவாக வயது 18 ஆகவும் சட்டத்தில் குறித்துரைக்கபட்ட போதிலும் சராசரி ஆண்களுக்கான விவாக வயது 27 ஆகவும் பெண்களுக்கான விவாக வயது 23.4 ஆகவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் இலங்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான விவாகவயதினை 18 ஆகக் குறைத்துள்ள போதிலும் 21 வயதிற்குள் விவாகம் செய்வதாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் ஒப்புதல் வேண்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கருவளவாக்கத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளில் சாதி, சமூகம், பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள், பெண்களின் பொருளாதார - சமூக நிலை, விவாக மற்றும் விவாக முறிப்புக்கான சட்டங்கள், விவாகம் செய்யும் காலத்தில் கணவன் - மனைவியினது வயது போன்றனவும் அடங்குகின்றன.

#### 5.5.1.2. சட்ட முறிப்புச் செய்தல், பிரிந்து வாழல்

விவாகமான கணவனும் மனைவியும் தங்களது ஒன்றிணைந்த உறவு முறையின் மூலம் கருவளவாக்கத்தினை ஏற்படுத்துகின்றனர். எனினும் சில சந்தர்ப்பங்களில் கணவனை தற்காலிகமாகவோ அன்றில் நிரந்தரமாகவோ பிரிந்து வாழ்கின்ற போது கருவளவாக்க உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. அதாவது கணவன் வெளிநாட்டிலோ அன்றி தூர இடத்திலோ, மனஸ்தாபத் தினாலோ பிரிந்திருக்கும் நிலையில் கருவளவாக்கம் இடம்பெறாது. இலங்கையில் வடபகுதியிற் கணிசமான கணவன்மார் வெளிநாடு சென்றுள் ளமையால் கருவளவாக்க நிலை குறைவாகவிருக்கின்றது. அதேவேளை கணவன் - மனைவியரிடையே பிணக்குகள் ஏற்படுமிடத்துச் சட்டரீதியாக மணவிலக்குப் பெற்றுக்கொள்வதனாலும் கருவளவாக்கம் நிகழ்வது தடுக்கப் படுகின்றது. மேலை நாடுகளில் 10:6 என்ற விகிதத்தில் மணவிலக்கு காணப் பட்ட போதிலும் வளர்முக நாடுகளில் சமூக - பண்பாட்டுக் காரணிகள் மண விலக்கு விகிதத்தைக் குறைத்துள்ளன எனலாம்.

#### 5.5.1.3. விதவையாதல்

விவாக வாழ்வுக்காலத்தில் கணவன் அல்லது மனைவி இறக்கும் பட்சத்தில் கணவனோ அன்றில் மனைவியோ விதவை அல்லது தபுதாரன் ஆகின்றனர். இந்நிகழ்வு, பொதுவாக விவாக வாழ்வுக் காலத்தின் பிற்பகுதியி லேயே காணப்படுமாயினும் மீள் இனப்பெருக்க ஆற்றலுள்ள காலத்தில் நிகழுமாயின் கருவளவாக்கம் தடைப்படுகிறது. மேலை நாடுகளில் திரும்பவும் விவாகம் செய்யும் நிலை சாதாரணமாகக் காணப்படுகின்றது. ஆனால் தென் னாசிய நாடுகளில் மறுமணம் சமூகத்தில் ஒதுக்கப்பட்டதாகவிருந்து வருகின் றது. இந்தியா, பர்மா போன்ற நாடுகளில் மறுமணம் சமூகத்தவர்களால் அங்கீ கரிக்கப்படவில்லை. பல வளர்முக நாடுகளில் சமூக சீர்திருத்த வாதிகள் மறு மணம் செய்யவேண்டும் என வலியுறுத்திவருகின்ற போதிலும் உளரீதியாக அதனைச் செயற்படுத்துவது இல்லை. இந்தியாவில் சராசரி 1000 பெண் விதவைகளில் 18 விதவைகளே மறுமணம் செய்து கொள்கின்றனர் எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சீனா, இந்தியா போன்ற நாடுகளில் பொருளாதார ரீதியில் நலிவுற்ற குடும்பத்தவர்களிடையே இது இடம்பெறுவது மிகக்குறைவு. அண்மைக்கால அனர்த்தங்களின் விளைவாக, குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் விதவைகள் அதிகரித்துள்ளதால் கருவளவாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதும் யாழ்ப்பாணமாவட்டத்தின் பிறப்புவீதக் குறைவுக் குரிய காரணிகளில் ஒன்றாகும்.

**5.5.1.4. விவாகமாகாத நிலை**

சமூக, பண்பாட்டுக் காரணிகளும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் இணைந்து கருச்செழிப்புக் காணப்படும் பெண்களிடையே விவாகமாகாத நிலையின் காரணமாக மீள் இனப்பெருக்கத்திற்கான வாய்ப்பு ஏற்படுவதில்லை. சுவிற்சலாந்தில் ஆண்களினதும் பெண்களினதும் விவாக வயதானது முறையே 31, 30 ஆகும். பொதுவாக மேலைநாடுகளில் விவாகம் செய்வதைத் தவிர்க்கும் நிலை அண்மைக்காலங்களில் அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையில் தமிழரிடையே விவாகம் செய்யும் வயது அதிகரித்துள்ளமைக்குக் கல்விக் காலம் நீடிக்கப்படல், சீதனவழக்கு, சாதகத்தில் நம்பிக்கை, கணவனைத் தெரிவுசெய்வதிலுள்ள இடர்பாடு, சாதிப்பாகுபாடு போன்ற பல காரணிகள் செயற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் விவாகம் செய்யாமலேயே வாழ்வைப் போக்கும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் கருவளவாக்கம் நிகழாமல் விடுகின்றது.

**5.5.1.5. குழந்தைப்பேற்றின் பின் தவிர்த்துக்கொள்ளல்**

கருவளவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளில் கணவன்-மனைவி உடலுறவு கொள்ளுதலைத் தவிர்த்துக்கொள்ளும் காலத்தைப் பொறுத்து, கருவளவாக்க நிலை காணப்படுகின்றது. அத்துடன் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டும் கால அளவும் கருவளவாக்கத்தைத் தவிர்க்கும் காலமாக இருக்கின்றது.

மேலும் மருத்துவ மற்றும் குடித்தொகை ஆய்வாளர்கள் இந்தியத் தம்பதிகளை அமெரிக்கத் தம்பதிகளோடு ஒப்பிடும் போது அமெரிக்கத் தம்பதிகள் குறைந்தளவிலேயே உடலுறவினை மேற்கொள்கின்றனர் எனவும் இதன் விளைவாக இந்தியக் குடும்பங்களில் அதிகரித்த கருவளவாக்கம் காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கின்றனர். இந்தியாவில் ஆடி மாதத்தில் விவாகம் செய்வதை இந்துக்கள் தவிர்த்துக்கொள்கின்றனர். அத்துடன் விவாகமான முதல் வருடத்திலே பெண்ணானவள் கருவுற்றிருக்காதவிடத்து ஆடி மாதத்தில் மேற்படி குடும்பத்தவர்களைப் பிரித்து வைக்கும் வழக்கமும் காணப்படுகின்றது. ஏனெனில் சித்திரையில் குழந்தை பிறத்தல் நல்லதல்ல என்ற நம்பிக்கையினாலேயே ஆகும்.

## 5.5.2. நேரடியான சமூகக் காரணிகள்

**5.5.2.1. உணவு நிரம்பல்**

உணவு நிரம்பலுக்கும் கருவளவாக்கத்திற்கும் இடையே மிக நெருக்க மான தொடர்பு காணப்படுகின்றது. அதிகமாகப் புரதம், கொழுப்புச்சத்தினை உண்பவர்களுக்குக் கருவளவாக்கம் குறைவாக காணப்படுகின்றது, என உயிரியற் கோடபாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். விருத்தியடைந்த நாடுகளில் மீள் இனப்பெருக்கம் குறைவடைவதற்கு இதுவும் ஒரு காரணம் எனத் தொவிக்கின்றனர். (உயிரியற் கோட்பாட்டில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது)

### 5.5.2.2. நகராக்கம்

விருத்தியடைந்த நாடுகளில் நகராக்க வளர்சசி மிக அதிகமாகவுள்ள போதிலும் வளர்முக நாடுகளில் சேவை மையங்கள், கைத்தொழில், துறைமுகங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய நகராக்க வளர்ச்சியே அதிக மாகவுள்ளது. ஒப்பீட்டு நோக்கில் வளர்முக நாடுகளில் நகராக்க வளர்ச்சி மிகக் குறைவேயாகும். இந்நாடுகளில் கருவளவாக்கம் நகரங்களோடு ஒப்பிடும் போது, கிராமங்களில் அதிகமாக இருக்கின்றது. கிராம மக்கள் இறைபக்தி கொண்டவர்களாகவும் கூட்டுக்குடும்ப அமைப்புக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். கூட்டுக்குடும்ப அமைப்பு விருத்தி பெற்றுள்ளமைக்குப் பல் வேறு வகைப்பட்ட தொழில் அமைப்புக்கள் கிராமங்களில் காணப்படாமையும் அதற்கான காரணிகளில் ஒன்றாகும்.

நகரங்களில் அதிகரித்த பிறப்புக்கள், அவர்கள் தம் தொழில் குடியிருப் புக்களைப் பாதிப்பனவாக உள்ளதுடன் அவற்றைப் பராமரிப்பதற்கு அதி களவில் முதலீடுந் தேவைப்படுகின்றது. அத்துடன் கருத்தடைச் சாதனங்களின் பாவனையும் கருவளவாக்கக் கட்டுப்பாட்டுக்குக் காரணமாகவிருக்கின்றது. பொதுவாக கிராமிய மக்களிடையே குழந்தைகள் கடவுள் தந்த சொத்து எனக் கருதுவதும் அதிகரித்த கருவளவாக்கத்திற்குரியதோர் காரணமாக இருக்கின் றது.

வளர்முக நாடுகளில் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் நகரங் களுக்குக் கிராமங்களில் இருந்து உள்வரவு அதிகமாகவிருப்பதைக் காண லாம். அதுவும் இளவயதினர் அதிகமாகவிருந்த போதிலும் பழைய பழக்க வழக்கங்களிலிருந்து தம்மை மீட்டு எடுக்காதவர்களாதலாற் கருவளவாக்கம் அதிகரித்துள்ளது. விருத்தி பெற்ற நாடுகளின் நகரங்களில் கருவளவாக்கம் குறைவாகக் காணப்படுவதற்குப் பின்வரும் பண்புக்கூறுகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. அதாவது சமநிலைத் தன்மையற்ற பால் விகிதம், உயர்ந்த வாழ்க்கைத்தரம், பல்வேறுபட்ட சமூகப்படிகள், பல்வேறுபட்ட வருமானமட்டம், வேறுபட்ட தொழில் அமைப்புக்கள், பெண்களின் தொழில் வாய்ப்புக்களும் அவர்களது அந்தஸ்து உயர்ந்திருத்தலும், கல்வி நிலை, பொழுதுபோக்கு வசதி போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

அமெரிக்காவில் உள்ள விவசாயிகளில் கிராமங்களில் வாழும் விவசாயிகளிடையே அதிகளவான கருவளவாக்கத்தினைக் காணமுடிகின்றது. அதே போலவே மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் விவசாயத் தொழி லாளர்கள், சுரங்க வேலை செய்பவர்களைவிட நெசவுத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களிடையே கருவளவாக்கம் குறைவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்குறித்த பண்பானது சர்வதேச ரீதியாக அங்கீகரிக் கப்பட்டதெனக் கூறமுடியாது. உதாரணமாக பிரான்சில் கிராமங்களிலும் பார்க்க நகரங்களில் கூடுதலான கருவளவாக்கம் காணப்படுவதாக அவதானிக் கப்பட்டுள்ளது. எனினும் நகரங்களில் வாழும் வசதிபடைத்த, கல்வியறிவுடைய மக்களிடையே கருவளவாக்கம் குறைவாகக் காணப்படுகின்றது என்பதைப் பொறுத்தவரை உலகளாவியரீதியாக ஒப்புக்கொள்ள கூடியதாக இருக்கின்றது.

#### 5.5.2.3. பொருளாதார நிலை

உலகளாவிய ரீதியாக வசதிபடைத்த மக்களிலும் பார்க்க வறுமையான மக்களிடையே கருவளவாக்கம் அதிகமாகவிருக்கும் என்பதைப் பல்வேறு குடித்தொகைக் கொள்கைகள் எடுத்துக்கூறியுள்ளன. பொருளாதார வலுக் குறைந்தவர்கள் தமது சந்தோசத்தை வெளிப்படுத்த உடலுறவைப் பயன் படுத்துவதன் மூலமாகப் பிறப்பு விகித்தை அதிகரிக்கின்றனர். மேலும் தமது பொருளாதாரத் தேட்டத்திற்காகவும் வயோதிப காலத்தில் பராமரிப்பர் என்ற நம்பிக்கையாலும் அதிக குழந்தைகளை விரும்பியேற்கின்றனர். அண்மைக் காலங்களில் இந்நிலைப்பாடு குறைவடைந்து செல்கின்றபோதிலும் நவீன கருத் தடைச் சாதனங்களைப் பயன்படுத்தத்தவறுகின்றமையால் தமது பொருளாதார நிலைக்கு மேலாக அதிகரித்த குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் வறிய மக்களிடையே போசாக்கின்மையும் புரதச்சத்துக்குறைவும் அதிக இறப்பினை ஏற்படுத்தும் அதேவேளையில் பிறப்புக்களையும் அதிகரிக் கச் செய்கின்றன. ஆபிரிக்கா, தென்கிழக்காசிய நாடுகளில் பிறப்புக்கள் அதிகமாகவுள்ளன. மேலை நாடுகளிலும் மற்றும் வசதிபடைத்த- குறிப்பாக கல்வியறிவுடன் கூடியவர்களிடையேயும் பிறப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது அவர்கள் அளவான குடும்பத்தினையே விரும்பியேற்கின்றனர். பொரு ளாதார ரீதியாக உயர் வருமானத்தைக் கொண்டவர்களிடையேயும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களிடையேயும் கருவளவாக்கம் அதிகமாகவி ருக்கின்றது எனவும் மத்தியதர வர்க்கத்தினரிடேயே குறிப்பாக கல்வியறிவுடை யோரிடையே கருவளவாக்கம் குறைவாகவிருக்கின்றது எனவும் குடித்தொகை யியலாளர்கள் ஆதாரங்களுடன் தெரிவிக்கின்றனர்.

#### 5.5.2.4. குடும்ப அமைப்பு

குடும்ப அமைப்பானது கருவளவாக்கத்தைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். குடும்பஅமைப்பைக் கூட்டுக் குடும்ப அமைப்பு முறை, தனிக்குடும்ப அமைப்புமுறை என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். கூட்டுக் குடும்ப அமைப்பில் வயதில் மூத்தோர், வயதில் குறைந்தவர்களின் செயற் பாடுகளுக்கு ஆலோசனைகூறி வருவார்களேயாயின் கருவளவாக்கத்திற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக அமையலாம். இப்பண்புகளைக் கல்வியறிவுடைய மத்தியதரவர்க்கத்தினர், உயர்வர்க்கத்தினரிடையே காணமுடிகின்றது. ஆனால் தனிக்குடும்ப அமைப்பில் அதிகரித்த உடலுறவிற்கான சந்தர்ப்பங்கள் இருப் பதால், அதிகரித்த பிறப்புக்கள் நிகழவும் வாய்ப்புண்டு.

மாறாக, தனிக்குடும்ப அமைப்பில் கணவன் - மனைவி இருவரும் தொழில்வாய்ப்புப்பெற்றவர்களாக இருக்கும்பட்சத்தில் அதிகரித்த பிறப்புக் களைத்தவிர்க்கவே செய்வர். ஏனெனில் குழந்தைகளைப் பராமரிப்பதில் சிரமங் கள் காணப்படுவதனாலேயாகும். பொருளாதார ரீதியில் நலிவுற்றவர்களாகவும் கல்வியறிவற்ற அல்லது குன்றவான கல்வியறிவுள்ளவர்களின் குடும்ப அமைப்பில் அதிகரித்த பிறப்புக்கள் நிகழ்ந்து வருகின்றன. இவர்கள் பெரும் பாலும் பாலியலுறவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

#### 5.5.2.5. பெண்களின் சமூக அந்தஸ்து

பெணகளின் சமூக அந்தஸ்து நிலை கருவளவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளில் முக்கியமானதாகும். சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிக ரான அந்தஸ்தைப் பெறவேண்டுமாயின் சிறப்பான கல்வி, தொழில்வாய்ப்பு, சமூக நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றிருத்தல், பொருளாதார நிலையில் சிறப்புற்றிருத்தல், தங்கிவாழ்வதைத் தவிர்த்துக்கொள்ளல், ஆண்களால் அடக்கப்படாதிருத்தல் போன்றவற்றில் சிறப்பிடம் பெற்றிருத்தல் அவசியமா கின்றது. இத்தகைய பண்புகளைப் பெற்றிருக்கும் பெண்கள் அளவான குடும்பத்தை அமைப்பதற்கு வாய்ப்புண்டு. மேற்குறித்த பண்புகள் காணப்படாத விடத்து குடும்ப அளவு அதிகரித்ததாகவே இருக்கும் எனலாம்.

முகர்ஜி என்பவர் பெண்களின் சமூக அந்தஸ்து என்பது பெண்ணான வள் குடும்பத்திலும் சமூகத்திலும் தனது அந்தஸ்து எப்படியுள்ளது என்பதை உணர்வதிலும், வலுவும், தற்றுணிவும், அதிகாரமும் தன்னிடம் இருக்கின்றது என்பதுடன் பெண் விடுதலையின் அளவினை அறிந்து வைத்திருத்தலிலும், தொழில்-கல்வி-பொருளாதார நிலை சிறப்படைந்திருத்தலிலுமே தங்கியுள்ளது என எடுத்துக் கூறினார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் குடும்பத்தி லும் சமூகத்திலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கொண்டவர்களாக இருக்கும் பட்சத்தில் பெண்ணானவள் அந்தஸ்து உடையவளாக இருக்கிறாள் என்றார். குறிப்பாக இத்தகைய அந்தஸ்து, பெண்களுக்குக் காணப்படுமாயின் மீள் இனப்பெருக்கத்தினைப் பொறுத்தமட்டில் கணவன் - மனைவியரிடையே புரிந்து ணர்வு ஏற்பட வாய்ப்புண்டு.

மேலை நாடுகளோடு ஒப்பிடுமிடத்து வளர்முக நாடுகளில் பெண்களின் சமஅந்தஸ்து கேள்விக்குறியாகவேயுள்ளது. பல நாடுகள் சட்டரீதியாகப் பெண் களுக்கான அந்தஸ்தை வழங்கியுள்ள போதிலும் சமூக ரீதியாக வழங்கி விடவில்லை என்றே கூறல் வேண்டும். அதாவது இவ் அந்தஸ்து ஆண்களுக்கு நிகராகவில்லை என்பது வெள்ளிடைமலை. இதன் விளைவாக மீள்இனப் பெருக்கத்திற் பங்குகொள்ளும் பெண்கள் கருவளவாக்கச் சுமையைத் தமது வாழ்நாள் முழுக்கச் சுமந்து செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். குறிப்பாக இந்தியாவில் பெண்களின் கல்வியறிவின்மை, வீட்டில் முடங்கிக் கிடத்தல், கணவனையே கண்கண்ட தெய்வமாகப் போற்றுதல், பொழுது போக்கின்மை, இளவயது விவாகம் போன்ற பல காரணிகள் அதிகரித்த கருவளவாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன எனலாம்.

#### 5.5.2.6. அரசியல் முறைமை

ஒரு நாட்டின் குடித்தொகை மாற்றத்தில் அந்நாட்டின் அரசியல் காரணிகள் பெரும்பங்கு கொள்கின்றன. சில மேற்குலக நாடுகள் குடித்தொகை வளர்ச்சியை வேண்டி நிற்கின்றன. வளர்முகநாடுகள் குடித்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளன. சுவீடன்,

லக்ஸம்பேர்க், ரஷ்யா, ஜேர்மனி போன்ற நாடுகள் பொருளாதார விருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகரித்த பிறப்புக்களை வேண்டி நிற்கின்றன. இதற்குப் பல ஊக்குவிப்புக்களை அந்நாடுகள் வழங்கிவருகின்றன. வளர்முக நாடுகள் குடித்தொகை வெடிப்பினால் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படாதிருக்க நேரடியாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டு வருகின்றன. குடும்பத் திட்டமிடலை ஊக்குவித்தல், குழந்தைகளின் அளவினைச் சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்துதல், கருச்சிதைவுக்கான சட்ட இறுக்கத்தினைத் தளர்த்துதல், விவாக வயதினை அதிகரித்தல் போன்றவற்றை மேற்கொள்வதன் வாயிலாக குடித்தொகை வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துகின்றன. குறிப்பாக சீனாவில் ஒரு குடும்பம் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக்கொள்ள முடியாதவாறு சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

வளர்முக நாடுகளில் அரசுகள் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குக் கல்வி கற்கும் காலத்தை அதிகரித்தல், சுகாதார மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நகராக்க வளர்ச்சி, கருத்தடை சாதனங்களை அறிமுகப்படுத்துதல், சிறியஅளவு குடும்பத்தினருக்கு உதவித்திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், குடித்தொகை வளர்ச்சியால் விளையக்கூடிய பிரச்சினைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துதல், பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற மறைமுகமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் விளைவாகக் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

#### 5.5.2.7. மதமும் சமூக பழக்கவழக்கங்களும்

மதமும் சமூக பழக்கவழக்கங்களும் கருவளவாக்கத்திற்கு கணிசமான பங்கினை வகிக்கின்றன. கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய மதங்கள் கருச்சிதைவு செய்வதைப் பலமாகக் கண்டிக்கின்றன. இலத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசுகள் குடும்பத் திட்டமிடலைப் பொறுத்தவரை அரச ரீதியாகவோ அன்றில் அரச சார்பற்ற ரீதியாகவோ ஆதரவளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்லாமியக் கோட்பாட்டின் பிரகாரம் இஸ்லாமியர் ஒருவர் ஒரே காலப்பகுதியில் நான்கு பெண்களை விவாகம் செய்து வாழவோ அன்றி தமது வாழ்நாளில் ஏழு பெண்களை விவாகம் செய்யவோ முடியும். பொதுவாக இவ்விரு காரணிகளும் இஸ்லாமிய நாடுகளில் பிறப்பு விகிதம் அதிகரித்திருப்பதற்குக் காரணமாகவுள்ளன. அதாவது 1992ஆம் ஆண்டில் ஜோடான், ஏமன், பா[illegible]தான், சவுதிஅரேபியா போன்ற நாடுகளில் 1000 பேருக்கு முறையே 38, 50, 4[illegible] 35 பிறப்புக்கள் காணப்பட்டன. இந்துக்கள், பௌத்தர்கள் மதரீதியாகக் கொல்லாமையை வலியுறுத்திக் கூறியுள்ளனர். எனினும் சார்பு ரீதியாக இலங்கையில் இவ்விரு சமூகத்தினரும் ஏனையோரைவிடச் சற்று அதிகமாக கருச்சிதைவு செய்து கொள்வதாகக் குடும்பத்திட்டச் சங்க அறிக்கைகள் தெரிவித்துள்ளன. இந்துக்களிடையே பெண்பிறப்பிலும் பார்க்க ஆண் குழந்தைகளையே பெரி[illegible] விரும்பியேற்கின்ற பண்பினைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது இந்து சமயச்சடங்குகளில் ஆண்களுக்கு இருக்கின்ற முக்கியத்துவத்தை இது சுட்டிக் காட்டுகின்றது.

#### 5.5.2.8. தொழில் நிலை

குடும்பத்தலைவர்களது - குறிப்பாகப் பெண்களது தொழில் நிலைக்கும் கருவளவாக்கத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றது. பல்வேறு ஆய்வுகளின் பிரகாரம் கடின உழைப்பாளர்களை விட (Physical Labourer) அறிவு சார்ந்த உழைப்பாளர்களிடையே (Mental Labourer) பிறப்பு வீதம் குறைவாக இருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது அறிவு சார்ந்த உழைப்பாளர்களுக்கு உழைப்பின் பலாபலனில் அக்கறையிருக்குமே யொழிய அதிகளவிலான பிறப்புக்களில் நாட்டம் இருப்பதில்லை. அதே போலத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களிலும் பார்க்க ஈடுபடாத பெண் களிடையே அதிகரித்த கருவளவாக்க நிலை காணப்படுகின்றது. பல பிறப்புக் கள் நிகழுமாயின் தொழிலில் பாதிப்பு ஏற்படுத்திவிடும் என்பதனால் கூடியவரை கருத்தரிக்காத நிலையினைப் பேணி வருகின்றனர். இருந்தபோதிலும் இந்தியா உட்பட வளர்முக நாடுகளில் உள்ள பெண்களிடையேயான கருவளவாக்கத் தைப் பொறுத்தவரை பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன எனக் கூறமுடி யாது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 45-49 வயதிடைப்பட்ட, கல்வியறிவுடன் பொருளாதார வளர்ச்சியினைக் கொண்ட பெண்களுக்குச் சராசரி 4.15 குழந்தைகள் காணப்பட கல்வியறிவற்றதும், பொருளாதாரப் பலவீன மானதுமான பெண்களிடையே சராசரி 6.57 குழந்தைப் பிறப்புக்கள் நிகழ்ந் துள்ளன என அறியமுடிகின்றது.

#### 5.5.2.9. கல்வி

கல்விக்கும் கருவளவாக்கத்துக்குமிடையில் மிக நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. கல்வியறிவுடைய பெண்கள் அளவான குடும் பத்தை விரும்பும் பண்பினை உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் துலாம்பரமாகத் தெரிவிக்கின்றன. கல்வி கற்கும் காலம் நீடிக்கப்படலால் விவாக வயது நீடிக்கப்படுதல் மட்டுமல்லாது தாய் - சேய் நலனுடன் கூடிய பிறப்புக்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. அதாவது குழந்தையினது உடல், உள வளர்ச்சிக்கு இது சிறப்பானதாகவிருக்கின்றது. இளவயதில் விவாகம் செய்த பெண்களைப் பொறுத்தவரை தாய் - சேய் நலன் பெரிதும் பாதிப்படைவதாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பல தெரிவித் துள்ளன.

இந்தியாவில் நகரமொன்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கல்வி நிலை குடும்ப அளவில் பெரும்பங்கு கொண்டுள்ளது என்பதை அட்டவணை 5.2 தெரிவிக்கின்றது. இவ் அட்டவணையின் பிரகாரம் பெண்கள் கல்வி கற்றதன் விளைவாகவே குழந்தைகளின் எண்ணிக்கை குறைவடைந்து சென்றுள்ளதைக் காணமுடிகின்றது. கணவன் கல்வி கற்றவராக இருந்த போதிலும் மனைவியான வள் கலவியறிவற்ற தன்மையினைப் பெற்றுள்ளபோது பிறப்புக்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது.

அட்டவணை 5.2

**49 வயதினையுடைய - கல்வியடிப்படையிற் கணவன் மனைவியரிடையே சராசரி பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை**

| கல்வித்தரம் | மனைவி | கணவன் |
|---|---|---|
| கற்காதவர்கள் | 6.65 | 7.04 |
| ஆரம்ப அறிவின் கீழ் நிலை | 6.90 | 6.19 |
| ஆரம்ப அறிவு | 6.57 | 6.50 |
| மத்திய தரம் | 5.04 | 6.63 |
| மெற்றிக்குலேசன் | 4.58 | 6.56 |
| இடைநிலையும் மேலும் | 2.01 | 5.54 |
| மொத்தம் | 6.54 | 6.54 |

Source: An Introduction to Social Demography: p.89

## 5.6. நேரடிக் காரணிகள்

கருவளவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளில் அண்மைக் காலங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளது நேரடிக் காரணிகளாகும். நேரடிக்காரணிகள் என்றால் பிறப்புக்களைப் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கையாளுதல் எனக் கொள்ளலாம். மிக நீண்ட காலமாகப் பிறப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு உடலுறவு கொள்வதில் ஈடுபாடு கொள்ளாதிருத்தல், தாய்ப்பாலைத் தொடர்ச்சியாக வழங்கல், கருத்தரிக்காத காலங்களைத் தெரிந்து உடலுறவில் ஈடுபடல், விந்தினை வெளிப்பாயச்சுதல் போன்ற முறை களைக் கையாண்டனர். இம்முறைகளை மேற்கொள்பவர்கள் பொதுவாகக் கல்வியறிவுடையவராக இருந்துள்ளனர்.

இந்நூற்றாண்டின் ஆரம்ப காலம் முதல் வளர்ச்சியடைந்த நாடுகளில் தாய் - சேய் நலனை முன்னிட்டு அவ்வவ்நாடுகளின் அரசுகளினால் குடும் பத்திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அதிகளவான பிறப்புக்களைக் கட்டுப்படுத்தும் முகமாக உடலுறவு உணர்வில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தாத வகையில் கருத்தடைச் சாதனங் களை உற்பத்தி செய்து மலிவான விலையில் சந்தைப்படுத்தி வருகின்றனர்.

நேரடிக்காரணிகள் - அதாவது கருத்தடைச் சாதனங்களின் பயன்பாடு தொடர்பாக உலக நாடுகளை மூன்று பிரிவுக்குள் வகைப்படுத்தலாம். அரசோ அன்றில் அரச சார்பற்ற நிறுவனங்களோ கருத்தடைச் சாதனங்களின் பயன்பாட்டினை வெறுக்கின்ற நிலையுள்ள நாடுகள் முதல் வகைக்குள் அடக் கப்படுகின்றன. இதற்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளை உதாரணமாகக் கொள்ளலாம். கொள்கை அடிப்படையில் அரசாங்கம் கருத்தடைச் சாதனங்

களின் பயன்பாட்டிற்கு ஆதரவு தெரிவிக்காத போதிலும் பயன்படுத்துவதற்கு தடையேற்படுத்தாத நாடுகள் இரண்டாவது பிரிவில் அடக்கப்படுகின்றன. உதாரணமாக ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பிடலாம். அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்தும் தனித்தும் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குக் கருத்தடைச் சாதனங்களை உற்பத்தி செய்வதுடன் உரியவர்களிடம் சென்றடைவதை உறுதிப்படுத்தும் முகமாகத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவுறுத்தி வரும் நாடுகள் மூன்றாவது வகைக்குள் அடக்கப்படுகின்றன. இதற்கு இலங்கை, இந்தியா மற்றும் பெரும்பாலான வளர்முக நாடுகளைக் குறிப்பிடலாம்.

பிறப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான முறைகள் பலவுள்ளன. அத்துடன் ஆண்கள் பயன்படுத்துவதற்கான முறைகளும் பெண்கள் பயன்படுத்துவதற்கான முறைகளும் உண்டு. எனினும் இவ்விரு சாராரிடையேயும் பயன்படுத்தப்பட்டு வரும் முறைகளினை மரபு ரீதியான கருத்தடை முறைகள், நவீன கருத்தடை முறைகள் என இரு பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்கலாம்.

### 5.6.1. மரபு ரீதியான முறைகள்

#### 5.6.1.1. பருவ ஒழுங்கு முறை

பருவ ஒழுங்கு முறையானது கருத்தரிக்காத வகையில் பாதுகாப்பான காலத்தைத் தெரிந்து உடலுறவில் ஈடுபடுதலாகும். அதாவது பெண்ணினது மாதவிடாய் வட்டத்தில் கருச்செழிப்பற்ற காலத்தை தெரிந்து செயற்படுவது எனக் கூறலாம். குறிப்பாக ஒரு பெண்ணுக்கு அடுத்துவரும் மாதவிடாய் ஏற்படவிருக்கும் காலத்திற்கு 14 நாட்களுக்கு முன்னர் சூல் (Ovum) வெளிப்படும். இந்தச் சூலானது எறத்தாழ 24 மணித்தியாலங்களுக்கு மேல் இயக்க நிலையிலுள்ளதாகக் காணப்படும். அக்காலப்பகுதிகளில் விந்து இணையும் பட்சத்தில் கருத்தரிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவிருக்கின்றது. உட்சென்ற விந்தானது எறத்தாழ 48 மணித்தியாலங்களுக்கு மேல் இயக்க நிலையில் இருக்கும். எனவே உடலுறவு மேற்கொண்ட பின்பு இரண்டு நாட்களும் கருத்தரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே அக்காலப் பகுதிகளைத் தவிர்த்துக் கொள்ளல் அவசியமாகின்றது. எனினும் சூல் வெளியேறும் நாள் மாற்றமடையக் கூடியதாக இருப்பதனால் கருத்தரிக்கும் காலத்தைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனவே இம்முறையினைப் பின்பற்றுவது மிகச் சிறப்பானது எனக்கூற முடியாது. சூலாக்கக் காலத்தை அறியக்கூடியவர்களிடையே இம்முறை பொருத்தமானதும் பாதுகாப்பானதுமாகும்.

பொதுவாக சூலாக்கம் அடுத்து வரும் மாதவிடாய் காலத் தொடக்கத்திற்கு முன்பாக 12-16 நாட்களுக்கிடையில் ஏற்படலாம். இம்முறையிலுள்ள முக்கியமான பிரச்சினை யாதெனில் அடுத்துவரவிருக்கும் மாதவிடாய் காலத்தைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடியாதிருத்தலாகும். இவற்றினைக் கண்டு கொள்வதற்கும் இருமுறைகள் உண்டு.

1. நாட்காட்டிமுறை

2. உடலின் வெப்பநிலையை அளவிடும் முறை

என்பனவே அவையாகும்.

நாட்காட்டி முறையானது, குறித்த ஒரு பெண் கடந்த 12 மாதங்களில் நிகழ்ந்த மாதவிடாய் வட்டத்தினை ஒழுங்கான முறையில் குறித்து வைத்திருத்தல் வேண்டும். அதன் மூலம் அவளது நீண்டகால, குறுகிய கால மாதவிடாய் வட்டத்தினை அறிந்துகொள்ளமுடியும். குறித்த பெண்ணொருத்திக்குக் குறுகிய கால மாதவிடாய் காலம் 24 நாட்கள் எனவும் நீண்டகால மாதவிடாய்க் காலம் 29 நாட்கள் எனவும் கொள்ளின் அதற்கேற்ற வகையில் பாதுகாப்பான காலத்தைத் தெரிந்தெடுத்தல் அவசியமாகின்றது. அதாவது சூலாக்கம் பெற்று 14ஆவது நாளிலேயே மாதவிடாய் வருவதற்கான சந்தர்ப்பமுண்டு. 24ஆவது நாளில் மாதவிடாய் வந்திருக்குமாயின் 10ஆவது நாளில் சூலாக்கம் நிகழ்ந்திருக்கிறது எனக் கொள்ளலாம். அத்துடன் ஏற்கனவே கூறப்பட்டது போலப் பாதுகாப்பற்ற நாட்களாக 4 நாட்களைக் கொள்ளவேண்டும். எனவே ஆறாவது நாளுக்கு முன்னரேயே உடலுறவுகொள்ளல் வேண்டும் என்பதே அதன் கருத்தாகும். இந்நிலையில் கருவளவாக்கம் நிகழ்வதற்குரிய சாத்தியக் கூறுகள் மிகக் குறைவு எனலாம். இதே போலவே 29 நாளில் மாதவிடாய் ஏற்படும் ஆயின் 29-14=15. ஆகவே 15 ஆவது நாளில் சூலாக்கம் நிகழ்ந்திருக்கும். அத்துடன் 4 நாட்களைப் பாதுகாப்பான நாட்களாகக கொள்ளுமிடத்து, 11 ஆவது நாளுக்கு முன்னரேயே உடலுறவுகொள்வதே கருத்தரிக்காத நிலையை உருவாக்கும் காலப்பகுதியாகக் கொள்ளலாம். எனினும் இக் கணிப்பீட்டின்படி இறுதியாகக் கருவளவாக்கம் நிகழும் காலப்பகுதி 29 - 11 = 18 ஆவது நாளாக இருக்கலாம். எனவே குறித்த இப்பெண் 6 ஆவது நாளிலிருந்து 18 ஆவது நாள் வரை பாதுகாப்பற்ற நாட்களாகக் கொள்ள இடமுண்டு.

சூலாக்கம் நிகழ்வதற்கும் கருச்செழிப்புள்ள பெண்களின் உடல் வெப்பநிலை மாற்றத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது என மருத்துவவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது மேற்குறித்த பெண்கள் தொடர்ச்சியாகக் காலையில் படுக்கையை விட்டு எழுவதற்கு முன்னர் தனது உடலில் உள்ள வெப்பத்தை வெப்பமானி மூலம் கணிப்பிட்டு, தொடர்ச்சியாகக் குறித்து வைத்திருத்தல் வேண்டும். சூலாக்கம் நிகழ்கின்ற வே[illegible] அப்பெண்ணு[illegible] வெப்பம் சராசரி 0.5°c - 1.0°c வரையும் உயர்வாகக் காண[illegible]டலாம். எனவே அக்காலப்பகுதியினைத் தவிர்த்துக்கொள்ளும் பட்சத்தில் கருத்தரிப்புச் செயல்முறை நிகழாது என்பர். எனினும் வெப்பநிலையின் உயர்வு, தாழ்வானது நோய் ஏற்படல், பதட்டநிலைகள் காரணமாகவும் கால நிலை மாற்றத்தின் விளைவாகவும் நிகழக்கூடியது. அச்சந்தர்ப்பங்களையுந் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே சூலாக்க கட்டத்தின் பின்னரேயே உடலுறவு கொள்ளலா[illegible]னலாம்.

நாட்காட்டி முறையின் படி கருத்தரிக்காதிருக்க வேண்டுமாயின் சில அறிவுறு[illegible]தல்களைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது. மாதவிடாய்

ஒழுங்காக வருகின்ற பெண்கள் இம்முறையினைப் பயன்படுத்தலாம். ஆனால் பிள்ளைபேற்றுக் காலத்தின் பின்னரும் பால் கொடுக்கும் காலப்பகுதிகளிலும் இம்முறையினைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். கருத்தடையை எதிர்க்கும் ரோமன்கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தோர், பருவ ஒழுங்கு முறையின் மூலம் பிறப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு இடமளித்துள்ளனர். மகாத்மா காந்தியும் இம் முறையினைப் பயன்படுத்துவதற்கு தடையில்லை என்றார். எனினும் நாட் காட்டி, வெப்பமானி, கிறாப்பேப்பர் ஆகியன இருக்கும் பட்சத்தில் மருத்துவரின் ஆலோசனைகள் தேவைப்படாது. இம்முறையில் காணப்படும் பாதக நிலை யானது உயர்ந்தளவில் உந்துகை அல்லது இயக்குகை (Motivation) வேண் டப்படுவதால், சுலபமான முறை என இதைக் கொள்ள முடியாது. மேலும் உடலுறவு கொள்பவரிடையே மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தவல்லது. அத்துடன் மாதவிடாய் ஒழுங்கற்றவர்களுக்கு இது பொருத்தப்பாடுடையதல்ல எனலாம்.

#### 5.6.1.2. மன அடக்கம்

இம்முறையானது உடலுறவின்போது ஆண்கள் மன அடக்கத்துடன் நடந்துகொள்வதாகும். இத்தகையோருக்குக் கருத்தரித்தலுக்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவேயிருக்கும் என நம்பப்பட்டாலும் நம்புந்தன்மை மிகக்குறைவு என்றே கூறல்வேண்டும். இம்முறையில் சாதகத் தன்மையானது எந்தவிதமான சாதனங்களையோ அன்றிச் செலவினத்தையோ இது ஏற்படுத்தவில்லை. இதன் பாதகத்தன்மையானது, இருவரிடையேயும் பதட்டத் தன்மையை உருவாக்கு வதுடன் சில சந்தர்ப்பங்களில் மனவிரக்தியும் ஏற்பட வாய்ப்பு உருவாகின்றது.

### 5.6.2. நவீன கருத்தடை முறைகள்

நவீன கருத்தடை முறைகளைத் தற்காலிகமான கருத்தடை முறைகள், நிரந்தரமான கருத்தடை முறைகள் என இரண்டு வகையாக நோக்கலாம்.

#### 5.6.2.1. தற்காலிகமான கருத்தடை முறைகள்

இதில் ஆணுறை முறை ஆண்களுக்கானது. ஏனைய சகல தற்காலிக முறைகளும் பெண்களுக்கானதே.

#### 5.6.2.2. உறை

இவ் உறை ஆண்களினால் உடலுறவின் போது பயன்படுத்துவதாகும். இவ் உறை பற்றி 1564ஆம் ஆண்டில் இத்தாலிய மருத்துவவியலாளர் ஒருவரினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக உள்ளது. பொதுவாக பிரெஞ் லெதர் என இது அழைக்கப்பட்ட போதிலும் இந்தியாவில் நிரோத் எனவும் இலங்கையில் பிரீதி எனவும் பிரபல்யப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுறை பாவித்தலின் சாதகத் தன்மையானது

இவ்வுறை அரசுகளினால் மானியமுறையில் மலிவாக வழங்கப்படுவதுடன் சுலபமாகக் கையாளக் கூடியதாக இருப்பதும் பதட்டத் தன்மையையோ அன்றில் மனக் கஷ்டத்தையோ தராததும் பக்கவிளைவுகள் அற்றதுமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் எந்தவித மருத்துவ ஆலோசனையும் இப்பாவனைக்கு வேண்டியதில்லை. ஆனால் குடும்பத்தினர் ரஷிகத் தன்மையை கருத்தில் கொண்டு இதனை வெறுப்பதும் உண்டு. அண்மைக் காலங்களில் பாதுகாப்பற்ற பாலியலுறவு கொள்பவர்களிடையே எச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்று ஏற்பட்டு உயிர்களைக் காவுகின்றது. எனவே மருத்துவவியலாளர்கள் பாலுறவின் போது இவ்வுறையினைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 5.6.2.3. விழுங்கும் மாத்திரை

பெண்களுக்கான தற்காலிக கருத்தடைச்சாதனமான விழுங்கும் மாத்திரை இன்று உலகில் பல பெண்களாலும் பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. ஒரு வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று மாதவிடாய் வந்த முதல் மூன்றாம் நாளிலிருந்து பாவிக்கத் தொடங்கும் இம் முறையில் தினமும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒவ்வொரு மாத்திரை வீதம் விழுங்கிவரல் வேண்டும். தொடர்ச்சியான பாவனையை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கையில் ஒரு மாத்திரைப் பைக்கற்றில் 21 கருத்தடைச்சாதன மாத்திரைகளும் 7 விற்றமின் மாத்திரைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. தற்செயலாக, ஒரு நாள் மாத்திரை எடுக்கத்தவறின் அடுத்தநாள் 2 மாத்திரைகளை உட்கொள்ளலாம். இரு நாட்களோ அதற்குமேலோ தொடர்ச்சியாக மாத்திரை எடுக்கத்தவறின் இம்முறை செயலிழந்துவிடும்.

இம் மாத்திரையிலுள்ள ஈஸ்ட்றயின், புறஜஸ்டோன் ஓமோன்கள் பெண்களின் ஓமோன் சுரப்பி வட்டத்தை மாற்றியமைப்பதால் சூல் முதிர்ச்சியடைவது தவிர்க்கப்படுகிறது. பெருமளவிற்கு நம்பிக்கை வாய்ந்த முறையாக இம் முறை காணப்படுவதுடன் மாதவிடாய் வட்டத்தை ஒழுங்கமைக்கவும் செய்கிறது.

இம் முறையைப் பாவிப்பவர்களுக்கு ஆரம்ப காலத்தில் தலைச்சுற்று, வாந்தி, தலையிடி பக்கவிளைவுகள் பெண்களுக்குத் தோன்றி மறையும். சில பெண்களுக்கு மாதவிடாய்ச் சிற்றொழுக்கும் ஒரு சில காலத்திற்கு ஏற்படக் கூடும்.

### 5.6.2.4. கருத்தடை ஊசி

மாதவிடாய் வந்து முதல் 5 நாட்களுக்குள் போடப்படும் டிப்போபுரவீரா என்னும் ஊசி மருந்து மூன்று மாதங்களுக்கு செயற்றிறன் வாய்ந்ததாக இருக்கும். ஒரு வைத்தியரின் ஆலோசனையின் பின்பே இம்முறையைப் பாவித்தல் வேண்டும். ஓரளவு நம்பிக்கையான முறையாக கருதப்படும் இம் முறையில் புறயஸ்டோன் ஓமோன் மருந்து ஊசி மூலம் ஏற்றப்படுகின்றது. இதனால் சூல்முட்டை முதிர்ச்சியடைவதில்லையாதலால் கருத்தரிப்பு தடுக்கப்படுகிறது.

இம் முறையால் ஒழுங்கற்ற மாதவிடாய்ஒழுக்கு, மாதவிடாய் நின்று விடல், உடல் பெருத்தல் போன்ற பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. தவிரவும் இது போன்ற வேறு பல பக்கவிளைவுகளுக்கும் இம் முறை காரணமாகலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில், பொதுவாக இம்முறையை ஊக்குவிப்பது குறைவடைந்து வருகிறது. இலங்கையிலும் இப்போது இம் முறையை ஊக்கு விப்பது குறைவடைந்து வருகிறது. எனினும், கணிசமான அளவு பெண்கள் தற்போது இலங்கையில் இம்முறையைப் பாவித்து வருகின்றனர் என குடும்பத் திட்டச் சங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### 5.6.2.5.கருத்தடை வளையம் (லூப் அல்லது IUD)

மாதவிடாய் வந்த முதல் வாரத்தினுள் பயிற்றப்பட்ட வைத்தியரினால் பெண் குறியூடாக கர்ப்பப்பையினுள் பிளாஸ்டிக்கிலான லூப் அல்லது செப்புக் கம்பியிலான "T" லூப் பொருத்தப்படும் முறை இதுவாகும். லூப் கருப்பை யினுள் வைக்கப்பட்ட பின் கருப்பையின் செயற்பாட்டில் ஏற்படும் ஒருவித மாற்றத்தால் கருக்கட்டவோ அல்லது கருக்கட்டியசினை கருப்பை உட்சுவரில் பதியவோ முடியாமற் போய் விடுகின்றது. 3 - 4 வருடங்களுக்கு இம்முறை செயற்றிறன் வாய்ந்தது. தொடர்ந்தும் தடுக்க வேண்டின் 4 வருடங்களின் பின் புதிய லூப்பைப் பொருத்தலாம்.

தற்காலிக விஞ்ஞான முறையான இம்முறையைக் குழந்தைகளுக் கிடையேயான இடைவெளிக்காகப் பாவிக்கலாமேதவிர முதலாவது குழந்தை யைப் பிற்போடுவதற்கு பாவித்தல் உகந்ததல்ல. மேலும் ஏனைய நவீன தற்காலிக முறைகளைப்போலவே இம்முறையிலும் சில பக்க விளைவுகள் உண்டு. முதல் ஒரு சில மாதங்களுக்கு மாதவிடாய் அதிகமாகப் போதலுடன் ஆரம்ப காலங்களில் அடி வயிறு, இடுப்புப் பகுதிகளில் வேதனை ஆகிய பக்கவிளைவுகள் ஏற்படலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இம்முறை நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கையானதல்ல. நூற்றுக்கு தொண்ணூறு வீதமே நம்பிக்கையானது என ஆய்வாளர் கூறுவர். பாவிக்கும் முறையின் சிரமமற்ற தன்மையின் காரணமாக இலங்கையிலும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளிலும் கணிசமான அளவு பெண்கள் இம்முறையினை பாவித்து வருகின்றனர்.

### 5.6.2.6. நோ - பிளான்ற் ( Nor - Plant )

கருத்தடைச் சாதன வரலாற்றில் கடைசியாகப் பாவனைக்கு வந்துள்ள முறை இதுவாகும். மேலைநாடுகளில் இம்முறை புழக்கத்திற்கு வந்து பல வருடங்களுக்கு மேலாகிய போதும் இலங்கையில் கடந்த பதினைந்து வருடங் களாகவே பாவனைக்கு விடப்பட்டுள்ளது. எனினும் அகில இலங்கை ரீதியில் பரவலாக இது பாவனைக்கு விடப்படவில்லை.

இம்முறையும் விழுங்கும் மாத்திரை, டிப்போபுரவீரா ஊசிமுறைகளைப் போலவே ஈஸ்ரஜின், புறஜஸ்டோன் ஓமோன் சுரப்பு மருந்துகளைக் கொண்

டதோர் முறையாகும். பயிற்றப்பட்ட ஒரு மருத்துவரால் இவ் ஓமோன் சுரப்பு மருந்துகளைக் கொண்ட ஆறு சிறிய பிளாஸ்டிக் குச்சிகள் பெண்ணின் முழங்கை மேற்புறத்தில் தோலினடியில் சிறு சத்திரச் சிகிச்சையூடாக பொருத் தப்படுகின்றன. மாதவிடாய் வந்த 5 நாட்களுள் பொருத்தப்படும் இவ் ஓமோன் பெண்ணுடலின் ஓமோன் சுற்றுவட்டத்தை மாறுதலடைய வைப்பதலால் பெண் சூலகத்தில் முட்டைகள் முதிர்ச்சியடைவதில்லை. மிகவும் நம்பிக்கையானதும் மிகக் குறைந்த பக்கவிளைவுகளைக் கொண்ட முறையாகவும் இலங்கையில் இது இனங்காணப்பட்டுள்ளது. ஒரு முறை பொருத்தப்பட்ட பின் இம்முறை 5 வருடங்களுக்குச் செயற்றிறன் வாய்ந்தது எனவும் இடையில் குழந்தை தேவைப்பட்டால் பொருத்தப்பட்ட குச்சிகளை மீள் எடுத்து விடலாம் எனவும் கூறப்படுகின்றது.

### 5.6.2.7. மெந்திரை

கருப்பைக்குள் விந்து செல்லாதவாறு பொறிமுறை சார்ந்த தடையி னைச் செயற்கையாக ஏற்படுத்திக் கொள்வதையே மெந்திரை (Diaphragm) என்ற பதம் எடுத்துக் கூறுகின்றது. அதாவது எளிய மூடியைக் கொண்ட மிருதுவான றப்பரினால் ஆக்கப்பட்ட எளிதில் வளையக்கூடிய உலோக எழும்பினை (Flexible Metal Spring) யுடைய இம்மெந்திரை கர்ப்பப்பை முகப் பில் பொருத்தப்படும். இம்முறையுடன் கருத்தடைச்சாதன ஜெலி, அல்லது கிறீம் பயன்படுத்தப்படுவதுமுண்டு. இதன் மூலம் கருத்தடையை உறுதிப் படுத்திக் கொள்ளலாம். இதனை உடலுறவு கொள்வதற்கு மூன்று மணித்தியா லங்களுக்கு முன்னர் பொருத்துதல் வேண்டும். உடலுறவின் பின்னர் ஆறு மணித்தியாலம் வரை தொடர்ந்திருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின் றது. ஒழுங்கான முறையில் உபயோகப்படுத்தும் பட்சத்தில் ஜெலி முறையுடன் மெந்திரை உட்பொருந்தும் முறை சிறப்பானது. இம்முறையானது உடலுறவைப் பாதிக்காது. மெந்திரையைப் பொருத்தும் பட்சத்தில் மருத்துவர்களின் ஆலோசனை, பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் ஒழுங்கான முறையில் பொருத்துவதற்கேற்ற அறிவு பெண்களிடையே காணப்படுதல் அவசியமானது. இம்முறை இலங்கையில் மிகக் குறைவாகவே பயன்படுத்தப் படுகின்றது.

### 5.6.[illegible] இரசாயன கருத்தடைச் சாதன முறை

பொறிமுறை கருத்தடைச் சாதனத்திலிருந்து மாறுபட்ட முறையே இரசா யன கருத்தடைச் சாதனமுறையாகும். இம்முறையில் ஜெலி, கிறீம் மற்றும் மாத்திரைகள் எனபவற்றைப் பயன்படுத்துதல் அடங்கும். குறிப்பாக நுரை மாத்திரைகளை (Form Tablets) யோனி உறையிலுள்ள ஈரத்தன்மையுடன் இணைக்கும் [illegible]ததில் நுரையேற்படும். உடலுறவு கொள்வதற்குப் பதினைந்து நிமிடத்[illegible] முன்னர் மேற்குறித்த மாத்திரையை உட்செலுத்த வேண்டும். இது விந்துககளை கருப்பைக்குள் விடாது தடுப்பதுடன் விந்தினை வளமிழக்கச்

செய்து விடுகின்றது. இம்முறையும் இலங்கையில் மிகக்குறைந்தளவு பாவனை யிலேயே உள்ளது.

### 5.6.3.நிரந்தரக் கருத்தடை முறைகள்

**சந்ததியை உருவாக்கும் சக்தியை இல்லாதொழித்தல்**

ஆண், பெண் இருபாலருக்கும் சந்ததியை, அதாவது கருவளவாக் கத்தை ஏற்படுத்தாதவாறு செய்யப்படும் சத்திரசிகிச்சையே இதுவாகும். ஆண்களுக்கு விந்துக்குழாயின் (Vas deferentia) ஒரு சிறு பகுதியைத் துண்டித்து விடுவதன் மூலம் கருவுண்டாக்கும் விந்தணுவானது கருவறைக்குச் செல்லாதவாறு தடுக்கப்படுகின்றது. இம்முறையை வாசெக்டமி (Vasectomy) என அழைப்பர். இச்சத்திர சிகிச்சை இலகுவானதாகவும் பயங்கொள்ளவேண்டிய நிலையற்ற நிரந்தரக் கருத்தடை முறையாகவுள்ளது.

பெண்களைப் பொறுத்தவரை கர்ப்பக் குழாயின் (Fallopian Tubes) ஒரு சிறு பகுதியை வெட்டிக் கட்டிவிடுவதனூடு சூல் கர்ப்பப்பையை சென்றடை யாது தடுத்து நிறுத்தும் சத்திரசிகிச்சை இதுவாகும். அதாவது ஆண்களின் கருவுண்டாக்கும் ஆண்தாது கர்ப்பப்பைக் குழாயுள் சூலினைச் சந்திக்காத வாறு செய்யப்படும் சத்திரசிகிச்சை இது எனலாம். இதனை டியூபெக்டமி (Tubectomy) அல்லது எல். ஆர். ரி (L. R. T) என அழைப்பர். அண்மைக்காலம் வரை குழந்தைபிரசவித்த 48 மணித்தியாலங்களுக்குப் பின்னர் பொதுவாக இச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகக் குழந்தை பிறந்த பின்னர் 6 - 8 கிழமைக்குள் இச் சத்திர சிகிச்சையைச் சுலபமாகச் செய்துகொள்ளலாம். எனினும் மாதவிடாய் வந்த முதல் 5 தினங்களுள் எப்போதும் இதனைச் செய்து கொள்ளமுடியும். இது ஒரு நிரந்தரமான கருத்தடையாகும். எனினும் ஆண்களுக்குச் செய்யப் படும் சத்திரசிகிச்சையோடு ஒப்பிடுமிடத்து சற்று பெரிய சத்திரசிகிச்சையே யன்றி மிகக் கஷ்டமான தொன்றல்ல என்றே கூறவேண்டும். இவ்வாறான சத்திர சிகிச்சை மேற்கொள்பவர்கள் வேறு எந்தவகையானகருத்தடைச் சாதனங் களையும் பயன்படுத்த வேண்டியதில்லை. மருத்துவர்களின் கூற்றுப்படி இவ்வாறான சத்திரசிகிச்சையைச் செய்தவர்களுக்குப் பின்விளைவு ஏற்படாது எனத் தெரி விக்கப்படுகின்றது. இருந்த போதிலும் பொதுவாக ஆண்கள் இச்சத்திர சிகிச் சையை மேற்கொள்வதில் பின்நிற்கின்றனர். பெண்களைப் பொறுத்தவரை மத்தியதரவர்க்கத்தினர் இச்சத்திரசிகிச்சையை மேற்கொள்கின்றனர். பொது வாக வளர்முகநாடுகளில் பெண்களிடையே இக்கருத்தடைச் செயன்முறை யால் பாதிப்புஏற்படுகின்றது எனும் தவறானகருத்து நிலவி வருகின்றது.

## 5.7.இலங்கையில் குழந்தைப் பிறப்புக்கள்

குடிக்கணிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 1993ஆம் ஆண்டு அளவீட்டின் பிரகாரம் இலங்கையில் சராசரிக் குழந்தைகளின் எண்ணிக்கை 2.6

ஆகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்த்து, ஏனைய பிரதேசங்கள் எழு மாதிரி அளவீட்டு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை அடிப்படை யாகக் கொண்டமைந்தது. 1974ஆம் ஆண்டு உலக கருவள அளவீட்டின்படி சராசரி குழந்தைகள் 3.4 ஆக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 5.3இல் வயது வகைப் பிறப்பு வீதம் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.3**

**இலங்கையின் வயது வகை பிறப்பு வீதம்**

| வயதுப் பிரிவு | 1988 - 1993<br>DHS 93 | 1982 - 1987<br>DHS 87 | 1974<br>WFR |
|---|---|---|---|
| 15 - 19 | 35 | 38 | 31 |
| 20 - 24 | 109 | 147 | 146 |
| 25 - 29 | 134 | 161 | 161 |
| 30 - 34 | 104 | 122 | 158 |
| 35 - 39 | 54 | 71 | 126 |
| 40 - 44 | 14 | 23 | 43 |
| 45 - 49 | 2 | 3 | 6 |
| மொத்தக் கருவளவீதம் | 2.26 | 2.82 | 3.35 |

Source: Department of Census and Statistics

மொத்தக் கருவளவீதம் 1988-1993ஆம் ஆண்டுகளிடையிற் பெருமள வில் மாற்றம் பெற்றிருக்கவில்லை. இக்காலப்பகுதிகளில் வயது வகைக் கருவளவாக்க வீதமும் மாற்றமடையவில்லை. அதாவது அட்டவணை 5.3இன் பிரகாரம் மொத்தக் கருவளவாக்கவீதம் 1987இல் 2.82ஆகவும் 1993இல் 2.26ஆகவும் காணப்பட்டுள்ளது. மேலும் 30 வயதுக்கு மேல், பிறப்புக்கள் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. 25-34 வயதிடைவெளியிலேயே அதிகரித்த பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளன என்லாம்.

### 5.7.1. கருத்தடைச் சாதனம் பற்றிய அறிவும் பயன்பாடும்

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல அளவீடுகளில், பெண்களி டையே கருத்தடைச்சாதனம் பற்றிய அறிவும் அவற்றின் பயன்பாடு பற்றியும் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பொதுவாக ஏறத்தாழ 70.0 சதவீதத்தி னர் மரபு ரீதியான கருத்தடைச் சாதனங்களை அறிந்துள்ளதாகத் தெரிவிக் கின்றனர். நவீன முறைகளைப் பொறுத்தவரை மூன்று முறைகள் பற்றி நன்கு

அறிந்திருக்கின்றனர். பெண்களுக்கான கருவளமழித்தல் (L.R.T) (97.0%), மாத்திரை (93.8%) ஊசிமருந்து ஏற்றல் (91.3%) என்பனவே அவையாகும். Norplant (10.0%) மெந்திரை பொருத்துதல் (11.2%) போன்றவற்றைத் தவிர ஏனைய கருத்தடை முறைகளைப் பொறுத்தவரை நாலில் மூன்று பங்குக்கு மேற்பட்டோர் அவற்றை அறிந்திருந்தனர் எனலாம்.

மேற்குறித்த கருத்தடைச் சாதனப் பயன்பாட்டினைக் கருத்திற் கொள் ளுமிடத்து, காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படை யிலான விபரங்கள் அட்டவணை 5.4 இல் தரப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் கருத்தடைச் சாதனம் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையினைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இருப்பினும் 20.0-30.0 சதவீத்தினர் குடும்பத்திட்டமிடலில் ஈடுபாடு கொண்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

**அட்டவணை 5.4**

**இலங்கையில் விவாகமானவர்கள் பாவிக்கும் கருத்தடை முறைகள்**
(1975 - 1993 )

| கருத்தடை முறைகள் | DHS[1] 1993 | DHS[1] 1987 | CPS[2] 1982 | WFS[3] 1975 |
|---|---|---|---|---|
| **நவீனமுறைகள்** | **66.1** | **65.8** | **55.2** | **58.7** |
| மாத்திரை | 8.4 | 6.6 | 4.7 | 4.9 |
| ஐ. யூ. டி | 4.5 | 3.4 | 5.0 | 15.1 |
| ஊசிமருந்து | 7.0 | 4.4 | 1.7 | 1.2 |
| உறை | 5.0 | 3.1 | 5.8 | 6.7 |
| பெண்கள் கருவளமழித்தல் | 35.6 | 40.3 | } 38.0 | } 30.8 |
| ஆண்கள் விந்துவளமழித்தல் | 5.6 | 8.0 | | |
| **மரபு ரீதியான முறைகள்** | **33.9** | **34.2** | **45.0** | **41.3** |
| பாதுகாப்பான காலத்தைத் தெரிதல் | 23.0 | 24.1 | 24.6 | 25.9 |
| வெளிப்பாச்சுதல்/ மனஅடக்கம் | 7.6 | 5.5 | 8.8 | 4.6 |
| ஏனையவை | 3.3 | 4.5 | 11.6 | 10.8 |

Source : Department of Census and Statistics

DHS[1] = Demographic and Health Survey

CPS[2] = Sri Lanka Contraceptive Prevalence Survey

WFS[3] = World Fertility Survey

## 5.8.கருத்தடைச் சாதனங்களின் பயன்பாடு

இலங்கையில் குடித்தொகை வளர்ச்சி வீதமானது 1960களைத் தொடர்ந்து படிப்படியாகக்குறைவடைந்து கொண்டு செல்கின்றது. அத்துடன் குடும்ப அளவும் (Family Size) குறைவடைந்து செல்வதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 2000ஆம் ஆண்டில் நாட்டில் கருத்தடைச்சாதனங்களைப் பயன்படுத்தியோர் எண்ணிக்கை 218,273 ஆகும். அதாவது 1000 விவாகமான பெண்களுக்கு 76.1 விவாகமான பெண்களே இச்சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இருப்பினும் 15-19 வயதிடைவெளியிலுள்ள விவாகமான பெண் களில் 185.9 பெண்களும் 20-24,25-29 வயதிடைவெளியிலுள்ள விவாகமான பெண்களில் முறையே 158.4, 176.7 பெண்களும் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் எனக் குடும்ப சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது. அட்டவணை 5.5இல் வயதடிப்படையில் கருத்தடையைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கையானது சதவீதத்தில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5**

**வயதடிப்படையில் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர் (பெண்கள்) -2000 (சதவீதத்தில்)**

| வயது | 1999 | 2000 |
|---|---|---|
| 15-19 | 8.0 | 8.3 |
| 20-24 | 27.5 | 28.0 |
| 25-29 | 30.4 | 29.7 |
| 30-34 | 21.0 | 21.2 |
| 35-39 | 8.7 | 9.1 |
| 40-44 | 1.7 | 1.9 |
| 45-49 | 0.2 | 0.1 |
| மொத்தம் | 100.0 | 100.0 |

Source : Evaluation Unit, Family Health Bureau

இலங்கையில் இன மத மொழி வேறுபாடின்றி குடும்பத்திட்டமிடலை மேற்கொண்டு வருகின்றபோதிலும் எண்ணிக்கையில் மிகக்குறைவென்றே கூறல் வேண்டும். அட்டவணை 5.6 இல் 1999-2000ஆம் ஆண்டில் தற்காலிக மற்றும் நிரந்தரமான குடும்பத்திட்டமிடலை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை தரப் பட்டுள்ளது.

அட்டவணை 5.6

**இலங்கையில் தற்காலிக - நிரந்தர குடும்பத்திட்டமிடலை மேற்கொண்டவர்கள் எண்ணிக்கை**

| கருத்தடைச் சாதனங்கள் | 1999 | | 2000 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **தற்காலிக முறைகள்** | | | | |
| கருத்தடை வளையம் | 24707 | 11.1 | 28832 | 13.2 |
| விழுங்கும் மாத்திரை | 47690 | 21.4 | 50213 | 23.0 |
| கருத்தடைஊசி | 130109 | 58.4 | 118572 | 54.3 |
| நோ-பிளான்ற் | 583 | 0.3 | 1265 | 0.6 |
| ஏனைய முறைகள் | ------- | ------- | 3650 | 1.7 |
| **நிரந்தர முறைகள்** | | | | |
| ஆண்கள் கருவளமழித்தல் | 340 | 0.2 | 242 | 0.1 |
| பெண்ணை மலடாக்கல் | 19186 | 8.6 | 15499 | 7.1 |
| மொத்தம் | 222615 | 100.0 | 218273 | 100.0 |

Source : Evaluation Unit, Family Health Bureau.

இலங்கையில் குடும்பத்திட்டமிடலில் ஈடுபடுவோரில் 55.0 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் கருத்தடை ஊசியினையையே பயன்படுத்தியுள்ளனர். பொதுவாக நோக்கின் ஏறத்தாழ 90.0 சதவீதமானோர் தற்காலிக முறைகளையே பயன்படுத்தி வருகின்றனர் என்பதைக் கண்டறியக்கூடியதாகவுள்ளது. நிரந்தர முறையில் ஆண்கள் மிகக்குறைவாகவே தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

பொதுவாகக் கருத்தடைச் சாதனப் பாவனையினைப் பொறுத்தவரை விவாகம் செய்த சில காலப்பகுதியில் பாவிக்காத நிலை அதிகமாகக் காணப்படுகின்றது. ஏனெனில் அக்காலப்பகுதிகளில் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என எண்ணுவதேயாகும். ஏறத்தாழ 60.0 சதவீதமான பெண்கள் தாம் பாவிக்காதிருப்பதற்கு மாதவிடாய் நிற்றல், கருச்செழிப்பின்மை, இடையிடையே உடலுறவு கொள்ளல் மற்றும் மருத்துவக் காரணிகளைத் தெரிவித்துள்ளனர். இலங்கையில் பின்வரும் காரணிகளைத் தெரிவிப்பதன் மூலம் கணிசமானோர் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதில்லை எனத் தெரியவருகின்றது.

அட்டவணை 5.7

**கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தாமைக்குரிய காரணிகள் 1993**

| காரணிகள் | சதவீதம் |
|---|---|
| அறிவு போதாமை | 3.2 |
| குடும்பத்திட்டமிடலுக்குஎதிர்ப்பு | 2.8 |
| கணவன் அல்லது மனைவியின்விருப்பமின்மை | 6.7 |
| ஏனையவர் விருப்பமின்மை | 0.3 |
| *இடையிடையே உடலுறவு கொள்ளல் | 13.2 |
| பிள்ளைப் பேற்றின் பின் பால் கொடுத்தல் | 7.5 |
| மாதவிடாய் நிற்றல் | 23.4 |
| மருத்துவக் காரணிகள் | 14.0 |
| சாதனங்கள் கிடைக்கப்பெறும் தன்மை | 1.7 |
| செலவு அதிகம் | 0.7 |
| மதம் | 1.4 |
| பாவிப்பதற்கு சிரமம் | 1.1 |
| பக்கவிளைவு | 2.8 |
| ஏனையன | 21.2 |
| மொத்தம் | 100.0 |

Source: Department of Census and Statistics.

## 5.9. பிறப்புக்களை அளவீடு செய்யும் முறைகள்

ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் மொத்தப் பிறப்புக்களைப் பல்வேறு முறைகளில் அளவீடு செய்வது அவசியமாகின்றது. ஏனெனில் மொத்தப் பிறப்புக்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு பிறப்புடன் தொடர்புடைய விடயங்களைப் பெறமுடியாது. பல்வேறு முறைகளில், குறிப்பாக தேவைக்கேற்ப அளவீடு செய்யப்படும் பட்சத்திற் பல்வேறு நாடுகள், பிரதேசங்களுடன் ஒப்பிட்டு அதனால் விளைந்துள்ள சாதக, பாதகப் பண்புகளை வெளிக்கொணர வாய்ப்புண்டு. குறிப்பாக இவ்வாறாகப் பெறப்படும் தரவுகள் குடிப்புள்ளியியலாளர்கள், பொருளியலாளர்கள், திட்டமிடலாளர்கள், மருத்துவவியலாளர்கள், சமூகவியலாளர்கள் போன்றோருக்கு மிகமிக வேண்டப்படுவதாகும்.

பிறப்புவீதம் இரு முக்கியமான முறைகள் மூலம் அளவீடு செய்யப் படுகின்றது. அவை முறையே நேரடியான அளவீடு, மறைமுகமான அளவீடு என இரு வகைப்படும். நேரடியான அளவீட்டு முறைகளை 6 உபபிரிவுகளாக நோக்கலாம். அவையாவன.

1. பருமட்டான பிறப்பு வீதம் ( Crude Birth Rate )
2. பொதுக் கருவள வீதம் ( General Fertility Rate )
3. வயது வகைக் கருவளவீதம் ( Age Specific Fertility Rate )

4. மொத்தக் கருவளவீதம் ( Total Fertility Rate )

5. கூட்டு மொத்த மீள் இனப்பெருக்கவீதம். (Gross Reproduction Rate )

6. நிகர மீள் இனப்பெருக்க வீதம். ( Net Reproduction Rate )

**5.9.1. பருமட்டான பிறப்பு வீதம்**

பொதுவாக எல்லா நாடுகளினதும் பிறப்பு வீதங்களை ஒப்பீடு செய்வதற்குப் பருமட்டான பிறப்பு வீத முறையே பெற்றுக்கொள்ளப்படுகின்ற போதிலும், இதில் குறைபாடுகள் இல்லாமில்லை.

$$\text{ப. பி. வீ} = \frac{\text{குறித்த வருடத்திற் பிறந்த மொத்தக் குழந்தைகள்}}{\text{குறித்த நாட்டின் அல்லது பிரதேசத்தின் நட்டாண்டுக் குடித்தொகை}} \times 1000$$

மொத்தப் பிறப்புக்கள் பதிவு செய்யப்பட்ட குழந்தைகளானபடியால் பிரச்சினையில்லை. ஆனால் நட்டாண்டுக் குடித்தொகை என்பது, பிறப்புடன் சம்பந்தப்படாத பெரும்பாலானோரின் எண்ணிக்கையும் புகுத்தப்பட்டது என்பதால் குறைபாடு காணப்படுகின்றது.

**5.9.2. பொதுக் கருவள வீதம்**

பருமட்டான பிறப்பு வீதத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளைப் போக்கும் நோக்குடன் பொதுக் கருவள வீதத்தைக் கணிப்பிட வேண்டியிருக்கின்றது. நட்டாண்டுக் குடித்தொகைக்குப் பதிலாக மீள் இனப் பெருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பெண்களின் எண்ணிக்கையே இதில் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது

$$\text{பொ. க. வீ} = \frac{\text{குறித்த வருடத்திற் பிறந்த மொத்தக் குழந்தைகள்}}{\text{குறித்த நாட்டில் அல்லது பிரதேசத்திலுள்ள நட்டாண்டு மீள் இனப்பெருக்க வயதினைக் கொண்ட பெண்கள்}} \times 1000$$

மீள் இனப்பெருக்க வயதினைக் கொண்ட பெண்கள் என்னும் போது 15-49 வயதிடைவெளியிலுள்ள பெண்களைக் குறித்து நிற்கின்றது. பருமட்டான பிறப்பு வீதத்திலிருந்து வேறுபட்டு ஒரு படி சிறப்பாக இருந்த போதிலும் இதிலும் குறைபாடுகள் இல்லாமில்லை. அதாவது நட்டாண்டில் காணப்பட்ட மீள் இனப்பெருக்க வயதினை அடைந்தவர்கள் யாவரும், குறித்த அவ் ஆண்டில் குழந்தைகளைப் பெற்றவர்களல்லர். அதாவது குழந்தைகளைப் பெற்றெடுக்காத பல பெண்கள் இணைக்கப்பட்டுள்ளதால் சிறப்பான அளவீடு எனக்கூற முடியாது. எனவே பருமட்டான பிறப்பு வீதத்தோடு ஒப்பிடும் போதே ொப்புடைத்து.

#### 5.9.3.வயது வகைப் பிறப்பு வீதம்

பொதுக்கருவள வீதத்தைக்கணிக்கும்போது15-49வயதிடை வெளியிலுள்ள மொத்தப் பெண்களை உள்ளடக்கியதில் காணப்பட்ட குறைபாடுகளைப் போக்கும் நோக்கோடு வயது வகைப்பிறப்பு வீதக் கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மீள் இனப்பெருக்க வயதினையுடைய பெண்களில் குறித்த வயதுத் தொகுதியினரையும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளையும் மட்டுமே கொண்டு இக்கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

$$\text{வ.வ.பி.வீ} = \frac{\text{குறித்த வருடத்திற் 15-19 வயதிடைவெளியிலுள்ள பெண்களுக்குப்பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை}}{\text{குறித்த நாட்டில் அல்லது பிரதேசத்திலுள்ள நட்டாண்டு 15-19 வயதிடைவெளியிலுள்ள பெண்களின் எண்ணிக்கை}} \times 1000$$

குறிப்பாக இக்கணிப்பில் 15-19 வயதிடைவெளியிலுள்ள பெண்களில் பெரும்பாலானோர் விவாகம் செய்வது மிகக்குறைவு. எனவே பிறப்புக்கள் குறைவாகவிருக்கும். 20-24, 25-29 வயதிடைவெளியில் விவாக நிலையும் அதிகமாகவிருப்பதுடன் பிறப்புக்களும் அதிகமாகவிருக்கும். அதாவது வயது வகைப் பிறப்பு வீதத்தினை அளவீடு செய்யும் பட்சத்தில் எந்த வயதுத் தொகுதியினருக்குப் பிறப்புக்களும் பிறப்பு வீதங்களும் அதிகமாகவுள்ளன என்பதை அறிந்துகொள்ளமுடியும். எவ்வாறெனினும் இவ்அளவீட்டிலும் பொதுக் கருவள வீதத்தில் காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. அதாவது குறித்த 15-19 வயதிடைவெளியில் உள்ள எல்லாப் பெண்களும் மீள்இனப்பெருக்கச் செயற்பாட்டுக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவ் வயதுத் தொகுதியிலுள்ள எல்லாப் பெண்களும் இவ்வளவீட்டுக்குப் பயன்படுத் தப்பட்டிருக்கிறார்கள்.

#### 5.9.4. மொத்தக் கருவள வீதம்

பொதுவாக 15-49 வயது வரையிலான விவாக வாழ்வுக் காலத்தில் மக்கட் பேற்றினைப் பெற்றுவரும் பெண்களுக்குப் பிறந்த சராசரிக் குழந்தைகளின் எண்ணிக்கையே மொத்தக் கருவள வீதம் எனப்படுகின்றது. இதில் பெண்கள் தம் முழுமையான இனப்பெருக்ககாலத்திலும் (Entire Reproduction Period) ஒரே சீராகக் கருவளத்தைப் பெற்றிருந்தனர் எனக் கருதப்படும். பின்வரும் வாய்ப்பாடு, குறிப்பிட்ட இடத்தில் குறித்த ஆண்டில் நிகழ்ந்த பிறப்புக்களின் அளவினை வெளிக்கொணரப் பயன்படுத்தப்படுகின்றது.

$$\text{மொ.க.வீ} = \sum_{i=15}^{i=49}\left(\frac{bi}{pi}\right)\times k$$

bi = குறித்த வயதிடைவெளியிற் பிறந்தவர்களின் எண்ணிக்கை

pi= குறித்த வயதிடைவெளியிற் காணப்பட்ட மொத்தப் பெண்கள்

k = 1000

i = ஒரு வருட வயதிடைவெளி

ஐந்து வருட இடைவெளியில் கணிக்கப்பட வேண்டுமாயின் பின்வரும் வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தலாம்.

$$\text{மொ. க. வீ} = 7 \sum_{i=1}^{i=5} \left( \frac{bi}{pi} \right) \times k$$

ஏழு வருட இடைவெளியில் கணிக்கப்பட வேண்டுமாயின்

$$\text{மொ. க. வ} = 5 \sum_{i=1}^{i=7} \left( \frac{bi}{pi} \right) k$$

என்ற வாய்ப்பாட்டினைப் பயன்படுத்த முடியும்.

மேலும் கணக்கில் எடுக்கும் ஆயிரம் பெண்களில் எவரும் இனப் பெருக்கம் நடைபெறும் வயதிற்குள் இறக்காமலும் அதேவிதமான சூழ்நிலை களில் தொடர்ந்தும் வாழ்வார்களாயின் அவர்களுக்குச் சராசரியாக எவ்வளவு குழந்தைகள் பிறக்கக்கூடும் என்பதனைக் காட்டுவதே இதன் பயனாகும்.

**அட்டவணை 5.8**

**மொத்தக் கருவள வீதத்தைப் பெற்றுக்கொள்ளும் முறை**

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| வயது | **ASFRx** | **ASFRx 5** | **TFR** |
| 15 | 30.0 | 150.0 | 150.0 |
| 20 | 64.3 | 321.5 | 471.5 |
| 25 | 111.1 | 555.5 | 1027.0 |
| 30 | 100.0 | 500.0 | 1527.0 |
| 35 | 41.7 | 208.5 | 1735.5 |
| 40 | 28.6 | 143.0 | 1878.5 |
| 45 | 6.1 | 33.5 | 1912.0 |

1. வயது வகைக் கருவள வீதம்
2. 5 ஆண்டுக்கான வயது வகைக் கருவள வீதம்
3. மொத்தக் கருவள வீதம்

**5.9.5.மீள் இனப்பெருக்க வீதம்**

ஏற்கனவே கூறப்பட்ட பொதுக் கருவள வீதத்திலும், மொத்தக் கருவள வீதத்திலும் பெண்களின் வயது வேற்றுமையே கருத்திற் கொள்ளப்பட்டது. இனப்பெருக்க விதிகளைக் கணிக்க இவற்றை மட்டும் கருத்தில் எடுத்துக்

கொண்டால் போதாது. ஏனெனில் 15-49 வயது வரை உள்ள ஆண்டுகள் அனைத்திலும் ஒவ்வொரு பெண்ணும் குழந்தைகளைப் பெற்றெடுப்பதில்லை இடையில் அப்பெண் மரணமடையலாம். அத்துடன் பிறக்கும் குழந்தையும் பெண்ணாக இருந்தால் தான் மீண்டும் குடித்தொகையை அதிகரிக்கச் செய்ய லாம். எனவே மரணம் மற்றும் பிறக்கும் குழ்ந்தைகள் பெண்ணாகவிருத்தல் என்ற இரண்டு குறிப்புக்களையும் கருத்திற் கொண்டு இனப்பெருக்க வீதத்தினைக் கணிப்பிடுதல் அவசியமாகின்றது.

1. கூட்டு மொத்த மீள் இனப்பெருக்க வீதம் (Gross Reproduction Rate) (GRR)
2. நிகர மீள்இனப்பெருக்க வீதம் (Net Reproduction Rate) (NRR)

**5.9.6. கூட்டு மொத்த மீள் இனப்பெருக்க வீதம்**

இதுவரையும் ஆண், பெண் இரு பிறப்புக்களையுங் கருத்திற் கொண்டு கணக்கிடப்பட்டது. அப்படியின்றிப் பெண்பிறப்புக்களை மட்டும் கருத்திற் கொண்டு கிடைக்கும் வீதத்தை மொத்தமான மீள் இனப்பெருக்க வீதம் எனக் கொள்வதையே இது குறித்து நிற்கின்றது. அதாவது தற்பொழுது உயிருடன் இருக்கும் தாய்மார்கள் எந்தளவிற்குத் தங்கள் பெண்குழந்தைகளால் ஈடுசெய்யப்படுகின்றார்கள் என்பதனை அளவிடுதல் எனவும் கொள்ளலாம்.

$$GRR = \sum_{i=15}^{i=49} \left( \frac{bfi}{pi} \right) k$$

இதில் bfi என்பது பெண் குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கையைக் குறித்து நிற்கின்றது.

i = பெண்களின் வயதுத் தொகுதி

pi = குறித்துரைக்கப்பட்ட வயதுத் தொகுதிப் பெண்களின் எண்ணிக்கை

ஐந்து வருட இடைவெளியிற் கணிக்கப்பட வேண்டுமாயின் பின்வரும் வாய்ப்பாட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

$$GRR = 7 \sum_{i=15}^{i=49} \left( \frac{bfi}{pi} \right) \times k$$

உதாரணமாக

15-49 வயதிடைவெளியிலுள்ள பெண்கள் = 200,000 எனக்கொள்வோம்.

அதேவேளை குறித்த ஆண்டில் பிறந்த பெண்களின் எண்ணிக்கை 60,000 என்றால்

60,000 ÷ 200,000 × 1000

கூட்டு மொத்த மீள் இனப்பெருக்க வீதம் = 300 ஆகும்.

#### 5.9.7.நிகர மீள் இனப்பெருக்க வீதம்

கூட்டு மொத்த மீள் இனப்பெருக்கவீதம் சற்றுத்திருத்தமான அளவு முறையாயினும் அதனைக் கணிக்கும் போது தாய்மார்களிடையே நிகழும் இறப்புக்கள் பற்றி அது கருதவில்லையாதலால் சிறப்பானது எனக் கொள்ள முடியாது. எல்லாப் பெண்களும் 15 - 49 வயது வரையும் வாழ்வார்கள் எனவும் கூற முடியாது. சிலர் இவ்வயதுப் பிரிவுக்குள் இறந்து விடுகின்றார்கள். எவ்வளவு தாய்மார்கள் இறக்கக்கூடும் என்பதனையும் கருத்திற் கொண்டு கணிப்பிடுதல் வேண்டும். இம்முறைதான் நிகர மீள் இனப்பெருக்க வீதம் எனப்படும்.

$$NRR = \sum_{i=15}^{i=49} bx\left(\frac{\ell x}{\ell o}\right)$$

இவ்வாய்ப்பாட்டின் பிரகாரம் $\ell o$ மற்றும் $\ell x$ இன் மதிப்புக்களை இறப்புப் பட்டியலிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். $bx = x$ வயதுடைய பெண்களுக்குப் பிறந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, $\ell x = x$ வயதுடைய தாய்மார்களின் எண்ணிக்கை, $\ell o$ இனப்பெருக்கம் செய்யக் கூடிய காலத்தின் ஆரம்பத்தில் உள்ள தாய்மார்களின் எண்ணிக்கையாகும். (சாதாரணமாக $\ell o = 1000$ எனக் கொள்வர்).

இவ்வாறாகக் கணிக்கப்படும் வீதமும் மிகத் திருத்தமானது எனக் கூறமுடியாது. மனிதர்களின் பழக்கவழக்கங்கள் காலத்துக்காலம் மாற்றம் பெறுகின்றன. இற்றைக்கு 20-30 வருடங்களுக்கு முன்னர் உபயோகிக்கப் படாத குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் இன்று பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன. நிகர மீள்இனப்பெருக்க வீதத்தைக் கணிக்கும்போது இவ் விபரங்கள் கணிப்புக்குட்படுத்தப்படுவதில்லை. அதேபோல மேற்குறித்த வயதுத் தொகுதியினரிடையே உள்வெளி இடப்பெயர்வுகளும் மாற்றத்தினை ஏற்படுத்தலாம். எனவே தொகுத்து நோக்கும்போது இந்த அளவீடு ஏனைய அளவீடுகளுடன் ஒப்பிடும்போது சிறப்பானதாக இருந்தபோதிலும் குறை பாடுகளும் இல்லாமலில்லை.

பின்வரும் அட்டவணை 5.9 நிகர மீள் இனப்பெருக்க வீதத்தினையும் கூட்டு மொத்த மீள் இனப்பெருக்க வீதத்தினையும் வெளிக்கொணர்கின்றது.

**அட்டவணை 5.9**

| வயதுத் தொகுதி | 1000பெண்களுக்குப் பிறந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை | 1000 பேரில் உயிருடன் இருப்பவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 15 - 19 | 60 | 850 |
| 20 - 24 | 170 | 800 |
| 25 - 29 | 475 | 750 |
| 30 - 34 | 510 | 700 |
| 35 - 39 | 320 | 650 |
| 40 - 44 | 90 | 600 |
| 45 - 49 | 40 | 500 |
| மொத்தம் | 1665 | ----- |

$$NRR = \frac{\frac{60 \times 850}{1000} + \frac{170 \times 800}{1000} + \frac{475 \times 750}{1000} + \frac{510 \times 700}{1000} + \frac{320 \times 650}{1000} + \frac{90 \times 600}{1000} + \frac{40 \times 500}{1000}}{1000} = 1.182$$

$$GRR = \frac{1665}{1000} = 1.665$$

### 5.10.இலங்கையில் கருவளவாக்கநிலை

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் கருவளவாக்க நிலையானது அந்நாட்டின் அல்லது அப்பிரதேசத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளைப் பாதிப்பனவாக அமைந்துள்ளது. இந்தவகையில் இலங்கையில் கருவளவாக்கம் எவ்வாறாகக் காணப்படுகின்றது என்பதைக் கணிப்பீடு செய்தல் அவசியமானதாகும். இந்நூற்றாண்டின் முன்னரைப்பகுதிகளில் பருமட்டான பிறப்பு வீதம் அதிகமாகக் காணப்பட்டிருந்தபோதிலும் அண்மைக்காலங்களில் படிப்படியாகக் குறைவடைந்து செல்வதைக் காணலாம். இந்நிலைப்பாட்டிற்குப் பொருளாதாரக் காரணிகள் - சமூக, பண்பாட்டுக் காரணிகளுடன் பெரும்பங்கு கொண்டுள்ளன என்றால் மிகையாகாது.

குடித்தொகைப் பண்புகளைப் பொறுத்தவரை வளர்முக நாடுகளுக்கு முன்னோடியாக இலங்கை விளங்கினும் பிறப்புக்களைப் பொறுத்தவரை மேலும் தொடர்ச்சியாக முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டியுள்ளது. இலங்கையிற் பிறப்புக்கள் சம்பந்தமான தரவுகளும் தகவல்களும் வரலாற்று நோக்கில் மதிப்பீடுகளாகவே காணப்பட்டிருக்கின்றன. வரலாற்றில் வரண்ட பிரதேசத்தில் அதிகளவு மக்கள் வாழ்ந்துள்ளதாகப் பல்வேறு அறிஞர்கள் கருத்துத் தெரி த்துள்ளனர். ஆனால் காலப்போக்கில் வரண்ட பிரதேச அழிவு இறப்புக் களை அதிகம் ஏற்படுத்திப் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தியதுடன் இயற்கை அதிகரிப்பையும் குறைத்துள்ளது.

சர்வதேசரீதியில் மேலைநாடுகளில் 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்து வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள் சேகரிக்கும் முறை அறிமுகப் படுத்தப்பட்ட போதிலும், இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் காலம் தாழ்த்தியே இது நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டது. பல வளர்முக நாடு களில் இன்னும் இத்தகைய தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறை விருத்தி பெறவில்லை. இலங்கையில் 1867ஆம் ஆண்டிலிருந்தே இம்முறை ஆரம்பிக்கப்

பட்ட போதிலும் 1897ஆம் ஆண்டிலிருந்தே பதிவு முறை கட்டாயப்படுத்தப்பட்ட துடன் பதிவு செய்யாதவர்களைக் குற்றவாளிகளாகக் கருதி தண்டிக்கவும் சட்டம் இயற்றப்பட்டது. எனவே பிறப்புக்கள் உட்பட வாழ்நிலைப் புள்ளி விபரங்கள் பதியும் முறை முன்னேற்றங் கண்டது. 1967இல் குடிக்கணிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பிறப்புக்களுக்கான பதிவு 98.7 சதவீதமும் இறப்புக்களுக்கான பதிவு 94.5 சதவீதமும் பதிவாளர் நாயகத்தினால் பெறப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இன்றைய நிலையில் ஒரு புறம் பாடசாலை, மற்றும் பல்கலைக்கழக அனுமதி, கடவுச்சீட்டுப் பெறல், உணவுமானியம்பெறல், தொழில்வாய்ப்பு, பிரஜாவுரிமையை நிரூபித்தல் போன்ற வற்றிற்குப் பிறப்புப் பதிவின் அவசியம் வேண்டப்படுகின்றது. மறுபுறத்தில், சுகாதாரத்திற்கான திட்டமிடல், பிறப்புக்களின் வேற்றுமைப் பண்புகளை அறிதல், பொருளாதாரத் திட்டமிடல், பாடசாலைகளை நிறுவுதல், சேமிப்புக் கிடங்குகளில் உணவினைச் சேமித்தல், வைத்தியசாலைகளில் வைத்தியரின் தேவைகளை அறிதல், எதிர்காலக் குடியிருப்புக்களின் தேவைகளைப்பெற்றுக் கொள்ளல், வாழ்க்கை எதிர்பார்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் போன்றவை பற்றிய தரவுகள் - தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரிதும் வேண்டப் படுகின்றது. இலங்கையிற் பிறப்புக்கள் உட்பட வாழ்நிலைப் புள்ளி விபரங் களைப் பதியும் பொறுப்பு பதிவாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் அவரால் நியமிக்கப்படும் உதவிப்பதிவாளர், அவர்களின் உதவியாளர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இலங்கையில் கடந்த 145 வருடங்களாக வாழ்நிலைப் புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

பொதுவாக ஒரு நாட்டு மக்களது பிறப்புக்களை நிர்ணயிப்பதில் பல்வேறு காரணிகள் துணைபுரிகின்றன. பெரும்பாலான மக்கள் கிராமவாசி களாக இருத்தல், கல்வியறிவுக்குறைவு, மதநம்பிக்கையின் தாக்கம், இளவயது விவாகம், வருமானக்குறைவு, சமூகப் பெறுமானம் (Social Value), வருடத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் தொழிலற்று இருத்தல், பொருளாதாரத்தில் விவசாயத்தை அடித்தளமாகக் கொண்டிருத்தல், நோய்களின் தாக்கம், பொழுது போக்கின்மை, கணவன்-மனைவியரிடையே புரிந்துணர்வின்மை, தொடர்பு சாதனங்கள் - கருத்தடைச் சாதனங்கள் ஆகியன மக்களிடையே சென்றடை வதில் உள்ள குறைபாடுகள், பால்விகித வேறுபாடுகள், அரசியற் காரணிகள், குடிசைவாழ் மக்களின்பங்கு, கலாசாரக் காரணிகள் போன்ற பல்வேறு வகைக் காரணிகளே அவையாகும்.

அட்டவணை 5.10 இல் 1871 - 2001ஆம் ஆண்டு வரையிலான பிறப்பு வீதம் தரப்பட்டுள்ளது. இதன்படி இலங்கையின் பிறப்புக்களின் பண்புகளை நோக்கின் நான்கு காலப் பிரிவுகளாகப் பிரித்தறிதல் சிறப்புடையது. (1) 1871 - 1895 (2) 1896 - 1955 (3) 1956 - 1965 (4) 1965க்குப் பின் என்பனவே அவை யாகும். முதலாவது காலப் பகுதியிற் பிறப்பு வீதம், அதன் பின் உள்ள காலப் பகுதிகளிலும் பார்க்கக் குறைவாகவேயுள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. 1867ஆம் ஆண்டிலிருந்து பிறப்புக்களைப் பதியும்முறை நடைமுறையில் இருந்ததாயினும் அது செவ்வனே பேணப்படவில்லை. அத்து

டன் ஆண்- பெண் விகிதாசாரத்தைக் கணிப்பிடும்போது பெண்கள் மிகக் குறைவாகவிருந்தமை, பெண் குழந்தைகளிடையே அதிக இறப்புக்கள் நிகழ வாய்ப்பிருந்தமை, சுகாதார - மருத்துவக் குறைவினால் உயிர்ப்பிறப்புக் களுக்கு இணைவாகக் கருச்சிதைவு - சாப்பிறப்புக்கள் காணப்பட்டமை, பிரசவத் தாய் இறப்புக்கள் அதிகமாகவிருந்தமை போன்ற பல காரணிகள் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தியிருந்தன எனலாம்.

**அட்டவணை 5.10**

**இலங்கையில் பிறப்பு வீதம் 1871-2001**

| காலப்பகுதி | பருமட்டான பிறப்பு வீதம் |
|---|---|
| 1871 - 1875 | 28.6 |
| 1876 - 1880 | 26.3 |
| 1881 - 1885 | 28.6 |
| 1886 - 1890 | 30.2 |
| 1891 - 1895 | 31.7 |
| 1896 - 1900 | 37.1 |
| 1901 - 1905 | 38.6 |
| 1906 - 1910 | 37.5 |
| 1911 - 1915 | 37.0 |
| 1916 - 1920 | 38.2 |
| 1921 - 1925 | 59.2 |
| 1926 - 1930 | 40.4 |
| 1931 - 1935 | 36.9 |
| 1936 - 1940 | 35.9 |
| 1941 - 1945 | 36.6 |
| 1946 - 1950 | 38.9 |
| 1951 - 1955 | 38.1 |
| 1956 - 1960 | 36.5 |
| 1961 - 1965 | 34.3 |
| 1966 - 1970 | 31.1 |
| 1971 - 1975 | 28.7 |
| 1976 - 1980 | 28.2 |
| 1981 - 1985 | 25.6 |
| 1986- 1990 | 21.5 |
| 1991- 1995 | 20.9 |
| 1996- 2000 | 18.6 |
| 2001- | 18.9 |

ஆதாரம்: பதிவாளர் நாயகத்தின் அறிக்கைகள்

1896-1955ஆம் ஆண்டுக்காலப்பகுதியில், குறிப்பிட்ட சில வருடங் களைத் தவிர பொதுவாகப் பிறப்புக்கள் அதிகரித்துக் காணப்பட்டன. அதாவது 1896-1900இல் 37.1 ஆகவும், 1901-1905 இல் 38.6 ஆகவும் அதிகரித்திருந்தது. 1926-1930ஆம் ஆண்டுகளிடையில் இலங்கையில் அதியுயர் பிறப்பு வீதமான 1000:40.4 வீதம் காணப்பட்டது. மேற்குறித்த காலப்பகுதியை இருபிரிவுகளாக வகைப்படுத்திக் கொள்ளின் விளக்கத்திற்குச் சுலபமாக இருக்கும். அதாவது 1896-1920, 1921-1955 என்ற காலப்பகுதிகளே அவையாகும். முதற் காலப் பகுதியில் பிறப்புக்கள் அதிகமாக இருப்பினும் இறப்புக்களும் ஏறக்குறைய நெருங்கிய பண்பினைக் கொண்டிருந்ததனால் இயற்கை அதிகரிப்புக் குறைவாகவே காணப்பட்டது. 1891-1901, 1901-1911, 1911-1921ஆம் ஆண்டு களிடையே முறையே இயற்கை அதிகரிப்பு வீதம் 1.72, 1.42, 0.91 ஆக இருந் துள்ளது. 1906இல் பிறப்பு, இறப்பு வீதங்கள் முறையே 36.5, 35.1 ஆகவும் 1911ல் 38.0, 34.8ஆகவும் 1919இல் 36.0, 37.6ஆகவும் காணப்பட்டுள்ளமை இக் காலத்தின் இயற்கை அதிகரிப்புக் குறைவுக்குக் காரணங்களாக உள்ளன. இக்காலப்பகுதியில் இலங்கையில் மட்டுமல்லாது தென்னாசிய நாடுகளிலும் இயற்கை அதிகரிப்பானது எதிர்த்தன்மை கொண்டதாக இருந்துள்ளது.

இரண்டாவது காலப்பகுதியான 1921-1955 ஆம் ஆண்டுகளிடையே பிறப்பு வீதம் ஏற்ற இறக்கத்தைக் கொண்டிருந்த போதிலும் இறப்பு வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றமையாலும் மக்களின் வெளியேற்றத்திலும் பார்க்க உள்வரவு அதிகரித்தமையாலும் அதிகரிப்பு வீதம் கூடுதலாக இருந்துள்ளது. பிறப்பு வீதத்தில் ஏற்ற இறக்கம் தொடர்ச்சியாகக் காணப் பட்டதற்கு மலேரியா மற்றும் மூளைக் காய்ச்சல் என்பன காரணமாக இருந் துள்ளன. சக்காரின் கருத்துப்படி நோய்கள், சுகாதாரநிலை ஆகியன நேரடியா கவும் மறைமுகமாகவும் பிறப்புக்களைப் பாதித்துள்ளன என்றார். நேரடியான காரணிகளான தொற்று நோய்கள் ஆண் - பெண்களிடையே காணப்படுமாயின் அவை இயல்பாகவே இனப்பெருக்கத்திற்கான சக்தியைப் பாதிக்கின்றன என வும் மறைமுகமாக இவை விவாகம் செய்வதில் ஏற்படுகின்ற தடைகளுக்கும் காரணங்களாக இருந்துள்ளன எனவும் கூறப்படுகின்றது. அதாவது தமிழர், சிங்களவர்களிடையே குடும்பத்தில் ஏற்படுகின்ற இறப்புக்கள் விவாகத்தினை குறிப்பிட்ட காலத்திற்குத்தடை செய்கின்றன. எனினும் 1930களிலிருந்து பிறப்பு வீதம் படிப்படியாகக் குறைவடைந்தமைக்குப் பல்வேறு காரணிகள் துணை புரிந்துள்ளன. டொனமூர் திட்டத்தின்படி இலங்கையர்களை உள்ளடக்கிய அரசினால் மக்கள் நலன் பெருமளவில் கவனத்திற் கொள்ளப்பட்டமை, இலவசக் கல்வி முறையினால் கற்றோரின் பங்கு அதிகரித்தமை, மலேரியா நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை, சுகாதார-மருத்துவ சேவைகள் கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டமை, வாழ்க்கைத்தர அதிகரிப்பு, சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக வர கொண்ட ஆர்வம், பெண்கள் சமூகத் திலும் குடும்ப நலனிலும் அக்கறை கொள்ளத் தொடங்கியமை போன்ற பல்வேறு காரணிகள் இதற்குத் துணைபுரிந்தன எனலாம்.

மூன்றாவது கட்டமான 1956-1965 காலப்பகுதியில் இறப்பு வீதம் வீழ்ச்சி யடைந்தாலும் அதற்கேற்ப பிறப்பு வீதம் வீழ்ச்சியடையாமையால் இயற்கை அதிகரிப்பு இதற்கு முன்னருள்ளதும் பின்னருள்ளதுமான காலப்பகுதிகளோடு ஒப்பிடும் போது அதிகரித்துக் காணப்பட்டது. அதாவது 1956இற் பிறப்பு வீதம்

36.4 லிருந்து 1965இல் 35.8 ஆக வீழ்ச்சியடைய இறப்பு வீதம் 9.8 லிருந்து 8.2ஆக மாறியது. இக்காலப்பகுதியில் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்குச் சமூக, அரசியல் காரணிகளே முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. பெண்கள் கல்வி கற்கும்காலம் அதிகரித்திருந்தமை, சமூக அந்தஸ்து அதிகரித்தல், தொழில் வாய்ப்பில் பெண்களின் நாட்டம், விவாக வயது பின் தள்ளப்படல் போன்ற பல காரணிகள் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பினைக் கொண்டிருந்த போதிலும், பொருளாதார நலனைக் கருத்திற் கொள்ளாது குடும்பநலத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல்வாதிகளும், சமூக, மதவாதிகளும் எதிர்த்தமையே முக்கிய காரணமாகக் கொள்ளலாம். குடும்பத்திட்டமிடல் பெரும்பான்மை இனத்தைச் சிறுபான்மையாக்க வழி வகுத்துவிடும் என அன்றைய முண்னணித் தலைவர்கள் 1950களில் கடுமையாக அதனை எதிர்த்தனர். இதன் விளைவாக அக்கால அரசாங்கங்களால் திடமான குடித்தொகைக் கொள்கையினை நடைமுறைபடுத்த முடியவில்லை.

நான்காவது கட்டமான 1965ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறப்பு வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது 1966இல் 33.1ஆக இருந்த பிறப்பு வீதம் 1985இல் 24.3ஆகக் குறைவடைந்துள்ளது. இதற்கு நேரடியான, மறைமுகமான காரணிகள் துணைபுரிந்துள்ளன. முதலாவது காரணியாக குடும்பநலத் திட்டத்தை அரசாங்கம் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டமை மட்டுமல்லாது வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று அதனை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டமையுமாகும். அதாவது 1965இல் பதவியேற்ற தேசிய அரசாங்கம் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தினர். குடும்பத்திட்டச் சங்கத்தினூடாக மட்டுமல்லாது சுகாதார அமைச்சினூடாகவும் இவற்றை நிறைவேற்றினர் எனலாம். மறைமுகமான காரணிகளாக - விவாக வயது பின்னடையப் பெண்களின் கல்வி கற்கும் காலம் நீடிப்பு, அண்மைக்காலங்களில் பெண்கள் விவாகத்தைப் பின்தள்ளியேனும் தொழில் வாய்ப்பினை விரும்பியேற்கும் நிலை, சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து அதிகரித்துச் செல்லல், கல்வி கற்ற குடும்பங்களிடையே கணவன் - மனைவியரிடையேயான பரஸ்பர புரிந்துணர்வு, மத நம்பிக்கைக்கும் பிறப்புக்குமிடையேயான தொடர்பில் விரிந்து செல்லும் வேற்றுமைப் பண்புகள், இலங்கையர்கள் தமக்குரிய பாரம்பரிய பண்பாட்டுடன் மேலைத்தேச பண்பாட்டையும் சேர்த்துக்கொள்ளும் முறைமை, நகராக்க வளர்ச்சி, உள்நாட்டு - சர்வதேச இடப்பெயர்வின் தன்மை, அளவான குடும்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணக்கரு, மத்திய வகுப்பினர் அதிகரித்துச் செல்லல், பொருளாதார, சமூக நிலை, மருத்துவ சுகாதார வசதிகளின் விருத்தி, உணவு நுகர்வின் நிலை போன்ற பல்வேறு காரணிகள் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

இலங்கையில் பிறப்புக்களை நிர்ணயிப்பதில் முக்கிய இடத்தைப் பெறுவது விவாக வயதாகும். இலங்கையில் பொதுவாக சட்டரீதியாக விவாகம் செய்யும் வயது ஆண்களுக்கு 21 ஆகவும் பெண்களுக்கு 18 ஆகவும் காணப்பட்ட போதிலும் 1997ஆம் ஆண்டு விவாகத்திருத்தச் சட்டத்தின் பிரகாரம்

ஆண், பெண் இருபாலாருக்குமான விவாக வயதினை 18 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. முஸ்லீம்களுக்கு வயதுக் கட்டுப்பாடில்லை. ஆனால் பெண்களுக் கான விவாக வயது 1963, 1971 1981 இல் முறையே 22.3, 23.5, 24.4 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கான சராசரி விவாக வயது ஒரு வருடம் அதிகரிக்குமாயின் அவ்வாண்டில் நிகழும் பிறப்பில் 10 சதவீதம் குறைவடைய வாய்ப்புண்டு. நாட்டின் சராசரி விவாக வயது 2000ஆம் ஆண்டில் ஆண்களுக்கு 27.6 ஆகவும் பெண்களுக்கு 25.4 ஆகவும் அமைந்துள்ளது. இதன் விளைவாக இளவயதில் விவாகம் செய்யாத பெண்களின் பங்கு அதிகரித்து செல்கின்றது. 20-24 வயதிடைவெளியில் விவாகம் செய்யாத பெண்களின் பங்கு 1971, 1981 இல் முறையே 53.3, 53.2 ஆகவும் 25-29 வயதி டைவெளியில் 24.6 லிருந்து 30.1 ஆகவும் 31-34 வயதிடைவெளியில் 10.9 விருந்து 16.0 வீதமாகவும் அதிகரித்துள்ளது. விவாக வயது அதிகரித்துச் செல் வதற்கு, கல்வி கற்கும் காலம் அதிகரிப்பது மட்டுமல்லாது விவாகத்தை நெறிப்படுத்துவதற்கான பொருளாதார வசதி நிலையுடன் விவாகம் செய்யாத பெண்களுக்குத் தொழில் வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கும் பண்பு, விவா கத்திற்குப் பெண்களை ஆண்கள் நேரடியாகத் தெரிவு செய்யும் நிலை வளர்ச்சியடைந்தமை போன்ற பல்வேறு காரணிகளும் செயற்படுகின்றன.

இலங்கையிற் கல்வி கற்கும் காலம் அதிகரித்திருப்பது மட்டுமல்லாது ஆண் - பெண் இருபாலாரிடையே கல்வி நிலை அதிகரித்துச் செல்லும் பண்பும் பிறப்புக்களைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. ஆண்களின் எழுத்தறிவு நிலை யானது 1971 , 1981 இல் முறையே 78.5, 86.5 சதவீதமாக இருப்பதும் பெண் களின் எழுத்தறிவு நிலை முறையே 70.9 80.5 சதவீதமாகவிருப்பதும் நோக்கற் பாலது. 4 - 9 வயதிடைப்பட்ட குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லும் நிலை 1971 இல் 60.9 ஆகவிருந்து 1981 இல் 84.4 ஆக அதிகரித்துள்ளது. 10-14 வயதிடையில் 69.8 சதவீதத்திலிருந்து 89.4 ஆகவும், 15-19 வயதிடையில் 34.5சத வீதத்திலிருந்து 42.0 சதவீதமாகவும் அதிகரித்திருப்பது பிறப்புக் களைக் கட்டுப்படுத்தக்கூடிய மறைமுகக் காரணிகளாகும்.

**அட்டவணை 5.11**

**45-49 வயதிடைவெளியிலுள்ள**
**பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை**
**(இனம், கல்வி, தொழில்)**

| | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இஸ்லாமியர் |
|---|---|---|---|---|
| கல்வியறிவுள்ளதும் பொருளாதார வசதி கொண்டதுமான குடும்பம் | 4.15 | 5.24 | 7.50 | ------ |
| கல்வியறிவு ஆனால் பொருளாதார வசதியற்ற குடும்பம் | 5.18 | 5.26 | 4.87 | 4.21 |

| | | | | |
|---|---|---|---|---|
| கல்வியறிவற்ற ஆனால் பொருளாதார வசதியுடைய குடும்பம் | 6.83 | 6.34 | 6.02 | 6.67 |
| கல்வியறிவற்றதும் பொருளாதார வசதியற்றதுமான குடும்பம் | 6.57 | 6.13 | 6.29 | 6.93 |

ஆதாரம் : Dallas F.S. Fernando

கணவன் - மனைவியரது தொழில்நிலை, பிறப்புக்களைக் கட்டுப்படுத்த வல்லது. நிர்வாக மற்றும் எழுதுவினைஞர் தரத்திலான தொழில்களைக் கொண்ட குடும்பங்களில் பிறப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதைப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொருளாதார மற்றும் கல்விரீதியான ஆய்வில் இனங்களிடையே பிறப்புக்கள் வேறுபட்டு அமைந்துள்ளதை அட்டவணை 5.11 தெளிவுபடுத்துகின்றது.

இவ்வட்டணைப்படி இனங்களிடையே மட்டுமல்லாது அவர்கள் தம் பொருளாதார மற்றும் கல்விநிலையுடனும் பிறப்புக்களின் அளவு தீர்மானிக் கப்பட்டுள்ளது என்பதைக் காணலாம். மதரீதியாகவும் பிறப்புக்கள் கட்டுப்படுத் தப்படுகின்றன. அதாவது இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மதத்தைப் பின்பற்றுபவர்கள் குடும்பத்திட்டமிடலைப் பூரணமாக எதிர்ப்பவர்களாக இருக் கின்றனர். ஆனால் 1980களின் பின்னர் அவர்களும் தேசியவோட்டத்தோடு பங்குகொள்ளும் பாங்கினைக் குடும்பத்திட்டச் சங்க அறிக்கைகள் புலப்படுத் துகின்றன. தேசிய பிறப்பு வீதத்தோடு ஒப்பிடும்போது இந்தியத் தமிழரிடையே பிறப்புக்கள் அதிகமான போதிலும் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 1963, 1971, 1981இல் முறையே ஆயிரத்துக்கு 33.0, 26.0, 24.0ஆகக் குறைவ டைந்து சென்றுள்ளது. பிறப்பு வீதம் இவர்களிடையே அதிகமாக இருப்பதற்கு ஆண்- பெண் இருபாலருக்கும் இளவயதிற் தொழில் வாய்ப்புக் கிடைக்கும் நிலை, இதனால் பொருளாதார ரீதியில் விவாகம்செய்யும் ஆற்றல் ஏற்படல், மிகச்சிறிய குடியிருப்பினை வாழ்விடமாகக் கொண்டுள்ளமை, கல்வியறிவுக் குறைவு போன்ற பல காரணிகள் இளவயது விவாகத்தை ஊக்குவிக்கின்றன.

இலங்கை விவசாய நாடாகவிருந்த போதிலும் நகராக்க விருத்தி பிறப்புக்களைக் கட்டுப்படுத்துங் காரணிகளில் முக்கியமானதாகவிருந்துள்ளது. குறிப்பாக கொழும்பு நகரப்பகுதியில் குடும்பமொன்றின் சராசரி பிறப்பு வீதம் 3.95ஆக இருக்க அயல் கிராமங்களில் 4.48ஆக இருந்துள்ளது. நாட்டின் மொத்த மக்களில் 25.0 சதவீதமானவர்கள் நகரவாசிகளானபோதிலும் நகராக் கப்பண்புகள் அதிகரித்த கிராமத்தவர்களிடையே பிறப்புக்கள் கணிசமாகக் குறைவடைந்து சென்றுள்ளது. மக்களிடையே பொழுதுபோக்கு வசதி விருத்தி பெற்றுள்ள, வருமான உயர்வு, பெண்களின் சமூக அந்தஸ்து அதிகரித்தமை, மருத்துவ சுகாதார வசதிகள், தொடர்புசாதனங்கள் கிடைக்கும் நிலை(1981இல்

நாட்டில் 88.0 சதவீதமானோர் வானொலியை உபயோகித்தனர்) உணவு நுகர்வு நிலை போன்ற காரணிகள் பிறப்புக்களைக் கட்டுப்படுத்தியுள்ளன எனலாம்.

நேரடியான காரணிகளில் குடும்ப நலத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டமை யானது பிறப்புக்களைக் கட்டுப்படுத்த உதவின. 1971ஆம் ஆண்டில் நிரந்தரக் குடும்பத் திட்டமிடலை ஏற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 49,323 ஆக விருந்தது. இது 1983இல் 173,197 ஆகவும் 1986இல் 137,307 ஆகவும் 2000ஆம் ஆண்டில் 218273ஆகவும் காணப்பட்டது. பல்வேறு குடும்பத்திட்ட முறைகளைப் பயன்படுத்துவதற்குக் குடும்பப் பெண்களிடையே காணப்பட்ட பயஉணர்வு நீங்கியமை, இதனைச் சாத்தியப்பட வைத்தது. 1980களின் பின்னர் முஸ்லீம் பெண்களும் குடும்பத் திட்டமிடலை மேற்கொண்டு வருகின்றனர். இதைவிட, கல்வியறிவுடையோர் தாமாகவே பிறப்புக்களைக் கட்டுப்படுத்தும் வல்லமையைப் பெற்றுள்ளனர் என அறியமுடிகின்றது.

இறுதியாக.: குடித்தொகைப் பண்புகளைப் பொறுத்தவரை வளர்முக நாடுகளுக்கு முன் மாதிரியாகவுள்ள இலங்கையின் பிறப்புக்களை 2000ஆம் ஆண்டில் 1000:18 ஆகக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இது பெருமளவிற்குச் சாத்தியப்படக்கூடிய ஒன்றே. மருத்துவ ரீதியில் பிறப்புக்களைக் கட்டுப்படுத்துவதிலும் பார்க்க சமூக, பொருளாதார, கலாசார மாற்றத்தின் விளைவினாலேயே தற்போதைய நிலையைப் பெருமளவிற்கு அடைய முடிந்தது எனப் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே பிறப்புக்களைக் கட்டுப்படுத்திக் குடித்தொகை அமுக்கத்தைக் குறைக்க வேண்டுமாயின் பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் மக்கள் செழிப்பு நிலை பெறல் வேண்டும்.

# 6

# இடப்பெயர்வு

## 6.0. முன்னுரை

குடித்தொகை மாற்றத்தினை ஏற்படுத்தும் உயிர்க்கூற்றியல் காரணிக ளான கருவளம், இறப்பு ஆகியவற்றுடன் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளினால் உந்தப்படும் மனிதனின் இயக்கமே இடப்பெயர்வு எனலாம். இவ் இடப்பெயர்வானது குறித்த நாட்டின் அல்லது பிரதேசத்தின் குடித்தொகை அளவைப் பாதிக்கும் காரணிகளில் முக்கியமானது. குடித்தொகையியலில் இடப்பெயர்வு பற்றிய படிப்பானது மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஏனெனில் இது ஒரு நாட்டின் குடித்தொகைப் பரம்பலினைத் தீர்மானிக்கும் காரணியாக இருப்பதேயாகும். இடப்பெயர்வு பற்றிய படிப்பு குடிப்புள்ளியியலாளர்களுக்கு மட்டுமல்லாது புவியியலாளர், பொருளியலாளர், சமூகவியலாளர், அரசறிவிய லாளர், சட்டவியலாளர், திட்டமிடலாளர், கொள்கை வகுப்பாளர், பொது நிர்வா கத்துறையினர், சமூக உளவியலாளர் போன்ற பல்வேறு துறையினரால் தத்தம் துறை சார்ந்து ஆய்வு செய்யும் துறையாகும் என்றால் மிகையாகாது.

இடப்பெயர்வானது மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகும். அதாவது ஒரு குறித்த மக்கள் தொகுதியினர், வளவாய்ப்புக்களைப் பெறல், தொழிற்படையில் இணைதல், கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடல், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதார, மருத்துவ வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும் முகமாக மீள்பரம்பலை ஏற்படுத்தும் செயற்பாட்டையே இடப்பெயர்வு என அழைப்பர். இடப்பெயர்வானது. சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் மிகப்பெரிய சமூக அடை யாளமாகும். பெரும்பாலான நாடுகளில் கைத்தொழிலாக்கம், விவசாய அபிவிருத்தி போன்றவற்றினூடாகச் சமூக மாற்றம் உருவாக வாய்ப்புண்டு. அதாவது கிராமம் - கிராமம், கிராமம் - நகரம், நகரம் - நகரம், நகரம் - கிராமம் என்ற ரீதியில் இடப்பெயர்வு ஏற்பட்டு வருதல் வாயிலாகச் சமூக மாற்றம் ஏற்படுகின்றது எனலாம்.

## 6.1. இடப்பெயர்வின் வகைகள்

மக்கள் இடப்பெயர்வானது சர்வதேசத்துடன் இறுக்கமாக இணைக்கப் பட்ட ஒன்றாகும். இத்தகைய இடப்பெயர்வினை உள்நாட்டு இடப்பெயர்வு,

சர்வதேச இடப்பெயர்வு என அழைக்கலாம். உள்நாட்டு இடப்பெயர்வானது குறித்த ஒரு நாட்டுக்குள் ஒரு பிரதேசத்திலிருந்து வேறொரு பிரதேசத்திற்கு நிரந்தரமாகவோ அன்றில் தற்காலிகமாகவோ அன்றில் தற்காலிக நிரந்தரமா கவோ அன்றில் சமயாசமய அடிப்படையிலோ இடப்பெயர்வு மேற்கொள் வதைக் குறித்து நிற்க, சர்வதேச இடப்பெயர்வானது தனித்துவமான இறைமை யுள்ள ஒரு நாட்டிலிருந்து வேறு ஒரு நாட்டுக்குள் மக்கள் இடப்பெயர்வு மேற் கொள்வதைக் குறித்து நிற்கின்றது.

இடப்பெயர்வு பற்றிய படிப்பினைப் பலவேறு நோக்கில் ஆராயலாம்.


1. நில நோக்கு (Space Aspects)
2. கால நோக்கு (Time Aspects)
3. காரணி நோக்கு (Course Aspects)
4. எண்ணிக்கை நோக்கு (Number Aspects)
5. நிலைத்துவ நோக்கு (Stability Aspects)

**6.1.1. நில நோக்கு**

இடப்பெயர்வில் நில அடிப்படை என்னும் போது தான் வாழும் குடியிருப்பி லிருந்து ஏதோ காரணிகளின் அடிப்படையில் வெளியேறிப் புதிய இருப்பிடத்திற் குச் செல்வதைக் குறித்து நிற்கின்றது.

**அட்டவணை 6.1**

**இடப்பெயர்வு**



அட்டவணை 6.1 இன் பிரகாரம் சர்வதேச இடப்பெயர்வில் கண்டங்களுக் கிடையிலான இடப்பெயர்வு, சர்வதேச இடப்பெயர்வு எனவும் உள்நாட்டு இடப்பெயர்வில் மாநில/மாவட்ட இடப்பெயர்வு, உள்ளூர் இடப்பெயர்வு எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் இடப்பெயர்வு என்பதற்கு 16 ஆம் நூற்றாண்டில் இருந்து ஐரோப்பியர் நாடுகாண் நோக்கோடு, ஆபிரிக்கா, ஆசியா, வடதென் அமெரிக்கா, அவுஸ்திரேலியா கண்டங்களுக்குத் தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் இடப்பெயர்வு மேற் கொண்டதை உதாரணமாகக் கொள்ளலாம். அதே போலவே ஈழ விடுதலைப் போராட்டக் காலத்தில் இலங்கையிலிருந்து ஐரோப்பா, வடஅமெரிக்காக் கண்டங்களுக்குச் சென்றுள்ளமையைக் குறிப்பிடலாம்.

ஒரு இறைமையுள்ள நாட்டிலிருந்து வேறோர் இறைமையுள்ள நாட்டுக்கு இடப்பெயர்வு மேற்கொள்வதை சர்வதேச இடப்பெயர்வு எனக்கொள்ளலாம். இத்தகைய இடப்பெயர்வு சட்டரீதியாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் நிகழ்ந்து வருவதைக் காணமுடிகின்றது. ஒருவர் தான் வாழும் நாட்டிலிருந்து, சென்றடையும் நாட்டு அரசின் அனுமதியுடன் அங்கு செல்வதைச் சட்ட ரீதியான சர்வதேச இடப்பெயர்வு எனக்கொள்ளலாம். தான் வாழும் நாட்டிலிருந்து சென்ற டையும் நாட்டின் குடிவரவுச் சட்டத்திற்குப் புறம்பாக உள்வரவை ஏற்படுத்து வதைச் சட்டத்திற்குப் புறம்பான சர்வதேச இடப்பெயர்வு எனலாம். பொதுவாக வளர்முக நாடுகளிலிருந்து மக்கள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பொருளாதாரத் தேட்டம், அரசியற் தஞ்சம் போன்றவற்றிற்காகச் செல்கின்றனர். இவ்வாறான சட்டத்திற்குப் புறம்பான இடப்பெயர்வுக்குச் சட்டங்களில் காணப் படுகின்ற இறுக்கமற்ற தன்மைகளே காரணங்களாக அமைகின்றன என்றால் மிகையாகாது. அண்மைக் காலங்களில் இலங்கையிலிருந்து மேற்கு நாடு களுக்குச் செல்பவர்களில் பெரும்பாலானோர் இந்த வகைக்குள் அடங்குகின்ற னர். இதே போலவே வங்காள தேசத்திலிருந்து அசாம் மாநிலத்திற்கும், நேபாளத்திலிருந்து இந்தியாவுக்கும், இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கும் இடையில் சட்டவிரோத இடப்பெயர்வுகள் நடைபெற்று வருகின்றன.

அரசியல் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தடைவிதிக்கப்பட்ட பிரதே சங்களைத் தவிர ஒருவன் எங்கும் சென்று வரவோ, அன்றிற் குடியிருக்கவோ அவனுக்கு உரிமை உண்டு. இத்தகைய இடப்பெயர்வை உள்நாட்டு இடப் பெயர்வு என அழைப்பர்.

உள்நாட்டு இடப்பெயர்வு என்பது மிகக்கிட்டிய தூரத்திற்கு தற்காலிக மாகவோ, தற்காலிக நிரந்தரமாகவோ அன்றில் நிரந்தரமாகவோ இடப்பெயர்வு மேற்கொள்வதைக் குறித்து நிற்கும். குறிப்பாக ஒருவர் தொழிலின் நிமித்தம் தான் வாழும் பிரதேசத்திலிருந்து மிகக் கிட்டிய தூரத்திலுள்ள நகரத்திற்கோ அன்றில் கிராமத்திற்கோ சென்று வருவதை இவ்விடப்பெயர்வுக்குள் அடக்க லாம். வட இலங்கையில் அமைதி நிலவிய காலத்தில் யாழ்ப்பாணத்திலி ருந்து, கிளிநொச்சி, மாங்குளம், வவுனியா போன்ற இடங்களுக்குக் காலையில் புகையிரதத்தின் மூலம் பிரயாணம் செய்து மாலையில் தமது ஆரம்ப இடங் களிற்குத் திரும்பி வந்துள்ளனர். இது போலவே கண்டியிலிருந்து கொழும்புக்கு நாளாந்தம் தொழில் நிமிர்த்தம் சென்று வருகின்றனர்.

#### 6.1.2. காலநோக்கு

இடப்பெயர்வுப் பரிமாணப் பண்புகளைப் பொறுத்தவரை கால நோக்குடன் அவதானிப்பது அவசியமாகின்றது. இந்நோக்கினை நீண்டகால இடப்பெயர்வு, பருவகால இடப்பெயர்வு, நாளாந்த இடப்பெயர்வு என வகுத்து அறியலாம். நீண்டகால இடப்பெயர்வு என்பது நீண்டகாலத்துக்கு முன்னரே இடப்பெயர் வினை மேற்கொண்டு வாழ்ந்து வருவதைக் குறித்து நிற்கும். அதாவது வடதென் இந்தியாவிலிருந்து ஆரியர் - திராவிடர் இடப்பெயர்வு, போர்த்துக்கல் - ஸ்பெயின் நாடுகளிலிருந்து லத்தீன் அமெரிக்காவிற்கான இடப்பெயர்வு, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வட அமெரிக் காவிற்கான இடப்பெயர்வு, ஐக்கிய இராச்சியத்திலிருந்து நியூசிலாந்து- அவுஸ்திரேலியாவுக்கான இடப்பெயர்வு, யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வன்னிப் பகுதிக்கும், கொழும்புக்குமான இடப்பெயர்வு போன்றவற்றை உதார ணமாகக் குறிப்பிடலாம். இவர்கள் பொதுவாக அங்கேயே நிரந்தர இடப் பெயர்வாளராக மாறிவிட்டனர். அதாவது நீண்டகால இடப்பெயர்வென்றால் அதற்குக் காலஅளவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பருவ கால இடப்பெயர்வு என்றால் பருவத்திற்கு பருவம் இடப்பெயர் வினை மேற்கொள்வதைக் குறித்து நிற்கும். அறுவடைக்காலம், விற்பனைக் காலம், கோடைகாலப்பகுதிகளில் குறித்த இடங்களுக்குச் சென்றுவிட்டு தமது நோக்கம் நிறைவுற்றதும் திரும்ப ஆரம்ப இடத்திற்குச் செல்வது இவ்வகை இடப்பெயர்வின்பாற்பட்டதாகும். குறிப்பாக, குளிர்காலத்தில் இடைவெப்ப வலயத்தைச் சேர்ந்தோர் அயன, அயன அயல் வலய நாடுகளுக்குச் செல்கின் றனர். அதே போலவே அறுவடைக்காலங்களில் யாழ்ப்பாணக்குடாநாடு மற்றும் மலையகப்பகுதியிலிருந்து வேலைவாய்ப்பினைப் பெறறுக்கொள்ளும் நோக்கு டன் வன்னிப்பிரதேசத்திற்குப் பருவகால இடப்பெயர்வினை மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமயாசமய இடப்பெயர்வு மிகக்குறுகிய தூர இடப்பெயர்வாகும். உலகில் உள்ள பெரும்பாலான மக்கள் தொழிலின் நிமிர்த்தமோ அன்றில் வேறு காரணிகளுக்காகவோ சென்று வருவதை இது குறித்து நிற்கும்.

#### 6.1.3. காரணி நோக்கு

வெளியே தள்ளும் உந்து வலு, உள்ளே இழுக்கும் உந்து வலு எனும் இரண்டின் மூலமும் மனித இடப்பெயர்வு நிகழ்வதைக் காரணி நோக்கிற்கு உட்படுத்தலாம். வெளியே தள்ளும் உந்து வலுவைத் தள்ளு விசை எனவும் குறிப்பிடலாம். உதாரணமாக வெள்ளம், வரட்சி, புவிநடுக்கம் போன்றவற்றால் மக்கள் தமது ஆரம்பப் பிரதேசத்திலிருந்து வெளியிடப்பெயர்வினை மேற் கொள்வதை இது குறித்து நிற்கும். அதேபோலவே ஒரு பிரதேசத்தில் பௌதிக, பொருளாதார, சமூக, அரசியல், சூழலியற் பண்புகள் சிறப்பாகக் காணப்படும் பட்சத்தில் அப்பிரதேசத்தை நோக்கி மக்கள் உள்வரவு ஏற்படுத்துவதை உள்ளேயிழுக்கும் உந்து வலு எனக் கொள்ளலாம்.

இக்காரணிநோக்கு பௌதிக, பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளின் செல்வாக்கின் விளைவாக ஏற்படுவதாகும். பௌதிகக் காரணிகளைப் பொறுத்தவரை காலநிலை மாற்றம், வெள்ளம், வரட்சி, புவிநடுக்கம், எரிமலை, பனிக்கட்டி உறைதல், நகருதல், மண் வளமிழத்தல், கடற்கரையோரம் அரிக்கப்படல் போன்ற பல காரணிகளின் விளைவாக இடப்பெயர்வு நிகழ்வதைக் குறிக்கின்றது. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி சுமாத்திராத் தீவுக்கண்மையில் நிகழ்ந்த புவிநடுக்கத்தின் விளைவாக இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, பர்மா, மலேசியா,சோமாலியா, மாலைதீவு போன்ற நாடுகளின் கரையோரப் பிரதேசங்களில் சுனாமி அலையின் தாக்கத்தின் விளைவாக 200,000 மக்களுக்கு மேல் இறப்பினைத் தழுவியதுடன் கோடிக்கணக்கான பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடற்கரையோரங்களில் மக்கள்வாழ அஞ்சுகின்றனர். கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கப்பால் குடியிருப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என அரசும் ஆய்வாளர்களும் கருத்துத்தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதே போலவே தாம் வாழும் பிரதேசத்திலும் சென்றடையும் பிரதேசத்திலும் காணப்படுகின்ற பொருளாதார வேறுபாடுகளாலும் தீர்மானிக்கப்படுகின்றன. சமூக, கலாசாரக் காரணிகளும் காரணி நோக்கில் இடப்பெயர்வினைத் தீர்மானிப்பனவாக உள்ளன. உதாரணமாக இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த பதினைந்து வருடங்களாக மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று குடியிருப்பதைக் கூறலாம். அரசியற் காரணிகளைப் பொறுத்தவரை இலங்கை, சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளிலிருந்து அண்மைக்காலங்களில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் இடப்பெயர்வினையும் குறிப்பிடலாம். கட்டாயப்படுத்தப்பட்ட இடப்பெயர்வும் காரணி நோக்குக்குட்பட்டதாகும். ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்கு நீக்ரோக்களை அடிமையாகக் கூட்டிச்சென்றமை, ஐக்கிய இராச்சியத்திலிருந்து குற்றக் கைதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பியமை போன்றவை இவ்வகை இடப்பெயர்வுக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

#### 6.1.4. எண்ணிக்கை நோக்கு

உள் இடப்பெயர்வானாலும் சரி சர்வதேச இடப்பெயர்வானாலும் சரி மக்களது எண்ணிக்கையையும் அளவையும் பொறுத்ததே எண்ணிக்கை நோக்கு எனக் கொள்ளப்படுகிறது. இதனைப் பெரிய எண்ணிக்கையிலான இடப்பெயர்வு, சுமாரான எண்ணிக்கையிலான இடப்பெயர்வு, சிறியளவிலான இடப்பெயர்வு என மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம். இலங்கையிலிருந்து மேற்குலக நாடுகள்-இந்தியாவுக்கான தமிழரின் இடப்பெயர்வு, ஐக்கிய இராச்சியத்திலிருந்து அவுஸ்திரேலியா -நியூசிலாந்து - ஐக்கிய அமெரிக்கா - தென்னாபிரிக்காவுக்கான இடப்பெயர்வு போன்றவற்றை பெரிய எண்ணிக்கையிலான இடப்பெயர்வு எனலாம். இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று குடியேறிய சிங்களவர்களைப் பொறுத்தவரை சுமாரான எண்ணிக்கை

யிலான இடப்பெயர்வாளர் என்றே கூறவேண்டும். இலங்கையில் வடபகுதியிலிருந்து தென்பகுதிகளுக்கு இடப்பெயர்வை மேற்கொள்பவரைப் பொறுத்தவரை சிறியளவிலான இடப்பெயர்வாகக் கொள்ளலாம்.

**6.1.5. நிலைத்துவ நோக்கு**

இடப்பெயர்வாளன் இடப்பெயர்வினை மேற்கொள்ளும் போது சென்றடையும் இடத்தில் அவன் கொண்டுள்ள நிலைப்பாட்டையே நிலைத்துவம் எனக் கொள்ளலாம். சமயாசமய இடப்பெயர்வு, தற்காலிக இடப்பெயர்வு, தற்காலிக நிரந்தர இடப்பெயர்வு, நிரந்தர இடப்பெயர்வு என்பனவே அவையாகும். சமயாசமய இடப்பெயர்வானது சாதாரணமாகத் தான் வாழும் பிரதேசத்திலிருந்து அயலில் உள்ள நகரம் மற்றும் கிராமங்களுக்குத் தொழிலின் நிமித்தமோ அன்றில் வேறு தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவோ சென்று வருவதைக் குறித்து நிற்கும். தற்காலிக இடப்பெயர்வானது வர்த்தகம், யாத்திரை, மற்றும் தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் முகமாகத் தான் வாழும் பிரதேசத்திலிருந்து வேறிடத்திற்குச் சென்று வருவதைக் குறித்து நிற்கின்றது. இந்நிகழ்வு குறித்த நாளிலும் நிகழலாம். அல்லது குறித்த காலப்பகுதிக்குள்ளும் நிகழலாம். குறிப்பாக,தொழில் வாய்ப்புள்ள பகுதிகளை நாடிச்சென்று தொழிலாற்றி விட்டுத் தம்மிடம் திரும்புவதைக் குறிப்பிடலாம். 1980களுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் மலையகப் பகுதியிலிருந்தும் நெல் விதைத்தல், அறுவடை செய்தல் ஆகியவற்றுக்காக அவ்வப் பருவகாலங்களில் வன்னிப்பகுதிக்கு வந்து சென்றதைக் தற்காலிக இடப்பெயர்வாகக் கொள்ளலாம்.

தற்காலிக நிரந்தர இடப்பெயர்வானது தனது ஆரம்ப பிரதேசத்திலிருந்து புதிய பிரதேசத்திற்குத் தொழில் வாய்ப்பு, கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி போன்றவற்றிற்காக முதலில் தற்காலிகமாகச் சென்றுபின் அப்பிரதேசத்தில் ஏற்பட்ட கவர்ச்சியின் விளைவாகத் தற்காலிக நிரந்தர இடப்பெயர்வாளராக மாறிவிடுவதைக் குறித்து நிற்கின்றது. இவ்விடப்பெயர்வு தனிமையாகவோ அன்றிற் குடும்பமாகவோ மேற்கொள்ளப்படுகின்றது. அதேவேளை இவர்கள் தமது ஆரம்பப் பிரதேசத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பர். உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தென்னிலங்கை, வெளிநாடுகளுக்கு இடப்பெயர்வானது மேற்கொண்டவர்கள் தொடர்ச்சியாகத் தமது ஆரம்பப் பிரதேசத்துடன் தொடர்பினை வைத்திருக்கின்றனர். 1950களில் வன்னிப் பிரதேசத்திலுள்ள குடியேற்றத் திட்டங்களிற் தம்மை இணைத்துக் கொண்ட நெடுந்தீவு மக்கள் தமது ஆரம்ப பிரதேசத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளிற் தொடர்ச்சியாக வந்து கலந்து கொள்வது வழக்கமாகும். இவ்வகையான இடப்பெயர்வானது காலப்போக்கிற் பெரும்பாலும் நிரந்தர இடப்பெயர்வாக மாறிவிடுவது சாதாரண நிகழ்வாகவிருக்கின்றது. குறிப்பாக ஆரம்பத்தில் இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களிடையே குடும்பத் தலைவர்கள் இல்லாமற் போகும் பட்சத்திற் தொடர்பு அறுந்த விடும் சம்பவங்களும் உண்டு.

தாம் வாழும் பிரதேசம் தமக்கு ஏற்றதல்ல என்பதை உணர்ந்து நிரந்தர மாகவே தாம் சென்றடையும் பிரதேசத்திலோ அல்லது வேறு பிரதேசங்களிலோ குடியிருப்பதை நிரந்தர இடப்பெயர்வு எனலாம். இவ்விடப்பெயர்வுக்குப் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகள் பெரிதும் உந்து சக்தியாக இருக்கின்றன எனலாம்.

## 6.2. இடப்பெயர்வுக் கோட்பாடு

மக்கள் இடப்பெயர்வின் ஆய்வினை வழிமுறையாக ஆராய்ந்து வரும் இத்துறையின் முன்னோடிகளில் ஒருவரான றெவின்ஸ்ரைன்(1885) என்பவர் இடப்பெயர்வு நியதிகள் (Laws of Migration) என்ற கோட்பாடு ஒன்றினை முன்வைத்தார். இத்துறை வளர்வதற்குத் தூண்டுகோலாக இருந்த இவரின் ஆய்வின் மூலம் இங்கிலாந்தின் இடப்பெயர்வு விபரங்களின் உதவியுடன் சில விதிகள் வெளியிடப்பட்டன. இவரது நியதியில் இடப்பெயர்வினை ஏற்படுத்துப வர்களிற் பெரும்பாலான மக்கள் தாம் வாழும் இடத்திலிருந்து குறுகிய தூரத்திற்கே செல்கின்றனர் எனவும், தூரம் கூடக்கூட இடப்பெயர்வாளரின் அளவும் குறைந்து செல்கின்றது எனவும், பெரிய நகரங்களுக்கு அண்மையில் வாழ்வோர் அவர்களிடையே பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது நகரத்தை நாடுகின்றனர் எனவும், இவர்களாற் குடியிருப்புக்களாக மாற்றப்படும் நகர விளிம்புப்பகுதிகள் நகராக்க வளர்ச்சி பெறுகின்றன எனவும் எடுத்துரைத்தார். மேலும் இங்கிலாந்தைக் கருத்திற் கொண்டு ஒரு நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியானது இடப்பெயர்வினைத் தூண்டும் எனவும், குறைந்த தூர இடப்பெயர்வை ஆண்களைவிட பெண்களே அதிகமாக மேற்கொள்கின்றனர் எனவும், இடப்பெயர்வுக்கான அடிப்படைக் காரணம் அவர்கள் தமது பொருளாதார நிலையை அதிகப்படுத்துவதேயாகும் எனவும் எடுத்துரைத்தார். இவரது நியதியானது எல்லாக் காலங்களுக்கோ அன்றில் எல்லா இடங்களுக்கோ பொருத்தமானது எனக் கூறமுடியாதுவிடினும் தொடர்ச்சியான இடப்பெயர்வு ஆய்வுக்கு இவரது நியதி ஊன்றுகோலாக அமைந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

றெவின்ரைனைத் தொடர்ந்து இடப்பெயர்வு ஆய்வினைப் பலர் தொடர்ச்சியாக மேற்கொண்டனர். டோர்த்தி தோமஸ் (1938) எனபவர் வேற்று மைத் தன்மையுள்ள இடப்பெயர்வில் இளவயதினரே அதிகளவில் பங்கு கொள்கின்றனர் எனத் தெரிவித்தார்.

1940 இல் ஸ்ரோபர் (Stouffer S, 1940) என்பவர் இடைப்பட்ட வாய்ப்பு (Intervening Opportunities) பற்றிய தனது இடப்பெயர்வுக் கோட்பாட்டை வெளியிட்டார். இக்கோட்பாடானது இடப்பெயர்வின் தூரத்துக்கும் வாய்ப்புக்குமி டையிற் காணப்படும் பண்பினை ஆராய்ந்து இடைப்பட்ட வாய்ப்பானது இடப்பெயர்வுக்கு முன்னர் வாழ்ந்த பிரதேசத்தினதும் சென்றடைந்த பிரதே சத்தினதும் சாதக பாதகத் தன்மைகளைக் கருத்தில் கொள்கின்றது. அத்து டன் இவ்விரு பிரதேசங்களுக்கிடையில் காணப்படும் இடைப்பட்ட தடை

களையும் அவர் ஆராய்ந்து அவற்றினை ஒரு கோட்பாடாக வெளியிட்டார். இவர் 1960 இல் தனது கருதுகோளுக்குப் புதுவடிவம் கொடுத்து, மாற்றியமைக்கக் கூடிய நிலையற்ற போட்டி இடப்பெயர்வாளரின் (Competing Migrants) பங்களிப்பு பற்றித் தெரிவித்து, இரண்டு நகரங்களின் இடப்பெயர்வினை ஆராய்ந்து இடைப்பட்ட வாய்ப்புக்களை வெளிக்கொணர்ந்தார்.

எவறெற்லீ (Everrtt S, Lee - 1960) என்பவர் இடப்பெயர்வில் புதுக் கருத்துத் தொடர்பான கோட்பாடு ஒன்றினை வெளியிட்டார். இவர் தனது இடப்பெயர்வுக் கோட்பாடு என்ற கட்டுரை வாயிலாக

அ) இடப்பெயர்வில் ஆரம்ப இடத்தில் காணப்படும் காரணிகள்

ஆ) சேருமிடத்தில் காணப்படும் காரணிகள்

இ) இடைப்பட்ட தன்மைகள்

ஈ) தனிப்பட்ட காரணிகள்

என நான்கு பண்புகளூடாகவே நோக்குதல் வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார். இக்கோட்பாடு ஸ்ரோபரின் கருத்துடன் ஒத்ததாக இருந்த போதிலும், சர்வதேச ரீதியில் பெருமளவில் கவர்ச்சிகரமானது எனக்கூற முடியாது. இருப்பினும் லீ தனது கருத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கு ஆரம்ப இடத்திலும் சென்றடைந்த இடத்திலும் காணப்படும் இழுவிசை, தள்ளுவிசைக் காரணிகளை வகைப்படுத்தும் வகையில் மூன்று கருதுகோள்களைக் கையாண்டார். அ) இடப்பெயர்வின் அளவு (Volume of Migration) ஆ) இடப் பெயர்வுப் போக்கினதும் எதிர்போக்கினதும் அபிவிருத்தி (The Devlopment of Streams and Counter Streams of Migration) இ) இடப்பெயர்வாளரின் பண்பு (Characteristics of Migrants) என்பனவே அவையாகும். இவர் இடப்பெயர்வாளரின் தனிப்பட்ட நடத்தைகளிலும் (Individual behaviour) தீர்மானம் எடுத்தலிலும் பெருமளவில் அக்கறை கொண்டிருந்தார். இடப்பெயர்வின் தன்மைகளைக் காண்பதற்கு இழுவிசை தள்ளுவிசையின் சாதக பாதக நிலைகளுக்கு +, - குறியீடுகளையும் போட்டித்தன்மை காணப்படுமாயின் (Competing Force) 0 குறியீட்டினையும் பயன்படுத்தி இடப்பெயர்வின் பண்புகளை இலகுபடுத்தினர். இடைப்பட்ட தடைகளானவை சொந்தக் காரணிகளுடன் (Personal Factors) தூரம், செலவு, இனப்பரம்பல் போன்றவற்றிற்கு உட்பட்டன எனத் தெரிவித்தார். டொனால்ட் போஜ் (Donald, J. Bogue- 1969) என்பவர் 'வேற்றுமை இடப் பெயர்வுக் கொள்கையின் அணுகுநெறி' என்ற ஆய்வுக் கட்டுரையின் வாயிலாகவும் டன்கன் (Duncan A. L 1963) என்பவர் 'பண்ணைக் குடித்தொகை அசைவின் விளைவுகள்' என்ற கோட்பாட்டின் மூலமும் இடப்பெயர்வுப் பண்புகளை விளக்கிச் சென்றனர். இவர்களது ஆய்வானது ஐக்கிய அமெரிக்காவில் இடப்பெயர்வினால் உருவான பிரச்சினைகளை மையமாகக் கொண்டமைந்தது. இவர்களைத் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் பலர் இடப்பெயர்வின் தூரமும் அதன் பயனும் பற்றி இழுவிசை, தள்ளுவிசைக் காரணிகளை மனதிலிருத்திச் சூழலை மாற்றியமைக்கக் கூடியதற்கும்

நடைமுறைகளுக்குமிடையேயுள்ள தொடர்பினைக் கணிதமுறையின் மூலம் வெளிக்கொணர்வதில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

இடப்பெயர்வு ஆய்வினை நெறிப்படுத்திச் சென்றவர்களில் சிப் என்பவர் (Zipf G. K, 1964) குறிப்பிடத்தக்கவர். இவர் தனது ஆய்வில் ஒவ்வொருவரது இடப்பெயர்வினையும் அதனைக் கவர்ந்திழுக்கும் துணைப்பிரிவுகளையும் குறிப்பாகத் தூரத்தன்மையையும் கருத்திற்கொண்டார்.

சர்வதேச பொருளாதார நிபுணரான மைக்கல் ரொறாடோ என்பவர் இடப்பெயர்வுக் கொள்கையைப் பொருளியல் நோக்கில் முன்வைத்தவர். இவர் வருமானமும் தொழில் வாய்ப்பு நிலையுமே இடப்பெயர்வினை ஏற்படுத்தும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். கிராமங்களிலிருந்து நகரங்களுக்கான இடப்பெயர்வில் பெரும்பங்கு இவற்றை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது எனவும் வாதிடுகின்றார். இவர் ஹரிஸ் என்பவருடன் இணைந்து மேற்கொண்ட இடப்பெயர்வு பற்றிய ஆய்வில் 'உள் வர்த்தகமாதிரி' (Internal Trade Model) அதாவது சமூக நலன்கள், நகர - கிராமங்களில் வேலையளவு, வெளியீடு என்பன இடப்பெயர்வில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை எடுத்துக்கூறினார். கிராமங்களி லிருந்து நகரம் சார்ந்த இடப்பெயர்வில் கருத்து நிலையானது இரண்டு வகைப் படும் என ரொறாடோ கருதினார். முதலாவது நிலையானது முறைசார்ந்த துறைகளிலோ அல்லது மரபு ரீதியிலான துறைகளிலோ ஈடுபாடு கொள்ளும் வர்த்தகத் துறையினரின் இடப்பெயர்வுடன், கீழுழைப்புடன் கூடியவர்களும் நகரம்நோக்கி இடப்பெயர்வினை மேற்கொள்கின்றனர். இரண்டாவது நிலையில், உயர்ந்த வருமானத்தை நோக்கமாகக் கொண்ட நவீன துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறும் நோக்குடன் செல்லல் என்பதே அதுவாகும்.

ஆதர் லூயிஸ் (Auther Lewis - 1954) பொருளியல் நோக்குடன் கூடிய இடப்பெயர்வு ஆய்வில் சிறப்புப் பெற்றிருந்தார். முதலில் கிராமங்களிலிருந்து பெரிய கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி மாதிரி (Economic Devlopment Model) ஒன்றின் வாயிலாகத் தொழிலாளர் மாற்றப்படுதல் பற்றி எடுத்துக்கூறினார். இவர் தனது கருத்தினை அடித்தளமா கக் கொண்டு பெய் (Fei) றெயின்ஸ் (Reins) என்பவர்களுடன் இணைந்து பெரும்பாலான அபிவிருத்தியடையாத நாடுகளில் அதிகரித்துச் செல்லும் குடித்தொகைக்கிணங்க தொழிலாளர் இடப்பெயர்வும் அவர்கள் தம் கூலியின் அளவும் பற்றி விளக்கமாக எல். எவ். ஆர் இடப்பெயர்வு மாதிரியின் (Law of Fei and Reins Model of Migration) அடிப்படையில் புதிய கருத்தினை வெளியிட்டார்.

இடப்பெயர்வு ஆய்வில் ஜோன்சன் (Jonson), கிங் (King) என்பவர்கள் பெல்ஜியம் நாட்டின் உள்நாட்டு இடப்பெயர்வில் புதியதொரு ஆய்வினை மேற் கொண்டு விளக்கமளித்துள்ளனர். இருப்பினும் போட்டி இடப்பெயர்வாளரைப் பொறுத்தவரை இவர்களது கருத்துக்கள் ஏற்புடையதல்ல எனப் பின்வந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இவர்கள் மினோப்போலிஸ்ஸில் மேற்

கொண்ட ஆய்வின் பிரகாரம் இடப்பெயர்வாளரின் தூரத்தையும், வாய்ப்பினையும் கருத்திற் கொண்டு உயர்ந்த கல்வித் தரமுடையவர்கள் சிறப்பான தெரிவினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தூர இடங்களைத் தெரிவு செய்கின்றனர் எனவும் சிற்றூழியர் தரத்திலுள்ளவர்கள் குறைந்த தூர இடப்பெயர்வினை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர். பேபோட் என்ற குடித்தொகை ஆய்வாளன் (Burford, R.L, 1962) குடித்தொகை ஆய்வின் முடிவாக புள்ளியியல் ரீதியிலான தூரத்திலும் பார்க்க உளவியல் ரீதியிலான தூரத்தினைக் கருத்திற் கொண்டு இடப்பெயர்வாளன் இடப்பெயர்வினை மேற்கொள்கின்றான் என்றார்.

தள்ளுவிசை, இழுவிசைக் கோட்பாடு (Push and Pull Theory) இலகுவாக்கப்பட்ட கோட்பாடாகும். தான் வாழும் பிரதேசம் தனக்கு உகந்ததல்ல என்பதைச் சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் தனிப்பட்ட ரீதியில் ஒருவன் உணரும்போது ஏற்படும் இடப்பெயர்வானது தள்ளுவிசையின் பாற்பட்டது எனவும் மேற்குறித்த காரணிகளின் அடிப்படையில் தன்னை விரும்பியேற்கும் என நம்புமிடத்து அவ்விடத்தை நாடுவது இழுவிசையின் பாற்படும் எனவும் சிறப்பாக ஆராய்ந்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியக் குடித்தொகை ஆய்வாளர்கள், இந்தியக் கிராமம் - நகர இடப்பெயர்வும் அதற்கான காரணிகளும் இழுவிசை, தள்ளுவிசைக் கோட்பாட்டுக்குட்பட்டது எனக் கூறிச் சென்றனர். ரீயூபர்கள் (Teauber, M.B. Teauber , A, 1964) தமது ஆய்வின்படி நகரத்துக்கும் உப கிராமங்களுக்குமிடையில் இடம்பெறும் இடப்பெயர்வானது இரு பக்கங்களுக்கு இடையில் தொடர்ச்சியாக எதிர்த்தன்மை கொண்டது என்றனர். அமெரிக்கப் புவியியலாளரான வில்பர்செலின்கி (Zelinsky W,. 1966) என்பவர் புவியியல் கல்வியானது குடிப்புள்ளியியலுடன் நெருங்கிய தொடர்புடையது எனவும் கருவளம், இறப்பு, இடப்பெயர்வு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு புவியியல் கல்வி சிறப்புப் பெறும் எனவும் விளக்கமளித்தார். இவர் மேலும் பல்வேறு வகைப்பட்ட குடித்தொகைப் பண்புகளைக் கொண்ட இடங்களில் அவர்களின் வாழ்க்கைப் பண்புகளையும் அதற்கான காரணிகளையும் விளைவுகளையும் எடுத்துக்கூறி இடப்பெயர்வினால் எத்தகைய தாக்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்பதையும் விளக்குகின்றார்.

பிரித்தானிய புவியியலாளரான ஜோன் கிளார்க் (Clark I John,1965) என்பவர் புவியியற் பண்புகளில் காணப்படுகின்ற வேறுபாடானது-குடித்தொகை வளர்ச்சி, பரம்பல், இடப்பெயர்வு, கூட்டு ஆகியவற்றில் காணப்படும் மாற்ற நிலை போன்றன எவ்வாறு காணப்படுகின்றன என்பதனை எடுத்துக் கூறியுள்ளார். குடிப்புள்ளியியலாளன் புள்ளிவிபர முறைகளிலும் குடிப்புள்ளி விபரங்களிலும் கவனம் செலுத்துகின்றான். ஆனால் குடித்தொகைப் புவியியலாளன் குடிப்புள்ளிவிபரங்களை நிலப்பரப்போடு ஒப்பிட்டு வரைபடங்களின் துணையுடன் குடித்தொகைப் புவியியலுக்கு விளக்கமளிக்கின்றான் எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் இடப்பெயர்வினது நடத்தை பற்றிய ஆய்வில் ஆரம்ப இடம், சேரிடம் என்ற இரண்டிலும் இடரீதியாகப் பயன்பாட்டுத் தன்மைக்கேற்ப தீர் மானம் எடுக்கப்படுவதாக வொல்போட் (Wolfort. J. 1955) என்பவர் தெரிவிக் கிறார். சூழல் மாறுபாடுகளுடன் நிலையான குடித்தொகையில் ஏற்படும் மாற்றங் கள், புதிய மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற காரணிகளும் மக்கள் இடப்பெயர்வினைத் தூண்டுவனவாக அமைகின்றன. அத்துடன் தனிப்பட்ட காரணிகள், மன உந்தல்கள், உறவினருடன் இடம்பெயர்தல், சிறந்தகாலநிலை, வாய்ப்பான சுகாதாரநிலைமைகள், சிறந்த அயலவர்களைப் பெற்றுக்கொள்ளல், தன்னிச்சையான சேவைகள், இராணுவ சேவைகள் போன்ற பல காரணிகளால் இடப்பெயர்வு தூண்டப்படுகிறது. (Cox R. Peter, 1976) பொருளாதார, சமூக, அரசியல் காரணிகள் என்பன இடப்பெயர்வுச் செயன்முறைகளில் முக்கியத்துவம்• பெற்றுள்ளன. அதாவது கிராம - நகரத் தொடர்புகள் மேற்குறித்த காரணிகளால் அதிகரிக்கும்போது உள்நாட்டு இடப்பெயர்வு ஏற்படுகின்றது எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. ( Nels Anderson, 1969 )

மேற்குறித்த சர்வதேச ஆய்வாளர்களின் சிந்தனைத் தெறிப்புக்களைத் தொகுத்து நோக்கும்போது இடப்பெயர்வின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப் படுகின்றது. அதாவது இவர்கள் குடித்தொகைக் கல்வியில் மக்களின் இடப் பெயர்விலுள்ள ஆரம்ப இடம், சேரிடம் ஆகிய பிரதேசங்களில் எத்தகைய சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது குறித்துத் தெளிவாக விளக்கமளித்துள்ளார்கள்.

## 6.3. உள்நாட்டு இடப்பெயர்வினை அளவிடுவதற்கான தரவுகளும் அளவீடுகளும்

உள்நாட்டு இடப்பெயர்வு, சர்வதேச இடப்பெயர்வு இரண்டினையும் அள விடும் முறைகள் வேறுபட்டனவாக இருக்கின்றன. சர்வதேச இடப்பெயர்வானது தான் வாழும் நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்கு அவ்வவ் நாட்டின் அனுமதி யைப் பெற்றுச்செல்வதாகும். எனவே அவ்வவ் நாடுகளின் குடிவரவு, குடிய கல்வுத் திணைக்களத்தினரால் வழங்கப்படும் அனுமதியை கணக்கிலெடுக்கும் போது எண்ணிக்கையினை அறிந்துகொள்ள முடிகின்றது. குறிப்பாக ஸ்கண்டி நேவிய நாடுகளில் தமது நாட்டிலும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளைக் கடக்கும் எல்லைகளிலும் இடப்பெயர்வுப் பதிவுகளை மேற்கொள்வதால் தரவு கள் பெறக்கூடியதாக இருக்கின்றது. பொதுவாக சர்வதேச இடப்பெயர்வினை மேற் குறித்த வழிமுறைகளை கையாள்வதன் வாயிலாகப் பெற்றுக்கொள்ள லாம். எனினும் இதற்கு மாறாகச் சென்றடையும் நாடுகளின் குடிவரவு, குடியகல்வுச் சட்டங்களில் காணப்படும் குறைபாடுகள், பலர் சட்டவிரோதமாகச் செல்லல் போன்றவற்றால் தகவல்களைப் பெறுவதில் சிரமமுண்டு. உதாரண மாக இலங்கையிலிருந்து சுவிற்சலாந்து, ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், நோர்வே,

ஐக்கிய இராச்சியம், இந்தியா போன்ற நாடுகளுக்கு மக்கள் சட்டவிரோதமாக, ஆனால் அந்நாடுகளின் மனிதாபிமானத்தின் அடிப்படையில் சென்று வாழ்கின் றனர். பொதுவாக விருத்தியடைந்த நாடுகளில் அண்மைக்காலங்களில் கணணிப் பாவனையின் விருத்தியின் காரணமாகச் சர்வதேச இடப்பெயர்வு களின் தரவுகள் சிறப்புற்றனவாக அமைந்துள்ளன எனலாம்.

உள்நாட்டு இடப்பெயர்வின் அளவினைத் தேசியக் குடிக்கணிப்பு, குடித்தொகைப் பதிவேடுகள், (Population Registers) மாதிரி அளவீடுகள் (Sample Survey) போன்றவற்றின் துணையுடன் பெற்றுக்கொள்ள முடிகின்றது. குடிக்கணிப்பின்போது குடும்பத் தலைவரினால் இடப்பெயர்வு சம்பந்தமாக நேரடியாகத் தெரிவிக்கப்படும் தரவினைக் கொண்டு அறிதல் முதலாவது வகை யாகும். அதாவது பிறந்த இடம் (Place of Birth), கடைசியாக வாழ்ந்த இடம் (Place of Last Residence), கணிப்பு நிகழ்ந்த இடத்தில் வாழ்ந்த காலப்பகுதி (Duration of Residence on the Place of Enumeration), குறித்த நிலையான திகதிக்கு முன்னரான வாழ்விடம் (Place of Residence of a fixed prior date) போன்றவை நேரடியாக வினாக்கொத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையின் வாயிலாக இவ்வினாக்கள் குடிக் கணிப்பு அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் குடிக்கணிப்பு அட்டவணையில் மேற்குறித்த வினாக்கள் இடம் பெற்றுள்ளன.

மாதிரி அளவீடுகளின் மூலமாகவும் இடம்பெயர்வுக்கான தரவுகள், தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான அளவீடுகள் மூலம் நாடளாவிய ரீதியாகத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது. வினாக் கொத்தினைத் தயாரித்து, குறித்த பிரதேசங்களில் மாதிரி எடுப்பின் (Random Sampling) மூலம் இடப்பெயர்வாளர் சம்பந்தமான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த அளவீட்டின் மூலம் இடப்பெயர்வாளரின் பண்புகள், இடப்பெயர்வு மேற்கொள்வதற்கான உந்துசக்தி, இடப்பெயர்வாளரின் மனோ பாவம் போன்ற பலவற்றைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இத்தகைய அளவீடுகள் மூலம் இடப்பெயர்வின் அளவினை வெளிக்கொணர முடியாது. இலங்கையின் இடப்பெயர்வு சம்பந்தமாகச் சில ஆய்வுகள் வெளிக்கொணரப் பட்டுள்ளன.

உள்நாட்டு இடப்பெயர்வில் தனது ஆரம்பப் பிரதேசத்திலிருந்து சென்ற டையும் பிரதேசத்திற்குச் செல்லும் போது குறித்த குடித்தொகைப் பதிவேட்டுக் காரியாலயத்தில் தனது குடியிருப்பு மாற்றத்தைத் தெரிவித்துப் பதிவுசெய்து கொள்வதையே குடித்தொகைப் பதிவேடு எனக் கொள்ளலாம். இவ்வாறான தரவுகள் சுவீடன், கொரியா, தேசியசீனா போன்ற நாடுகளில் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. உள்நாட்டு இடப்பெயர்வு ஆய்வுகளை மேற்கொள் வதற்கு மட்டுமல்லாது சமூக, பொருளாதாரப் பண்புகளை அறிவதற்கும் இது பயன்பட வாய்ப்புண்டு.

### 6.3.1. உள்நாட்டு இடப்பெயர்வினை அளவிடும் முறைகள்

உள்நாட்டு இடபபெயர்வினை அளவீடு செய்வதற்கு இரண்டு நுட்ப முறை கள் காணப்பபடுகின்றன.

1. நேரடியான நுட்ப முறைகள்

2. மறைமுகமான நுட்ப முறைகள்

குடிக்கணிப்பில் வினாக்கொத்து வாயிலாக இடப்பெயர்வு சம்பந்தமான தரவுகளை நேரடியாகப் பெற்றுக்கொள்வதை நேரடியான நுட்ப முறைகள் எனக்கொள்ளலாம். இதன் மூலம் இடப்பெயர்வின் போக்கு, பிறந்த இடம், கடைசியாக வாழ்ந்த இடம், வாழ்ந்த காலம், தற்போது வாழும் இடத்தில் வாழ்ந்துவரும் காலப்பகுதி போன்றன நேரடியாகப் பெற்றுக் கொள்ளப் படுகின்றன.

### 6.3.2. பிறந்த இட முறை

பிறந்த இட முறையில், குடிக்கணிப்பின் போது ஒருவன் குறித்த நாட்டில் அல்லது பிரதேசத்தில் பிறந்தவர் என்பதைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. அவற்றிலிருந்து அவன் எந்தப் பிரதேசத்தில் பிறந்தானோ அந்தப் பிரதேசமே அவனது ஆரம்ப இடமாகக் கொள்ளப்படுகிறது.

**அட்டவணை 6.2**

**உள்-வெளி இடப்பெயர்வு**
**யாழ்ப்பாண மாவட்டம் - 1981**

| மாவட்டம் | உள்வரவு | வெளியகல்வு | தேறிய இடப்பெயர்வு |
|---|---|---|---|
| கொழும்பு | 3422 | 21760 | -18338 |
| கம்பஹா | 285 | 2863 | -2578 |
| களுத்துறை | 731 | 535 | +196 |
| கண்டி | 6222 | 1602 | +4620 |
| மாத்தளை | 1711 | 679 | +1032 |
| நுவரெலியா | 1871 | 1683 | +188 |
| காலி | 436 | 202 | +234 |
| மாத்தறை | 801 | 255 | +546 |
| அம்பாந்தோட்டை | 263 | 261 | + 02 |
| மன்னார் | 1137 | 7127 | -5990 |
| வவுனியா | 803 | 11233 | -10430 |
| முல்லைத்தீவு | 574 | 15723 | -15149 |
| மட்டக்களப்பு | 1337 | 2822 | -1485 |
| அம்பாறை | 131 | 637 | -506 |
| திருகோணமலை | 1301 | 7412 | -6111 |
| குருணாகலை | 774 | 1189 | -415 |
| புத்தளம் | 1123 | 983 | +140 |
| அநுராதபுரம் | 1877 | 2527 | -650 |
| பொலனறுவை | 91 | 272 | -181 |

| | | | |
|---|---|---|---|
| பதுளை | 1378 | 891 | +487 |
| மொனறாகலை | 40 | 127 | -87 |
| இரத்தினபுரி | 427 | 611 | -184 |
| கேகாலை | 1603 | 361 | +1242 |
| மொத்தம் | 28338 | 81755 | -53417 |

ஆதாரம்: குடிக்கணிப்பு அறிக்கைகள் 1981

இவ்வாறு பெறப்படும் தரவுகளில் நிறைவுகளும் குறைபாடுகளும் காணப்படுகின்றன. குடிக்கணிப்பிற்கான வினாக்கொத்தில் ஒருவர் கணிப்புக்குட்படுத்தப்படும் பிரதேசத்தில் எவ்வளவுகாலம் வாழ்ந்தார் எனக் கேட்டுப்பதிந்து வைத்தல் அண்மைக்காலங்களில் கணிப்புக்குச் சேர்க்கப்பட்டுள்ள அம்சமாகும். குறிப்பிட்ட குடித்தொகைக் கணிப்புக்களுக்கிடையில் அப்பிரதேசத்தில் எவ்வளவு காலம் வாழ்ந்துள்ளார் என்பதற்கு அவரிடமே விடையைப்பெறுவதற்கான வாய்ப்பு இதிலுண்டு. குடிக்கணிப்பில் கடைசியாக வாழ்ந்த இடம் பற்றிய தகவல்களும் அண்மைக்காலங்களில் பெறப்பட்டு வருகின்றன. பிறந்த இடமுறையில் ஒருவனின் பிறந்த இடம் மட்டுமே சேர்க்கப்படுகின்றதேயொழிய அவனது வாழ்நாளில் அல்லது குடிக்கணிப்புக் கிடைப்பட்ட காலத்தில் வேறு இடப்பெயர்வில் ஈடுபட்டது தெரியவராது. எனவே கடைசியாக எங்கு வாழ்ந்தார் என்ற கேள்விகள் கேட்குமிடத்து அவர் இடப்பெயர்வு மேற்கொண்டிருந்த கால இடவெளியினை அறிய முடிகின்றது.

அட்டவணை 6.2இல் யாழ்ப்பாண மாவட்டத்தின் 1981ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின் பிரகாரம் உள்வரவு, வெளியகல்வு, தேறிய இடப்பெயர்வு என்பன தரப்படுகின்றன.

இவ்வட்டவணையைக் கருத்தில் கொள்ளும்போது 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி கொழும்பில் பிறந்து யாழ்ப்பாணத்தில் வாழபவர்கள் 3422 பேரும், யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பில் வாழ்பவர்கள் 21760 பேருமாக உள்ளதைக் கண்டறிய முடிகின்றது. அதாவது யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 18338 மக்களைக் கொழும்பில் தேறிய இடப்பெயர்வாளராகப் பெற்றிருக்கின்றது. தொகுத்து நோக்குமிடத்து யாழ்ப்பாண மாவட்டம் இடப்பெயர்வின் மூலம் 53417 மக்களை இக்காலப் பகுதியில் இழந்துள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

பிறந்த இட முறையில் அனுகூலங்கள் இருப்பது போலப் பிரதிகூலங்கள் காணப்படுகின்றன. குடிக்கணிப்பின்போது மேற்குறித்த தரவுகள் பெற்றுக் கொள்வதன் விளைவாக இத்தரவுகள் உண்மைத்தன்மை கொண்டதாகவும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளன. அத்துடன் மேற்குறித்த வினாக்களுக்கு அவ்வவ்குடும்பத் தலைவர்கள் அல்லது குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் விடையளிப்பதால் அவை பெருமளவிற்குச் சரியாகவே காணப்பட வாய்ப்புண்டு. அத்துடன் பிறந்த இட முறையினைப் பதிந்து கொள்வதால் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு வேறு மாவட்டங்களிலிருந்தோ அல்லது வெளிநாடுகளிலிருந்தோ வந்துள்ளவர்களின் விபரங்களைப் பெற்றுக் கொள்

ளக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக இந்தியாவில் அசாம் மாநில த்திற்கு வங்காளதேசத்தில் இருந்து உள்வரவை மேற்கொண்டோர் விடயத்தில் தீர்வு காண்பதற்கு, மேற்குறித்த தரவுகள் பேணப்பட்டமையே முக்கிய காரண மாக இருந்தது என்றால் மிகையாகாது.

மேற்படி பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதில் சில சந்தர்ப்பங்களில் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன. கிராம - நகர மாவட்ட எல்லைகளை மாற்றம் செய்யும்போது பெறப்பட்ட இத்தரவுகள் செயலிழந்தன வாக இருக்கின்றன. உதாரணமாக 1977 இல் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து துணுக்காய்ப் பகுதியைப் பிரித்து முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைத்த வேளை யாழப்பாண மாவட்டத்தினது பிறந்த இடமுறையின் பிரகாரம் காணப் பட்ட இடப்பெயர்வாளர்களைத் தொடர்ச்சியாகக் கண்டுகொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதேபோலவே இந்தியாவில் பெண்கள் விவாகமாகியவுடன் கணவன் வீட்டுக்குச் சென்று வாழ்வது வழக்கமாகும். இருப்பினும் குழந்தைப் பேற்றுக் காலத்தில் தத்தம் தாய் வீட்டிற்கு வந்து தங்கிப் பின்னர் மீள்வர். இக்காலங்களில் தரவுகளைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அவை உண்மைத் தன்மை கொண்டதாக இருக்க முடியாது.

### 6.6.3. வாழும் காலப்பகுதி

குடிக்கணிப்பில் குறித்த இடத்தில் எவ்வெவ்காலப்பகுதியில் வாழ்ந் துள்ளீர்கள் என வினாக்கொத்தின் மூலம் கேட்கப்படுவதுண்டு. இடப்பெயர்வு ஆய்வில் இவ்வாறு கேட்கப்படுவதன் மூலம் இடப்பெயர்வின் உண்மைத் தன்மையை வெளிக்கொணர வாய்ப்புண்டு எனக் கருதுகின்றனர். அதாவது குறித்த நபர் தொடர்ச்சியாகக் கணிப்புப் பிரதேசத்தில் வாழ்பவராயின் அவர் அப்பிரதேசத்துக்குரிய நிரந்தரவாசியாகக் கொள்ளப்படுவார். இடப்பெயர் வாளன் என்றால் கணிப்பின் போது அப்பிரதேசத்தில் பிறந்திருக்காதவராக இருப்பது, குறித்த பிரதேசத்தில் பிறந்திருந்த போதிலும் கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதிகளில் வேறு பிரதேசத்தில் வாழ்ந்து கணிப்பின்போது திரும்பத் தமது பிறந்த இடத்திற்கு வந்துள்ளவர்கள் ஆகியோர் இடப்பெயர்வாளர் என கருதப்படுவாகள். இதில் பின்னையவர் மீண்ட இடப்பெயர்வாளர் (Return Migrants) என அழைக்கப்படுவர்.

குறித்த இடத்தில் வாழும் காலப்பகுதி பற்றிப் பெறப்படுதல் பிறந்த இடமுறையில் உள்ள குறைபாட்டினை நீக்குகின்றது என்றே கூறல் வேண்டும். அதாவது இத்தரவினைப் பெற்றுக்கொள்வதால் மக்களது வாழ்நாள் இடப் பெயர்வுப் பண்புகளை வெளிக்கொணர முடிகின்றது. இந்தியாவில் குறித்த இடத்தில் வாழும் காலப்பகுதி பற்றித் தரவுகளைச் சேகரிக்கும்போது பின் வரும் ஆண்டுகளிடையிற் பெறப்படுகின்றன.

அ) ஒருவருடத்துக்குள்

ஆ) 1 - 5 வருடங்கள்

இ) 6 - 10 வருடங்கள்

ஈ) 11 - 15 வருடங்கள்

உ) 16 வருடங்களுக்கு மேல்

ஊ) கால அளவு தெரியாதது

என்பனவே அவையாகும் இலங்கையிலும் இவ்வாறாகவே தரவுகள் சேகரிக்கப்படுகின்றன எனலாம்.

இவ்வாறு பெறப்படும் தரவுகளில் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன. குறிப்பாகக்குறித்த பகுதியில்பிறந்து கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதியில் இடப்பெயர்வினை மேற்கொண்டு, மீள் இடப்பெயர்வினைத் திரும்பவும் மேற்கொண்டு, பிறந்த இடத்தில் வாழ்பவர்கள் பற்றி அறிவதற்கு இத்தகைய கணிப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. இருந்த போதிலும் இத்தகைய தரவுகளைப் பெறும் வேளையில் உள்ள குறைபாடுகள் இதன் உண்மைத் தன்மைக்குச் சவாலாக அமைந்துவிடுகின்றது. பொதுவாக பெறப் படும் தரவுகள் அவ்வவ் குடும்பத்தலைவர்களிடமிருந்தே பெறப்படுகின்றன. அவரது குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் எவ்வவ் காலப்பகுதிகளில் எங் கெங்கு வாழ்ந்தார்கள் என்பது பற்றிப் பெருமளவிற்கு அவர் தெரியாதவராக விருக்கலாம். இதன் விளைவாகப் பெரும்பாலானவர்களின் கணிப்புக்கிடைப் பட்ட கால இடப்பெயர்வு பற்றிய விபரங்கள் தெளிவு குறைவாக இருக்கின்றன என இந்திய குடிக்கணிப்புத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது பிறந்த இடத்திலிருந்து இடப்பெயர்வினை மேற்கொண்ட காலப் பகுதிகளைப் பொதுமைப்படுத்தி 5, 10, 15 வருடங்கள் என தெரிவித்துள்ளமை யையும் காணமுடிகின்றது. உதாரணமாக ஒருவர் 7 வருடங்கள் மட்டுமே வெளி யிடப்பெயர்வினை மேற்கொண்டிருந்த போதிலும் அவர் 5 அல்லது 10 வருடங் கள் எனத் தெரிவிக்கும் பண்பினைப் பெரும்பாலானோரிடத்திற் காணமுடி கின்றது.

#### 6.3.4. கடைசியாக வாழ்ந்த இடம்

பிறந்த இடமுறையிற் காணப்படும் பெரிய குறைபாடு இடப்பெயர்வாளன் பிறந்த இடத்திலிருந்து கணிப்புக்குட்படுத்தப்படும் இடத்திற்கு மட்டுமே இடப்பெயர்வினை மேற்கொண்டார் என்பதையே சுட்டிக்காட்டுகின்றது. இடைப் பட்ட காலத்தில் அவர் எங்கெங்கு இடப்பெயர்வினை மேற்கொண்டார் என்பது பற்றி அறிய முடியாதிருக்கின்றது. அதாவது கடைசியாக எங்கு வாழ்ந்தார் எனத் தெரியாது. எனவே கணிப்பின்போது அவர் கடைசியாக வாழ்ந்த இடம் பற்றிய வினாவுஞ் சேர்க்கப்படுமிடத்து அவரது இடப்பெயர்வின் தன்மைகளை அறிந்து கொள்ளமுடியும். பிறந்த இடமுறை, கடைசியாக வாழ்ந்த காலப்பகுதி என்பவற்றோடு கடைசியாக வாழ்ந்த இடம் பற்றி அறியும் பட்சத்தில் இடப் பெயர்வாளரின் அசைவின் தன்மைகளைத் தெளிவாக அறிந்து கொள்ள வாய்ப்புண்டு

### 6.3.5. குறித்த நிலையான திகதிக்கு முன்னரான வாழ்விடம்

சில நாடுகளிற் குறித்த நிலையான திகதியைக் கருத்திற் கொண்டு இடப்பெயர்வின் தன்மைகளை அறிந்து வருகின்றனர். இத்தகைய திகதியைக் குடித்தொகைக் கணிப்பு அட்டவணையிலோ அன்றில் மாதிரியெடுப்பு அட்டவணையிலோ சேர்த்துக் கொள்வதுண்டு. இவ்வாறான தரவினைச் சேகரிக்கும் பட்சத்தில் இடப்பெயர்விற்கான இடவெளிகள் மிகச் சரியானதாகவே அமைந்திருக்கும் எனலாம். இதன் மூலம் இடப்பெயர்வினை மேற்கொண்ட இரு அலகுகளிடையே தெளிவான வரையறையைக் காணலாம். எனினும் இத்தகைய தகவல்களை வளர்முக நாடுகளிற் பெற்றுக்கொள்வதிற் சிரமம் உண்டு. ஏனெனில் கல்வியறிவுக் குறைவே பிரதான காரணமாகும்.

### 6.3.6. மறைமுகமான நுட்பமுறை

இடப்பெயர்வின் அளவீட்டிற் தரவுகளை நேரடியாகப் பெற்றுக்கொள்வதில் இடர்ப்பாடுகள் காணுமிடத்து மறைமுகமான நுட்ப முறைகளின் மூலம் இடப்பெயர்வாளரின் அளவினையும், பண்பினையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. பொதுவாக மூன்று வழிகளின் மூலம் இது அளவீடு செய்யப்படுகின்றது.

1. வாழ்நிலைப் புள்ளிவிபர முறை (The Vital Statistical Method)
2. உயிர் வாழ்வீத முறை (The Survival Ratio Method)
3. இடப்பெயர்வு வீதம் (The Migration Rate)

என்பனவே அவையாகும்.

### 6.3.7. வாழ்நிலைப் புள்ளிவிபர முறை

வாழ்நிலைப் புள்ளிவிபர முறையின் மூலம் இடப்பெயர்வுக்கான அளவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் குறித்த நாட்டில் அல்லது பிரதேசத்தில் காலத்துக்குக் காலம் பெறப்படும் குடிக்கணிப்பின் பெறுபேறுகளும் பிறப்புக்களினதும் இறப்புக்களினதும் தரவுகளும் வேண்டப்படுகின்றன. பின்வரும் சமன்பாடு இடப்பெயர்வின் அளவினை வெளிக்கொணர்கின்றன

$$Net\ M = (P_1 - P_0) - (B - D)$$

Net M = தேறிய இடப்பெயர்வு

$P_0$ - 1971ஆம் ஆண்டுக் குடித்தொகை

$P_1$ - 1981ஆம் ஆண்டுக் குடித்தொகை

B - குடிக்கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதியில் நிகழ்ந்த பிறப்புக்களின் எண்ணிக்கை

D - குடிக்கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதியில் நிகழ்ந்த இறப்புக்களின் எண்ணிக்கை

1971, 1981 ஆம் ஆண்டுகளிடையே யாழ்ப்பாண மாவட்டத்தில் இடப்பெயர்வின் போக்கினைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டுக் குடித்தொகை $p_1$
2. யாழ்ப்பா்ண மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுக் குடித்தொகை $p_0$
3. அதிகரித்த குடித்தொகை 1981 - 1971 $\{(2)-(1)\}$
4. யாழ்ப்பாண மாவட்டத்தின் பிறப்புக்கள் ( பத்து ஆண்டுகள் ) B
5. யாழப்பாண மாவட்டத்தின் இறப்புக்கள் ( பத்து ஆண்டுகள் D)
6. இயற்கை அதிகரிப்பு (4) - (5)
7. தேறிய இடப்பெயர்வு 1971 - 1981 (3) - (6)

விருத்தியடைந்த நாடுகளிற் குடித்தொகைக் கணிப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவது மட்டுமல்லாது பிறப்புக்களும், இறப்புக்களும் தவறாது பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் வளர்முக நாடுகள் பெரும்பாலானவற்றில் குடிக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டும் வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள் பெறப்பட்டும் வந்தாலும் உண்மைத்தன்மை கொண்டதாகவோ, போதுமானதாகவோ அவை இல்லை. இதன் விளைவாக வளர்முக நாடுகளிற் தேறிய இடப்பெயர்வுப் பண்புகள் பெருமளவிற்கு உண்மைத்தன்மை கொண்டனவாக அமையவில்லை என்றே கூறவேண்டும்.

### 6.3.8. உயிர்வாழ் விகித முறை

இரண்டு குடிக்கணிப்புச் செயற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்துக்கான தேறிய உள்ளிடப்பெயர்வினை ஆயுள் அட்டவணையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். உயிர்வாழ் நிகழ்தகவுகளின் அடிப்படையில் இது அமையும் எனலாம். தேவையான அடிப்படைத் தகவலானது பால் அடிப்படையிலான வயதுப் பரம்பலாகும். இப்பரம்பல் தொடர்ந்து வரும் இரண்டு குடிக்கணிப்பு நடவடிக்கைகளின்போது, ஒவ்வொரு பிரதேசத்திற்கும் கணிக்கப்பட்டவாறு, உயிர் வாழ் விகிதாசாரங்களின் தொகுதி ஒன்றின் அடிப்படையில் இரண்டாவது குடிக் கணிப்பின்போது உயிருடன் வாழ்பவர்கள் என எதிர்பார்க்கப்படும் மக்களின் எண்ணிக்கையின் மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு முதலாவது குடிக் கணிப்பின் குடித்தொகை பிரயோகிக்கப்படலாம்.

பொருத்தமான ஆயுள் அட்டவணைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் அல்லது ஏதோ ஒரு காரணத்தினால் கிடைக்கத்தக்கதாக உள்ள ஆயுள் அட்டவணைகள் பயன்படுத்தப்படாதவாறு தடுக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து வரும் இரு குடிக்கணிப்பின் போது பெறப்பட்ட உயிர் வாழ் விகிதங்களைக் க்ணிப்பதன்மூலம் தேறிய இடப்பெயர்வின் மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

#### 6.3.9. இடப்பெயர்வு வீதம்

இடப்பெயர்வு வீதமானது இடப்பெயர்வாளரின் எண்ணிக்கையை நட்டாண்டுக் குடித்தொகையால் வகுத்துப் பெறப்படுவதாகும்.

$$MR = \frac{m}{p} \times k$$

MR = இடப்பெயர்வு வீதம்

m - குறித்த காலப்பகுதியில் இடப்பெயர்விலை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை

p = குறித்த காலப்பகுதியில் காணப்பட்ட குடித்தொகை

k = 100 அல்லது 1000

இதே போலவே உள்ளிடப்பெயர்வு வீத்ததையும் (In Migration Rate), வெளியிடப்பெயர்வு வீதத்தையும் (Out Migration Rate), பொது இடப்பெயர்வு வீதத்தையும் (General Migration Rate) பின்வரும் சமன்பாடுகள் மூலம் கண்டறியலாம்.

$$IMR = \frac{1}{P} \times k$$

$$OMR = \frac{O}{P} \times k$$

$$GMR = \frac{IO}{P} \times k$$

p - இடைப்பட்ட இடப்பெயர்வுக் காலத்திற் குறித்த பிரதேசத்திற் சராசரிக் குடித்தொகை எண்ணிக்கை

I - இடைப்பட்ட இடப்பெயர்வுக் காலத்தில் உள்ளிடப் பெயர்வாளர்கள்

O - இடைப்பட்ட இடப்பெயர்வுக்காலத்தில் வெளியிடப் பெயர்வாளர்கள்

k - 1000

வயது, பால் வகை இறப்பு வீதத்தைக் கணித்தறிதல் போல, குறித்த் தேவையைப் பெற்றுக்கொள்ளும் முகமாக (பால், வயது, விவாகநிலை) இடப்பெயர்வு வீதத்தைக் கண்டறிவதுண்டு. உதாரணமாக இடப்பெயர்வினை வயது வகைக் குடித்தொகை அடிப்படையிற் கணிப்பீடு செய்யலாம். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கண்டறியலாம்.

$$M_1 = \frac{m_1}{p_1} \times k$$

$M_1$ = குறித்தபிரதேசத்திற் குறித்த வயதுவகை இடப்பெயர்வு வீதம்

$m_1$ = குறித்த வயது வகை இடப்பெயர்வாளர்

$p_1$ = குறித்த வயது வகை மொத்தக் குடித்தொகை

$k = 1000$

## 6.4. இலங்கையில் உள்நாட்டு இடப்பெயர்வு

இடப்பெயர்வு என்பது குடித்தொகை மீள் பரம்பலை ஏற்படுத்தும் செயற் பாடு எனலாம். இம்மீள்பரம்பலானது குடித்தொகைப் பண்புகளுக்கும் அங்கு காணப்படும் வளங்களின் பரம்பலுக்குமிடையிலான வேறுபட்ட பண்புகளுடன் தொடர்புகொண்டது என்றால் மிகையாகாது. அதாவது இடப்பெயர்வானது சமூக, பொருளாதார, பண்பாட்டின் விளைவாக உந்தப்படும் செயன்முறை எனவும் கூறிக் கொள்ளலாம். அண்மைக்காலங்களில் இலங்கையில் உள்நாட்டு இடப்பெயர்வு அல்லது மீள்பரம்பற் செயன்முறை இரு வழிகளில் நடை பெற்று வருகின்றன.

1. கிராம விஸ்தரிப்புடனும் குடியேற்ற திட்டங்கள் மற்றும் நில அபிவிருத்தித் திட்டங்களுடனும் தொடர்புடையது. இவ்வாறான அபிவிருத்திகள் நாட்டின் பெரும்பாலான வரண்ட பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

2. நாட்டின் அபிவிருத்தியுடனும் தொடர்புடையதாகவுள்ளது நகரங்களின் வளர்ச்சி, வர்த்தக விரிவாக்கம், நிர்வாகமையங்களின் வளர்ச்சி போன்ற வற்றின் விளைவாக மக்கள் இடப்பெயர்வினை மேற்கொள்கின்றனர்.

இடப்பெயர்வு என்பது ஒரு பிரதேசத்திலிருந்து வேறு ஒரு பிரதேசத்தை நோக்கி மக்கள் நகர்வதைக் குறித்து நிற்கின்றது என ஏற்கனவே அறிந்துள் ளோம். ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணப்படி உள்நாட்டு இடப் பெயர்வு என்பது ஓர் நிர்வாக அலகிலிருந்து இன்னோர் நிர்வாக அலகிற்கு வசிப்பிடத்தை மாற்றியமைப்பதேயாகும். எனவே இலங்கையில் நிகழ்ந்து வரும் உள்நாட்டு இடப்பெயர்வுக்கு முக்கிய காரணம் பிரதேச சமனற்ற மூல வளப் பரம்பல், சமனற்ற குடித்தொகை வளர்ச்சி என்பனவாகவுள்ளன. எனவே இலங்கையின் உள்நாட்டு இடப்பெயர்வு வரலாற்றை ஐந்து பிரிவுகளாக பிரித்து ஆராய்வது சிறப்புடையது.

1. ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலம்
2. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் (1505 - 1796)
3. ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் (1796 - 1948)
4. சுதந்திர இலங்கையின் முதலரைக் காலப்பகுதி (1948 - 1971)
5. தமிழர் விடுதலைப் போராட்டக்காலம் (1971களின் பின்னர்)

### 6.4.1. ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலம்

இலங்கையின் உள்நாட்டு, சர்வதேச இடப்பெயர்வில் வரலாற்றுக் காரணிகள் மிகப் பெரும்பங்கு செலுத்தியுள்ளன. ஆரியர்-திராவிடர் பாரம்பரி யத்தைச் சேர்ந்த- நாகரீகம் படைத்த மக்கள் இந்நாட்டிற்கு வருகை தந்ததிலி ருந்து உள்நாட்டு இடப்பெயர்வின் பண்புகளும் தெரியவருகின்றன. இதற்கு முன்பு வாழ்ந்த இயக்கர், நாகர் என்பவர்களின் இடப்பெயர்வு பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை.

இலங்கையில் நாகரிகத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது பெரும் கற் காலப் பண்பாடாகும். இங்கு காணப்பட்ட இப்பண்பாடு தென்னிந்திய பெரும் கற்பண்பாட்டின் ஒரு அம்சமே எனக் கொள்ளக்கிடக்கின்றது. தமிழர்களும், சிங்களவர்களும் இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்காளாவர். இவர்களி டையே வேற்றுமையிலும் ஒற்றுமைத் தன்மையுண்டு. சாதி அமைப்பு, உறவு முறைப் பெயர்கள், சமய நம்பிக்கைகள், நாட்டு வழக்குகள் என்பன பெரு மளவிற்கு ஒத்த பண்புகளைக் கொண்டிருந்தன. இலங்கைக்கு வந்த சிங்களவர் கள் வடமேற்கு, தென், தென்கிழக்குப் பகுதிகளின் ஆற்றங் கரையோரங்களில் நிலைகொள்ளத் தமிழர்கள் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் வாழத்தொடங்கினர். மிகப் பிற்பட்ட காலத்தில் அராபியாவிலிருந்தும் தென் னிந்தியக் கரையோரப் பகுதிகளிலிருந்தும் வந்த இஸ்லாமியர்கள் இலங்கை யின் கரையோரப் பிரதேசங்களில் குடியிருப்பினை ஏற்படுத்தி வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கினர் எனலாம்.

வரலாற்றுக் காலத்தில் குடித்தொகைப் பெருக்கம், பயிர்ச்செய்கை விருத்தி, நீர்ப்பாசன முறைகளின் வளர்ச்சி என்பன ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தன. நகரஙகளைச் சூழக் குளக் குடியிருப்புக்கள், நெல்வயல்கள், தாது கோபங்கள், விகாரைகள் போன்றன அமைந்திருந்தமையால் அப்பிரதேசங்கள் கவர்ச்சிப் பிரதேசங்களாகக் காணப் பட்டிருந்தன. குறிப்பாக அநுராதபுரம், பொலனறுவை சார்ந்த பகுதிகள் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியில் மேலோங்கிக் காணப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

தென்னிந்தியாவுடன் அரசியல், பொருளாதார ரீதியில் அநுராதபுரம், பொலனறுவை இராச்சியங்கள் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த மையால், தென்னிந்திய மக்களின் உள்ளிடப்பெயர்வும் அரசர்களின் படையெடுப்புக்களும் காலத்துக்காலம் நிகழ்ந்துள்ளன. அதேவேளை தென்னிந் திய அரச குடும்பங்களோடு விவாக உறவுத் தொடர்புகளும் காணப்பட்டிருந் தன. தென்னிந்தியப் படையெடுப்புக்களுக்கு அஞ்சியும் அவர்களால் விரட்டப் பட்டும் இலங்கை அரசர்கள் தமது இராசதானிகளைக் கைவிட்டுப் புதிய பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. இந்நிகழ்வுகள் வரலாற்றில் அடிக்கடி நிகழ்ந்த போதிலும் 10ஆம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்புடன் மக்கள் அநுராதபுரம், பொலனறுவைப் பகுதியிலி ருந்து தென்மேற்கு நோக்கிய இடப்பெயர்வினை மேற்கொள்ள வேண்டியது

தவிர்க்க முடியாததாகிவிட்டது. சோழரை இப்பிரதேசத்திலிருந்து அகற்றிய போதிலும் மேற்குறித்த பிரதேசங்கள் காடுகளாகியமை மட்டுமல்லாது சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்பட்டு மலேரியா, கொலரா போன்ற உக்கிர உயிர்க் கொல்லிகளும் தோன்றியமையாற் தமிழர்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசங் களுக்குச் சென்றதுடன் சிங்களவர்கள் தென்மேற்கு நோக்கிய இடப்பெயர் வினை மேற்கொண்டிருந்தனர். இதன் விளைவாக நீண்டகாலமாக விருத்தி யுற்றுக் காணப்பட்ட அநுராதபுரம், பொலனறுவைப் பிரதேசங்கள் மக்களற்ற சூனியப் பிரதேசங்களாக மாற்றம் பெற்றன எனலாம். சிங்களவர்கள் தம்ப தெனியா, யாப்பகுவா. குருநாகலை, கம்பளை, கண்டி, கோட்டை எனப் படிப்படி யாகத் தமது இராச்சியத் தலைநகரங்களை மாற்றவே அதனோடிணைந்து மக்களும் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர்.

### 6.4.2. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலம்

1505ஆம் ஆண்டு மேலைநாட்டவர்கள் இலங்கையை வந்தடையவே நாட்டின் பொருளாதார நிலைமைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதுடன் மக்களின் இடப்பெயர்வுப் பாங்கிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய இருசாரரும் கரையோரப் பிரதேசங்களையே ஆளமுடிந்தது. இவ்விரு சமூகத்தவர்களும் தாம் சார்ந்த மதங்களை மக்கள் மத்தியில் பரப்ப விளைந்ததால், அதனை ஏற்காத மக்கள் உள்நாடு நோக்கிய இடப்பெயர்வினையும், ஏற்றவர்கள் அவர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலை கள், வழிபாட்டுத்தலங்கள், நகரங்கள் நோக்கிய இடப்பெயர்வினையும் மேற்கொண்டனர். குறிப்பாக யாழ்ப்பாணம். கொழும்பு. மன்னார், காலி போன்ற நகரங்கள் கவர்ச்சிப் பிரதேசங்களாகக் காட்சியளித்துள்ளன. அத்துடன் 1664 - 1670ஆம் ஆண்டுகளிற் கண்டியரசனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் நடை பெற்ற யுத்தத்தின் விளைவாகக் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் கண்டி நோக்கிய இடப்பெயர்வினை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது. இதன் விளைவாக நீர்கொழும்பு தொட்டு காலி வரை வாழ்ந்த மக்களிற் கணிசமானோர் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர்.

இவை தவிர ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதாரவிருத்தியில் கவனம்செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதிகளின் பொருளாதார விருத்தியைக் கருத்திற் கொண்டு நெல், பருத்தி உற்பத்தியின் பொருட்டு பூநகரி, மன்னார் போன்ற இடங்களுக்கு யாழ் குடாநாட்டு மக்களை இடம்பெயர வைத்தனர். அவர்களில் கணிசமானோர் காலப்போக்கில் அவ்வவ்விடங்களிற் தங்கிவிட்டனர் எனலாம். அது மட்டு மல்லாது யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து திருகோணமலைக்கு உணவு, உபஉணவு உற்பத்தியினை மேற்கொள்ளும் பொருட்டு மக்களைக் கொண்டு சென்றனர். சாம்பல் தீவு, கிளிவெட்டி போன்ற இடங்களிலுள்ளவர்களின் முதாதையினரின் பெரும்பகுதியினர் யாழ்ப்பாணக்குடாநாட்டிலிருந்து சென்ற வர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது ஒல்லாந்தர் ஆட்சியிற் பொருளாதார அபிவிருத்தி முயற்சி காரணமாக தென்னிந்தியக் கரையோரங்

களில் வாழ்ந்த நலிவுற்ற மக்களை அடிமைகள் என்ற போர்வையிற் கொண்டு வந்து கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளில் குடியமர்த்தினர். அத்துடன் நெசவுத்தொழில், சாயம்பூசல் போன்றவற்றினை மேற்கொள்ளும்பொருட்டுத் தென்னிந்தியாவிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியமர்த்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### 6.4.3. ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் (1796 - 1948)

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய இரு வெளிநாட்டவர்களிலும் பார்க்க ஆங்கிலேயரது பொருளாதார, அரசியற் கொள்கைகள் பெரிதும் வேறுபட்டு இருந்துள்ளது. இவற்றின் விளைவாக உள்நாட்டு இடப்பெயர்வினைப் பொறுத்த வரையிலும் சர்வதேச இடப்பெயர்வினைப்பொறுத்தவரையிலும் இக்காலப்பகுதி மிகவும் விரிவுபெற்ற காலப்பகுதியாக இருந்துள்ளது. குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முக்கியத்துவம் பெறவே, இத்துறையில் ஈடுபட உள்நாட்டு மக்கள் மறுத்ததால், தென்னிந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளர்களை வரவழைத்தனர். இவர்கள் பெருந்தோட்டத் துறையில் மட்டுமன்றி அரச திணைக்களங்களிற் தொழிலாளர்களாகவும் அமர்த்தப்பட்டனர். தென்னிந்தியத் தொழிலாளர்கள் ஆரம்பத்திற் பருவகாலத் தொழிலுக்காக வருகை தந்திருந்த போதிலும் காலப்போக்கில் இங்கு நிரந்தர மாகவே தங்கிவிட்டனர். பெருந்தோட்டத்துறை விருத்தி பெறவே அதனோடு இணைந்து வங்கித்துறை, வர்த்தகத்துறை, நகரங்கள், அரச மற்றும் அரச சாராத் திணைக்களங்கள் விருத்தி பெறத் தொடங்கின.

இந்த வகையில் மாத்தறை தொட்டுச் சிலாபம் வரையிலான கரையோரப் பகுதியினரும் யாழ் குடாநாட்டைச் சேர்ந்தோரும் ஆங்கிலக் கல்வியூடான இடைத்தரக் கல்வி மற்றும் உயர்தரக் கல்வியைக் கற்றிருந்தனர். குறிப்பாக ஆங்கிலேயப்பெருந்தோட்ட உற்பத்தியாளருக்கும் இந்தியத் தொழிலாளர் களுக்கும் இடையில் இணைப்புப் பாலமாக இருப்பதற்காக யாழ்ப்பாணத் தமிழர்கள் பெருந்தோட்டங்களில் தொழில் புரியவென வரவேற்கப்பட்டனர். அத்துடன் கல்வியறிவுடைய தமிழர்கள், சிங்களவர்கள் நகரஞ்சார்ந்த வளர்ச்சி நிலைகளுக்கு விரும்பிச் சென்றிருந்தனர். இதன் விளைவாக மாத்தறை, காலி, களுத்துறை, மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தவர்களின் கொழும்புக்கும் மலையத்துக்குமான இடப்பெயர்வு அதிகரித்துக் காணப்பட்டது. அத்துடன் 1867ஆம் ஆண்டு கொழும்பு - கண்டி புகையிரதப் பாதை பூர்த்தியடைந்தமை யானது கரையோரச் சிங்களவர் கண்டிப்பகுதிகளுக்குத் தொழிலின் நிமித்தம் இடப் பெயர்வினை மேற்கொள்வதற்கு வகைசெய்தது. யாழ்ப்பாணம் - கொழும்பு, தலைமன்னார்-கொழும்பு, மட்டக்களப்பு-கொழும்பு, திருகோண மலை- கொழும்புபோன்ற மார்க்கங்களுக்கான புகையிரதப்பாதைகளும் ஏனைய தரைவழிப் போக்குவரத்துக்களும் விரிவுபடுத்தப்படவே ஆரம்பத்தில் தற்காலிக இடப்பெயர்வாக ஆரம்பித்த இடப்பெயர்வுகள் காலப்போக்கில் நிரந்தர இடப்பெயர்வாக மாறியது. உதாரணமாக 1920களைத் தொடர்ந்து வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் யாழ்ப்பாண மாவட்டத

திலிருந்து கொழும்புக்கு இடப்பெயர்வை மேற்கொண்டவர்கள் காலப்போக்கில் கொழும்பிலே தங்கிவிட்டனர். இவர்களிற் பெரும்பாலானோரும் அவர்கள் தம் சந்ததியினரும் கறுவாக்காட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

1929ஆம் ஆண்டு டொனமூர்க் குழுவின் சிபார்சினைத் தொடர்ந்து இலங்கையர்கள் அரசில் முக்கிய பதவிகளில் அமர்த்தப்படவே வரண்ட வலய அபிவிருத்தி பற்றிய சிந்தனை ஏற்பட்டது. இது வரண்ட பிரதேசம் நோக்கிய உள்ளிடப்பெயர்வுக்கு ஊக்கம் அளித்தது. எனினும் எதிர்பார்த்தளவு 1930 களில் இத்தகைய இடப்பெயர்வு பெருமளவில் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறவேண்டும். குறிப்பாக 1901-1911ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மொத்தத்தேறிய உள்ளிடப்பெயர்வில் 87.0 சதவீத்தினர் ஈரவலய மாவட்டங்கள் நோக்கியும், 13.0 சதவீதத்தினர் வரண்ட வலய மாவட்டங்கள் நோக்கியும் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். 1911-1921ஆம்ஆண்டு இடை வெளியில் தேறிய இடப்பெயர்வில் 75.0 சதவீதமானோர் ஈரவலய மாவட்டங் களை நோக்கியும் 25.0 சதவீதமானோர் வரண்டவலய மாவட்டங்களை நோக்கி யும் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். 1921-1931ஆம் ஆண்டிடை வெளியில் முறையே 87.9 சதவீதமாயும், 12.1 சதவீதமாயும் இது காணப்பட, 1931-1946ஆம் ஆண்டு இடைவெளியில் ஈரவலய மாவட்டங்களை நோக்கி 38.0 சதவீதத்தினரும் வரண்ட வலயம் நோக்கி 62.0 சதவீதத்தினரும் இடப் பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். அதாவது 1931ஆம் ஆண்டின் பின்னரான தேறிய உள்ளிடப்பெயர்வினை நோக்கின், வரண்ட வலயம் நோக்கியதாக அது அமைவது குறிப்பிடத்தக்கது.

மொத்தத் தேறிய வெளியிடப்பெயர்வாளர்களைக் கருத்திற் கொள்ளின் ஈரவலயம், வரண்டவலயம் ஆகியவற்றிலிருந்தான தேறிய இடப்பெயர் வாளர்கள் முறையே

1901 - 1911 - 66.0%, 34.0% மாகவும்

1911 - 1921 - 70.0%, 30.0% மாகவும்

1921 - 1931 - 76.8%, 23.2% மாகவும்

1931 1946 - 97.0% 3.0% மாகவும்

காணப்படுகின்றன. அதாவது 1931-1946 ஆண்டிடைவெளியில் 97.0 சதவீதமானோர் ஈரவலயத்திலிருந்து வரண்ட வலயம்நோக்கிய வெளியிடப் பெயர்வினை மேற்கொண்டவர்கள் என்பதே இதன் கருத்தாகும்.

### 6.4.4. குடிக்கணிப்புகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதி 1946 - 1953

1940களைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல், பொருளாதார முறைமைகளிற் கணிசமான அளவில் மாறுதல்கள் ஏற்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இக்காலப்பகுதியில் இலவசக் கல்வியின் அறிமுகம், வரண்ட பிரதேசத்தில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள், மானிய முறையிலும் இலவசமாகவும் உலர் உணவுப் பங்கீடு, நாடு சுதந்திரம் பெற்றமை, அரச இயந்திரம் உள்நாட்டவர்களிடம் சென்றடைந்தமை, சுகாதார

மருத்துவ வசதிகளின் விரிவாக்கம், வரலாற்றுக் காலத்தில் செழித்து ஓங்கியிருந்த வரண்ட பிரதேசத்தின் விருத்தியிற் கூடிய அக்கறை கொண்டமை போன்ற பல காரணிகள் உள்நாட்டு இடப்பெயர்வில் மக்களை அக்கறை கொள்ள வைத்தது எனலாம். இக்காலப் பகுதிக்கான உள்நாட்டு இடப்பெயர் வினைப் பற்றி ஆய்வு செய்த எஸ். வாமதேவனும், ஒ.ஈ.ஆர்.அபேவர்த்தனாவும், சி.எஸ்.எஸ். ஜெயவர்த்தனாவும் பிறந்த இடமுறை, வாழ்நிலைப் புள்ளிவிபர முறை, உயிர் வாழ் வீத முறை ஆகிய வழிமுறைகளின் கீழ் ஆய்வினை மேற்கொண்டிருந்தனர். இதனடிப்படையில் இம்மூன்று வழிகள் மூலமும் பெறப்பட்ட முடிவுகளை ஒப்பிட்டு நோக்கின், கொழும்பு உட்பட வரண்ட வலய மாவட்டங்களே உள்ளிடப்பெயர்வாளர்களைப் பெற்றிருக்கின்றன. மாத்தளை, அம்பாந்தோட்டை, மன்னார், மட்டக்களப்பு, குருநாகலை, புத்தளம், சிலாபம், அநுராதபுரம், பொலனறுவை ஆகிய வரண்ட வலய மாவட்டங்களே அவை யாகும். தலைநகரான கொழும்பு பல்வேறு சமூக, பொருளாதார ரீதியான வாய்ப்பினைக் கொண்டிருந்தமையால் இந்நகரமும் தேறிய உள்ளிடப் பெயர்வாளர்களைக் கொண்ட மாவட்டமாக இருந்துள்ளது. கொழும்பு நகரத்திற்கு உள்ளிடப்பெயர்வினை மேற்கொண்ட மக்களில் அதிகமானோர் காலி, யாழ்ப்பாணம், கண்டி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். அநுராத புரத்திற்கான உள்ளிடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் ஏறத்தாழ 75.0 சதவீதத்தினர் ஈரவலயப் பிரதேசத்தைச் சேர்நத கண்டி, கேகாலை, கொழும்பு, நுவரெலியா, காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். கொழும்பு மாவட்டமும் அனுராதபுர மாவட்டமும் உள்ளிடப்பெயர்வாளரைப் பொறுத்த வரை ஏறத்தாழ ஒரே அளவினதாக இருந்துள்ளன.

1946-1953ஆம் ஆண்டுகளிடையிற் கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, நுவரெலியா, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் இடப்பெயர்வில் இழப்புக்களையே சந்தித்துள்ளன. இம்மாவட்டங்களிலிருந்து வரண்ட வலயங்களுக்கு மக்கள் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தமையே முக்கிய காரணி என்றாலும் யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்து கொழும்பு நோக்கி யதான இடப்பெயர்வுதான் அதிகமாகவிருந்துள்ளது. அதேவேளை இந்தியத் தமிழர் தொடர்பான அரசின் இறுக்கமான சட்டவாக்கங்களின் விளைவாக இந்தியாவுக்கான இடப்பெயர்வும் இக்காலங்களில் இடம்பெற்றுள்ளது. மேற் றித்த பண்பினை பிறந்த இட முறை, வாழ்நிலைப் புள்ளிவிபரமுறை, உயிர் வாழ்வீதமுறை ஆகிய அளவீடுகளின் மூலம் கண்டறியப்பட்டாலும் எண்ணிக்கை அடிப்படையில் வேறுபட்டதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

#### 4.6.5. குடிக்கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதி 1953 - 1963

1953-1963ஆம் ஆண்டுகளிடையிற் பிறந்த இடமுறையின் அடிப் படையிலும், வாழ்நிலைப் புள்ளிவிபர அடிப்படையிலும் இடப்பெய்ர்வு பற்றி நோக்கும் பொழுது கொழும்பு தவிர்ந்த ஈரவலய மாவட்டங்களான களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, குருநாகலை, இரத்தினபுரி,

கேகாலை ஆகிய மாவட்டங்களையும் யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய வரண்ட வலய மாவட்டங்களையும் வெளியிடப்பெயர்வினை ஏற்படுத்திய மாவட்டங்களாகக் கொள்ளலாம். கொழும்பு மாவட்டத்துடன் மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, சிலாபம், அநுராதபுரம், பதுளை ஆகிய மாவட்டங்கள் உள்ளிடப்பெயர்வினைப் பெற்ற மாவட்டங் களாகக் கொள்ளப்படுகின்றன.

வரண்டவலய மாவட்டங்களை நோக்கிய இடப்பெயர்வுக்குத் தொடர்ச்சி யாக மேற்கொள்ளப்பட்டு வந்த குடியானவர் குடியேற்றத்திட்டங்கள் இக்காலப் பகுதியில் அதிகரிக்கப்பட்டமையே முக்கிய காரணியாகக் கொள்ள வேண்டும். 1935ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நில அபிவிருத்திச் சட்டத்தின் தொடர்ச்சி யாக 1953-1963ஆம் ஆண்டுகளிடையில் குடிநெருக்கமுள்ள பகுதியிலிருந்து மக்களை காணிக் கச்சேரிகள் மூலம் தெரிவு செய்து இடப்பெயர்வினை மேற்கொள்ளச் செய்துள்ளனர். குறிப்பாக வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தமிழ் மக்களை அதிகமாகக் கொண்ட மாவட்டங் களில் குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட்டதன் விளைவாகவே குடித் தொகை வளர்ச்சி வீதமும் அதிகரித்துள்ளது. திருகோணமலை மாவட்டத்திற் சேருவாவெல தொகுதியிலும் முன்னைய மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதி யான-தற்போதைய அம்பாறை மாவட்டத்திலும் சிங்கள மக்களைத் திட்டமி ட்டுக் குடியேற்றியதன் விளைவாக இனவிகிதாசாரப் பரம்பலில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரிற் பெரும்பாலான ஈரவலய மக்கள் குடியேற்றப்பட்டனர். குறிப்பாகச் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் கண்டி, கொழும்பு, மாத்தளை, கேகாலை, குருநாகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே பெருமளவுக்கு உள்ளிடப்பெயர்வினை இக்காலத்தில் மேற்கொண்டனர். கொழும்பு மாவட்டத்தின் விருத்தி காரணமாகத் தொடர்ச்சியாக உள்வரவு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இடப்பெயர்வினை மேற் கொண்டவர்களிற் பெரும்பான்மையினர் கொழும்பு நகரத்திற்கே இடப் பெயர்வினை மேற்கொண்டுள்ளனர்.

#### 4.6.6. குடிக்கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதி 1963 - 1971

1963-1971ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதிகளில் குடியேற்றத் திட்டங்களின் உருவாக்கம், அக்குடியேற்றத்திட்டங்களிற் சேவைத் தொழிலை மேற்கொள்ளல், படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம்குறிப்பாகக் கூட்டுறவுப் பண்ணைகள், பிரதேசஅபிவிருத்திச்சபையின் திட்டங்கள், கிராம அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் குடிநெருக்கமற்ற பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இதன் விளைவாக குடிநெருக்கமுள்ள பகுதியிலிருந்து மக்கள் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர் எனலாம்.

இருபத்தியிரண்டு மாவட்டங்களிற் கொழும்பு, அநுராதபுரம், மொனரா கலை, பொலனறுவை, திருகோணமலை, வவுனியா, புத்தளம், மட்டக்களப்பு,

மன்னார் ஆகிய ஒன்பது மாவட்டங்கள் தேறிய உள்ளிடப்பெயர்வாளரை பெற்ற மாவட்டங்களாகும். இவற்றில் கொழும்பு மாவட்டமே பெருமளவிலான உள்ளிடப்பெயர்வாளர்களைக் கவர்ந்துள்ளது. மேற்குறித்த மாவட்டங்களின் குடித்தொகையோடு ஒப்பிட்டு நோக்கும் போது பொலனறுவை மாவட்டத்திலேயே தேறிய இடப்பெயர்வு வீதம் அதிகமாகவிருந்துள்ளது. இதற்கடுத்ததாக மொனராகலை மாவட்டம் காணப்படுகின்றது. ஆகக்குறைந்த தேறிய உள்ளிடப் பெயர்வு வீதத்தைக் கொண்ட மாவட்டமாக இரத்தினபுரியும் கொழும்பும் விளங்குகின்றன. இவை தவிர பதின்மூன்று மாவட்டங்கள் தேறிய வெளியிடப் பெயர்வினைக் கொண்டுள்ள மாவட்டங்களாக இருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டம் தொடர்ச்சியாகத் தேறிய வெளியிடப்பெயர்வினைக் கொண்ட மாவட்டமாக 1963-1971ஆம் ஆண்டுக்காலங்களிலும் காணப்படுகின்றது.

### 6.4.7. குடிக்கணிப்புக்கிடைப்பட்ட காலப்பகுதி 1971 - 1981

நாடு பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியாக வளர்ச்சியடைந்து செல்லச்செல்ல மக்களது இடப்பெயர்வும் அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக 1970 இல் ஆட்சி மாற்றமும் அதன் விளைவாக மக்கள் சுயதேவை உற்பத்தியில் அதிக நாட்டம் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தின் விளைவாகவும் குறுகிய தூர இடப்பெயர்வு ஏற்பட்டதற்க்குச் சான்றுகள் உண்டு. வாழ்நிலைப்புள்ளிவிபர முறையின் அடிப்படையிற் கணிப்பீடு செய்கின்ற போது நாட்டின் ஒன்பது மாவட்டங்கள் தேறிய உள்ளிடப்பெயர்வுடைய மாவட்டங்களாகவும் பதின்மூன்று மாவட்டங்கள் தேறிய வெளியிடப்பெயர்வுடைய மாவட்டங்களாகவும் உள்ளன. குறிப்பாக மொத்தத் தேறிய இடப்பெயர்விற் பெரும்பான்மையானோர் வரண்ட வலய மாவட்டங்களை நோக்கி இடப்பெயர்வை மேற்கொண்டனர். அம்பாந்தோட்டை, மன்னார், வவுனியா, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை, மொனராகலை ஆகிய மாவட்டங்கள் தேறிய உள்ளிடப்பெயர்வு மாவட்டங்களாகவுள்ளன. ஏனைய மாவட்டங்கள் குடித்தொகை இழப்பையே சந்தித்துள்ளன. வாழ்நிலைப் புள்ளிவிபர அடிப்படையில் முதன்முதலாகக் கொழும்பு மாவட்டம் தேறிய வெளியிடப்பெயர்வினைச் சந்தித்துள்ளது எனப்படுகின்றது.

பிறந்த இடமுறையில் நோக்குகின்றபோது கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், பொலனறுவை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் தேறிய உள்ளிடப்பெயர்வாளரை அதிகமாகக் கொண்ட மாவட்டங்களாக இருக்கின்றன. ஏனைய மாவட்டங்கள் தேறிய வெளியிடப்பெயர்வாளரினால் இழப்புக்களைச் சந்தித்துள்ளன எனலாம்.

வாழ்நிலைப்புள்ளிவிபரங்களைக் குறிப்பாக இறப்புக்களை-ஒழுங்கான முறையிற் பதிவு செய்யாமை, பிறந்த இடமானது கணிப்பின் போது பதியப்படாதிருந்தமை போன்ற காரணிகள் மேற்படி இரு அளவீட்டின்படி வேறுபட்ட பெறுபேறுகள் காணப்படுவதற்குரிய முக்கிய காரணியாகக் கொள்ளப்படுகின்றன.

வாழ்நிலைப் புள்ளிவிபர அடிப்படையில் 1971-1981ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாட்டில் காலத்துக்காலம் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு கலவரங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. இதன் விளைவாக தென்னி லங்கையில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்புக் கருதி வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சென்றடைந்தனர். குறிப்பாக 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலையடுத்து இடம்பெற்ற வன்செயல்களை முக்கியமாகக் கொள்ளலாம்.

மேலும் 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு மகாவலித் திட்டத்தினைத் துரிதப்படுத்தியதன் விளைவாக, வரண்ட பிரதேசம் நோக்கிய இடப்பெயர்வு சார்பு ரீதியாக அதிகரித்துள்ளமையும் சுதந்திர வர்த்தக வலயத்தின் தோற்றம் நாட்டின் பல பாகங்களிலிருந்து தொழிலாளர் களைக் கட்டுநாயக்கப் பகுதிகளைச் சென்றடைய வைத்தமையும் இக்கால இடப்பெயர்வில் முனைப்பான சம்பவங்கள் ஆகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இக்காலப்பகுதிகளில் உத்வேகம் பெற்ற இன விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இப்பிரதேசங்களில் - குறிப்பாகக் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்த தமிழ் - சிங்கள மக்களில் கணிசமானோர் பல்வேறு காரணங்களின் விளைவாகத் தமது சொந்தக் கிராமங்களிலிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு இடப்பெயர் வினை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் இவர்கள் நிரந்தரமாகத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறவில்லை என்றே கூறல் வேண்டும்.

இக்காலப்பகுதிகளில் உள்நாட்டு இனப்பிரச்சினைகளைச் சாட்டாகக் கொண்டு தமிழர் வாழும் பிரதேசங்களிலிருந்து-குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து-கணிசமான அளவில் இளைஞர்கள் மேற்குலக நாடுகளுக்குப் பொருளாதாரத் தேட்டங் கருதி சர்வதேச இடப்பெயர்வினை மேறகொண்டுள் ளனர்.

1964ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியத் தமிழர் தாயகம் திரும்புவதில் முனைப்பாக இருந்த காலப்பகுதியாக இக்காலப்பகுதியினைக் கொள்ளலாம். இக்காலப்பகுதியில் மலையக மக்கள் தென்னிந்தியாவுக்கு இடப்பெயர்வினை மேற்கொள்ள, வேலைவாய்ப்புக் கருதி சிங்கள மக்கள் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து மலையகப் பகுதியை நோக்கி இடப்பெயர்வினை மேற்கொண்டமையைக் காணமுடிகிறது.

**அட்டவணை 6.3**

### பிறந்த இடஅளவீட்டின் அடிப்படையில் தேறிய இடப்பெயர்வு 1946 - 1981

| மாவட்டம் | 1946/53 | 1953/63 | 1963/71 | 1971/81 |
|---|---|---|---|---|
| கொழும்பு | +13438 | +59643 | +160590 | +76295 |
| கம்பஹா | ---- | ---- | ------- | +116662 |
| களுத்துறை | -5532 | +5009 | -28755 | -34732 |
| கண்டி | -43181 | -24160 | -115603 | -170276 |
| மாத்தளை | +10701 | -17064 | +95 | -14391 |
| நுவரெலியா | -2041 | -19440 | -31362 | -30239 |
| காலி | -20695 | -2009 | -94983 | -116410 |
| மாத்தறை | -8915 | -44885 | -119668 | 133191 |
| அம்பாந்தோட்டை | +2065 | -3357 | +13693 | +1492 |
| யாழ்ப்பாணம் | -14237 | -6941 | -62652 | -53417 |
| மன்னார் | +345 | +2620 | -7176 | +18151 |
| வவுனியா | +5212 | +11900 | +28097 | +29650 |
| முல்லைத்தீவு | ----- | ---- | -- | +28130 |
| மட்டக்களப்பு | +19851 | +27751 | -7733 | -2181 |
| அம்பாறை | ---- | ------ | +51849 | +50486 |
| திருகோணமலை | -5527 | +16635 | +42336 | +43497 |
| குருநாகலை | +21495 | -23418 | +23225 | -23839 |
| புத்தளம் | +5717 | }+11778 | }+2643 | }+38068 |
| சிலாபம் | +534 | | | |
| அநுராதபுரம் | +42435 | +45242 | +79001 | -109123 |
| பதுளை | +4242 | +1007 | +29963 | -41006 |
| மொனராகலை | ------ | ------ | +40879 | +70149 |
| பொலநறுவை | ----- | ------- | +69712 | -41006 |
| இரத்தினபுரி | -8345 | -7482 | +7993 | +14443 |
| கேகாலை | -15876 | -25111 | -46868 | -99294 |

Source : 1946 - 1953, 1953 - 1963, 1963 - 1971, 1971- 1981 data are from the Department of Census and Statistics, Census of Population and Housing General Report.

**அட்டவணை 6.4**

### வாழ்நிலைப்புள்ளி விபர அளவீட்டின் அடிப்படையில் தேறிய இடப்பெயர்வு 1946-1981

| மாவட்டம் | 1946/53 | 1953/63 | 1963/71 | 1971/1981 |
|---|---|---|---|---|
| கொழும்பு | +42001 | +22792 | +39237 | -52809 |
| கம்பஹா | -11160 | -20073 | -9472 | -32198 |
| கண்டி | -24070 | -57804 | -74055 | -288651 |
| மாத்தளை | +7536 | -19343 | -5349 | -31718 |
| நுவரெலியா | -866 | -25593 | -22593 | -4787 |
| காலி | -16745 | -20633 | -19502 | -46315 |
| மாத்தறை | -16112 | -44246 | -46111 | -69607 |
| அம்பாந்தோட்டை | +3147 | -3312 | -2201 | +560 |
| யாழ்ப்பாணம் | -7089 | -13880 | -36250 | -32945 |
| மன்னார் | +5826 | +292 | +1846 | +10899 |
| வவுனியா | +5093 | +14365 | +5671 | +34628 |
| மட்டக்களப்பு | +26884 | +26791 | +2126 | -6533 |
| அம்பாறை | --- | ---- | -2023 | +39814 |
| திருகோணமலை | -4611 | +16546 | +6430 | +2266 |
| குருநாகல் | +24247 | +14446 | -22238 | -29529 |
| புத்தளம் | +7227 | -322 | +2569 | +13601 |

| | | | | |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | +50245 | +51644 | +25120 | +68098 |
| பொலநறுவை | ----- | ----- | +15694 | +51993 |
| பதுளை | +9758 | +5300 | -32479 | -100265 |
| மொனராகலை | --- | ----- | +16367 | +20443 |
| இரத்தினபுரி | -871 | -6207 | -862 | -20794 |
| கேகாலை | -13701 | -27474 | -24010 | -62766 |

Sources: 1. S.Vamathevan, " Internal Migration in Ceylon " 1946 /53
2. Marga Institute
3. Swarna Ukwatta, "Internal Migration"
4. P.Wilson, Internal Migration in Srilanka

#### 6.4.8. 1981 - 2001 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட கால இடப்பெயர்வு

1991ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்படாததன் விளைவாக, பிறந்த இடமுறை மற்றும் வாழ்நிலைப் புள்ளிவிபர முறையின் அடிப்படையிற் கணிப்புக்களை இக்காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்த போதிலும் இக்காலப் பகுதியில் உள்நாட்டு இடப்பெயர்வாயினும்சரி சர்வதேச இடப்பெயர்வாயினும்சரி முன்னர் எப்போதையும்விட அதிகமாக மேற்கொள் ளப்பட்டிருக்கின்றன என்றே கூறல் வேண்டும்.

துரித மாகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டப் பகுதிகளுக்குக் குடிநெருக்கமுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் இடப்பெயர் வினை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்ததன் விளைவாக பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர இடப்பெயர்வினை இக்காலப்பகுதியில் மேற்கொண்டனர்.

அத்துடன் மாதுறுஓயாத் திட்ட உருவாக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் உள்ளிடப்பெயர்வே அதிகம் நிகழ்ந்துள்ளது எனலாம். அதுமட்டுமல்லாது அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்கள் வாழும் உதவி அரசஅதிபர் பிரிவுகளிற் திட்டமிட்ட முறையிற் சிங்களவர்களை குடியேற்று வதன் வாயிலாக-முஸ்லீம்கள், தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியாகவே-நாட்டின் வேறு பிரதேசங்களிலிருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி வருகின்றனர். மேலும் பிரதேசஇணைப்பு, காணிச் சுவீகரிப்பு, புதை பொருளாராய்ச்சி, புனிதப்பிரதேசப் பிரகடனம், விவசாய நில ஆக் கிரமிப்பு போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் உள்ளிடப் பெயர்வாளரின் உள்வரவு தூண்டப்படுகின்றது. அதுபோலவே திருகோணமலையில் சேருவா வெல தொகுதிக்குள் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் பல குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வவுனியா மாவட்டத்திற் பாவற்குளம், செட்டிக்குளம், மற்றும் வவுனியா தெற்கு சிங்கள உதவி அரச அதிபர் பிரிவு ஆகிய பிரதேசங்களிற் திட்டமிட்ட ரீதியிற் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் வாயிலாக இனவிகிதாசாரப் பரம்பலை மாற்றியமைக்கும் முயற்சி மேற்குறித்த காலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அதே போலவே முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட எல்லைப் பகுதிகளில் வெலி ஓயாத் திட்டம் என்ற பெயரிற் சிங்கள மக்களைக் குடியமர்த்தும் பணி துரித வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இவ்வாறான குடியேற்றங்களுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கி வருகின்றது.

திருகோணமலையில், குடியேற்றத்திட்டங்கள் மூலமாக மட்டுமன்றி திருகோணமலைத்துறைமுகவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங் கள், புனிதப் பிரதேசத்திட்டம், படைகளின் பிராந்திய அமைப்புக்கள், பன்முகப் படுத்தல் என்ற போர்வையிற் தலைமைச் செயலகங்களை அமைத்தல், சுற்றுலா மையங்களை அமைத்தல், இனக்கலவரங்களின் விளைவாகத் தமிழர் குடியிருப்புக்களை கலைத்தல் மூலமும் எதிரிகளை அழிப்பது என்ற போர்வை யிற் தமிழ் மக்களைக் கொலை செய்தல் மூலமும் தமிழரை விரட்டிவிட்டு அவ்விடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றல் போன்ற பல்வேறு நடவடிக்கை களின் மூலமும் தூண்டப்பட்ட உள்ளிடப் பெயர்வினை மேற்கொள்ள அரசு உந்து சக்தியாக விளங்கி வருகின்றது.

1980களின் முதற்பகுதிகளில் முனைப்புப் பெற்ற இனவிடுதலைப் போராட் டத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழர், சிங்களவர், முஸ்லீம்களிற் கணிசமானோர் தாம் வாழ்ந்த பிரதேசங்களிலிருந்து தவிர்க்க முடியாத நிலையில் இடப்பெயர்வினை மேற்கொள்ளவேண்டிய நிலை இக் காலப்பகுதிகளிற் காணப்பட்டிருந்தது. அம்பாறை, திருகோணமலை, மட்டக் களப்பு மாவட்ட எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் தமது சொந்த இடங் களிலிருந்து இடப்பெயர்வினை மேற்கொண்டு அகதிகளாகப் பல்வேறு இடங் களிற் பரந்து வாழ்கின்றனர். இவர்களில் கணிசமானோர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் இந்தியாவிலும் வாழ்ந்து வருகின்ற னர். திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஏறத்தாழ 30,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோலவே மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள, உள்நாடு நோக்கிய இடப்பெயர்வினை மக்கள் மேற்கொண்டுள்ளனர். இவர்களிற் கணிச மானோர் மடு அகதிமுகாமில் தங்கி வாழ்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருநதும் அதன் அயற் பகுதிகளிலிருந்தும் இடப்பெயர்வினை மேற்கொண்டு அகதிமுகாம்களிலும் புதிய வசதியற்ற குடியிருப்புக்களிலும் வாடகை வீடுகளிலும் குடியிருக்கும் பண்பினைக் காணமுடிகின்றது. குறிப்பாகத் தீவுப்பகுதி, வலிகாமம் வடக்குப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மேற்குறித்த வகையில் வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நிகழ்ந்துவரும் உள், வெளி இடப்பெயர்வின் பண்புகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்து வரும் உள், வெளி இடப்பெயர்வுப் பண்புகளுக்கு மிடையிற் பெரிய வேறுபாட்டினைக் காணமுடிகின்றது. தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் இடப்பெயர்வானது அபிவிருத்தியுடன் தொடர்புடையதாகக் காணப்பட, பின்னையது தவிர்க்க முடியாததும் பாதுகாப்பிற்காகத் தூண்டப் பட்டதுமான இடப் பெயர்வாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்துவரும் போராட்டங்களின் விளைவாக, பொருளாதார ரீதியாக நடுத்தர, மற்றும் உயர்வர்க்கத்தினரிற் கணிசமானோரின் குடும்பங்களில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட

வர்களோ அரசியற் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி சர்வதேச இடப்பெயர் வினை மேற்கொள்கின்றனர். அத்தொகையினராற் பெறப்படும் பொருளாதாரத் தேட்டத்தின் விளைவாக வடக்கு - கிழக்கு மாகாண மக்களில் குறிப்பிடத்தக் கோர் கொழும்பு மற்றும் தென்னிலங்கைக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டு வாழ்ந்துவரும் நிலை அண்மைக்காலங்களில் காணப்படும் ஓர் பண்பாக வுள்ளது. அதாவது 1990கள் வரை பாதுகாப்பு இடங்களாக கருதப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்வதைத் தவிர்த்து சுகபோக வாழ்க் கையை அனுபவிக்கும் பொருட்டுத் தென்னிலங்கையில் குடியிருப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். இதன் விளைவாகக் கொழும்பு மாவட்டத்திற் குடியிருப் புக்களுக்கான வாடகை பெருமளவிற்கு அதிகரித்துள்ளது.

1977ஆம் ஆண்டினைத் தொடர்ந்து வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக் கப்படவே கொழும்பு சார்ந்த பகுதிகளிற் தொழிற்சாலைகள் அதிகரிக்க, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுப் பலர் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மேற்குறித்த இடங்களுக்குத் தற்காலிக இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர்.

### 6.4.9 அரசு - விடுதலைப் புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தமும் இடப்பெயர்வின் பங்கும்

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நாட்டில் மக்களால் மேற் கொண்டிருந்த இடப்பெயர்வில் தமிழரும் முஸ்லீம்களும் முக்கியமானவர் களாகவிருந்துள்ளனர். யுத்தநிலையும் அதனோடு இணைந்த காரணிகளின் செயற்பாட்டின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட இவ் இடப்பெயர்வுகளில் முக்கியமானது வடமாகாணத்திலிருந்து முஸ்லீம்களின் வெளியேற்றமாகும். ஏறத்தாழ 75,000 முஸ்லீம்கள் இம் மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து அனுராதபுரம், பொலநறுவை, புத்தளம், கொழும்பு போன்ற மாவட்டங்களுக்குச் சென்று அகதி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ, வசதி படைத்தோர் வீட்டினை வாடகைக்குப் பெற்றோ அன்றில் சொந்தமாக வாங்கியோ வாழ்ந்து வருகின்றனர். இதே போலவே தமிழ் மக்களில் பெரும் பாலானோர் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்த யுத்த அனர்த்தத்தின் விளைவாக தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக தற்காலிக இடப்பெயர்வினைக் காலத்துக்குக் காலம் மேற்கொண்டு வந்துள்ளனர். இதன் விளைவாக மாவட்டத்திற்குள்ளேயானதும் மாவட்டத்திற்கு வெளியேயானதுமான இடப் பெயர்வுகள் முனைப்புப்பெறலாயின.

1991ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மட்டும் 3430 குடும்பங்களைச் சேர்ந்த 17026 முஸ்லீம்கள் வடமாகாணத்திற்கு வெளியே இடப்பெயர்வுக்கு உட்பட்டுள்ளனர். இவை தவிர 1995ஆம் ஆண்டின் பின்னர் 213892 குடும்பங்களைச் சேர்ந்த 745333 மக்கள் மாவட்டத்திற்குள்ளும் மாவட்டத்திற்கு வெளியிலும் இடப்பெயர்வினை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதாவது 1991-2000ஆம் ஆண்டு

வரை 762359 மக்கள் இடப்பெயர்வுக்குட்படுத்தப்பட்டிருந்தனர் என்பரு குறிப்பிடத்தக்கது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் சொந்தப் பிரதேசங்களுக்கு மீள் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தவர்களின் விபரம் அட்டவணை 6.5இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.5**

**புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் சொந்தப் பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் விபரம்**
**(யாழ்ப்பாண மாவட்டம்) 2002-2004**

| வாழ்ந்த இடம் | மக்கள் | ஏனைய மாவட்டங்களில் இருந்து வந்தோர் | சதவீதம் |
|---|---|---|---|
| 1. இந்தியா | 2352 | - | 1.3 |
| 2. ஏனைய மாவட்டங்கள் | 120222 | - | 65.6 |
| அ) கிளிநொச்சி | | 44,734 | 24.4 |
| ஆ) முல்லைத்தீவு | | 50,111 | 27.3 |
| இ) மன்னார் | | 7904 | 4.3 |
| ஈ) வவுனியா | | 8849 | 4.8 |
| உ) புத்தளம் | | 1046 | 0.6 |
| ஊ) கொழும்பு | | 4311 | 2.4 |
| எ) திருகோணமலை | | 1125 | 0.6 |
| ஏ) ஏனைய மாவட்டங்கள் | | 2142 | 1.2 |
| 3. மாவட்டத்திற்குள் | 60668 | | 33.1 |
| மொத்தம் | 183242 | | 100.0 |

*ஆதாரம் : மாவட்ட செயலக அறிக்கைகள் 2002 - 2004*

அட்டவணை 6.5இன் பிரகாரம் 2002ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் சொந்த இடங்களுக்கு வந்தவர்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தே அதிகமானவர்கள் மீள் இடப்பெயர்வினை மேற் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. அத்துடன் இந்தியாவில் 57,000 பேர் அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர் என அண்மைய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 2352 பேர் மீள் இடப்பெயர்வுக்கு உட்பட்டு தாயகம் திரும்பியுள்ளனர். அது மட்டுமல்லாது சர்வதேச இடப் பெயர்வில் தனியாளாக சட்டத்திற்கு புறம்பாக இடப்பெயர்வினை மேற் கொள்வது சார்பு ரீதியாகக் குறைவடைந்து செல்ல, பெற்றோர், உறவினர்களை வரவழைக்கும் செயற்பாடு அதிகரித்துக்கொண்டு வருவதைக் காணமுடி கின்றது. இவர்களைத் தவிர முஸ்லீம்களில் சிறுதொகையினர் மீளவும் தமது சொந்தக் கிராமங்களுக்கு உள்வரவினை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 6.5. சர்வதேச இடப்பெயர்வு

குறித்த ஒரு நாட்டிலிருந்து வேறு ஒரு நாட்டிற்கு மக்கள் இடப்பெயர்வு மேற்கொள்வதைச் சர்வதேச இடப்பெயர்வு எனக் கொள்ளலாம். இலங்கையில் இத்தகைய இடப்பெயர்வு வரலாற்றுக் காலத்திலிருந்தே நிகழந்துவரினும் அண்மைக்காலங்களில் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளின் விளைவாக, அதாவது மக்களிடையேயான சமனற்ற பொருளாதாரப் பரம்பலின் விளைவாகவும் ஸ்திரமற்ற அரசியற் சூழ்நிலைகளாலும் சர்வதேச இடப்பெயர்வு அதிகரித்து வந்துள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற ஆட்சியிலிருந்து அரசியல் ரீதியாகத் தம்மை விடுவித்துக் கொண்டுள்ள போதிலும் பொருளாதார சுதந்திரமற்ற நிலை ஒரு புறம் காணப்பட, ஐரோப்பியரின் பிரித்தாளும் தந்திரத்தின் விளைவாக இனங்களிடையே தொடர்ச்சியான பகை நிலையின் காரணமாக இனவிடுதலைப் போராட்டம் விரிவு பெற்றதனாலும் இலங்கையிலிருந்து சர்வதேசஇடப்பெயர்வு அண்மைக்காலங்களில் அதிகரித்து வந்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் சர்வதேச இடப்பெயர்வுக்கும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் சர்வதேச இடப்பெயர்வுக்குமிடையிற் பெரிய வேறுபாடு காணப்படுகின்றது. வளர்ந்த நாடுகளிலிருந்து உல்லாசப்பயணிகளாக, பல்வேறு துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களாக, உயர் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொள்ள, வளர்முக நாடுகளிற் அரசியற் தஞ்சம் உட்பட அதனைச் சாட்டாகக் கொண்டு கீழ் மட்டத் தொழில்வாய்ப்பினைப் பெறுவதன் மூலம் பொருளாதாரத் தேட்டத்தினை பெற்றுக்கொள்வதற்காகச் சர்வதேச இடப்பெயர்விற் கவனம் செலுத்தப் படுகிறது. 1980களைத் தொடர்ந்து 1995ஆம் ஆண்டு வரை இலங்கையிலிருந்து 235000 மக்கள் மேற்குலக நாடுகளுக்கும் 165000 மக்கள் இந்தியாவுக்குமான இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளதாகப் பல்வேறு அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது.

வரலாற்றுக்காலங்களில் இலங்கைக்கான உள்ளிடப்பெயர்வு பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்தே நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. ஆரியர், திராவிடர் ஆகிய இனத்தவர்கள் வட, தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாவர். அத்துடன் தென்னிந்தியா இலங்கைக்கு அண்மையிற் காணப்படுவதனால் இவ்விரு நாடுகளின் மக்கள் காலத்துக்குக் காலம் தங்களிடையே பரஸ்பர உறவினைத் தொடர்ந்து பேணி வந்தனர். பல சந்தர்ப்பங்களிற் படையெடுப்புக்களும் நிகழ்ந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன.

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை ஒரு புறமிருக்க, மேலை நாட்டினருக்கும் கீழை நாட்டினருக்கும் இடையில் வர்த்தக கேந்திர நிலையமாக மிக நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. இதனால் கிரேக்க, ரோம, மேற்காசிய நாட்டவர்கள், சீனா, பர்மியர் மற்றும் கீழைத் தேசத்தவர்கள் இந்நாட்டுக்கு வர்த்தக நோக்கம் கருதி வந்து போகினர். இதற்கு

ஆதாரமாக நாட்டின் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் சான்று பகர்கின்றன. குறிப்பாகக் கந்தரோடை, களபூமி, வல்லிபுரம், ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் தொல்பொருட்கள் பெறப்பட்டுள்ளன.

இலங்கையை மையமாகக் கொண்டு நடைபெற்ற வர்த்தகத்தில் மத்திய கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இஸ்லாமியர் பெரும்பங்கு கொண்டிருந்தனர். இதனால் மேற்குறித்த பிரதேசங்களிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் வருகை தந்த இஸ்லாமியர் காலப்போக்கில் இலங்கையிலேயே தங்கி விட்டனர். அவர்களின் வழிவந்தவர்களே தற்போது வாழ்ந்து வரும் இஸ்லாமியர்களாகும்.

தென்னிந்தியாவிலிருந்து காலத்துக்குக்காலம் மக்கள் இலங்கையின் வரண்டவலயப்பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர். அதாவது தென்னிந்தி யாவிற் பெரும்பகுதி வரட்சிக் காலநிலையைக் கொண்டதனால் மக்கள் பொருளாதார ரீதியில் நலிவுற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அங்கு கடும் வரட்சிநிலை காணப்படும் வேளைகளில் இலங்கையின் வடபுலத்திற்கு இடப்பெயர்வினை மேற்கொண்டு வருவதும், வரட்சி நீங்கும் வேளைகளில் மீண்டும் தம்மிடம் மீள்பவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களிற் கணிச மானோர் இப்பிரதேசங்களிலேயே தங்கிவிட்டனர்.

10ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளிற் தென்னிந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் விளைவாகவும். பொருளாதார பலவீனம் காரணமாகவும் இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர். பொதுவாகச் சாதி அடிப்படையில் அமைந்த உள்ளிடப்பெயர்விற் பல சாதி, சமூகத்தினர் உள்வரவை மேற் கொண்டதற்குப் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன.

ஐரோப்பியர் இலங்கையை தம்வசப்படுத்தியதன் விளைவாகப் போர்த் துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய இனத்தவர்களிற் குறிப்பிடத்தக் கவர்கள் உள்ளிடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் வடபகுதியின் ஏற்றுமதி வர்த்தகத்தில் வங்காளிகள், தமிழக-தெலுங்குச்செட்டியார்கள், தென்னிந்தியப் பரவர், மலையாளிகள், இஸ்லாமியர்கள் போன்றோர் ஈடுபட்டுத் தற்காலிக உள்வரவை மேற் கொண்டிருந்தனர். இவர்களிற் கணிசமானோர் இங்கேயே தங்கிவிட்டனர். இவர் கள் காலத்தில் முத்துக் குளிப்பதற்காக இஸ்லாமியர்கள் யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர். ஐரோப்பியர் காலப்போக்கில் இலங்கையை விட்டு வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தாலும் அவர் களது வழித் தோன்றல்களான பறங்கியர், ஐரோஆசியர்கள் தற்போதும் கணிசமான எண்ணிக்கையில் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஐரோப்பியர் ஆட்சியில், குறிப்பாக ஒல்லாந்தர் ஆட்சியில் நெசவுத்தொழில், சாயவேலை, பருத்தி உற்பத்தி போன்ற தொழில்களை மேற்கொள்ளும் பொருட்டு, அத்தொழில் சார்ந்தோரைத் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அத்துடன் இவர்களின் ஆட்சிககாலத்தில்

1694-1696ஆம் ஆண்டுகளுக்கிடையில், இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான அடிமைகள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளனர். இக்காலப் பகுதியில் ஒரு பிடி அரிசிக்கு ஒரு அடிமையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததாகவும், 3589 பேர் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டனர் எனவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆங்கிலேயரின் வருகையினைத் தொடர்ந்து அவர்கள் தம் பொருளாதார முறைமைகளின் விளைவாகப் பெருந்தோட்டத் தொழில் மற்றும் அரச திணைக்களங்களில் தொழிலாளர்களாகப் பணியாற்றும் பொருட்டு சீனர்களின் தொழிற் திறமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களை வரவழைப்பது என ஆங்கிலேய அரசு முதலில் தீர்மானித்திருந்த போதிலும் நடைமுறைச் சிக்கல் களின் விளைவாக, தென்னிந்தியாவிலிருந்து மக்களை வரவழைத்தனர். 19 ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக இவர்கள் வருகை தந்துள்ளனர். இவர்களிற் பெரும்பாலோனோர் தேயிலை, இறப்பர், தெங்குத் தோட்டங்களிற் பணியாற்ற நியமிக்கப்பட்டனர். 1871, 1901ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தமிழர் முறையே 128654, 441601 ஆகக் காணப்பட்டிருந்தனர். 1946ஆம் ஆண்டில் இத்தொகை 780589 ஆக அதி கரித்துக் காணப்பட்டது. ஆனால் இலங்கையின் சுதந்திரத்தைத் தொடர்ந்து இந்தியத் தமிழரை இந்தியாவுக்கு அனுப்புவதில் அரசு ஆர்வம் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலங்களில் தொழில் வாய்ப்புப் பெறல், முதலீடு செய்தல் ஆகியவற்றுக்காக மிகச்சிறிய எண்ணிக்கையிலான வெளிநாட்டவர்கள் உளளிடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் தற் காலிக உள்ளிடப்பெயர்வாளர்களாகவே காணப்படுகின்றனர்.

### 6.5.1 இலங்கையிலிருந்து சர்வதேச இடப்பெயர்வு

வரலாற்றுக் காலங்களில் இலங்கையிலிருந்து சர்வதேச இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. மேலும் இவை சிறு அளவிலான இடப்பெயர்வாகவே காணப்பட்டிருந்தன. குறிப் பாக இந்தியா மற்றும் தென், தென்கிழக்காசிய நாடுகளுக்குப் படையெடுப் புக்களின் பொருட்டுச் சென்றுள்ளதாக வரலாறு தெரிவிக்கின்றது. எனினும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை சர்வதேச இடப்பெயர்வின் பண்புகளை இலங்கையிற் பெருமளவில் அவதானிக்க முடியவில்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திற் சர்வதேச இடப்பெயர்வு முனைப்புப் பெற் றுள்ளதைக் காணமுடிகின்றது. அவர்கள் உலகின் பல்வேறு பிரதேசங்களை தமது குடியேற்ற ஆட்சிக்குட்படுத்தி, அவ்வவ் பிரதேசங்களிற் காணப்படுகின்ற பௌதிக வளங்களுக்கேற்பத் தமது பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தனர். மலாயா, சிங்கப்பூர் ஆகிய ஆசிய நாடுகளிற் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழில், சேவைத்தொழில்களில் ஈடுபடுத்தும் பொருட்டு இலங்கையிலிருந்து கல்வியறிவுடன் நிர்வாகத் திறமையு டையோரை விரும்பி அழைத்தனர். அதாவது இலங்கையின் பெருந்தோட்டப்

பயிற்செய்கை உற்பத்தியில் ஆங்கிலேயருக்கும் இந்தியத் தமிழருக்கு மிடையில் ஓர் இணைப்புப் பாலமாக இருந்துள்ளோரை ஆங்கிலேய நிர்வாகம் அழைத்திருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழரையே விரும்பி அழைத்தனர் எனலாம். 1911ஆம் ஆண்டு ஐக்கிய மலாயா அரசின் குடிக்கணிப்பின் படி 9370 மக்கள் இலங்கையிலிருந்து வெளியிடப்பெயர்வு மேற்கொண்டவர்களாவர். இவர்களில் தொடுவாய்க் குடியிருப்பில் (Strait Settlement) 2121 மக்களும் ஐக்கிய மலாயா அரசுகளில் 7249 மக்களும் இலங்கையர்களாக இருந்துள்ள னர். ஐக்கிய மலாயா அரசுகளில் மொத்த உள் இடப்பெயர்வாளர்களில் தமிழர் மற்றும் இந்தியர் 82.8 சதவீதத்தினரும் சிங்களவர்கள் 10.2 சதவீதத்தினரும் ஏனையோர் 7.0 சதவீதத்தினருமாக இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1931ஆம் ஆண்டு மலாயாக் குடிக்கணிப்பின் பிரகாரம் 18490 இலங்கையரும் 1947ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பின் பிரகாரம் 22762 இலங்கையரும் வாழ்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இவர்களிற் தமிழர்கள் 16783 பேரும் சிங்களவர் 2946 பேரும் ஏனையோர் 3033 பேருமாகவிருந்துள்ளனர். இலங்கை யிலிருந்து மலாயாவிற்கான இடப்பெயர்வினை மேற்கொண்டோரில் கணி சமானோர் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு முன்னர் தாயகம் திரும்பி விட்டனர். யுத்தத்தின் பின்னர் மலாயாவிலிருந்து இலங்கைக்கு மீள்வது குறைந்துவிட்டது.

இவர்களைத் தவிர பர்மா நாட்டுக்கும் இந்தியாவிற்குமான சர்வதேச இடப் பெயர்வு சிறிதளவில் மேற்குறித்துரைத்த காலப்பகுதிகளில் நிகழ்ந்துள்ளன. அதாவது தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவே இவர்கள் சென்றிருக்கின்றனர். 1901ஆம் ஆண்டு இந்தியக் குடிக்கணிப்பின் பிரகாரம் 5273 மக்கள் இலங்கையிற் பிறந்து இந்தியாவில் வாழ்ந்தவர்களாவர். 1961 ஆம் ஆண்டு 28627 ஆகவும் 1971இல் 37800 ஆகவும் இது அதிகரித்துள்ளது. தொழில்வாய்ப்பு, உயர்கல்வியைப் பெறல் ஆகியவற்றிற்காக இடப்பெயர்வு மேற்கொள்பவர்கள் ஒருபுறமிருக்க, இந்தியாவுக்கு உள்ளிடப்பெயர்வினை மேற்கொண்டதன் பின்னர் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் இவற்றுள் அடங்குவர்.

மேலும் அவுஸ்திரேலியாவுக்கான சர்வதேச இடப்பெயர்வும் சிறிதளவில் இடம்பெற்றிருக்கிறது. வெள்ளை அவுஸ்ரேலியக் கொள்கையின் விளைவாக இலங்கையர் அதிகம் செல்லாதுவிடினும் பறங்கியரிற் கணிசமானோர் அந் நாட்டுக்குச் சென்றுள்ளனர். 1921ஆம் ஆண்டு அவுஸதிரேலியாக் குடிக கணிப்பின் பிரகாரம் 380 இலங்கையர் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தனர். 1971ஆம் ஆண்டில் 9091 இலங்கையர்களாக இது அதிகரித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் உள்வரவுக் கொள்கைகளிற் காணப்பட்ட இறுக்க நிலை தளர்த்தப்பட்டதன் விளைவாகவே அதிகளவில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

1940களைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து சிங்களவர், தமிழ்ச் சமூகத்தினர்களிற் சிறு எண்ணிக்கையினர் மேற்குலக நாடுகளிற் கல்வி விருத்தி, பொருளாதார வளர்ச்சி, தொழிலாளர் கேள்வி அதிகரிப்பின்

காரணமாகப் பிரித்தானியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். 1950களிற் தாய்மொழிக் கல்விக்கு ஊக்கம் கொடுத்தமை, அம்மொழிகளிற் கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு, சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டமை, தொழில்வாய்ப்புக்களிலும் பதவியுயர்வுகளிலும் இனப் பாகுபாடு காட்டப்பட்டமை போன்ற பல காரணிகள் ஆங்கிலத்திற் கல்வி கற்ற உயர் மற்றும் மத்திய வகுப்பினரில் வசதிவாய்ப்புள்ளோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஆபிரிக்க நாடுகளுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆரம்பத்திற் தற்காலிக இடப்பெயர்வினை மேற்கொள்ள வைத்தன. மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் காலப்போக்கிற் பிரித்தானியாவுக்குச் சென்று குடியேறியுள்ளனர். இக்காலப் பகுதியிற் சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களின் பிள்ளைகள் தமது தாய்மொழியை மறந்தநிலையில் இருப்பதை ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. இக்காலப்பகுதியில் எவ்வளவு பேர் இடப்பெயர்வினை மேற்கொண்டனர் என்பதனை அறிய முடியவில்லை.

1960களில் ஆபிரிக்க நாடுகள் அந்நியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறவே சுதேசிய அரசுகள் கல்வி வளர்ச்சியிலும் மற்றும் அபிவிருத்தியிலும் அக்கறை கொள்ளத் தொடங்கின. இதனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மற்றும் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், திட்டமிடலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றோர் அதிக ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அந்நாடுகளுக்கு 1960களிலும் 1970களிலும் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். இத்தகைய இடப்பெயர்வை மூளைசாலிகள் வெளியேற்றம் எனவும் அழைப்பதுண்டு. இவர்களில் மிகச் சிறிய அளவினரே நாடு திரும்ப ஏனையோர் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டு, தற்காலிக, நிரந்தர இடப்பெயர்வாளராகக் காணப்படுகின்றனர்.

1970களிற் தமிழரினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இனவிடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக விருத்திபெறத் தொடங்கவே, இடைத்தர, ஆரம்பக்கல்வி கற்றவர்களின் சர்வதேச இடப்பெயர்வு முனைப்புப் பெறுகின்றது. அதன் விளைவாக இலங்கைத் தமிழர் ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, நோர்வே, கனடா மற்றும் விருத்தியுற்ற நாடுகளுக்கு அரசியற் தஞ்சம் என்ற போர்வையிற் பொருளாதாரத் தேட்டத்தினை பெற்றுக்கொள்ள இடப்பெயர்வினை மேற்கொள்ளத் தொடங்கினர். எனினும் 1970களில் 25000 - 30000 மக்களே இத்தகைய இடப்பெயர்வுக்குட்பட்டவர்களாவர். இவர்களிற் கல்விவாய்ப்பினைக் கருத்திற் கொண்டு இடப்பெயர்வு மேற்கொண்டவர்களுமுண்டு. சீதனப் பேர அதிகரிப்பு, உயர் கல்வியில் தரப்படுத்தல் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டமை, சர்வதேச போக்குவரத்து முறைகளின் சுலபத் தன்மை, சென்றடையும் நாடுகளில் உள்வரவுச் சட்டங்களின் இறுக்கமற்ற தன்மை, 1970களில் தமிழர் பிரதேசத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்தியில் அதிக வருமானம் கிடைக்கப்பெற்றமை போன்ற பல காரணிகள் சர்வதேச இடப்பெயர்வுக்கு ஊக்கம் கொடுத்திருந்தன எனலாம்.

1960களின் பிற்பகுதியிலும் 1970களின் முற்பகுதியிலும் தென்னிலங்கைப் பகுதியில் ஜே.வி.பியினருக்கும் அரசுக்கும் இடையில் நிகழ்ந்த போராட்டத்தில் 50000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டதும் மிகச்சிறிய எண்ணிக்கையான சிங்கள இளைஞர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, பிரித்தானியா போன்ற நாடுகளில் அரசியற் தஞ்சம் கோரி இடம்பெயர்ந்துள்ளனர்.

1960களைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் போன்ற வற்றில் வீட்டுப்பணி, கூலிவேலை செய்தல், மற்றும் இடைநிலைத் தொழில் களை மேற்கொள்ளும் பொருட்டு ஆண்களும் பெண்களும் தொடர்ச்சியாக இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். 1990, 1991 ஆம் ஆண்டு களிடையில் மத்திய கிழக்கு நாடுகளில் 47000 இலங்கையர்கள் பணிபுரிந்து வந்துள்ளதாகத் தொழில் திணைக்களத்தினரின் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. அண்மைக் காலங்களில் சிங்கப்பூர், தென்கொரியா நாடுகளுக்குக் கைத் தொழில் உற்பத்தியில் ஈடுபடும் பொருட்டு இடப்பெயர்வினை மேற்கொள்ளும் வாய்ப்புண்டு. அண்மையில் இலங்கை ஜனாதிபதிக்கும் தென்கொரிய ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது 20000 இலங்கை யருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின் பின்னர் இலங்கையிலிருந்து நாட்டின் அசாதாரண நிலையினைச் சாட்டாகக் கொண்டு மேற்குலக நாடு களுக்கும் இந்தியாவுக்குமான இடப்பெயர்வு அதிகரித்துள்ளது. 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஐக்கிய இராச்சியத்தில் 54000 பேரும் நெதர்லாந்தில் 3500 பேரும் சுவிற்சலாந்தில் 25000 பேரும் இத்தாலியில் 6000 பேரும் ஜேர்மனியில் 36000 பேரும் பிரான்சில் 40000 பேரும் இலங்கையர்களாக இருந் துள்ளனர். கனடாவிற் கனடிய உள்வரவு அகதிகளுக்கான சபையின் அறிக்கையின் பிரகாரம் 35000 - 40000 க்குமிடையில் இலங்கையர் வாழ்ந்து வருகின்றார்கள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா, நோர்வே போன்ற நாடுகளில் முறையே 4500, 16000 இலங்கையர்கள் உள்ளிடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தவிர உலகின் பல்வேறு நாடுகளில் ஏறத்தாழ 10000 இலங்கையர் வாழ்ந்து வருகின்றனர். எனவே மேற்குறித்த நாடுகளில் 1990 ஆம் ஆண்டு வரையும் 235000 மக்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் ஆகவிருந்துள்ளனர். 1990 - 1994 ஆம் ஆண்டுக்களிடையில் இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான மொத்த சர்வதேச இடப்பெயர்வாளரில் 20.0 சதவீதமானவர்கள் சென்றுள்ளனர் எனக் கொண்டால், மேலும் 47000 மக்கள் சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர் எனக் கொள்ளலாம். குறிப்பாக கனடாவுக்கான சர்வதேச இடப்பெயர்வானது அண்மைக்காலங்களில் குடும்பங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. 2004ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் இலங்கைத் தமிழர்களில் 800,000 பேர் சர்வ தேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் 1000000 மக்கள் தொழில் வாய்ப்பின் பொருட்டு மத்திய கிழக்கு நாடுகள், தென், தென்கிழக்காசிய நாடுகளில் தற்காலிக இடப்பெயர்வாளராகவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 6.5.2. இந்தியாவுக்கான இடப்பெயர்வு

இந்தியாவும், இலங்கையும் பொருளாதார, சமூக, பண்பாட்டு அடிப் படையில் மிக நீண்ட காலமாக மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டவை யாகும். வரலாற்றுக் காலங்களில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மக்கள் காலத்துக்காலம் வருகை தந்து குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருப்பதை அறிய முடிகின்றது. இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான இடப்பெயர்வினை இரண்டு கோணங்களில் இருந்து ஆராய்தல் சிறப்புடையது.

1. இந்திய வம்சாவழியினரின் இடப்பெயர்வு
2. இலங்கைத் தமிழரின் இடப்பெயர்வு

முதலாவதாக 19ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையை வந்தடைந்த இந்தியத் தமிழர் ஆரம்பத்திற் காலத்துக்குக்காலம் இந்தியாவுக்குச் சென்று வந்துள்ளனர். இவர்கள் பொதுவாக தம்மிச்சைப்படியே இடப்பெயர்வினை மேற் கொண்டிருந்தனர். இந்நாட்டின் மத்திய மலைநாட்டிற் செறிவாக வாழ்ந்து வரும் இந்தியத் தமிழரைப் பொறுத்தவரை பெரும்பான்மை இனத்தவராகிய சிங்க ளவர்களின் வெறுப்பினைத் தவிர்க்க முடியாதபடி பெறவேண்டியேற்பட்டது. அதாவது இந்தியத் தமிழர்களின் வருகையினாற் தாம் பரம்பரை பரம்பரையாக உரிமைகோரி வந்த நிலங்கள் அரசினாற் சுவீகரிக்கப்பட்டமையும் அந்நிலங் களில் இந்தியத் தமிழர்கள் குடியிருப்பினை ஏற்படுத்தியமையுமே அவர்கள் பால் வெறுப்புகொள்ளவைத்தது.

இது இவ்வாறிருக்க, சிங்கள அரசியல்வாதிகள் பலர் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதில் ஒற்றுமையுடன் செயற்பட்டு வந்துள்ளனர். 1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மலையகப் பிரதேசப்பகுதியில் இந்தியத் தமிழர் கள் ஏழு பேர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இதனை விரும் பாத அரசாங்கம் 1948ஆம் ஆண்டில் பிரஜாவுரிமைச் (Citizenship Act of 1948) சட்டத்தின் வாயிலாகவும் இந்திய - பாகிஸ்தானியக் குடியுரிமைச் (Indian Pakistan Residents Citizenship Act) சட்டத்தின் வாயிலாவும் இந்தியத் தமிழர் களை நாடற்றவர்களாக்கினர். குறித்த சிறுதொகுதியினரே அக்காலத்தில் இலங்கை பிரசைகளாக வர முடிந்தது. இதனைத் தொடர்ந்து இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையே காலத்துக்குக்காலம் இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. 1964ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் நாட்டிலுள்ள இந்தியத் தமிழரில் 525000 மக்களை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும், 300000 மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவேண்டும் எனவும், எஞ்சிய 150000 பேரின் விவகாரம் பின்னர் பேசித் தீர்ததுக்கொள்ளப்படும் எனவும் இதன் நடைமுறைக் காலம் 15 வருடங்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ - இந்திரா ஒப்பந்தத்தின் பிரகாரம், தீர்க்கப்படாமல் இருந்த 150000 மக்களில் 75000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும் மிகுதிப்பேரை இலங்கை பொறுப் பேற்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. எனவே 1965ஆம் ஆண்டிலிருந்து

தொடர்ச்சியாக இலங்கையில் இருந்து மக்கள் தாயகம் திரும்பினர். எனினும் இந்திய பிரஜாவுரிமை பெற்றுத் தாயகம் திரும்பாத 95000 மக்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தையில் அவர்களை இலங்கைப் பிரசை களாக்குவதென தீர்மானிக்கப்பட்டதால் இந்தியத் தமிழர் விவகாரம் முற்றுப் பெற்றது எனலாம்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொட்டு இலங்கையிலிருந்து குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களிலிருந்து படகுகள், விமானங்கள் மூலமாக, அகதிகளாகத் தென்னிந்தியாவுக்குச் சென்றோர் தொகை 165000 ஆகும். இவர்களில் 125000 பேர் பல்வேறு அகதிமுகாம்களில் வாழ, நகரங்களில் வாடகை மற்றும் உறவினர்கள் வீடுகளிலுமாக 40000 பேரும் 1991ஆம் ஆண்டு வாழ்வதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் மதீப்பிட்டின் படி 225000 பேர் இந்தியா சென்றுள்ளனர். மேற்குலக நாடுகளுக்கு இலங்கையிலிருந்து இடப்பெயர்வினை மேற்கொண்டோரில் 75.0 சதவீதத்தினர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவிருக்க இந்தியாவுக்கான இடப்பெயர்வில் 66.0 சதவீதத்தினர் வன்னிப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர் களாவர். இவ்வாறாக இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களை 1987ஆம் ஆண்டு வரையும் அனுதாபத்துடன் இந்திய அரசும் மக்களும் நேசித்த போதிலும் இவ்வாண்டினைத் தொடர்ந்து வேண்டத்தகாதவர்களாக மதிப்பது மட்டுமல்லாது 1994ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பியும் வருகின்றனர்.

### 6.5.3. சர்வதேச இடப்பெயர்வும் அதன் தாக்கமும்

சர்வதேச இடப்பெயர்வில் ஏற்கனவே இடப்பெயர்வினை மேற்கொண்டவர் கள் காலப்போக்கிற் தங்களது குடும்பத்தினையோ அன்றில் குடும்ப அங்கத்தவர்களிற் சிலரையோ தமது சேரிடப்பகுதிகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொள்வதற்குத் தூண்டுகின்றனர். இதனால் அண்மைக் காலங்களிற் புதிதாக ஒருவர் இடப்பெயர்வினை மேற்கொள்வதிலும் பார்க்கக் குடும்பங்கள் இணைவதற்கான இடப்பெயர்வே அதிகரித்து வருகின்றது. இதனால் ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் இடப்பெயர்வில் அதிக ஆர்வம் கொண்டவர் களாகவுள்ளனர்.

மேற்குலக நாடுகளுக்கான இடப்பெயர்வில் பத்து சதவீத்திற்கும் குறை வானவர்களுக்கே அரசியற் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோர் பொருளா தாரத் தேட்டத்தை மையமாகக் கொண்டு அரசியற் தஞ்சம் என்ற போர்வையில் அந்நாடுகளைச் சென்றடைந்தவர்களாவர். குறிப்பாக சுவிற்சலாந்தில் வாழும் 25000 இலங்கையர்களில் 2700 பேருக்கே அகதிகள் அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளது. ஏனையோர் இலங்கையில் சுமூக நிலை ஏற்படும் பட்சத்தில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல வேண்டியவர்களாவர். மேற்குலக நாடு களுக்குச் சென்றவர்கள் விரைவாக முன்னேற வேண்டும் என்பதற்காகப் போதைவஸ்து கடத்தலில் ஈடுபாடு கொண்டதனால் அந்நாடுகளிற் குறைந்த பட்சம் 660 இலங்கையர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்ட வர்களில் 80.0 சதவீதத்தினருக்கு மேற்பட்டோர் 15-40 வயதிடைப்பட்ட வர்களாவர். இதனால் இந்நாடு தொழிலாற்றலுள்ள படையினை இழந்துள்ளது ஒரு புறமிருக்க, வெளிநாடு சென்றோரிற் கணிசமானோர் விவாக நிலைக்குட் படாத நிலையிற் காணப்படுகின்றனர். அத்துடன் ஆரம்ப இடத்தில், பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதே வேளையில் விவாக நிலையிற் சீதனப் பேரமும் அதிகரித்துள்ளமை தெளிவாகப் புலப்படக்கூடியதாகவுள்ளது. மேற் குலக நாடுகளுக்கான இடப்பெயர்வினால் ஆரம்பப் பிரதேசத்தில் விவ சாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் தஞ்சம் கொடுக்கும் நாடுகளின் நோக்கம் நிறைவேறும் பட்சத்தில் இடப்பெயர்வாளர் மீண்டும் ஆரம்ப இடத்திற்கு மீளும்போது இங்குள்ள தொழில்களில் ஈடுபடுவார்களா என்பது சந்தேகத்துக்குரியது. அதாவது நாகரிக வாழ்க்கை, தன்னைச் சமூகத்தில் உயர்வாகக் கருதிக் கொள்ளும் மனோபாங்கு, உழைப்புக்குரிய ஊதியத்தை வெளிநாட்டு நாணய மாற்றிற் சிந்திக்கும் நிலை போன்ற காரணிகளை இதற்குக் குறிப்பிடலாம்.

சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களிடையே 5-2 என்ற ரீதியில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதாகப் பிரித்தானி யாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தனிமை, தொழிலில் கடினத்தன்மை, தூக்கமின்மை, போதைவஸ்துப் பாவிப்பு, மதுபான நுகர்வு, பாலியற் தொடர்பு போன்ற பல காரணிகள் இத்தகைய நிலைக்கு உள்ளாக் குகின்றன என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் சர்வதேச இடப் பெயர்வில் ஆர்வம் கொண்டோரிற் பெரும்பாலானோர் ஆரம்ப, இடைத் தரக்கல்வி கற்றவர்களாவர். இவர்கள் அந்நாட்டவர்களால் விரும்பப்படாத கடைநிலைத் தொழில்களையே செய்து வருகின்றனர். பிரித்தானியாவில் எரிபொருள் நிரப்புதல், மற்றும் வெதுப்பகம், சுப்பர்மார்க்கற், பாதுகாப்புப்பிரிவு ஆகியவற்றிலும் வேறு சிறிய தொழில்களிலுமே பெரும்பாலானோர் ஈடு படுகின்றனர். பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே போன்ற நாடுகளில் விடுதிகளைத் துப்பரவு செய்தல், சமையல் வேலை, சிப்பந்தித் தொழில்களில் ஈடுபடல் போன்றவற்றையே செய்கின்றனர். இத்தாலியில் பழத்தோட்டங் களிலும், விடுதிகளிலும் பெரும்பாலானோர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள னர். கனடாவிற் சிறிய தொழிற்சாலைகளிற் தொழில் பெற்றுள்ளனர். அதைவிட வங்கிகள், பாதுகாப்புச் சேவைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

மேற்குலக நாடுகளிற்கான இடப்பெயர்வினால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளில், இடப்பெயர்வாளர்களிடையே கலாசாரச் சீரழிவு ஏற்படுவதற் கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதும் ஒன்றாகும். குறிப்பாகச் சில இளைஞர்கள் வேறு இனத்தைச் சேர்ந்த பெண்களை விவாகஞ் செய்வது ஒருபுறமிக்க, அங்கு வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தாம் வாழும் நாட்டின் மொழியைக் கற்பிப்பதிற் கொண்டுள்ள ஆர்வத்தின் காரணமாகத் தாய்மொழியை மறந்து விடுகின்றனர். தற்காலிக இடப்பெயர்வினை மேற் கொண்ட குடும்பங்களிடையே இத்தகைய விளைவுகள் எதிர்காலத்தில்

பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. மேலும் மேற்குலக நாடுகளின் அரசுகள், இலங்கையிற் பிரச்சினை தீரும் பட்சத்திற் தம்மைத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்பதை நன்குணர்ந்த இவ்விடப்பெயர்வாளர்கள் இலங்கையிற் பிரச்சினைகள் தொடர வேண்டும் என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதை வெளிக்கள ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றது.

இந்தியாவிற்கான இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களிற் பெரும் பாலானோர் பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களாவர். பொருளாதார வசதி படைத்தோர் நகரங்களில் வாடகைக்கு வீட்டினைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்கள் தமிழ்நாட்டிற் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவினை இந்திய அரசு படிப்படியாகக் குறைத்து வருவதுடன் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதிற் கூடிய அக்கறை கொண்டதாகவும் இருக்கிறது.

## உசாத்துணை நூல்கள்


Abhayaratne.O.E.R, Jayewardene.C.H.S., *Internal Migration in Ceylon* **The Ceylon Journal of Historical and Social Sciences Studies**, Vol, 18 Nos. 1 and 2 January- December, 1965.

Agarwala. S.N., **Population Problems.**, New Delhi , 1965.

Aponso. W.M. L.S., **A Study of the Extent of Under Registration of Births and Deaths in Ceylon**., Department of Census and Statistics, Colombo, 1971.

Asha. A Bhende & Tara Kanitkar., **Principles of Population Studies,** Himalaya Publishing House, Bombay, India, 1982.

Ashish Bose., **Internal Migration in India, Pakistan and Ceylon** World Population Conference. United Nations, Belgrade, 1965.

Auther Lewis., **Demography**, Oxford University Press, London, 1959.

Balasundarampillai. P; *Population Structure of Northern Sri Lanka,* **4th International Conference Seminar of Tamil Studies**, Sri Lanka, January, 1974.

Balbir Singh Negi., **Human Geography,** Kedav Nath Ram Nath, Meerut, India, 1975.

Barcley G.W; **Techniques of Population Analysis,** John Wiley and Sons, New York, 1958.

Bogue. J .Donald., **Principles of Demography,** John Wiley and Sons, New York, 1969.

Brinley, Thomas., **Migration and Urban Development**, Methuem & Co. Ltd., London, 1972.

Chandrashekar. S (Ed), **Asia's Population Problems**, Allied Publishers, Bombay, 1967.

Clark J. John., **Population Geography**, Pergaman Press, London, 1965.

Cox. R. Peter., **Demography**, Cambridge University Press, London, 1976.

Dallas F. S Fernando., *Changing Nuptiality Pattern in Sri Lanka 1901 - 1971*, **Population Studies** ( London) Vol. XXIX, No 2, July, 1975.

Dallas F. S. Fernando., *Recent Trends in Fertility of Sri Lanka* **Population Problems of Sri Lanka** Proceeding of a Seminar, Demography Training and Research Unit, University of Sri Lanka, Colombo Campus, 1976.

Davis, Kingsley., **The Population of India and Pakistan**, Princeton, London, 1951.

Demography Training and Research Unit., **Population Problems in Sri Lanka**., University of Colombo, Colombo, 1976.

Department of Census and Statistics., **Census of Ceylon**, - 1981, Colombo.

Department of Census and Statistics., **Demography and Health Survey. Sri Lanka 1993., Preliminary Report**, Colombo, 1994.

Department Census and Statistics., **Population Problems in Sri Lanka**, Govt, Press, Colombo, 1974.

Durairajasingam.S.A; **Hundred Years of Ceylonese in Malaya and Singapore. 1867 - 1967**, Kualalampur, 1968.

Economic and Social Commission for Asia and the Pacific., *Comperative Study of Population Growth and Agricultural Change-Case Study of Sri Lanka,* **Asian Population Studies,** No 23D, Bangkok, 1975.

Economic and Social Commission for Asia and the Pacific., **Population of Sri Lanka** Country Monograph Series, No 4, Bangkok, 1976.

Ellman, A.O Ratnaweera., D. de. S., **New Settlement Schemes in Sri Lanka**., Research Study Series, No 5, Agrarian Research and Training Institute, Colombo, 1974.

Everett Lee, S.A., **Theory of Migration**., Cambridge University Press., London, 1969.

Gavin. W. Jones and Selvaratnam S., **Population Growth and Economic Development of Ceylon**, Hansa Publication Ltd, Colombo, 1972.

Gavin. W. Jones and Selvartnam. S., *Urbanization in Ceylon 1946 - 1963*, **Modern Ceylon Studies**, Colombo, Vol. 1, No 2, 1965.

Garnier J. B., **Geography of Population**, St, Martin's Press, New York, 1966.

Ghosh B. N., Roma Ghosh., **Economics of Brain Migration**, Deep And Deep Publication, New Delhi, 1980.

Goonesekara, R.K.W., *Marriage and Divorce Laws of Sri Lanka*, in proceeding of the Seminar in Law and Population in Sri Lanka, 1974.

Government of Ceylon., *The Ceylon Malaria Epidemic 1934 - 1935*, Report By Director of Medical and Sanitary Services & Sessional paper, XXII, Colombo, 1935.

Hamilton, C, Horace and Henderson, F.M., *Use of the Survival Rate Method in Measuring Net Migration*, **Journal of the American Statistical Association**, 39, June 1944.

Hans Raj., **Fundamentals of Demography**, Surjeet Publications, New Delhi, 1978.

Jeyasuriya D, C., **Laws Regulating and Influencing the Vital Registration System in Sri Lanka**, Dept.of Census and Statistics, Colombo, 1980.

Kabra. K. N., **Political Economy of Brain Train,** Arnold Heinemann., New Delhi, 1976.

Kannangara.I; **Demographic Study of the City of Colombo**, Monograph, NO 2, Dept. of Census and Statistics, Colombo, 1954.

Kodikara.S.U.; **Indo-Ceylon Relations Since Independence**, The Ceylon Institute of World Affairs, Colombo, 1965.

Lakshmana Rao. G., **Internal Migration and Political Change**, National Publishing House, New Delhi, 1977.

Lawis, J.P., **Manual of Vanni Districts of the Northern Province of Ceylon**, Colombo, 1964.

Mehrotra G. K., **Birth Place Migration in India**, Registrar General's of India. New Delhi, 1974.

Malcolm Rodgers., ***Refugees***, No, 83 April 1989 **UNHCR**, Switzerland, 1989.

Mukerji S., *Natural Increase and Migration as Components of Population Growth: Indian Union and Major States*, **The Journal of Family Planning Welfare**, Vol. XXVIII, No. 2, December, 1981.

Najama Khan., ( Ed. Mandal R.B, and Sinha V. N. P) *Internal Migration Concept, Theories and Methods of Analysis*, **Recent Trends and Concepts in Geography,** Vol, III 1990.

Permi M.K., Ramanamma A., Usha Bambawala., **An Introduction to Social Demography**, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1983.

Pradip. K. Muhhopadhyay., *The Regional Frame of Population Redistribution in India 1969 - 71*, **Geographical Review of India** XI, 2,1978.

Rajah, G., *The Ceylon Tamils of Singapore* A Research paper for Department of Social Studies, University of Malaya, Singapore, 1953.
Raja Indra., **Fertility Trends in Ceylon**, Monograph No3, Department of Census and Statistics, 1954.

Ramkumar. R., **Technical Demograhpy**, Wiley Eastern Limited, New Delhi, - 1986

Rasanayagam. C., **Ancient Jaffna**, Every Man Publication Ltd., Madras, 1926.

Ravenstein E., *The Laws of Migration* **Journal of Royal Statistical Society**, 48, June, 1885.

Registrar General's Department., **Vital Statistics from 1946 - 1981**, Colombo, 1985.

Sarkar N.K., **The Demography of Ceylon,** Colombo, 1957.

Selvaratnam S., *Demographic Aspects of Family Life* Keynote Address, Family live Education Workshop, YWCA Colombo Plan Bureau, Colombo, October, 1973.

Siddhisena K.A.P., **Some Patterns of Migration into Five Major Urban Areas in Colombo District, Sri Lanka** Australian National University ( Un Published M.A Thesis), 1979.

Siddhisena K. A. P., **Bibliography: The Demography of Sri Lanka** Demographic Training and Research Unit, University of Colombo, 1981.

Silva C.C de., *A History of Family Planning in Sri Lanka*, **Silver Jubilee Souvenir**, Family Planning Association of Sri Lanka. Colombo, 1978.

Singh, L.R *The Demographic Transition Theory and its Relevance for India*, **Natural Geography**, 1975.

Srivastava. S. C., **Studies in Demography**, Jai Parkash Nath & Co Meerut, 1989.

Stella Soundara Raj., **Text Book of Population Education** Macmillan India Limited, New Delhi, 1983.

Survey Department., **The National Atlas of Sri Lanka**, Colombo, 1988.

Ukwatte.S., *Internal Migration,* **Census WorkShop**., Department of Census and Statistics, Colombo, 1984.

Upreti H.C., **Social Organization of a Migrant Group: A Sociological Study of Hill Migrants from Kumaon Region in the City of Jaipur**, Himalaya Publishing House, Bombay, 1982.

Vamathevan.S., **Internal Migration In Ceylon 1946 - 1953**, Monograph No13, Department of Census and Statistics, Colombo, 1961.

Varatharajan D., *A Demographic Survey of the Kotas of the Nelagiries District, Tamil Nadu*, **The Journal of Family Welfare** Vol. XXVII No .3 March, 1981.

Warren Thompson., **Population Problems**, Mc Graw Hills, New Delhi, 1953.

Wickrema Weerasooria **Population Redistribution Policies And Measures In Sri Lanka**, Ministry of Plan Implementation, Colombo, 1980.

Wijemanne E. L., Sinclair M. E., *General Education: Some Development, in the Sixties and Prospects for the Seventies.*, **Marga** Vol. 1 No 4 1972.

Zachariah. K.C.A., **Historical Study of Internal Migration in the Indian Sub Continent 1901 - 1931**, Asia Publication House, Bombay, 1964.

குகபாலன்.கா., "இலங்கையின் வட பிரதேசத்தில் இறப்புக்களின் போக்குகளைத் தீர்மானிக்கும் காரணிகளும் விளைவுகளும்" : **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம், 1993.

குகபாலன்.கா.,"வடபகுதியும் குடியேற்றமும்: மீள்பரப்புதலும் பல் திறமுறையில் புதிய நிர்வாக மையத் தெரிவும்" **வடபிரதேச நிர்வாக மையத்திற்கான இடவமைவுத் தெரிவு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1991.

பாலசுந்தரம்பிள்ளை.பொ., "புதிய நிர்வாக மையத்தெரிவும், நியாயப்படுத்துதலும்" **வடபிரதேச நிர்வாக மையத்திற்கான இடவமைவுத் தெரிவு**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1991.

**பாலசுந்தரம்பிள்ளை.பொ.,"வட இலங்கையின் அபிவிருத்திக்கான இடஞ்சார்புத் திறமுறைகள்" யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய நிறுவுனர் நினைவுரை, யாழ்ப்பாணம், 1991.**

செல்வநாயகம்.சோ., **இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளின் பொருளாதார வளமும் விருத்தியும் அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டு நினைவு மலர், யாழ்ப்பாணம் 1974.**

ஜேம்ஸ்.பிகிரான்ட்., **உலக சிறுவர் நிலை 1994, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) கொழும்பு, 1995.**

## கலைச் சொற்கள்

Abortion - கருச்சிதைவு
Induced - தூண்டிய கருச்சிதைவு
Spontaneous - இயல்பான கருச்சிதைவு
Abstinence - தவிர்ப்பு
Adolescence- இளந்தாரிப்பருவம்
Age - Specific- வயது வகை
- Fertility - வயது வகைக் கருவளம்
Anovular cycle - சூலற்ற காலவட்டம்
Ante - partum - பிள்ளைப் பேற்றின் முன்
Antiquity - புராதன காலம்

Anthropology - மானிடவியல்
Baby boom - குழந்தைச் செழிப்பு
Behaviour - நடைப்பாங்கு
Biology - உயிரியல்
Birth - பிறப்பு
-Control - பிறப்புக் கட்டுப்பாடு
-Order - பிறப்பு ஒழுங்கு
-Rate - பிறப்பு வீதம்
-Registration of - பிறப்புப் பதிவு
-Still - சாப்பிறப்பு
Breast - Feed - முலைப்பால்
Caste - சாதி
Celebacy - விவாகமாகாத நிலை (பிரமச்சாரியம்)
Census - குடிக்கணிப்பு
Centre - நிலையம்
- Health - சுகாதார நிலையம்
- Maternity - பிரசவ நிலையம்
- Population - குடித்தொகை நிலையம்
Chance - வாய்ப்பு
Checks - தடைகள்
Chemical - இரசாயன
Child - பிள்ளை
- Bearing - பிள்ளை பெறுதல்
- Birth - பிள்ளைப்பிறப்பு
- care - பிள்ளைப் பராமரிப்பு
- Health - பிள்ளையின் சுகாதாரம்

Civilisation - நாகரிகம்
Climacteric - மாதவிடாய் ஒழிவு நிலை
Climate - காலநிலை
Clinic - சிகிச்சை நிலையம்
Clitoris - மதன பீடம்
Cohort - ஒத்த அணியினர்
Coitus - உடலுறவு இணைவிழைச்சு
Coitus Interruptus - உடலுறவு நிறுத்தம்
Communication - தொடர்பு
- Husband - Wife - கணவன் மனைவி தொடர்பு
- Mass - பொதுசனத்தொடர்பு
Complex - சிக்கலான
Computer - கணனி
Composition - கூட்டு
Concept - கோட்பாடு
Conception - கருத்தரித்தல்
Condition - நிலைமை
Condom - உறை
Consumption - நுகர்வு
Contraception - கருத்தடை
Contraceptive - கருத்தடைச் சாதனம்
Control - கட்டுப்பாடு
Couple - தம்பதிகள்
Crude - பருமட்டான
- Birth Rate - பருமட்டான பிறப்பு வீதம்
- Death Rate - பருமட்டான இறப்பு வீதம்
Cultural - கலாசாரம், பண்பாடு
Curve - வளைகோடு
Cycle - வட்டம்
Death - இறப்பு
Decline - வீழ்ச்சி
De Facto - டீபக்ரோ (உண்மைப்படி)
De Jure - டீயுரே (உரிமைப்படி)
Delivery - பிள்ளைப்பேறு
Demography - குடிப்புள்ளியியல்
- Transition - மாறல் நிலை
Density - அடர்த்தி
- Population - குடித்தொகை அடர்த்தி
Dependents - தங்கி வாழ்வோர்

Development - விருத்தி
Diaphragm - மெந்திரை
Differential - வேற்றுமை
- Fertility - வேற்றுமைக் கருவளம்
Discharge - ஒழுக்கு
Disease - நோய்கள்
Disorder - ஒழுங்கீனம்
Distribution - பரம்பல்
Divorce - விவாகரத்து
Duration - காலவரை
Dynamics - இயக்கம்
Ecology - சூழலியல்
Economic - பொருளாதாரம்
Education கல்வி
Effects - விளைவுகள்
Ejaculation - விந்து வெளியேற்றம்
Emigration - வெளியகல்வு
Employment - தொழில்வாய்ப்பு
Environment - சூழல்
Enumeration கணிப்பீடு
Epidemic - தொற்றுநோய்
Erection - எழுச்சி
- of penis - ஆண்குறி எழுச்சி
Ethnic - இனம்
Ever Married - என்றாவது விவாகமான
Expectancy - எதிர்பார்ப்பு
Explosion - வெடிப்பு, பெருக்கம்
Facilities - வசதிகள்
Fallopian Tube - பலோப்பியன் குழாய் / கர்ப்பப்பைக் குழாய்
Famine - பஞ்சம்
Family - குடும்பம்
- Joint - கூட்டுக்குடும்பம்
- Single - தனிக்குடும்பம்
- Size - குடும்ப அளவு
- Planning - குடும்பத்திட்டமிடல்
Fecundity - கருச்செழிப்பு
Female - பெண்
- Operation - பெண் அறுவைச் சிகிச்சை
- Sterilisation - பெண் கருவளமிழத்தல்

Fertility - கருவளம்
Foetus- முதிர் மூல உரு
Field Survey - கள ஆய்வு
Form - நுரை
Generation - தலைமுறை
Germs - கிருமி
Gestation - கருத்தாங்கல்
Growth - வளர்ச்சி
- Population - குடித்தொகை வளர்ச்சி
- Rate - குடித்தொகை வளர்ச்சி வீதம்
Genetic - பரம்பரை

Health - சுகாதாரம்
- Centre - சுகாதார நிலையம்
Hospital - வைத்தியசாலை
House hold - குடியிருப்பாளர்
Housing Condition - வதிவிட நிலைமைகள்

Hygiene - சுகாதாரம்
Illegitimate - சட்ட இசைவற்ற
- Child - சட்ட இசைவற்றுப் பிறந்த குழந்தை
Immigration - உள்வரவு
Impact - தாக்கம்
Income - வருமானம்
Increase - பெருக்கம், அதிகரிப்பு
Index - சுட்டு
Infant - குழந்தை
- Mortality - குழந்தை இறப்பு
Injection - ஊசிமருந்து
Instruments - கருவிகள்
Inter Censal Period - குடிக்கணிப்புகளுக்கிடைப்பட்ட காலம்
Intercourse - உடலுறவு
Internal - உள்நாடு / உள்ளூர்
International - சர்வதேசம்
Interview - நேர்மூலம்
Labour - பிரசவம்
- Room - பிரசவ அறை
Lactate - பால்சுர
Late Marriage - காலந் தாழ்த்திய விவாகம்

Life - ஆயுள்

- Expectancy - ஆயுள் எதிர்பார்ப்பு
- Birth - உயிர்ப்பிறப்பு
- Table - ஆயுள் அட்டவணை

Literacy - எழுத்தறிவு
Living Condition - வாழ்க்கை நிலை
Loop - தடம்/ கருத்தடைவளையம்
Male - ஆண்
- Sterilisation - விந்து வளமழித்தல்
Malnutrition - போசாக்கின்மை
Mechanical - இயந்திர மயமாக்கல்
Marital - விவாக

- Status - விவாக அந்தஸ்து

Married - விவாகமான

- Never - விவாகமாகாத

Marriage - விவாகம்
Maternity - பிரசவ
Maternal - தாய்வழி / தாய்க்குரிய
Mating - புணர்தல்
Mature - முதிர்ந்த
Medical - மருத்துவ
Medicine - மருந்து
Menopause - மாதவிடாய் ஒழிவு
Mensus - மாதவிடாய்
Menstrual disorder - மாதவிடாய் ஒழுங்கீனம்
Mental - மன
Mercantilist - வர்த்தகவியலாளர்
Method - முறை
Migration - இடப்பெயர்வு
Mobidity - இலகுவில் நகரும் தன்மை
Monogamy - ஒரு ஆண் ஒரு பெண்ணை விவாகஞ் செய்தல்
Morbility - பெயர்தகவு
Morbidity - நோயுடமை
Mortality - இறப்பு
Motivation - உந்துகை / இயக்குகை
Natal - பிறப்பு சார்ந்த

- Anti - Natalist Policy - பிறப்புக்கெதிரான கொள்கை

National - தேசிய
Nationality - தேசியம்

Net reproduction rate - தேறிய மீள் இனப்பெருக்க வீதம்
Nuptiality - தாம்பத்தியம்
Nutrition - போசாக்கு
Objective - நோக்கம்
Occupation - தொழில்
Old age benifits - வயோதிப கால நலன்கள்
Operation - அறுவைச்சிகிச்சை
Optimum - உத்தமம்
Oral - வாய்வழி
Origin - ஆரம்ப இடம்
Order - ஒழுங்கு
- Birth - பிறப்பு ஒழுங்கு
Ovary - சூலகம்
Ovulation - சூலாக்கம்
Ovum - சூல்
Parity - பேற்றுகை
Parous- பேற்று
- Multi - பல்பேற்று
- Nalli - பேறற்ற
- Uni - தனிப்பேற்று
Penis - ஆண்குறி
Period - காலம்
- Safe - பாதுகாப்பான காலம்
Permanent - நிரந்தர
- Semi - தற்காலிக நிரந்தர
Physiology - உயிர்க்கூற்றியல்
Pill - மாத்திரை
Pleasure - மகிழ்ச்சி
Policy - கொள்கை
Poligamy - பல மனைவிகளையுடைய
Poliyantry - பல கணவர்களையுடைய
Population - குடித்தொகை
Postpartum - பிள்ளைப்பேற்றின் பின்
Poverty - வறுமை
Pregnancy கர்ப்பம்
Preventive - முன்காவல்
Probability நிகழ்தகவு
Procreation - இனவிருத்தி
Projection - எதிர்வு கூறல்

Protection - காப்பு
Puberty - ருது
Public Health - பொதுச்சுகாதாரம்
Pyramid - பிரமிட்டு
Quality - தரமான
Questionaire - கேள்விக்கொத்து
Race - இனம்
Random sampling - மாதிரி எடுப்பு
Rate - வீதம்
Ratio - விகிதம்
Redistribution - மீள்பரம்பல்
Registration - பதிவு
Registrar - பதிவாளர்
- of Birth - பிறப்புப் பதிவாளர்
- of Marriage - விவாகப் பதிவாளர்
- of Death - இறப்புப் பதிவாளர்
Report - அறிக்கை
Reproductive - மீள் இனப்பெருக்கம்
Return - மீள்வரவு
Revolution - புரட்சி
Ring - வளையம்
- Rubber - இறப்பர் வளையம்
Rhythm - Method - பருவ ஒழுங்கு முறை
Sample - மாதிரி
- Survey - மாதிரி அளவீடு
Satisfaction - திருப்தி
- Sexual - பாலியற் திருப்தி
Semen - இந்திரியம்
Separation - பிரிந்து வாழ்வு
Sequential Migration - தொடர் இடப்பெயர்வு
Social - சமூக
- Values - சமூகப்பெறுமானம்

Spacing - கால இடைவெளி
Sterilisation - கருவளமிழத்தல்
Spermicidal - விந்து கொல்லி
Sperm - விந்து
Standardised - தரப்படுத்திய / நியமம்
Sterility - மலடு

Structure - அமைப்பு
Survival Ratio - உயிர் வாழ் விகிதம்
System - முறைமை
Tablet - மாத்திரை
Technological - Development - தொழிநுட்ப அபிவிருத்தி
Tension - மன உலைச்சல்
Training - பயிற்சி
Trends - போக்கு
Umbilical Cord - தொப்புட் கொடி
Unit - பிரிவு/ அலகு
Unemployment - வேலைவாய்ப்பின்மை
Under employment - கீழ் உழைப்பு
Unmarried - விவாகமாகாத
Untrained - பயிற்சி பெறாத
Urban - நகரம்
Urbanization - நகரமயமாக்கல்
Uterus - கருப்பை
Vagina - யோனி
Vasectomy - விதைநாள அறுவை
Vitral Statistics - வாழ் நிலைப் புள்ளிவிபரங்கள்
Volume - அளவு
Welfare - நலச்சேவை
Withdrawal - வெளிப்பாய்ச்சல்
Widow - விதவை
Women's Status - பெண்கள் அந்தஸ்து
Womb - கருப்பை
Zoro Population Growth - பூச்சியக் குடித்தொகை வளர்ச்சி

*******************
*******



பேராசிரியர்.கா.குகபாலன் அவர்கள் எமது துறையான புவியியற்றுறையில் கடந்த முப்பத்துமூன்று ஆண்டுகளாக கடமையாற்றி வருகின்றார். புவியியலின் உட்கூறாக விளங்கும் குடித்தொகைக் கல்வியை (Population Studies) நீண்ட காலமாக புவியியல், திட்டமிடல் மாணவர்களுக்குக் கற்பித்து வருபவர். குடித்தொகைக் கல்வியுடன் இணைந்த "குடித்தொகை-கோட்பாடுகளும் பிரயோகங்களும்;" (Population-Theories and Applications) என்னும் நூலின் இரண்டாம் பதிப்பினை வெளியிடுகின்றார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனான பேராசிரியர்.கா.குகபாலன் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புவியியற் சிறப்புக்கலைமாணியை பயின்றவர். முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் முதுகலைப் பட்டத்திற்குப் பின்னான குடித்தொகைக் கல்வி டிப்ளோமாவை (Post M.A.Diploma in Population Studies) சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர்.

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவராகவும் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் குடித்தொகைக் கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறியின் இணைப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றியவர்.

இந்நூல் பல்கலைக்கழக பட்டப்படிப்பு மாணவர்களுக்குச் சிறப்பாகவும் ஏனையோருக்குப் பொதுவாகவும் பயன்தரத்தக்கது. இது தமிழிற்குப் புதியவரவு. பல நூல்களை எழுதியுள்ள பேராசிரியர்.கா.குகபாலன், அவற்றிற்காக இலங்கை சாஹித்திய பரிசில், வடக்குக்கிழக்கு மாகாண சாஹித்திய பரிசில், யாழ்ப்பாண இலக்கிய வட்டச் சான்றிதழ் என்பவற்றைப் பெற்றுப் புகழீட்டியவர்.

அவரது முயற்சிகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

பேராசிரியர்.இரா.சிவச்சந்திரன்
பீடாதிபதி, கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

Printed by: Harikanan Printers, 424, K.K.S Road, Jaffna.
Tel:0094-21 2222717, 21 4590123